OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 APR 1954
MADRAS

பொங்கல் புது நாளில்
பூரிப்புத் தரும் செய்தி

சரவணபவா & யுனிட்டி பிக்சர்ஸ்
தயாரிக்கும்

எதிர்பாராதது

தமிழ்

UNEXPECTED

நாகய்யா · சிவாஜி கணேசன் · பத்மினி
சகஸ்ரநாமம் · பிரண்ட் ராமசாமி · துரைசாமி
...மற்றும் பலர்...

வசனம்:
ஜி. உமாபதி · ஸ்ரீதர்

டைரக்ஷன்:
சி. நாராயணமூர்த்தி

கதை: ஸ்ரீதர் · ஸ்டுடியோ: நெப்டியூன்



1, சர் சி. வி. ராமன் ரோட், ஆள்வார்பேட்டை, சென்னை-18.

2-'54.

14—1—54 பொங்கல் அன்று முதல்

சென்னை

பிராட்வே - சித்ரா - திருமகள் - லக்ஷ்மி.



When ASTHMA attack is imminent use
MULTIMIX
Indo-French Pharmaceutical Co.,
P. B. No. 1542.
MADRAS-1.
MULTIMIX
EUPNEIC AND CARDIO TONIC

ஸ்டார் புகையிலை கம்பெனி
மார்க்
ஸ்டார்
புகையிலை
TRADE
MARK
சிவபுரி
புதுக்கோட்டை
ஸ்டார்
புகையிலை
மீ.நா.அ.செ & சன்ஸ், புதுக்கோட்டை.

நான்
விரும்பி வாங்குவது
உம்மிடியார்
ஸ்டெயின்லெஸ்
ஸ்டீல்
பாத்திரங்களே
VUMMIDIARS
Stainless Steel
வெள்ளி
ஸ்டெயின்
லெஸ் ஸ்டீல்
பாத்திரங்களை
ணைஷஞே
விஞல்
துலக்குங்கள்
உம்மிடியாரின் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களையே நான் பொருக்கி எடுப்பதற்கு பலகாரணங்கள் உண்டு. உம்மிடியார், உடையாத, நொறுங்காத துருஏருதமு ல் தரமான ஸ்டெயின்லெஸ் ஸ்டீலையே உபயோகிக்கிருர்கள். பெண்மணிகளால் பெரு மதிப்பைப் பெற்ற இந்த ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் வெகு காலம் உழைக்கக் கூடியவை. ஆனாலும் மிக மலிவானவை.
உம்மிடியார்ஸ்
(மான்யுபாக்சரர்ஸ்) லிமிடெட்.
சென்னை-2.
VR7-32

OPIL

A few OPIL Specialities.

LIVOGLOPIL : Multivitamin Mineral preparation with liver Extract.

SYRUP METHIOCHOLINE : (Plain & Compound) — For Liver Cirrhosis etc.,

ANUROXIN : (Vitamin B_1 & B_6) — For vomitings of pregnancy etc.

ELIXIR B COMPLEX : Tonic for Vitamin deficiency.

TUSSOPIL : Cough syrup.

PENACOPIL : For all headaches and pains.

Available at all leading chemists of your area.

ORIENTAL PHARMACEUTICAL INDUSTRIES LTD.,
64-66, Tulsipipe Road, Mahim, BOMBAY-16.

You'll
FEEL FRESH
& LOVELY

"President Snow" beautifies your face giving a soft and Satin-Smooth feel. your face glows with fresh loveliness. It removes blimishes and protects your Complexion. Good for men too, as an after-shave emollient.

President
SNOW

For Blossom-soft Complexion

RATHOD TRADING CO., SOWCARPET, MADRAS-1.

ஹமீதியா ஹோட்டல்

60-61, பிராட்வே [மண்ணடி எதிரில்] மதராஸ்.

சென்னை நகரிலேயே மிக நூதனமான உயர்தர

சிற்றுண்டிச்சாலை.

மிக ருசிகரமான சைவ, மாமிச சிற்றுண்டி தினுசுகளுடன் நேர்த்தியான சேவை கிடைக்கக் கூடிய ஹோட்டல் இதுவே.

குடும்பங்களுக்கு ஏற்ற விசேஷ

தனி அறைகளுமுண்டு.

உங்கள் ஆதரவை கோருகிறோம்.

மூன்று சிறந்த ஔஷதங்கள்.

(ஒவ்வொரு வீட்டிலும் அவசியமாய் இருக்க வேண்டியது)

ஜாமா ஆயில்

ஜலதோஷம், தலைவலி முதலியவைகளுக்கு

★

ஜாமா றப்

ஜலதோஷம், தலைவலி முதலியவைகளுக்கு

★

ஜாமா இன்ஹேலர்

ஜலதோஷத்திற்கு

Grams : "ZAMA" Estd : 1900 Phone : 2182

Amarchand Sobachand

POST BOX 518.

95, NAINIAPPA NAICKEN STREET, MADRAS-3.

SRI AMBAL & CO
No 1
POST BOX No 3 MADRAS
SRI AMBAL SNUFF
REGISTERED
TRADE MARK
ஸ்ரீ அம்பாள் மூக்குத்தூள்
அனைவரும் விரும்புவது...
ஸ்ரீ
அம்பாள்
ஆபீஸர் பொடி
ஒரு தோலா டின்களிலும் எங்கும் கிடைக்கும்.
ஸ்ரீ அம்பாள் & கோ
201, தங்கசாலை தெரு . . . மதராஸ் .1.

உமா

ஆசிரியர்: ஜி. உமாபதி

நிர்வாக ஆசிரியர் : **ர. சண்முகம்**

செடி 1 மலர் 9	ஜனவரி 1954	விஜய ௵ தை ௴

பொருளடக்கம்

காணிக்கை		...	11
பொங்கல் வாழ்த்து (கவிதை)	நாமக்கல் கவிஞர்	...	12
இசையும் வாழ்வும்	ம. பொ. சி.	....	13
மக்களும் கட்சியும்	ஜி. உமாபதி	...	15
கன்னியின் தெரிசனம் (கவிதை)	அஹ்மத்	....	18
சுமை	அசோகன்	...	19
பொங்கல் விருந்து	ஆர். பி. மல்லாரி	...	26
நண்பன் வீராசாமி	பெ. தூரன்	...	31
வழி காட்டி	சுகி	...	35
சிகப்புக்கரை வேஷ்டி	பி. வி. பாரதியன்	...	40
எதிர்காலத்தமிழகம்	கி. ஆ. பெ. விசுவநாதம்	...	46
லட்சியக் காதல்	கு. ப. சேது அம்மாள்	...	67
டாக்டர்	கஸ்தூரிபாய்	....	73
உயிரோட்டம்	பாலாஜி	....	77
போலிக் கௌரவம்	கௌசிகன்	....	88
யார் அவர்?	சண்முகம்	....	99
தேனும் தமிழ் நாடும்	மே. சக்கரவர்த்தி	....	115
காசி யாத்திரை	ஆனை. ஸு. குஞ்சிதபாதம்	....	119
யாருக்குச் சொந்தம்	ச. மு. பிள்ளை	....	127

'உமா'வில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

வானத்துச் சந்திரனை வில்லாகத்தான் வளைத்து
கானத்து இனிமையைப் போல் கண்சிமிட்டும் தாரகைகள்
ஞாலத்தில் உதிர்ந்து விழ நாண் எறிய நினைக்கின்றேன்........

சித்திரம்—சீனு.

காணிக்கை



தமிழ் உழவன் தன் உழைப்பின் பயனை—தானிய மணிகளை உலகத்துக்கு இன்று காணிக்கை யாக்குகிறான். இதோ "உமா" தன் சலியாத உழைப்பால இரண்டாவது அழகு மலரை தமிழன்னைக்கு அர்ப்பணித்துப் பணிகிறாள்.

தந்தித் தவழ்ந்த "உமா" இப்பொழுது குறுநடை போடுகிறாள். ஒன்பது மாதக் குழந்தையின் நடையிலே துள்ளும் மலர்ச்சியைக் கண்டு உங்கள் மனம் பூரிக்கிறதல்லவா!

வழக்கம்போல 'உமா' வீண் பளபளப்பு உடையணிந்து பகட்டவில்லை. ஆனால் சொக்கிச் சுண்டியிழுக்கும் இயற்கைப் புன்னகை அவள் உதடுகளில் மலர்ந்து கிடப்பதை நீங்கள் பார்க்கிறீர்கள்.

"உமா" உங்கள் குழந்தை.... இதோ உங்கள் மடியில் தவழவிடுகிறோம்.

தமிழகத்தில் தமிழ் ஆட்சி ஏற்படுவதற்கான அறிகுறிகள் தோன்றும் நல்ல நேரத்தில் இந்த வருடப் பொங்கல் பொங்குகிறது. அடுத்த ஆண்டு சுயாட்சித் தமிழகத்திலே சுதந்திரப் பால் பொங்கும் என்ற நம்பிக்கையுடன் 'உமா'வை உங்கள் கரங்களில் அளிக்கிறோம்.

வணக்கம்.

கன்னியின் தெரிசனம்!

அஹ்மத்

197203

பட்டிதழைக் காட்டி, விழி
வெட்டி லென்னை வீழ்த்திவிட்டாள்
கட்டழகி இன்றிரவு வந்தாள்—எழில்
சொட்டுகின்ற புன்னகையும் தந்தாள்!

வண்ணமலர்க் கோத்தெடுத்தப்
பின்னல் ஜடை கைபிடித்துச்
சின்னயிடை துவளஎனைப் பார்த்தாள்—அவள்
அன்னநடை தன்னில்மனம் சேர்த்தேன்!

வெள்ளிரதம் வான்வெளியில்
மெள்ள மெள்ள நகருவதில்
கள்ளியவள் கண்பதித்து நின்ருள்—'இந்த
நள்ளிரவில் எங்குவந்தாய்!' என்றேன்.

''கண்டவுடன் காதல் மது
உண்ட இசை வண்டு எனைக்
கொண்டு செல்ல அண்டுவதைக் கண்டால்—அதற்குத்
தொண்டுசெய்ய எண்ணிவந்தேன்!'' என்ருள்.

''எத்தனையோ எழில் மலரில்
பித்தனைப்போல் சுற்றிவந்தும்
சுத்த'மது' இன்றியிங்கு வந்தேன்—பெண்ணே
புத்தப்புதுத் தேன்கொடுத்தால் உண்பேன்!''

துவளும் எழில் பதுமையவள்
பவள இதழ் வாய்திறந்து
'இவனையென்ன எண்ணிவிட்டீர்?' என்ருள்—'முன்
எவரிடத்தும் காதலுண்டா?' என்றேன்.

''வள்ளுவனும் கம்பனுமென்
உள்ளம் நிறை காதலராய்க்
கள்ளமின்றி ஏற்றிருந்த துண்டு—ஆனால்
எள்ளளவும் கற்பிழந்த தில்லை!''

பெண்ணரசிப் பொன்னுரையால்
கன்னித்தமிழ் அன்னையென்ற
உண்மை நெஞ்சில் உதித்திடவு மாச்சு—உடன்
கண்டிருந்தக் கனவழிந்து போச்சு!

இசையும் வாழ்வும்

ம. பொ. சிவஞானம்

பண்டை நாளில், மார்கழித் திங்களில் வீதிகள் தோறும், வீடுகள் தோறும் இசை முழங்கும். அந்த இசை முழக்கத்திலே இறைவனின் பேரருட் கருணை பேசப்படும். பாலர்-விருத்தர் என்ற பருவ வேற்றுமையின்றி, ஆண்—பெண் என்ற பால் வேற்றுமையின்றி, சைவர்—வைணவர் என்ற சமய வேற்றுமையின்றி, ஏழை—பணக்காரன் என்ற வர்க்க வேற்றுமையின்றி எல்லாத் தமிழர்களும் இசை முழக்கத்தில் பங்கு கொள்வர்.

செல்வத்தை, பொருட் செல்வம், அருட் செல்வம் என இருவகைப்படுத்தினர் பெரியோர். அருட் செல்வத்தை 'மூல பண்டாரம்' என்றும் குறித்தனர். மணிவாசகப் பெருமானும், இறைவன் அருட் செல்வத்தை வழங்க வரும் நிலையை நினைப்பூட்டுமிடத்து, "மூல பண்டாரம் வழங்குகின்றான், வந்து முந்துமினோ" எனக் குறிப்பிட்டார்.

இறைவனின் பேரருட் கருணையை பேசுவதற்கென்றே இல்லந் துறந்து துவராடையணிந்த துறவிகளை 'பண்டாரம்' என்பது பழங்கால வழக்கு.

இந்தப் பண்டாரங்களும், மார்கழித் திங்களில், இருள் கவிந்த விடியற் காலையில், வீதிகள் தோறும் சென்றும், வீடுகள் தோறும் நின்றும் தேவாரம், திருவாசகம் போன்ற பக்திப் பாடல்களையும், சித்தர்கள் பெயரால் நடமாடும் வேதாந்தப் பாடல்களையும் பாடுவர்.

துறவறத்தாரேயன்றி, இல்லறத்தாரும் விடியற் காலையில் துயில் நீத்து, குளித்து, தூய உடையணிந்து, இல்லத்திலிருந்த வண்ணமே பக்திப் பாடல்களைப் பாடுவர். சிலர் கூட்டமாகச் சேர்ந்து கொண்டு இன்னிசைக் கருவிகளுடன் பாடிக் கொண்டு ஊரை வலம் வருவர்.

இம்மாதிரி ஒரு திங்கள் முழுவதும், இல்லறத்தார்—துறவறத்தார் ஆகிய இருதரத்தாரும் சேர்ந்து இறைவனைப் புகழ்ந்து இசை முழக்கம் செய்யும் வழக்கம் நம் தமிழ் நாட்டிலன்றி வேறு எந்த நாட்டிலும் இல்லை.

முற்காலத்தில், தொழில்களோடும் இசை தொடர்பு கொண்டிருந்தது. உழவுத் தொழிலின் ஒவ்வொரு நிலையிலும் இசை முழக்கம் செய்தனர் உழவர்கள். ஏர் உழுங்கால் உழவுப் பாட்டு; நாற்று நடுங்கால் நடவுப் பாட்டு; வயலுக்கு நீர் இறைக்குங்கால் ஏற்றப் பாட்டு; அறுவடை செய்து தானியத்தை வண்டியில் வைத்து வீட்டுக்குக் கொண்டு செல்லுங்கால் தெம்மாங்குப் பாட்டு; இப்படி, பண் செழிக்கும் பாட்டுக்கும், பயிர் செழிக்கும் பண்ணைக்கும் தொடர்பிருந்தது.

இசை ஞானத்தில் ஆண்களைவிட பெண்களே அதிகம் சிறந்து விளங்கினர். இன்றுங்

கூட இசைக் கலையில் அற்ப சொற்ப ஞானமேனும் இல்லாத பெண்ணை தமிழகத்தில் காண்பதரிது. ஒவ்வொரு தமிழ்ப் பெண்ணுக்கும் இசையில் ஆரம்ப ஞானமேனும் இருந்தே தீரும்.

தமிழ்ப் பெண்களுக்கு, இசையறிவு பயிற்சியால் வருவது மட்டுமல்ல; அது அவர்கள் பரம்பரைச் சொத்து. தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்தால், அக்கால மக்களின் வாழ்வு இசை மயமாகவே இருந்ததைப் பார்க்கிறோம்.

பிறந்த குழந்தையை உறங்க வைக்கத் தாலாட்டுப் பாட்டு; உண்ணவைக்க நிலாப் பாட்டு; இறுதிக் காலத்தில் ஒப்பாரிப் பாட்டு. இப்படி, பிறப்பு முதல் இறப்புவரை தமிழ்த் தாய்மார்களின் நாவில் இசை தாண்டவமாடியதைப் பார்க்கிறோம்.

குழந்தை பிறந்த நாள் முதற்கொண்டே அதற்கு இசை மூலம் கல்வி கற்பிக்கிறாள் தமிழ்த் தாய். ஆம்; தமிழ்க் குழந்தைகட்கு, இல்லமே துவக்கப்பள்ளி; அன்னையே ஆரம்ப ஆசிரியை.

பெற்ற தாய், குழந்தைக்கு சொல்லும் நிலாப் பாட்டு, வான சாத்திரத்தைப் பற்றிய பாலர் பாடமாகும்.

“கை வீசம்மா கை வீசு”, “சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு” என்று குழவிக்குப் போதிக்கும் பாடல்கள், ஆரோக்ய கல்வியைப் பற்றிய ஆரம்பப் பாடம் எனலாம்.

பிணித் துன்பத்தைக் குறைப்பதற்கும் இசை மூலம் சிகிச்சை தரும் வழக்கம் தமிழரிடத்தே இருந்து வருகிறது. அம்மை நோய் கொடிய வெப்பத்தால் வருவது. வெப்பத்தைத் தணித்தால் அந்நோயால் உண்டாகும் வேதனை குறையும். ஆகவே, குழந்தைக்கு அம்மை நோய் கண்டால், ‘மாரியம்மன் தாலாட்டு’ பாடி வெப்ப நோயின் வேதனையைக் குறைப்பதைப் பார்க்கிறோம்.

நம் தமிழ் வேந்தர் பிற நாட்டின் மீது படையெடுத்துச் செல்லுங்கால், இசைப் புலவர்களையும் இட்டுச் சென்றதாக அறிகிறோம். ஏன்? போரில் புண்பட்ட வீரர்களின் மனதுக்கு இசை மூலம் தெம்பூட்டுவதற்காகவே.

தமிழில் இசை என்ற சொல்லுக்கு ‘புகழ்’ என்றும் ஒரு பொருள் உண்டு. அதற்கேற்ப பண்டைத் தமிழர் இசை வாழ்வு நடத்திப் புகழ் பெற்றனர்.

OSLER
INDIA'S
Quality Lamp
Manufactured by :
THE OSLER ELECTRIC-LAMP MFG. CO. LTD.
BOMBAY-10.
Sole Distributors :
F. & C. OSLER (India) LTD.
Bombay, Calcutta, Madras, Delhi, Kanpur, Gauhati

மக்களும் கட்சியும்

ஜி. உமாபதி

தன்னந்தனியாக—மற்றவர் கூட்டுறவின்றி திரிந்தான் பண்டைக்கால மனிதன். அதனால் வாழ்வில் நிரந்தரமானதொரு சூழ்நிலை அமையாது நித்திய கண்டமாக வாழ வேண்டிய நிர்பந்தம் அன்று மனிதனுக்கு இருந்துவந்தது.

இந்தத்தொல்லைகளுக்கு மாற்று தேடவே மனிதன் பல பேருடன் ஒன்று கலந்து கூட்டுறவுடன் வாழும் வழக்கத்தைக் கையாளத் தொடங்கினன். இந்தக் கூட்டுறவு வாழ்வில் தன்னுடைய சுதந்திரங்கள் சிலவற்றையும் அவன் இழந்து அவசியமானதொரு பொதுக் கட்டுப்பாட்டிற்குத் தன்னைத் தயார் படுத்திக் கொண்டான். இந்தக் கூட்டுறவு முயற்சி ஏற்பட்ட பிறகுதான் அவனுடைய வாழ்வில் நிம்மதியான, இன்பகரமானசூழ்நிலை அமைந்தது.

ஆகவே மக்களின் நன்மை தீமைகளை அனுகூலமாகவோ, பிரதிகூலமாகவோ அமைக்க சமூகக் கட்டுப்பாடு ஒரு முக்கிய அம்சமாக அமைந்துவிட்டது.

சாதாரண மக்களுக்கு பெரும்பாலும் தங்கள் சுயவாழ்வுத் தேவைகளைக் கவனிக்கவே நேரம் போதுவதில்லை. அதனால் சமூகத் துறையில் தங்கள் நிலை என்ன என்பது பற்றி சிந்திக்கவோ, அரசியல் ரீதியாக தங்களுக்கு ஏற்படும் அனுகூல, பிரதிகூலங்களைப் பற்றி எண்ணவோ முடிவதில்லை. இந்த விஷயங்களை அலட்சியப் படுத்தி வாழவும் அவர்களால் முடியாது. அதனால்!தன்னலமற்றுப் பொது நல சேவை செய்யும் பெரியோர் சிலரைத் தங்கள் தலைவராகக் கருதி அவர்களிடம் தங்கள் சுக துக்கங்களை ஒப்படைத்துவிட்டு அவர்கள் ஆணை வழி நடக்கின்றனர்.

இன்று இரண்டு வகையான மக்கள் தலைவர்களைப் பார்க்கிறோம். ஏதாவது ஒரு கட்சி, அல்லது கழக வழியில் சேவை செய்வோர் ஒரு ரகம்; கட்சிக்கு அப்பாற்பட்டு தனி மனிதனாக நின்று சேவை செய்வோர் இன்னொரு ரகம்.

கட்சியே இல்லாது சுயேட்சையாக பொது நல சேவை செய்யும் தனி மனிதர்கள் சமுதாயத்தின் கட்டுப்பாட்டையே அவமரியாதை செய்கிறார்கள். தலைவர் ம. பொ. சி. கூறுவது போல தனி நபர்கள் 'ஸைபர்' என்ற எண்ணுக்குள்ள மதிப்பையுடையவர்களே. ஏதாவது ஒரு கட்சியுடன் தொடர்பு கொண்ட பின்புதான் அவர்கள் பொது நல சேவைக்கு லாயக்குள்ளவர்களாகிறார்கள்.

கட்சி யென்றால்——அதிலும் அரசியல் கட்சி யென்றால் என்ன ?

தாய்நாட்டின் பொதுவான முன்னேற்றத்தை அடிப்படை லட்சியமாகக் கொண்டு அந்த லட்சியத்தை அடைவதற்கு சில கொள்கை–திட்டங்கள் வகுத்து, அக்கொள்கைகளை வேற்றுமையின்றி கட்டுப்பாடாக பின்பற்றி ஒழுகும் ஒரு குழுவை பொதுவாக அரசியல் கட்சி என்று குறிப்பிடலாம்.

ஒரு கட்சியில் தொடர்பு கொள்ளும் மனிதர்கள் யாருடைய கட்டாயத்தின் பேரிலும் அதைச் செய்வதில்லை. மனப்பூர்வமாகவும், சுதந்திரத்துடனும்தான் அவர்கள் அரசியல் கட்சிகளில் அங்கம் வகிக்க முனைகின்றனர்.

இப்படி சுதந்திர மனப்பான்மையுடையவர்கள் — சுதந்திரமாக கட்சியில் இணைந்து கட்சியை இயக்குவதால்தான் உலக நாடுகள் எல்லாவற்றிலும் கட்சிகளுக்கு மதிப்பும், செல்வாக்கும் மிகுந்திருக்கிறது.

ஒரு நாட்டில் ஒரு கட்சிதான் இருந்தாக வேண்டுமென்ற நியதியில்லை. சூழ்நிலையை ஒட்டி ஒரே நாட்டில் பல கட்சிகள் ஏற்பட நேரிடலாம். ஆனால், அக்கட்சிகளின் இறுதி நோக்கம் நாட்டின் பொது நன்மையைக் கருதுவதாகவே இருக்க வேண்டும். ஒரு நாட்டின் அரசியல் கட்சி என்று கூறிக்கொண்டு அந்த நாட்டின்மீது பற்றில்லாத கூட்டமோ, நாட்டின் நன்மைக்கு விரோதமான காரியங்களைச் செய்யும் இயக்கமோ கட்சி என்ற பெயருக்கே தகுதியற்றது. அதைக் கட்சி என்று அழைப்பதை விடத் **துரோகக் கும்பல்** என்று அழைப்பதுதான் பொருத்தமானது.

ஒரு நாட்டின் மக்களுள் மத, இன, வகுப்பு வேறுபாடு கருதாமல் எல்லோருடைய பொது நன்மையையும் கருதும் பண்புதான் உண்மையான அரசியல் கட்சிக்குரிய இலக்கணமாகும். நாட்டின் ஒரு குறிப்பிட்ட இனத்தார் அல்லது மதத்தினர்—வகுப்பினருடைய நலனை மட்டும் காப்பாற்றும் நோக்கத்துடன் தலையெடுக்கும் கூட்டங்களும் தமிழ் நாட்டில் அரசியல் கட்சிகள் என்று பெயர் சொல்லி உலாவுகின்றன. இவை கட்சியே அல்ல. இந்த வகுப்புவாதக் கூட்டத்தை போலிக் கட்சிகள் என்று வேண்டுமானால் அழைக்கலாம். அரசியல் போர்வையை போர்த்தித் திரியும் இந்தப் போலிகள் நடுக்காட்டில் கழுத்தறுக்கும் அபாயகரமான கூட்டங்கள்; இவற்றிற்கு தங்கள் இனம் — மதம் அல்லது வகுப்பின் நன்மைதான் பெரிது. இந்த நன்மையை சாதிப்பதற்காக இவை சில சமயங்களில் நாட்டின் பொது நன்மையையும் மறந்து விடுவதல்லாமல் — நாட்டின் மானத்தையே பிற நாட்டிடம் அடகு வைக்கவும் துணிந்து விடும். இத்தகைய போலிக் கும்பல்கள் பெருத்து விடுமானால் சமுதாயத்தில் ஒழுங்கு முறையே தகர்ந்து விடும். பொதுநலம் மக்களின் மனதை விட்டே ஓடிவிடும். எல்லாரும் சுயநலமிகளாக மாறத்தொடங்குவர். அப்புறம் ஆயிரம் ஆண்டுகள் முயன்றாலும் மக்களை நேரான பாதைக்கு அழைத்து வர இயலாமல் போய்விடும்.

இந்தப் போலிக் கும்பல்களின் கோஷங்கள் மிக கவர்ச்சிகரமாக இருக்கும். **சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்,** போன்ற பெரிய பெரிய வார்த்தைகளெல்லாம் அந்தக் குழுவினிடையே சரளமாக அடிபடும். மக்களின் பலஹீனம் எந்தப் பக்கம் திரும்புகிறது என்பதை மட்டும் நன்றாக கவனித்திருந்து மற்ற உண்மையான அரசியல் கட்சிகள் வாய் திறக்கு முன்பு முந்திக்கொண்டு கோஷம் போட்டு மக்களின் கவனத்தை தன்பால் திருப்பிக் கொள்வதில் இந்த கூட்டத்துக்கு அபார சாமர்த்தியம் உண்டு. மக்களுக்கு அரசாங்கத்தின் மீதிருக்கும் கோபதாபங்களை குத்திக் கிளறிவிட்டு மக்கள் மனதில் துவேஷத்தையும் வளர வைத்து அதன் மூலம் சுய தேவைகளைப் பூர்த்தி செய்துக் கொண்டு இந்த கூட்டங்கள் மறைந்து விடுகின்றன. தங்கள் திருட்டுச் செயல்களைப் புரிந்து கொண்டு எதிர்ப் பிரச்சாரம் செய்ய முயலும் உண்மை அரசியல் கட்சிகளை கொள்கை ரீதியாக எதிர்ப்பதைவிட்டு இவை குறுக்கு வழியில் எதிர்க்கத் தொடங்கும். ரௌடிஸத்தின் மூலம் எதிர்க்கட்சிகளை அழிக்க

முற்பட்டுவிடும். பெரிய பெரிய கோஷக் கூச்சல்களை எழுப்பியும் கலாட்டாக்களையும், ரத்தக் களரியையும் நாட்டில் கிளப்பியும் இவை தங்கள் தவறுகளை மறுத்துவிட முயற்சி எடுக்கும். இதனால் நாட்டை ஆளும் அரசாங்கமும் செயலற்று திகைக்க நேரிட்டு விடுகிறது. மக்களும் படுமோசமான இன்னல்களுக்கு இலக்காக நேரிடுகிறது. பாமர மக்களுக்கு என்ன தெரியும். மனதில் பொங்கி எழும் கோபத்தை அரசாங்கத்தின் மீது திருப்பி, வாய் நோகும் வரை திட்டித் தீர்த்துவிடுகின்றனர். போலி அரசியல் வாதிகள் மக்களையோ, அரசாங்கத்தையோ, பற்றிக் கவலைப் படாமல் உல்லாச வாழ்வு வாழத் தொடங்குகின்றனர். ஆகவே, எது சரியான அரசியல் கட்சி என்பதை நிர்ணயிப்பதில் மக்கள் அவசரப்படக் கூடாது.

தமிழறிஞர் சாமிநாத சர்மா கூறுவது போல, ஒரு கட்சியானது ஒழுங்குக்கு கட்டுப்பட்டிருக்க வேண்டும்; ஒரே தலைமைக் குட்பட்டிருக்க வேண்டும். எந்த விஷயத்தைப் பற்றியும் உடனுக்குடன் முடிவுக்கு வர வேண்டும். இந்த மூன்று அம்சங்களிலும் ஒரு கட்சியும், ஒரு படையும் ஒன்றெனக் கூறுவார்கள் அறிஞர்கள்.

ஒரு கட்சியின் தகுதியை முடிவு செய்ய வேண்டுமாயின் அதன் கடந்த கால சரித்திரத்தைப் புரட்டிப் பார்க்க வேண்டும். அதன் எதிர் கால திட்டங்களை ஆராய வேண்டும். தனக்குப் பின்னால் ஒரு சரித்திரத்தையும், முன்னால் ஒரு லட்சியத்தையும் வைத்திராத எந்தக் குழுவும் கட்சியாக இருக்க முடியாது.

அறிவாளிகளும், படித்தவர்களும் நிரம்பியிருப்பதாலேயே ஒரு கட்சி சிறப்படைந்துவிட முடியாது. சண்டப் பிரசண்டமாக சொற்பொழிவாற்றுபவர்களைக் கொண்டு மட்டும் ஒரு கட்சியின் தகுதியை அளப்பது கூடாது. கட்சியில் உணர்ச்சியுள்ளவர்கள் நிரம்பியிருக்க வேண்டும். அது வெறும் சக்தியற்ற சபல உணர்ச்சியாக இருந்து பயனில்லை. ஒரு பெரும் போராட்டத்துக்கு தலைகொடுக்கக் கூடிய வீர உணர்ச்சியாக இருக்க வேண்டும். போராட்டத்தை சமாளிப்பதோடு நில்லாது எதிர்த்து நின்று முன்னேறும் துணிவும் அமைந்திருக்க வேண்டும்.

ஒரு கட்சியின் பலம் அக்கட்சிக்கு சேர்ந்துள்ள அங்கத்தினர்களின் தொகையைப் பொறுத்திருப்பதாக தமிழகத்தில் பலர் நினைக்கிறார்கள். கட்சிகள் என்று சொல்லிக் கொள்ளும் சில கூட்டம் தமது கிளைக் கழகக் கணக்குகளையும், அங்கத்தினர் எண்ணிக்கையையும் பிரமாதமாக விளம்பரப்படுத்தி தங்கள் பலத்தை நிரூபிக்க முயற்சிக்கின்றன. இது தவறான முறை.

இப்படி கட்டுப்பாடின்றி— கணக்கு வழக்கின்றி கண்டவர்களையெல்லாம் அங்கத்தினர்களாக்கி தொகையை பெருக்கிக் காட்டும்போதுதான் கட்சிகளில் ஊழலும், ஒழுங்கீனமும் தலைகாட்டத் தொடங்குகின்றன. இந்த ஊழலும் ஒழுங்கீனமும் நாளடைவில் கட்சியையே கபளீகரம் செய்துவிடும். அங்கத்தினர்கள் மிகக் குறைவாக இருப்பினும், ஒழுக்கம், நேர்மை, கட்டுப்பாடு, செயலாற்றும் பண்பு ஆகிய குணங்கள் படைத்தவர்களைப் பெற்றிருக்கும் கட்சியே உண்மையான பலமுடையதாகும். அக்கட்சிதான் ஒழுங்கான முறையில் மக்களுக்கு சேவை செய்யும் சக்தி யுடையதாக இருக்கும்.

பொங்கல் வாழ்த்து

நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை

பொங்கி வழிந்திடும் அன்போடு
  பொங்கல் திருநாள் கொண்டாடி
திங்கள்மும் மாரி பொழிந்திடவும்
  தீமைகள் யாவும் ஒழிந்திடவும்
எங்கு மிருக்கிற எல்லாரும்
  ஏதொரு குறையும் இல்லாமல்
இங்கித முற்றிட வேண்டுமென
  ஈசன் மலரடி பூண்டிடுவோம்

ஏரைத் தொழுதால் சீராகும்
  என்கிற அறிவே நேராகும்
பாரில் இதனை மறந்ததனுல்
  பஞ்சம் என்பது நிறைந்ததுவே
ஊரும் நாடும் உயிர்வாழ்தல்
  உழவன் செய்திடும் பயிர்வாழ்வில்
தேரும் படிவரும் ஒருநாளே
  தெய்விகப் பொங்கல் திருநாளாம்

வேலும் போரும் வெற்றிகளும்
  வேறுள எவ்விதப் பெற்றிகளும்
சீலம் மிக்குள உழவேபோல்
  சேமம் தருகிற தொழிலாமோ
பாலும் நெய்யும் பசுவாலே
  பாடுகள் எருதின் இசைவாலே
சாலும் உழவும் சரியானுல்
  சங்கடப் பஞ்சம் வருமோதான்

ஏற்றத் தாழ்வுகள் எண்ணுமல்
  எவ்விதத் தீங்கும் பண்ணுமல்
சாற்றும் அன்பே குறியாக
  சமரசப் போக்கே நெறியாக
போற்றும் படிவரும் பொன்னுளே
  புண்ணியப் பொங்கல் நன்னுளாம்
ஆற்றல் பற்பல எய்திடினும்
  அன்பே சபதம் செய்திடுவோம்

மைந்தரும் உங்கள் மனைவியுடன்
  மற்றுள சுற்றமும் அனைவருமே
சுந்தரப் பொலிவுடன் களிகொண்டு
  சுவைமிகும் பொங்கல் அமுதுண்டு
சிந்தனை நல்லறம் தங்கிடவும்
  சிறப்புடன் மங்களம் பொங்கிடவும்
வந்தனை பொங்கும் மனத்தோடும்
  வந்து 'உமா' உம்மை வாழ்த்துகிருள்.

பாவத்தின் பெருஞ்சுமை இந்திரனையும், நஹுஷனையும் அழுத்துகிறது.... இந்திரனுக்கு மீட்சி கிடைத்து விடுகிறது. ஆனால் நஹுஷன்........?

"அசோகன்" எழுதிய

சுமை...!

குருதேவர் சொன்ன வார்த்தைகள் அவளுக்குத் தைரியம் ஊட்டி அவளை முன்னேறத் தூண்டின. எதிர்நோக்கி நின்ற ஆபத்து அச்சம் அளித்தது. பெண்மைக்கு இயல்பான பல வீனமும், சஞ்சலமும் காரணமாக அவள் இதயத்தில் எண்ணற்ற எண்ண அலைகள் எழுந்தன, வளர்ந்தன, குமுறித் தேய்ந்தன. எல்லாவற்றையும் சமாளித்து நடப்பதும், தயங்கி நிற்பதும், பின்பு தன்னைத் தானே தேற்றிக்கொண்டு முன்னேறுவதுமாகச் சென்று கொண்டிருந்தாள் சசி தேவி.

"சரணம் அடைந்தவரைச் சத்துருவிடம் காட்டிக் கொடுக்கிறவன் நசித்துப் போவான். பூமியில் அவன் இடும் விதை கூட முளைக்காமல் நசித்துப் போகும். உன்னை நான் கைவிட மாட்டேன்........"

ஆச்சாரியார் பிருகஸ்பதி அந்த வார்த்தைகளைக் கூறிய பொழுது, அவர் குரலில் மிளிர்ந்த காம்பீர்யம், அதில் தொனித்த உறுதி எல்லாமாகச் சேர்ந்து அவளை எந்தவிதமான பதிலும் சொல்ல வொட்டாது தடுத்துவிட்டன. அசாத்தியமான நம்பிக்கையுடன் அவர் சன்னதியைவிட்டு நகரச் செய்தன. ஆனால் இப்பொழுதோ ஆபத்து நெருங்க நெருங்க நம்பிக்கை ஆட்டங்கொடுக்கத் தொடங்கியது. பயம் பற்றியது. திரும்பிப் போய்விடலாமா, போய் குருதேவரின் பாதங்களில் விழுந்து, "ஸ்வாமி! தஞ்சம் அடைந்தவளை, யாருக்குப் பயந்து வந்து உங்களிடம் சரணம் புகுந்தேனோ அந்த ஆசாமியிடமே போகும்படி பணிப்பதுதானா தாங்கள் அபயம் அளிக்கும் முறை? எந்த ஆபத்திற்குப் பயந்து, தேவர்களின் வற்புறுத்தலையும் மீறி, அலறி அடித்துக் கொண்டு வந்து அடைக்கலம் புகுந்தேனோ, அந்த ஆபத்தை எதிர் நோக்கிப் போ, என்று ஒரு அபலையைத் தனியாக விரட்டுகிறீர்களே, இதுதான் உங்கள் தர்மமா? வேண்டாம், ஸ்வாமி! வேண்டாம்!" என அலற வேண்டும்; அதற்கு அவர் என்ன சமாதானம் சொல்கிறார் என்று பார்க்க வேண்டும் என்ற அவா எழுந்தது.

ஆச்சாரியாரின் உபதேசத்தை எண்ணிப் பார்த்தாள். "நஹுஷனுக்கு நாசகாலம் நெருங்கிவிட்டது. நீ பயப்படாதே. கால விசேஷத்தால் உண்டான சங்கடமானது கால விளம்பத்தால் தீர்த்துக்கொள்ளப்படும்" என்ற அவரது வார்த்தைகள் ரீங்காரமிட்டன. இப்பொழுது திரும்பிப் போனால் அவரிடமிருந்து எழக்கூடிய கேள்வி இதுவாகத்தானிருக்கும்: "என் வார்த்தைகளில் உனக்கு நம்பிக்கை இல்லையா?"

ஆச்சாரியாரின் வார்த்தைகளில் அவளுக்கு நம்பிக்கை இல்லாமல் இல்லை. ஆனால் கால விசேஷத்தால் ஏற்பட்ட கஷ்டம் என அவர் குறிப்பிட்ட சம்பவத்திற்கு மூல கார

ணமாக விளங்கியவரும் அந்தக் குருதேவர்தானே என்பதை அவளால் நினைத்துப் பார்க்காமல் இருக்க இயலவில்லை.

—அன்று. அவளது கணவனான இந்திரனுடன் அவளும் தர்பாரில் கொலு வீற்றிருந்தாள். கின்னரர், கிம்புருடர் யாழ் வாசிக்க; ஊர்வசி, மேனகைகளின் நடனம் நடைபெற; தேவர்கள், நாரதர் இன்னும் இதர முனிவர்கள் புடைசூழக் கோலாகலமாக இருந்த அந்த தர்பாரில், அரையில் பஞ்சகச்சமும், கக்கத்தில் ஏட்டுச் சுவடிகளுமாக, ஜடாமகுட தாரியாய் வெண்ணிற நீள்தாடி கம்பீரமாகக் காற்றில் அசைய நுழைந்தார் பிருகஸ்பதி. ஆச்சாரியாருக்கு வரவேற்பு தரும் வகையில் எல்லோரும் எழுந்து நின்றனர். அவளும் எழுந்தாள். இந்திரன் மட்டும் எழவில்லை. அரியாசனத்தில் அமர்ந்திருக்கும் அரசன் யாருக்கும் மரியாதை செலுத்த எழ வேண்டியதில்லை என்று எங்கோ கற்ற கர்வத்தின் விளைவு அது.

ஆய்ந்து அடங்கிய அறிஞராகிய ஆச்சாரியாரின் மனதில் இந்திரனது அந்தச் செயல் வருத்தத்தை விளைவித்தது என்பது வாய்மூடி மௌனியாக அவர் வந்த வழி திரும்பியதிலிருந்து தெரிந்தது. குருதேவரின் அந்த அமைதியான மௌனம் எந்தப் புயலுக்கு அறிகுறியோ என அஞ்சினர் தேவர். இந்திரனும் திடுக்குற்றான். மன்னிப்புக் கோருவதற்காக குருதேவரை நாடிப் போனான். ஆனால் அவர் அவன் கண்களுக்குப் புலனாகாமல் மறைந்துவிட்டார்.

தன் கணவன் செய்தது தவறுதான். ஆனால் அதற்காக வருந்தி மன்னிப்புக் கோரத் துணிந்தபோது மன்னிக்காமல் மறைந்தது என்னவாம்?

விதியின் விளையாட்டு எனச் சமாதானம் செய்துகொள்ளத் தூண்டுவர். அந்த விதிதான் அவளைப் பொருத்தமட்டில் எப்படி எப்படி எல்லாம் விளையாடுகிறது!

மாறி மாறி வரும் இந்திரர்களுக்கு மனைவியாக வேண்டும் என்ற மாறாத நியதி, மாற்றாக மரணம்கூட அவளுக்கு விடுதலை அளிக்க வகையில்லை. பிருகஸ்பதியின் ஸ்தானத்திற்கு வந்த விஸ்வரூபனை இந்திரன் கொன்றது, விஸ்வரூபனைக் கொன்றதற்காக அவன் தந்தை துவஷ்டா இந்திரன்மீது பழி வாங்க விருத்திரனைப் படைத்துவிட்டது, அந்த விருத்திரனை வஞ்சகமாக இந்திரன் வீழ்த்தியது எல்லாமே விதியின் வேடிக்கைதானா?

சுலபமாகச் சமாதானம் அடையமுடியவில்லை அவளால். விதி தன் விளையாட்டுக் கருவியாக்கி ஏற்றி வைத்த பாவச் சுமையைச் சுமந்த வண்ணம் ஏன் அவளது கணவன் — இந்திரன்—கரந்துறைய வேண்டும்?

அவளது நிலைக்கு இரங்கி அரற்றுவனபோல் கூடு நோக்கி விரையும் பட்சிகளின் குரல்கள் ஒலித்தன. ஆதவன் மறைந்தான். அந்தி சூழ்ந்தது.

நஹுஷனின் அரண்மனை வாசலை அடைந்துவிட்டாள் அவள். அவளது உள்ளமும் உடலும் பதறின. கால்கள் ஈயமாக உறைந்து போனது போல் கனத்தன. எடுத்தடி வைக்க முடியாது நின்றாள் அவள்.

2

அரண்மனைக் காவலாளி வந்து இந்திராணி வந்திருக்கிறாள் எனச் சொன்னபோது நஹுஷனால் தன் காதுகளை நம்பமுடியவில்லை. அவ்வளவு

நாட்களாக அலட்சியம் செய்து வந்த அவளது அத்திடீர் வருகை ஆச்சர்யமாக இருந்தது. உவகை துள்ளும் மனத்தினனாக எழுந்தோடி வந்தான் அவன்.

"சசிதேவியா? வரவேண்டும், வரவேண்டும். வருகிறேன் என்று ஒரு வார்த்தை சொல்லியனுப்பியிருந்தால் ஐராவதத்தை அனுப்பியிருப்பேனே! ஊர்வசி, மேனகை, திலோத்தமை, ரம்பையரின் அற்புத நடனத்தோடு கூடிய கோலாகல வரவேற்பிற்கு ஏற்பாடு செய்திருப்பேனே!"

"அவைகள் ஒன்றும் எனக்குப் புதியவை அல்லவே!"

சவுக்கு கொண்டு சாடியது போல் இருந்தது சசிதேவியின் அந்தப் பதில். அவளுக்குப் புதியவை அல்ல என்றால், புதிதாக இந்திரனாகி வந்திருக்கும் தனக்கு அற்பமான அக்கோலாகலங்கள் அபார அற்புதங்களாகப் படுகின்றன என்று அவள் இடித்துக் காட்டுகிறாளா? நிமிஷ நேரம் ஸ்தம்பித்துப் போனான் அவன். பின்பு சமாளித்துக் கொண்டு, "தேவி, புதிதாக என்ன வேண்டும் என விரும்புகிறாய் சொல்! அதன்படி ஏற்பாடு செய்கிறேன்."

"பிறர் மனைவியை இச்சிப்பது தவறு என்பதை தாங்கள் உணர வேண்டும்."

இப்பொழுது நஹுஷனுக்கு ஆத்திரம் வந்தது.

"காலம் தவறிச் செய்யப்படும் உபதேசம் இது. உனது மாஜிக் கணவன் அகல்யை மீது மையல் கொண்டபோது இந்த உபதேசத்தை உதிர்த்திருந்தாயானால் பொருத்தமாக இருந்திருக்கும்!" என்று சொல்லிச் சிரித்தான் அவன்.

அந்தச் சிரிப்பில் மிதந்த ஏளனத்தை சசிதேவி, உணராமல் இல்லை. இருந்தும் பொறுமையுடன், "ஸ்வாமி. அதற்குரிய தண்டனையைத் தான் அவர் அனுபவித்துவிட்டாரே!" என்றாள்.

"போகட்டும். கடந்துபோன விவகாரம் அது. அதை எல்லாம் மறந்து விடு. நான் எப்பொழுது இந்திரனாகிவிட்டேனோ, அப்பொழுதே இந்திராணியாகிய நீ என்னிடம் வந்திருக்க வேண்டும். நீ வரவில்லை. காலதாமதமாக வந்திருக்கும் நீ ஏன் இன்னும் வெளியே நிற்க வேண்டும்? இந்த அரண்மனையில் உனக்கு உரிய ஸ்தானத்தை ஏற்றுக் கொள்ள உள்ளே வா!"

சசிதேவி மௌனமாக நின்றாள். அவள் மீது வைத்த விழி வாங்காது அவள் அழகையே பருகி நின்றான் நஹுஷன். தூரத்தில் பார்த்தபோது அவள் மீது பிறந்த ஆசை, இந்தப் பார்வை பதித்தல் மூலம் உரம் பெற்றது.

"ஏன் தயங்குகிறாய்?" என்றான் நஹுஷன்.

"இந்த அரண்மனையில் தனக்கு உரிய ஸ்தானத்தை விட்டு விட்டுப் போயிருப்பவர் உயிரோடிருக்கிறாரா, இறந்துவிட்டாரா என்பது இன்னும் நிச்சயமாகாமல் இருப்பதால் தான் தயங்குகிறேன். தயவு செய்து எனக்கு இன்னும் சிறிது அவகாசம் கொடுங்கள்."

"ஓ! தேடிப் பார்த்துத் திரும்பவுடன் நிச்சயம் நீயாகவே திரும்பிவந்துவிட வேண்டும். அப்படியானால் போய்ப் பார்த்து வா!" என்றான் நஹுஷன். இந்திரன் இருந்தால் இன்னுமா தலை காட்டாமல் இருப்பான் என்ற நினைப்பு இவனுக்கும்.

ணம் அரண்மனைக்குள் நுழைந்தான்.

3

தவறுக்குப் பிராயச் சித்தம் தவறை உணர்ந்து உண்மையாக உள்ளம் வருந்துவதன் மூலம் கிட்டும் என்றால் இந்திரனுக்கு இதற்குள் பிராயச்சித்தம் கிடைத்திருக்கலாம். எனினும், மறைவிடத்தை விட்டு வெளிப்பட்டு, தேவலோகம் போய், பதவியை எய்தி, தேவர்களிடையே நடமாட

சம்மதித்த சசிதேவி, ஒருவாறு சமாளித்துத் தப்பி விட்டோம் என்ற மகிழ்வுடன் திரும்பி நடந்தாள். அவள் மறையும் வரை அவளையே பார்த்திருந்த நஹுஷன் அவள் மறைந்ததும் பெருமூச்செறிந்த வண்

நாணினான் அவன்.

ஒவ்வொரு நாளும் மாலைப் பொழுது வந்தது. மறையும் சூரியனின் பொன் கதிர்கள் மானசரோவத் தடாகத்தின் மீதும், சூழ் நிலையிலும் படிந்து

கலை வண்ணம் காட்டி மறைந்தன. தம் காதலனை ஆதவன் அப்படி அற்புத விளையாட்டுக் காட்டி ஏய்த்து விட்டு தம்மை விட்டுப் பிரிந்து போவதைச் சகியாத தாமரை மலர்கள் கூம்பின.

அவற்றேடு, தாமரைத் தண்டொன்றில் அணுவடிவில் ஒளிந்திருந்த இந்திரனது இதயமும் தினமும் கூம்பியது. அவனது அத்தகைய கரந்துரையும் வாழ்விற்குக் காரணமாயிருந்த சம்பவம் நிகழ்ந்ததும் அது போன்ற மாலை வேளை ஒன்றில்தான். எனவே ஒவ்வொரு மாலையோடும் அந்தப் பழைய சம்பவம் அவனுக்கு நினைவு வந்தது. அதைத் தொடர்ந்து அவனது பாவ கிருத்தியங்கள் ஒவ்வொன்றும் அவன் அகக்கண் முன் எழுந்து அவனை வாட்டி வதைத்தது.

தினமும் அவன் விஸ்வரூபனை எண்ணிப் பார்ப்பான். தனது செயலால் கோபங்கொண்டு மறைந்த பிருகஸ்பதியின் ஸ்தானத்திற்கு விஸ்வருபன் வந்ததும் அவன் மீது தனக்கு அவநம்பிக்கை பிறந்ததை எண்ணி வருந்துவான் அவன். அவனைக் கெடுக்க முயன்று தான் தோல்வியுற்ற சந்தர்ப்பங்கள் ஞாபகம் வரும். தேவலோக அரம்பையர் தங்கள் அழகைக் கொண்டும் அசைக்க முடியாத அவனது மனோபலத்தையும், தவ வலிமையையும் தன்னுடைய பலவீனத்தோடு ஒப்பிடுவான். அகல்யை சம்பவம் பற்றிய நினைவு எழுந்து அவனை உடல் குன்றச் செய்யும். மகா உத்தமனான அந்த விஸ்வரூபன் எங்கே? தான் எங்கே? விஸ்வரூபனைக் கொன்றது பெரும் பாதகம் என்ற நினைப்பு அவனை வாட்டும். கண்ணீர் கண்களுக்கு திரையிட்டு, கன்னங்கள் வழியே சொட்டும்.

கண்ணீர்ச் சொட்டைத் தொடர்ந்து அன்று கடலில் நின்று தெறித்தெழுந்த நுரைத் துளி அவன் மனக்கண் முன் தோன்றும்.

விஸ்வரூபனை இழந்த அவன் தந்தை துவஷ்டாவின் சோகம், அதன் பயனாக எழுந்த அவரது போகம், துவஷ்டா யாகம் செய்து விருத்திரனைப் படைத்துத் தனக்கு விரோதியாக ஏவி விட்டது ஆகிய ஒவ்வொரு

நிகழ்ச்சியும் ஒவ்வொரு நாளும் மாலைப் பொழுதோடு மனக் கண் முன் தோன்றும் மங்காத காட்சிகளாகி விட்டன.

அசுர குல மங்கை ஒருத்தி மூலம் துவஷ்டா பெற்றெடுத்த விஸ்வரூபன் ஒழுக்கத்தின் ஸ்வரூபமாகத் திகழ்ந்தான் என்ருல், வேள்வியிலிருந்து அவர் சிருஷ்டித்து விட்ட விருத்திரன் விவேகம், வீரம் ஆகியவற்றின் சின்னமாக விளங்கினுன். சமரில் அவனை வெல்ல முடியவில்லை. சமாதானம் பேசினுர்கள். அவன் விதித்த நிபந்தனை தான் எப்படிப்பட்டது!

"இரவு பகல் எந்த வேளையிலாவது, உலர்ந்த அல்லது ஈரமான எந்த ஆயுதத்தாலோ, கல், மரம், உலோகம் அல்லது அம்புகள் கொண்டோ என்னைக் கொல்லக் கூடாது!" எனக் கோரினுன் அவன். அவனை மாலை மயங்கும் இரணிய வேளையில் தான் சண்டைக்கு இழுத்தது. நடைபெற்ற உக்கிரப் போரில், வலக்கரம் துண்டிக்கப்பட்டும் மலையாது போரிட்ட விருத்திரனின் வீரம் எல்லாம் எண்ணி எண்ணி அலுக்காத வியப்புகள், சண்டையில் அவன் தன்னை விழுங்கியது, தான் அவன் வயிற்றைக் கிழித்து வெளியே வந்தது, வஜ்ராயுதத்தைக் கடலில் வீசி எறிந்து நுரை தெறிக்கச் செய்தது, அந்த நுரைத் துளிகளில் புகுந்து விஷ்ணு விருத்திரனைத் தாக்கி வீழ்த்தியது எல்லாம் தினசரி அவனுக்கு வேதனையூட்ட உதவிய அனுபவங்கள்.

விருத்திரனை வீழ்த்திய சூழ்ச்சியில் விஷ்ணுவிற்குப் பங்கு கொடுக்கலாம். ஆனுல் அந் நிகழ்ச்சிக்கு மூலமான விஸ்வரூபன் படுகொலைக்குப் பாவி தான் தானே தனிக்காரணம் என்ற எண்ணம், எந்த முகத்தைக் கொண்டு தேவர் முன் போவது என்று அவனை வெட்கமடையச் செய்யும். அணு வடிவிலே தாமரைத் தண்டிலே ஒடுங்கிக் கிடந்தான் அவன்.

5

நஹுஷனின் அரண்மனையிலிருந்து திரும்பிய சசிதேவிக்கு இந்திரனை எங்கு போய்த் தேடுவது என்று புரியவில்லை.

கற்புக்கு அதி தேவதையான தேவியை நினைத்துத் துதித்தாள் அவள். அந்தத் தேவதை சசிதேவியின் முன் தோன்றி இந்திரன் மான ஸரோவர் தடாகத்தில் தாமரைத் தண்டில் தங்கியிருக்கும் விஷயத்தைச் சொன்னுள்.

ஆடம்பரத்தின் அதிபதியாகக் கோலாகலக் கொலுவிருந்த தன் பதி, அற்ப அணு உருவத்தில் தடாகம் ஒன்றிலுள்ள தாமரைத் தண்டில் குடியிருக்கிருன் எனக் கேட்டதும் சசிதேவியின் இதயம் வேதனையால் வெதும்பியது.

சசிதேவி இந்திரன் இருக்கும் இடம் சேர்ந்ததும் ஒருவர் துயரத்தை மற்றவருக்குப் பரிமாறி ஆறுதல் சொல்லிக் கொண்டார்கள். எல்லாம் தன்னுல் விளைந்ததுதான் என வருந்தினுன் இந்திரன். குரு பிருகஸ்பதி கூறியதுபோல் நஹுஷனுக்கு நாசகாலம் சமீபித்துவிட்டது என்றும் கூறினுன். அவளை நஹுஷனுக்கு இணங்குவதாக நடித்து, அவள் அரண்மனைக்கு அவன் ஏழு ரிஷிகள் சுமக்கும் பல்லக்கில் ஏறி வரும்படி வேண்டச் சொன்னுன்.

6

தான் பூலோகத்தில் நல்லது செய்து சம்பாதித்த புண்ணியச் சுமையால் இந்திர பதவிக்கு உயர்ந்த நஹுஷனுக்கு வரவரப் போக போக்கியங்களில் லயிக்

கும் ஆசை நாளுக்கு நாள் சுமையாய் வளர்ந்தது. கர்வத்தால் தலை கனத்தது. அதோடு, அவனை இந்திர பதவி ஏற்கும்படி இணங்கச் செய்வதற்காகத் தேவர்கள் கொடுத்த சக்தி—அதாவது அவன் எதிரே வருபவர்களின் பலத்தில் பாதி அவனைச் சாரும் என்ற வரப்ரசாதம்—அவனை மமதையடையச் செய்தது. போன சசிதேவி இன்னும் வரவில்லையே என எதிர்பார்த்திருந்தான் அவன்.

எனவே, சசிதேவி அவன்முன் தோன்றியதும், ''வந்து விட்டாயா? வாக்குத் தவருமல் நடப்பதுதான் உத்தமிகளுக்கு அழகு!'' என்ருன்.

''அரசே! நான் இனி உங்களுடையவள். எனது நீண்ட கால அபிலாஷை ஒன்றை நீங்கள் நிறைவேற்ற வேண்டியதுதான் பாக்கி, நான் உங்கள் மனைவி'' என்ருள் சசிதேவி.

''என்ன அது? நான் உன் அடிமை. நீ கட்டளையிடு, நிறைவேற்றக் காத்திருக்கிறேன்.'' துடிப்பு மிகுந்திருந்தது நஹுஷனின் தொனியில்.

''அரசே! நான் என் அரண்மனையில் போய் தங்களை எதிர்பார்த்திருப்பேன். மூவுலகிற்கும் அதிபதியான தாங்கள் இதுவரை யாரும் பவனி வராத முறையில் எனது இல்லத்திற்கு எழுந்தருள வேண்டும்'',

''எப்படி? எப்படி? சொல். அப்படியே செய்கிறேன்!'' ஆவலே உருவாகக் கூவினன் அவன்.

''அழகான பல்லக்கில் அமர்ந்து அதை சப்த ரிஷிகள் சுமந்துவர தாங்கள் எழுந்தருள வேண்டும்!''

''அபாரமான எண்ணம். அற்புதமான ஆசை, என் கண்ணெதிரே படுபவர் பலத்தில் பாதி என்னைச் சேரும் என்ற நியதிப்படி அந்த ரிஷிகளின் தபோபலத்தில் பாதியும் என்னைச் சேரும். போ, போய் மகிழ்வாய் இரு. நான் அப்படியே வந்து சேருகிறேன்.''

சசிதேவி திரும்பிய உடனேயே பல்லக்கைத் தயார் செய்துவிட்டு சப்த ரிஷிகளையும் அழைத்து வரும்படி கட்டளையிட்டான் நஹுஷன்.

அவர்கள் வந்ததும், தான் பல்லக்கில் அமர்ந்தான். அவர்களைப் பல்லக்கைத் தூக்கிச் சுமந்து நடக்கும்படி பணித்தான். அவனது இந்த அடாத செயல் கண்டு மூவுலகமும் நடுநடுங்கியது.

பல்லக்கு சுமக்கும் ரிஷிகள் நடந்து கொண்டிருந்தார்கள். நஹுஷனின் மனமோ பறந்து கொண்டிருந்தது. சசிதேவியின் எழில் அவன் முன் எழுந்து, 'வேகம், வேகம், இன்னும் வேகம்!' எனச் சைகை காட்டி அழைப்பதாகப்பட்டது. சம்ஸ்கிருத பாஷையில் வேகம் எனப் பொருள்படும் ''ஸர்ப்ப'' என்ற சொல்லை ஓயாது உச்சரித்து ரிஷிகளைத் துரிதப்படுத்தினுன் அவன்.

அவர்களது நடை வேகம் அவன் மனே வேகத்திற்கு ஈடு கொடுக்க இயலவில்லை. கீழே குதித்த நஹுஷனின் பார்வை அகஸ்தியர் மீது பட்டது. ''வேகமாக நடப்பதற்கென்ன குள்ளப்பயலே!'' என்று அவரை எட்டி மிதித்தான் அவன்.

குறுமுனியின் கோபம் நெடிதுயர்ந்தது. ''ஸர்ப்ப!'' எனச் சபித்தார் அவர்.

பாவச் செயல்கள் பெருஞ் சுமையாய் அழுத்த உழன்று கொண்டிருந்தவன் மீது முனிவரின் சாபச் சுமையும் ஏற, பெரிய மலைப்பாம்பாய் விண்ணினின்று மண்ணிலே வியன் கானகத்தில் விழுந்தான் நஹுஷன்.

இடம்: சமையல் அறைக்குச் சிறிது தூரம்.

காலம்: அல்வா, கிண்டவும் சரியாக முறுவலாகவும் இடையில் உளள காலம்.

பாத்திரங்கள்: உண்மைப் பாத்திரங்களில் உள்ளவற்றைக் காலி செய்ய வந்துள்ள மானிட பாத்திரங்கள்.

குறிப்பு: தாளிதம் செய்யும் வாசனை நாசிக்கு எட்டுகிறது.

சந்தர்ப்பம்: பொங்கல் விருந்துக்காகக் காத்துக்கொண்டிருக்கும் நிலை.

[சாப்பாட்டுக்கு வந்துள்ள பாத்திரங்கள் ராமன், கிருஷ்ணன், கோவிந்தன், நாராயணன், பாலு, வேலு ஆகியோர் பொழுது போக்க பேசிக் கொண்டிருக்கிறார்கள்!]

ராமன்: *(கனைத்துக் கொண்டு) அன்னமும் நெய்யும் முன்னெறி தெய்வம். எனது அருமை போஜனப் பிரியர்களே! இங்கே நாம் கூடி இருப்பதின் நோக்கம் பொங்கல் விருந்துக்காக தயார் செய்து கொள்ளவே என்பது உங்களுக்குத் தெரியும்!*

கிருஷ்: *ஆமாம்!........ சாப்பாடே நமது சாயுஜ்யம்!—சாம்ராஜ்யம்!*

கோ: போஜனமே நமது லட்சியம்.

ராமன்: *சரியான வார்த்தை! புசிப்பே நமது புது நெறி. இந்த சந்தர்ப்பத்தில், ருதுபன்ன மகாராஜனுக்கு இனிய உண்டிகளைத் தயார் செய்த நளனைப் பற்றியும் நினைத்துக் கொள்ள வேண்டும். இரண்டாவதாக, விராடமன்னனுக்கு விதம் விதமாகச் சமைத்துப் போட்ட பீமசேனனையும் மறக்காதீர்கள்! கடைசியில் நமது ஆதிகர்த்தாவான குண்டோதரனுக்கும், 'ஜே' என்று போடுங்கள்.*

[சமயலறை சப்தங்கள் கேட்காத வகையில் 'ஜே' சப்தம் எழுகிறது!]

கிருஷ்: விருந்தில் என்னென்ன அம்சங்கள் இருக்க வேண்டுமென்று பேசுவோமே!

நாரா: (திடீரென்று) பச்சடிதான் மிக மிக அவசியம்!

வேலு: என்ன?

நாரா: ஆம்! பச்சடி இல்லா விருந்து பாழ்! பக்ஷணங்கள் குவிந்திருக்கலாம்; பழமிருக்கலாம்; மசால் வடையும் மாங்காய்த் துண்டமும் இலையில் போட்டி போடலாம். ஆனால், இலையின் ஈசான்ய மூலையில் பச்சடி இல்லாவிட்டால், அது விருந்தேயல்ல!

வேலு: சாம்பாரைவிடவா? சாம்பார் போஜனத்தின் ஜீவன்! அன்னத்தின் நண்பன்! நாக்கின் பரிசோதகன்.... வெங்காயத்துக்கு விருப்பு அளித்து, பெருங்காயத்துப் பெருமை கொடுத்தது........எல்லாம் சாம்பார் தினுசுகள்தான்.

பாலு: கொஞ்சம் நிறுத்துங்கள்.... இவை எல்லாம் ஊறுகாயைவிடவா?....ஹோட்டல் சாம்பாரை ஒரேவிதமாக எல்லா ஊர்களிலும் சுவைத்தா இந்தப் பேதமை! இலக்கே திலகம் ஊறுகாய் தானே!

வேலு: ஊறுகாயில் அப்படி என்ன பிரமாதமாக இருக்கிறது?

பாலு: ஊறுகாய், ஆராய்ச்சிக்கே இடம் கொடுக்கிறது. வெஜிடபிள் ஊறுகாய் என்று கிளம்பி இருக்கிறதே, எதனுல்? சொல்லுமய்யா, கனம் சாம்பார் அவர்களே! சொல்லும்! விஜிடபிள் ஊறுகாயில் என்ன விஜிடபிள் இருக்கிறது?

ராம: என்ன இருந்தாலும் ரஸத்தின் மகிமை ஊறுகாய்க்குக் கிடைக்குமா?

பாலு: இதுக்கு பதிலா நான் ஒரு கவிதைதான் சொல்ல வேண்டி இருக்கிறது.

ராம: கேப்போமே!

பாலு: (பாடுகிருர்)

விருந்தின்மீது மோகங்கொண்டு
ஏங்கி நிற்கும் வீணர்காள்
விருந்தில் வந்து நிற்குமந்த
நூறு தினுசு உண்டிகள்
தருவதுண்டோ ஊறுகாய்கள்
வாரி யளிக்கும் இன்பமே
தயிரும் ஊறுகாயும்இன்றேல்
தரணி வாழ்வுமில்லையே!

ராம: ஊறுகாய் சாமி! இவ்வளவு தானே.... ஆனுல் ரசம்? பந்திக்கழகு தொன்னையில் ரசமாம்!

வேலு: ஏ! நீர் ரஸவாதியா?.... உமது ரசத்துக்கு எப்பவும் ருசி மட்டந்தான்! என்ன பச்சடியார்?

நாரா: ரொம்ப சரி! பச்சடியோடு நிற்கமுடியுமா ரசம்?

ராம: ரசத்துக்கு ருசியில்லையென்று யார் சொன்னது? அதற்கு இலக்கியச் சிறப்பே உண்டு; காவியப் பெருமை உண்டு.

பாலு: இதென்ன புதுப் பெருமை?

ராம: நவரஸம் என்று கேள்விப்பட்டதில்லை?

வேலு: எது? வீரம், காதல், பயம் என்று....

நாரா: அந்த ரஸம் சாப்பாட்டில் எங்கு வந்தது?

ராம: பின்னே? உம் பச்சடி போல இது ஈசான்ய மூலையிலே நிற்குமா என்ன?.... கேளும்.

பாலு: கதை ஏன்? சீக்கிரம் சொல்லும்!

ராம: (பாடுகிருர்)

மிளகுரசம் என்ன தெரியுமா-
வெறும் வீர ரஸம்
காட்டாய் ஒரு கலக்காய்
கலக்கி
குட்டாய் ஒரு கப் மிளகு
ரஸத்தை
போட்டால் பொங்கும் வீர
ரஸம்

பாலு: இதுகூட ஒரு கவிதை தானு?

ராம: வசன கவிதை!

வேலு: மிளகு ரசம் சாப்பிட்டால் வலுச்சண்டைக்குப் போகலாம்!

ராம: அடுத்தபடி ஹாஸ்ய ரஸத்தைப் பிழிவது எலுமிச்சம்பழம் ரசம்.

நாரா: ரொம்ப சரி.... பைத்தியத்துக்கும் ஹாஸ்யத்துக்கும் நெருங்கிய சம்பந்தம்தான்!

ராம: அடுத்து வெகுளித்தனத்தைக் காட்டுவது மைசூர் ரசம்.

பாலு: ஆமாம்.... மைசூர் ரசம் என்றால், நாம் நிஜமென்று நம்பித்தானே சாப்பிட்டு வந்துவிடுகிறோம்.

வேலு: பயரசம் இல்லியோ?

ராம: (பாடுகிறார்)

கண்டத்திப்பிலி ரசத்தைக் கண்டால்
அண்டங்களே நடுங்கிடுமே!

கிருஷ்: பேஷ்! கருணைக்கு?

ராம: கருணாரஸம் பொங்குவது பொறிச்ச ரசத்தில....

கோ: பொறிச்ச ரசத்துக்கு ருசி ஏதய்யா?

ராம: அதுதான் கருணா ரசத்தோடு முடித்து வைத்தேன்....ஐந்தாவது ரசம்—சாந்தம். சாந்தம் துலங்குவது தக்காளி ரசத்தில்....

பாலு: போனால் போகட்டும்—அற்புத ரஸம்?

ராம: அற்புதத்துக்கு, ஆப்பிள் ரசம்.

கிருஷ்: ஆமாம்.... ஆப்பிள் ரசம் கிடைப்பதும் அற்புதந்தான்.

ராம: சிருங்கார ரசம் என்ன தெரியுமோ? பன்னீர் ரசம்!

நாரா: இவ்வளவும் சொன்னீரே சோகரஸம்?

ராம: அது இல்லாமல் முடியுமா? சோக ரஸத்துக்காகத் தனியாக வேப்பம்பூ ரசம் இருக்கிறதே.... இப்படி நவரஸங்களும் ததும்பும் ரசத்தின் பெருமைய்யையும் கீர்த்தியையும் மறந்து, ஊறுகாய், பச்சடி, சாம்பார்....என்றால்?

கிருஷ்: இருந்தாலும் விருந்துக்கே ஒரு சோபையைக் கொடுக்கும் சித்ரான்னங்களை மறக்கலாமா?

ராம: சித்ரான்னங்களா?

கிருஷ்: ஆமாம் (பாடுகிறார்)

வானவில்லைப்போல
பல வர்ணங்களாலாகி
அறு சுவையுமங்கே
அதில் ஆரமுதில் கலக்க
எலுமிச்சை எள்ளு
தேங்காய் புளியும் தயிருமாய்
வாழை இலை தனிலே
ஒளிவர்ண மயமாகி....

ராம: இது என்னய்யா பைத்தியக் காரத்தனமா....

கிருஷ்: சாப்பாடு ஒரு கலை! அதன் அழகை சாம்பாரிலும் ஊறுகாயிலும் காண முடியாது. அழகு சொரிவது சித்ரான்னங்களிலேதான். பக்ஷண வகையிலேயும் காணலாம். (பாடுகிறார்)

சுழன்று சுழன்று சுற்றும்
சுவையுள்ள முறுக்கு
உருண்டு உருண்டு ஓடும்
சிவந்த சீடை
வளைந்து வளைந்து நிற்கும்
அற்புத ஜாங்கிரி
முத்து முத்தாய் குவிந்திட்ட
மோகன லட்டு....

வேலு: என்னய்யா....உம் கவிதை 'நான் ஸ்டாப்'பா போகும் போலிருக்கிறதே!

கிருஷ்: இவை எல்லாம் ஒரு விருந்தில் நம் கண்கள் கண்டு வாய் புசிக்காவிட்டால், நாம் சாப்பாட்டு ராமன்களாக இருக்கவே லாயக்கில்லை.

கோ: நீங்கள் எல்லோரும் தனித்தனியாகச் சொன்னீர்கள். பயனில்லை!

பாலு: பயனில்லை என்ருல்?

கோ: எல்லாம் சேர்ந்திருக்க வேண்டும்!

ராம: எப்படி?

கோ: விருந்தின் வளமை சொல்வேன் விவரமாய் கேட்பீர்.....

வேலு: இது கூட கவிதை தானு....பசித்தவர்களுக்கு கவிதை தாஞக வருமோ?

கோ: குறுக்கிடாமல் கேளுங்கள் (பாடுகிருர்)

நுனியிலையிட்டு கனிகளை
வைத்து
பனிபோல வெண்மை பாய
சம் வார்த்து
பாயசம் தெற்கே பச்சடி
வடக்கே
பாகற்காய்ப் பொறியல்
பக்கத்தில் நிற்க
கோடைக் கோசுமரி
குவித்து மினுக்க
கோடியில் ஊறுகாய்
எட்டிப் பார்க்க
நடுவில் வறுவல் அவியல்
துவையல்
நாலு தினுசுகள் கூட்டம்
கூட
கொத்தமல்லிஇதழ்
உச்சியில் ஜொலிக்க
கூட்டும் வடையும்
நெருக்கித் தள்ள
மல்லிகைப் பூப்போல்
மத்தியில் அன்னம்
அன்னத்தின் மேலே
அழகிய குன்ருய்
மங்களகரமாய் பருப்பு
விளங்க
பருப்பின் சிகரமாய் பனி
நெய் துலங்க
அண்டையில் சாம்பார்
அருகில் பிட்டினை
மோர்க் குழம்பு அருவியாய்ப்
பொழிய
சோறு கண்ட இடம்
சொர்க்கலோகமாம்
மோறு கண்ட இடம் மோட்ச
லோகமாம்
விருந்து கண்ட இடம் இந்திர
லோகமாம்
சரிநிகர் ஏது? சமானம் ஏது?

[அண்டம் கிடுகிடுக்கும்படி கைதட்டல் சப்தம் கேட்கிறது]

கிருஷ்: பேஷ்! பேஷ்! இந்தக் கவிதையிலே சித்ரான்னத்துக்கு ரெண்டு வரி சேத்துக் கொள்ளவேண்டும்!

பாலு: ஊறுகாய் இடம் காலியாக இருப்பதும் சரியில்லை.

நாரா: இன்னும் பொங்கல் விருந்து துவங்க வில்லையா?

ராம: அதற்குள் சில பிரேரணைகளை நான் கொண்டு வந்து விடுகிறேன். பிறகு தான் சாப்பாடு.

வேலு: பிரேரணையா?

ராம: பிரேரணை இல்லாத கூட்டமா? முதல் பிரேரணை—நெய் பரிமாறும் கரண்டிகள் பெரியவைகளாக இருக்க வேண்டும்; அதாவது கரண்டிகளின் விட்டம், அதுதான் டயாமீட்டர், அது இரண்டரை.... அங்குலம் இருக்க வேண்டும்!

கோ: அவசியம் ஏற்பட்டால் ஒரு கிண்ணத்தையும் உபயோகிக்கலாம்.

நாரா: இன்னொரு பிரேரணை—சாப்பிடும் போது, பச்சடி வேண்டுமா, 'அது' வேண்டுமா என்றெல்லாம் கத்துகிறார்கள்; இப்படிக் கத்துவது நம் அமைதியைக் கலைக்க, சாப்பிட இடஞ்சல் ஏற்படுகிறது. பரிமாற வருபவர்கள், கொண்டு வந்ததை, பேசாமல், இலையில் தள்ளிவிட்டுப் போகவேண்டும்!

ராம: இதை நான் முழு மனத்துடன் வரவேற்கிறேன்—ரசத்தையும் இப்படியே தான் ஊற்ற வேண்டும்.

கிருஷ்: சித்ரான்னங்களுக்கு சுட்ட அப்பளம் நன்றாக இருக்குமாதலால், அதையும் போட வேண்டும்.

வேலு: சரி!

பாலு: இலைகளில் இட நெருக்கடி ஏற்படுவதை முக்கியமாகத் தடுக்க வேண்டும்.

வேலு: அப்படி என்றால்?

பாலு: இலை பெரிய இலையாக இருக்க வேண்டும்.

ராம: ஆமாம். இலையைப் பெரிதாகப் போட்டு, இலைக்கு ஐந்து தொன்னைகள் வீதம் வைத்தால், பாயாசமும் பச்சடியும் சந்தித்துக் கைகுலுக்க சந்தர்ப்பமே ஏற்படாது.

கிருஷ்: இன்னொரு முக்கிய விஷயம்! சாப்பாடு முடிந்ததும் எல்லோரும் ஒன்றாக எழுந்திருக்க வேண்டும் என்ற சம்பிரதாயத்தை ஒழிக்க வேண்டும். வயிற்றுக்கு துரோகம்! மனதுக்கு வருத்தம்! பாயாஸத்துக்கு ஆயாஸம்!

நாரா: இன்னும் எவ்வளவோ சில்லறைப் பிரச்னைகள் இருக்கின்றன. பச்சடியிலும் முந்திரிப் பருப்பைப் போடுவது, பாயஸத்தில் பாதாங் கொட்டை சேர்ப்பது........அட! நம் சுந்தரம் தாம்பூலம் சகிதம் வருகிறானே.

[சுந்தரம் பெரிய ஏப்பத்துடன் வருகிறான்]

ராம: என்னப்பா சுந்தரம்! எங்கே யிருந்து வருகிறாய்?

சுந்: எங்கே இருந்தா....முதலியார் வீட்டு பொங்கல் சாப்பிட்டுவிட்டுத்தான்.

கிருஷ்: அடப்பாவி! பந்தி பரிமாறியாகிவிட்டதா?

சுந்: இப்போது நான்காவது பந்தி நடக்கிறது........நான் முதல் பந்தியிலும், மூன்றாவது பந்தியிலும் சாப்பிட்டுவிட்டுத் தான் வருகிறேன்........"பொங்கலோ பொங்கல்" என்று உரக்கக் கூச்சல் போட்டதும் காதில் விழவில்லையா?

[ராமன், கோவிந்தன், கிருஷ்ணன் முதலியோர் இந்த அதிர்ச்சியாலும், பசியின் மிகுதியாலும் மயங்கி விழுகின்றனர்]

எனது நண்பன் வீராசாமி இந்த நாட்டிலே பிறந்திருக்கக் கூடாது. அவனுடைய அளவு கடந்த கற்பனைத் திறனுக்கும், புதிய புதிய யந்திரங்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற விஞ்ஞான ஆர்வத்திற்கும் இந்த நாட்டில் யார் ஊக்கமளிக்கப் போகிறார்கள்? ஒருவரும் உதவி செய்யமாட்டார்கள் என்பது அவனுடைய உறுதியான எண்ணம். அதனால் அவன் தன்னைப் பெரிய துரதிஷ்டம் பிடித்தவன் என்று அடிக்கடி சொல்லிக் கொள்ளுவான். அவன் மட்டும் ஐரோப்பாவிலோ அல்லது அமெரிக்காவிலோ பிறந்திருந்தால் இதற்குள் ஒரு பெரிய விஞ்ஞானியென்று பெயர் வாங்கியிருப்பான்; அல்லது பயித்தியக்கார ஆஸ்பத்திரியில் அடைப்பட்டிருப்பான். இது அவனுடைய சிநேகிதர்களுடைய அந்தரங்கமான அபிப்பிராயம்.

இந்தியாவிலே அதிலும் தமிழ் நாட்டிலே பிறந்ததால் அவனுக்கு அப்படி ஒன்றும் நேர்ந்துவிடவில்லை. ஆனால் வீராசாமிக்கு இத்தேசத்தின் மேல் தீராத வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. எப்பொழுது பார்த்தாலும் இதைச் சபித்துக் கொண்டும், இழிவாகப் பேசிக் கொண்டுமிருப்பான். "நாய்கள் கூட வாழ்வதற்கு இந்தத் தேசம் லாயக்கில்லை" என்பான் அவன்.

"உன்னை ஒருத்தரும் இங்கே வாழச் சொல்லவில்லையே?" என்றால், "வாழச் சொல்லவில்லையா?....என்னைப் போல நாலுபேர் அறிவாளிகள் இல்லாவிட்டால் இந்த தேசத்தை நாய் கூட மதிக்காது" என்று உருமுவான். சாமர்த்தியமாகப் பதில் சொல்லி வாயடக்கிவிட்டதாக அவன் நினைத்துக் கொண்டு உள்ளுக்குள்ளே சிரித்துக் கொள்வான்; அதற்கு மேலே அவனை எதிர்த்து யாரும் வாதாடமாட்டார்கள்.

"ஏண்டா இப்படி உனது தாய் நாட்டையே கேவலமாகப் பேசுகிறாய்? அது நியாயமா? பெற்ற தாயை நிந்திக்கலாமா?" என்று யாராவது ஒரு சமயத்தில் கேட்டால்,

"இங்கே அறிவு படைத்தவனுக்கு ஆதரவு எங்கே கிடைக்கிறது? எனது மூளையையெல்லாம் இந்த தேசம் பயன்படுத்திக் கொள்ள வேண்டாமா? நான் இப்பொழுது ஒரு புதிய யந்திரம் யோசனை செய்து வைத்திருக்கிறேன். அதைச் செய்ய எனக்கு யார் உற்சாகமளிக்கிறார்கள்? ஐரோப்பாவாக இருந்தால் இதற்குள் எத்தனையோ பேர் என்னை ஆதரிப்பார்கள். எனது முயற்சிகளுக்கு உதவியளிப்பார்கள்" என்பான். அவனுடைய பேச்சிலே கோபமும் வெறுப்பும் கலந்து ஒன்றையொன்று முந்திக்கொண்டு வரும்.

வீராசாமியின் புதியது கண்டு பிடிக்கும் மூளை சிறுவயதிலேயே அதன் வல்லமையைக் காட்ட ஆரம்பித்தது. அவனுக்குப் பத்து வயதிருக்கும்; அப்பொழுதே முறத்தை இரண்டு கைகளிலும் கட்டிக் கொண்டு அவன் பறக்க ஆரம்பித்துவிட்டான். தனது இறக்கைகளை இறுக்கிக் கட்டிக் கொண்டு அவன் ஒரு வைக்கோல் போரின் மேலேறிப் பறப்பதற்குத் தயாராக நின்றான். நானும் மற்ற விளையாட்டுத் தோழர்களும் ஆச்சரியத்தோடு திறந்தவாய் திறந்தபடி பார்த்துக் கொண்டிருந்தோம். அவனைத் தடுக்க யாருக்கும் தைரியம் வரவில்லை. மேலும் அந்த சமயத்தில் நாங்களும் அவனைப் போலச் சிறுவர்கள் தானே!

அவன் பறந்தது கொஞ்ச தூரத்திற்குத்தான்; அதுவும் அநேகமாகச் செங்குத்தாகவே தரையை நோக்கியிருந்தது. நல்லவேளை, கீழே ஐந்தாறடி உயரத்திற்கு வைக்கோல் குவித்திருந்தது. வீராசாமியை அந்த வைக்கோல் புதருக்குள்ளிருந்து வெளியிலே விடுவிக்கும்வரை எங்களுக்கு ஒரே பயம். எங்காவது ஆபத்து ஏற்பட்டிருந்தால் விஷயம் வெளியாகி நல்ல உதை கிடைக்குமே.

வீராசாமியும் நானும் எங்கள் பெற்றோர்களோடு பள்ளி விடுமுறை சமயத்தில் திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்திற்கு உறவினர் வீட்டிற்கு விருந்தாகச் சென்றிருந்தோம். அங்கேதான் இந்தப் பறக்கும் சோதனை நடந்தது. வேறிடத்தில் வைக்கோற் போர் அவ்வளவு வசதியாகக் கிடக்குமா?

சிறு வயதில் ஏற்பட்ட அந்த அனுபவம் வீராசாமியின் விஞ்ஞான உற்சாகத்தைக் குறைத்துவிடவில்லை. "எனக்கு மட்டும் வேண்டிய கருவிகள் எல்லாம் கிடைத்தால் இன்றைக்கே பறந்து காட்டுவேன்" என்று இன்றும் சொல்லிக் கொண்டிருக்கிறான்.

ஆனால் யந்திரமில்லாமலேயே பறக்கும் அந்த ஆராய்ச்சியை வீராசாமி மேலே தொடர்ந்து செய்யவில்லை. எந்த முயற்சியையும் தொடர்ந்து செய்யும் துர்க்குணம் அவனிடத்திலே கிடையாது. அவ்வப்பொழுது பத்திரிகைகளிலே அடிபடும் விஞ்ஞான ஆராய்ச்சி விஷயத்திலே மனதைச் செலுத்துவான். அதைப் பற்றிச் சதா பேசிக்கொண்டிருப்பான்.

மேகங்களை நாம் விரும்பிய இடத்திற்குக் கொண்டு வந்து மழை பொழியுமாறு செய்வதற்கு ஒரு முயற்சி நடந்து கொண்டிருக்கிறதல்லவா? அதைப் பற்றிய விபரம் முதன் முதலிலே பத்திரிகையில் வந்தவுடன் வீராசாமி ஆவேசம் கொண்டவன் போல விறு கொண்டெழுந்தான். வருண பகவானோடு நேரடியாக அவன் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருப்பது போல எனக்குத் தோன்றியது. கடைசியிலே அவன் மத்திய சர்க்காருக்குத் தனது ஆராய்ச்சிகளின் முடிவுகளை எழுதினான். யானைகளை இரும்புச் சங்கிலியால் கட்டி

இழுத்து வருவது போலக் கரு மேகங்களைக் கட்டி இழுத்துக் கொண்டுவர முடியுமென்றும், ஆனால் அதற்கு இரும்புச் சங்கிலிக்குப் பதிலாக நுட்பமான கிரணங்களாலாகிய சங்கிலி வேண்டுமென்றும் அவன் கடிதத்திலே குறிப்பிட்டிருந்தான். காமாக்கதிர், எக்ஸ் கதிர் என்பது போல அவற்றிற்கு மழைக் கதிர் என்று அவன் பெயரிட்டிருந்தான். மேகங்களுக்கெதிரே ஒரு ஆகாய விமானத்திலிருந்து கொண்டு மழைக் கதிரைச் செலுத்தி மேகங்களைக் காந்தத்தில் ஊசியைக் கட்டி இழுத்து வருவதுபோல இழுத்து வந்துவிடலாம் என்பது எவனுடைய சித்தாந்தம்.

"அது சரி; ஆனால் மழைக் கதிரை எப்படி உண்டாக்குவது?" என்று நான் மெதுவாகக் கேட்டேன்.

"அதற்குத்தான் சில யந்திரங்கள் வேண்டுமென்று சர்க்காருக்கு எழுதினேன்; அங்கிருந்து ஒரு பதிலும் வரவில்லை. இப்படியிருந்தால் இந்த தேசம் எப்படி உருப்படப் போகிறது?" என்று அவன் ஆத்திரத்தோடு பதிலளித்தான்.

இம்மாதிரியாக அரசாங்கத்தாரின் அலட்சிய புத்தியைப் பற்றி அவன் மும்முரமாக எங்கு பார்த்தாலும் பேசிக் கொண்டிருப்பான். நாட்டிலே வெகுகாலம் மழையின்மையால் நலிந்திருந்த மக்களுக்கு இவன் கூறுவது மெய்தானென்று பட்டது. மழையின்மையால் ஏற்பட்ட அவர்களுடைய துன்பம் அத்தனை பெரிதாக விருந்தது.

ஆனால் நல்ல வேளையாக நாடெங்கும் மழைபெய்யவாரம்பித்தது. அதற்கு மேல் வீராசாமியின் பேச்சைக் காது கொடுத்துக் கேட்க மக்களுக்கு நேரமிருக்கவில்லை; மனமும் இல்லையோ என்னவோ? ஆனால் மக்களின் மனம் மாறுவதற்கு முன்னாலே எனது நண்பனின் மனமும் மாறிவிட்டது. மழையைப் பிடித்து இழுத்துவரும் மேகஜித்தாக ஆவதற்கு முன்னால் அவனுடைய நாட்டம் அணுகுண்டிலே சென்றுவிட்டது. மழையைப்பற்றி அவன் மறந்துவிட்டான்.

"உலகத்திற்கே அழிவு வருகிறபோது மழை பெய்தாலென்ன, பெய்யாவிட்டாலென்ன?" என்று அவன் பேசவாரம்பித்தான்.

அவன் பேச்சு எனக்கு விளங்கவில்லை. "உலகம் ஏன் அழியப் போகிறது?" என்று நான் அவனைக் கேட்டேன்.

எனது அறியாமையையும், சிறுபிள்ளைக் கேள்வியையும் கண்டு அவன் இரக்கப்பட்டான். "ஹைடிரஜன் குண்டு உன் தலைமேலே விழுந்தால்தான் உனக்கு விஷயம் விளங்கும். அதுவரையிலே விளங்காது" என்று அவன் கூறி, மேலும் எனக்குக் குழப்பத்தையும் சந்தேகத்தையும் உண்டாக்கினான். அவனுடைய சிந்தனைகள் போகும் வேகத்தோடு ஒட்டிப்போக என்னால் என்றுமே முடிவதில்லை. அதை அவன் பலமுறை எனக்கு எடுத்துக் காட்டி யிருக்கிறான்.

"ஆமாம், என் தலையிலே குண்டு விழுந்தால் உலகமே அழிந்து போகுமா?" என்று நான் கேட்டேன்.

வீராசாமிக்குக் கோபமே வந்து விட்டது. "ஹைடிரஜன் குண்டு ஓரிடத்திலே வெடித்தால் அதிலிருந்து தொடரும் எதிர் விளைவுகள் எங்குமே பரவிவிடும். உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் தாமாகவே அணுக்களாகப் பிரிய ஆரம்பித்துவிடும். அவையனைத்தும் அப்படிப் பிரியும்போது ஏராளமாக உஷ்ணத்தைக்கக்கி உலகத்தையே அழித்துவிடும். அதுதான் யுகப்பிரளயம்—ரஷ்

யாவிலே ஹைடிரஜன் குண்டு தயாரித்துவிட்டதாக இன்று சேதிவந்திருக்கிறது. அதை நான் தடுத்தே ஆகவேண்டும்'' என்று அவன் ஆத்திரத்தோடு பேசினன். உணர்ச்சிக் கொந்தளிப்பினலே அவன் உடம்பெல்லாம் துடித்தது.

''எப்படித் தடுக்கப் போகிருய்?'' என்று நான் கேட்டேன்.

''ஹைடிரஜன் குண்டை நான் கண்டுபிடித்தாக வேண்டும். அதுதான் உலகத்தைக் காப்பாற்ற வழி—வேறே வழி கிடையாது'' என்று அவன் எழுந்தான்.

''நீயும் கண்டு பிடித்து விட்டால் இரண்டு குண்டும் சேர்ந்து சீக்கிரம் உலகத்தைப்பொசுக்கி விடுமே?'' என்று கவலேயோடு கேட்டுக்கொண்டே நான் அவனைத் தொடர்ந்து ஓடினேன்.

''அடே, முட்டாள். என் பின்னலே வராதே. ரஷ்யா கண்டு பிடித்ததென்று சொன்னல், இன்னும் இல்லை என்று அர்த்தம். அந்த தேசத்திற்கு முந்திக் கொண்டு நான் கண்டு பிடிக்க வேண்டும். இல்லாவிட்டால் பிரளயத்தைத் தவிர்க்கமுடியாது'' என்று கூறிக்கொண்டே அவன் வேகமாக மறைந்து விட்டான்.

இன்று காலையிலே அவனைப் போலீசார் கைது செய்த செய்தி கேட்டு நான் திடுக்கிட்டுப் போனேன். உடனே அவனைக் காண ஓடினேன். விஷயம் அவ்வளவு தூரத்திற்குச் செல்லுமென்று நான் எதிர் பார்க்கவில்லை.

ஹைடிரஜன் குண்டு கண்டு பிடிக்க உடனே எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்றும், அதற்கு சம்மதம் தெரிவித்து நேற்று மாலைக்குள் கடிதம் வராவிட்டால் இன்று காலை 10 மணிக்கு ஹைலண்டு மைதானத்திற்கு அருகேயுள்ள குதிரை வீரனுடைய சிலையை உடைத்துவிட்டு அந்தக் குதிரையிலே தான் அமர்ந்து கொண்டு உண்ணுவிரதம் இருக்கப்போவதாகவும் அவன் சென்னை முதல் மந்திரிக்குக் கடிதம் எழுதினனும்.

அதன் பயனுகை வீராசாமியை இன்று அதிகாலையிலே கைது செய்திருக்கிருர்கள்.

''ஆமாம். அந்தக் குதிரை மேலே உட்கார்ந்து சத்தியாக்கிரகம் செய்ய எதற்காகத் திட்டமிட்டாய்?'' என்று பாதுகாவலிலிருந்த வீராசாமியைக் கேட்டேன்.

''குதிரைதான் கலியுக முடிவிற்கு அறிகுறி. அதன் மேலே அமர்ந்துதான் அடுத்த அவதாரம் வரப்போகிறது. நான் கைதியாகிவிட்டதால் இனிப் பிரளயத்தைத் தடுக்க வழியேயில்லை'' என்று அவன் கூறினன்.

அவன் பார்வையிலே ஏதோ ஒரு வெறி யிருந்தது. அவனை மீட்டுக் கொண்டுபோக வழியொன்றும் இருக்கவில்லை. போலீசார் கேட்டபடி உத்திரவாதம் கொடுக்க அவன் மறுத்துவிட்டான். அவனுக்காக ஜாமீன் கொடுக்க யாருக்கும் தைரியம் வரவில்லை.

''கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரியிலே சோதனை செய்ய முதலில் அனுப்புகிருேம், பிறகு பார்க்கலாம்'' என்று கூறிப் போலீஸ் இன்ஸ்பெக்டர் எனக்கு விடை கொடுத்தார்.

''இந்த தேசம் என்றைக்குமே உருப்படாது, என்று எனக்கு ஆதியிலிருந்து தெரியும். அது இன்றைக்கு நிச்சயமாகிவிட்டது'' என்று வீராசாமி உரத்த குரலில் கூறிக் கொண்டிருந்தது வெளியே புறப்பட எழுந்த என் காதில் விழுந்தது.

அரசியல் பொங்கல்
தமிழ் மக்கள்
காளையை அடக்கி,
கன்னியின் அன்பைக் கவரும் வீரர்
ம.பொ.சி
தி.க
தி.மு.க
இனவெறி


(அ)
பொங்கலை முன்னிட்டு ஈ.வே.ரா வீட்டை சுத்தம் செய்ய
இம்மாதிரி ஓர் இயக்கம்
ஆரம்பிக்கலாம்
ஈ.வே.ரா
தார்
பொங்கலுக்கு சுத்தம் செய்த வீட்டிலே
ஏன் குப்பை செய்யுறே? இது ஒழுங்கீனம்
தெரிஞ்சுக்கோ!
புகார் சொல்லும்
எம்-எல்-ஏக்கள்
வரதராஜுலு
நேரு
ராஜாஜி மீது புகார்

காங்கிரஸ்
அரசியல் பஞ்சாங்கத்தில்
கண்டுள்ள
சங்கராந்தி புருஷன்
தலைநகர் பிரச்னை
பொண்ணு குதிர் மாதிரி வளர்ந்துட்டா!
வரனே தெகயல்லே!! ம்.ம்....
தை பிறந்தா வழி பிறக்குமா?
ஆந்திரர்

தமிழர் பண்பாடு
கம்யூனிஸ்ட்
தி.க
தி.மு.க
வீடு சுத்தம் செய்யப்படுகிறது.
பொங்கலோ பொங்கல்!
ராஜாஜி ஆட்சி
பால் பொங்குக!
தமிழ் மக்கள்
சுபிட்சம்
பொங்கல் அமோகமாக பொங்குகிறது

வழிகாட்டி

சுகி

இதுவா, அதுவா? இப்படிப் போவதா, இல்லை அப்படிப்போகலாமா? யாரையாவது கேட்கலாமா, கேட்டால் பதில் வருமோ வராதோ?—இந்த எண்ணங்களில் நாம் உழன்றுகொண்டிருக்கும் வேளையில் ஆபத்பாந்தவனாக வந்து நம்மருகே ஒட்டிக்கொள்ளும் வழி காட்டிகளிடம் நீங்கள் நிறைய சங்கடப்பட்டிருக்க வேண்டும்; அல்லது சந்தோஷப்பட்டிருக்க வேண்டும். இந்த இரண்டையும் இணைக்கிறவர்கள் இவர்கள். கழுகுக்கு மூக்கில் வேர்க்கும் என்பதை பார்க்க முடியாது. இவர்கள் டக்கென்று, "கோவிலுக்குத்தானே". "சரபோஜி அரண்மனை பாதாள வழிக்குத்தானே?" என்று நம்மை அழைத்துப் போய்விடுவார்கள். போன பிறகு தான் தருமசிலர்கள் அல்ல, தொல்லையின் உருவங்கள் என்பதை நாம் அறிவோம். நமக்காகத் தீவட்டி பிடித்து தஞ்சை அரசர்கள் இரகசியமாகச் சென்ற பாதாள வழியையும், திருச்செந்தூரில் வள்ளி ஒளித்த வள நாட்டையும், மதுரையில் திருமலை நாயக்கர் மகாலையும் காட்டுவார்கள். கோவிலுக்கு அழைத்துப்போனால் இவர்கள் அருகே இருந்து பிரதிஷ்டை போட்ட மாதிரி விக்கிரங்கள், அவர்கள் சக்தி மகிமை, பூர்வீக வரலாறு, புராண வரலாறு இவைப் பற்றி அளப்பார்கள். பொய் பாதி, மெய் சரிபாதியாக இருக்கும்.

நாம் ஊருக்குப் புதிது என்பதை ஜட்கா வண்டிக்காரனுக்கு அடுத்தபடியாக மோப்பம் பிடிக்கும் இவர்களிடம் எனக்கு அனுதாபம் அதிகம். என்னோடு பின் தொடர்ந்து வந்த பிறகு, நான் எதையும் செய்யவும் சிந்திக்கவும் விடமாட்டார்கள். மந்திரிகள், கவர்னர்கள் வந்தால் அந்த மாவட்டக் கலெக்டர் சொல்லுக்கு உட்பட்டு அவரைப் பின்பற்றிச் செல்வதைப் போன்று, நமக்கு வழி காட்டும் இவர்கள் சொல்லுக்கு அடங்கி நடக்க வேண்டும். சற்று ஏறுமாறாக இருந்தால் கூறுமல் சந்நியாசம் கொள்ளுகிறவர்கள் இவர்களே! அதுவும் அகராதியில் இல்லாத அற்ப வார்த்தைகளை நாம் தெரிந்து கொள்வதோடு நம்மைச் சுற்றி ஒரு கூட்டத்தையும் ஏற்படுத்தி சந்தி சிரிக்க வைத்துவிடுவார்கள்.

நகர கைட் (வழி காட்டி) விற்பனை சமீப காலத்திய ஏற்பாடு. அதில் இம்மாதிரி ஆபத்து நிறைந்தவர்கள் படங்களைப் போட்டு வைத்திருந்தால் நாம் தப்பிக் கொள்ளலாம். சென்னை மோட்டார்களில் அந்த ஊரிலுள்ள கேடிகளின் போட்டோ படங்களைப் போட்டு எச்சரிக்கை செய்திருப்பது போன்று அந்தந்த ஊர் கைட் (வழிகாட்டி) பிரசுரங்கள் இதைச் செய்தால் உண்மையாகவே, நமக்கு வழிகாட்டியாக இருக்கிறார்கள் என்பதை நான் ஒப்புகொள்ளுவேன்.

வழிகாட்டிகள் (புத்தகங்கள்) மீது எனக்கு அளவற்ற மோகம் உண்டென்று எண்ணவேண்டாம். "மதுரைக்கு வழி வாயிலே" என்று அந்த நாள் தொட்டு பழமொழி இருக்கிறது. இப்போது, பிறரைத் தொந்தரவு செய்யாமல் ஊரின் விபரங்கள் அறிய வழி செய்கிறார்கள்.

ஜட்கா வண்டிக்காரனுக்கு
அடுத்தபடியாக....

வழிகாட்டி நூலைப் புரட்டி இது என்ன இடங்களில் உள்ளது என்று தெரிந்து கொள்வது ஆச்சர்யந் தராது. உதாரணமாக, வெகுநாட்களாகப் பத்திரிகையில் ஒரு கடை விளம்பரத்தைப் பார்த்துக்கொண்டு வருவோம். அந்த ஊர் சென்றால், நாம் கடைவீதிவழியே போகுங் காலத்து நம் கண்ணில் பட்டால், ''அடே இதுதானா விளம்பரம் செய்யப்பட்ட கடை? எவ்வளவு சிறிதாக இந்த ஓரத்தில் இருக்கிறது? எவ்வளவு பத்தி பத்தியாக விளம்பரம் செய்தார்கள். சின்ன விளம்பரம் செய்த கடை எவ்வளவு பெரிதாக இருக்கிறது'' என்றெல்லாம் அதிசயித்து நாம் திகைப்படையலாம். அதை விட்டு, வழிகாட்டியில் இன்ன தெருவில் இன்ன இலக்கத்தில் இருக்கிறது என்றால் நமக்குள்ள அதிசயம் போய்விடுகிறது. எந்தப் பொருளுமே எதிர்பாராத போது தேடிப்போன செடி, காலில் சிக்கியமாதிரி சிக்கினால் தான், நமக்கும் குதூகலம் அதிகம்.

எத்தனை தான் வழிகாட்டி நூல்கள் இருந்தாலும் உயிர் நிறைந்த வழிகாட்டிகள் எங்குமே இருக்கிறார்கள். தமிழ் நாட்டின் புண்ணிய ஊர்களில் வந்து குழுமியிருக்கிறார்கள். ராமேஸ்வரம், காசி போன்ற இடங்களில் நம்மைத் தூக்கிக் கொண்டே போய்விடுவார்கள். நந்தனார் பட்டபாடு வேதியரிடம் எப்படியோ? நான் பட்டபாடு எண்ணினால் சொல்லுக்கு அடங்காது. ரயில்வே ஸ்டேஷனிலே என்னை இரண்டு மூன்று பேர் பங்கு வைக்க ஆரம்பித்தார்கள். இவ்வளவிற்கும் நான் கடவுளைக் காணவரவில்லை யென்று சொன்னேன். விட்டார்களா? விடவில்லை. கோயிலுக்குள் கொண்டு நிறுத்தினார்கள். எனக்காக அவர்களே அர்ச்சனை செய்தார்கள். என்னிடம் என் ஆத்மாவிடம் எவ்வளவு பக்தி யென்று கண்டுகொண்டேன். முடிவில் எல்லாவற்றுக்கும் அவர்கள் கேட்ட தொகையை வருமானவரி இலாகாவே என்னிடம் எதிர்பார்க்க முடியாது என்றால் இவர்கள் சூரத்தனத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள். அத்தனை உரிமை கொண்டாடி எனக்கும் என் சடலத்திற்கும் நல்வாழ்வு வாங்கிவைக்கிறார்கள், இவர்கள். இம்மைக்கும் மறுமைக்கும் வழிகாட்டுவதில் எவ்வளவு உற்சாகம் காட்டுகிறார்கள்.

ஒரு வேடிக்கை யென்னவென்றால், இவர்கள் பாட்டுக்கு விபரம் சொல்லிக் கொண்டு போவார்கள். நாம் குறுக்கிட்டால், தடை ஏற்பட்டு ஏதும் பேச முடியாதபடி ஊமையாக விழிப்பார்கள். பாதளக் குகை, தஞ்சை அரண்மனைக்குள் போகிறவனைக் கேட்டுப் பாருங்கள். ''ராஜராஜ சோழன் போனதாகச் சொல்லுகிறது இருக்கட்டும்; அவர் தனியாகப் போனாரா அல்லது இப்படி அன்றாடம் யாராவது உம்மை போல வழிகாட்டியாக அழைத்துச் சென்றாரா?'' என்றால் ஆசாமி அதலபாதளத்தில் விழுந்த மாதிரி இருப்பார். ''குளிக்கச் செல்லும் ராணி குகைக்குள் போய் குளத்தில் எழுவானேன்?'' இதே

போன்று சரபோஜி வம்சத்தை சாம்பாஜி சத்தாராஜி (என்னமோ ஜீ ஜீ என்ற சத்தமே கேட்டது) இவர்கள் ஓவியங்களைக் காட்டும்போது "இது தான் அவர் என்பதற்கு என்ன ஆதாரம்?" என்றால் "சொல்வதைக் கேளுங்கள்" என்று முடித்துவிடுவார் வழிகாட்டி.

வழிகாட்டி ஒருவனது வாழ்க்கையைப் பற்றிக் கேட்டேன். அதாவது, பள்ளிக்கூடத்தில் தோல்வியேற்பட்டதால் அடிக்கும் அவமானத்திற்கும் பயந்து வந்துவிட்ட தனது வாழ்க்கை அங்கே கழிவதாகச் சொன்னான். இவர்கள் கற்பனை மிகுந்தவர்கள். ஆகவே, இதை நான் நம்புவதற்கு சரித்திர ஆசிரியனா? பழம் பொருள், பக்திப் பொருள், அதிசயப் பொருள் இவை காட்டி மக்கள் சமுதாயத்தை முன்னுக்குக் கொண்டுவர மட்டுமா வழிகாட்டிகள் இருக்கிறார்கள். சென்னை போன்ற இடங்களில், எத்தனையோ துறைகளுக்கு வழிகாட்டிகள் இருக்கிறார்கள். சென்னை உயர்நீதி மன்றத்திற்கு வழி தெரியாதவர்களுக்குச் சொல்லி வைப்பவர்கள் முதல், உங்களுக்குத் தேவையுள்ள எந்தஇன்பப்பொருளும் கிடைக்குமிடங்களுக்கு அழைத்துப் போக ஆள்— வழிகாட்டிகள் — இருக்கிறார்கள். அப்பப்பா! இவர்களது சாமர்த்தியம் தந்திரம் வேறு யாருக்கு வரும்? வாங்குகிறவன் விற்பவன் இரண்டு பேருக்கும் தரகனாக இருந்தும் அன்றாடம் இவர்கள் தரித்திரத்தில் உழல்வதுதான் வேடிக்கை. சமயா சமயங்களில் வழிகாட்டுகிறவர்கள் வைத்தியசாலைக்கே வழி காட்டி விடுவார்கள்: நமக்கு சென்னை கடற்கரையின் அழகையோ, சென்ட்ரல் ஸ்டேஷன் அலங்கோலத்தையோ மூர் மார்க்கெட் என்ற உலக மகா ஏமாற்றுக் கட்டடத்தையோ நாம் அண்ணாந்து அதிசயித்து நமக்கு வழிகாட்டி செய்யும் உதவியை வியந்துகொண்டிருக்கும்போது, நமது பணம் அவரை தஞ்சமடைந்து விட்டது. நாம் ஏமாந்து நிற்பவருக்கு வழிகாட்டியாக நிற்கிறோம்! பணத்தைப் பறித்துக் கொள்வதில் ஒரு சில வழிகாட்டிகள் இம்மாதிரி முதுகுக்குபின் திருட்டுக் காரியங்கள் செய்வது வருந்த வேண்டியது.

வழிகாட்டுவதின் நோக்கமே, உன்னிடம் உள்ள பொருளுக்கு நான் காட்டும் வழிகளைக் கற்றுக்கொள் என்பதுதான். உன்னிடமுள்ள அறியாமைக்கு நான் காட்டுகிறேன் வழியென்று சொல்வதுதானே சமயம். நம்மிடம் இல்லாத ஞானம், கல்வி, அறியாமை இவைகளுக்கு இன்றைய உலகில் வழிகாட்டிகள் பலதுறைகளிலுலும் இருக்கிறார்கள். மூர்மார்கெட்டில் பணத்தைப் .பறித்து கொள்வதை நான் கண்டிக்கவில்லை. ஆதரிக்கிறேன். புத்தருக்கு ஏன் ஞானம் பிறந்தது? உலகிலுள்ள துன்பங்களைக் கண்டதால் அதே போல, "ஐயா, இது பட்டினம். இங்கே வழிகாட்டிகள் பலர்: முதலில் நீங்கள் பணத்தைப் பறிகொடுத்தால், இனி விழிப்பாக இருப்பீர்கள்" என்றபுத்தி மதியை அல்லவா மறைமுகமாக நமக்குத் தருகிறார்கள்.

மூர்மார்க்கெட் வழிகாட்டி.....

ஞானிகள், எவ்வளவு அன்போடும் கவலையோடும் நம்மிடமுள்ள அறியாமை, உலகப் பற்று இவைகளை களையநினைக்கிறார்களோ, அதேபோன்று நம்முடைய பணச்சுமையை இவர்கள் இறக்கி வைக்கிறார்கள்! பலன் என்ற கண் கொண்டு பார்த்தால், வழிகாட்டிகள் வெளிப் பார்வைக்குத் துன்பம் செய்தாலும் நன்மையே செய்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்ளுவோம்.

உங்களுக்கு சிறிது சந்தேகம்! நாம் எப்போதுமே பணத்தை இழக்க சம்மதிக்க மாட்டோம். ஆனால் கட்சிகளின் பெயர் சொல்லி நமக்கு வழிகாட்ட, வருங்காலத்து நிம்மதியுடன் அறிவையும் சுதந்திரத்தையும் நாம் வழிகாட்டிகளுக்குக் கொடுக்கச் சம்மதிப்போம். கண் முன்னே நடக்கும் பித்தலாட்டங்கள் தெரிந்தும் நாம் வழி காட்டுகிறவர்கள் பின்னால் கண்மூடிக்கொண்டு போவோம்! முன்னே போகிறவன் தடுக்கி விழுந்தால் பின்னே போகிறவனுக்கு விளக்குப் பிடித்த மாதிரி என்று பழமொழி இருக்கிறது. ஆனால், வழிகாட்டிகள் கையில் அகப்பட்டவன் விளக்குள் அகப்பட்ட விட்டில்; விடுபட முடியாமல் தவிக்கிறவன்.

இரண்டு மூன்று பேர்....

படிக்கும் காலத்தும், நமக்கு வழிகாட்டியாக, "புத்திசாலிப் பிள்ளைகளைப்பார்" என்றே ஆசிரியர்கள் சொல்லுவார்கள். அநேக புத்திசாலிகள், என்னோடு படித்தவர்கள் எல்லோரும், இப்போது வேலையில்லாது இருக்கிறார்கள்! வேலையில் இருப்பவர்களில் ஒரு சிலர் அரசாங்க உத்யோகத்தில், வருவாய்க்குப் போதாத வேலைகளில் இருக்கிறார்கள். ஆனால், ஆசிரியர் "தங்கவேலுப் பயலைப்போல் நடவாதே; கொத்தாளமுத்துப்போல் படியாதே; சிவசங்கரனைப் போல் ஊர் சுற்றாதே!...." இப்படி அவர் மனசில் முட்டாளாகப் பட்ட பிள்ளைகள் இன்று எப்படி இருக்கிறார்கள் தெரியுமா? ஊர் சுற்றிய சிவசங்கரன் பம்பாயில் பெரிய ஆலைக்கு மானேஜர்; கொத்தாளமுத்து முனிசிபல் கௌன்சிலர்; அவரைவிட புத்திசாலியாக இருந்த ஆறுமுகம் அதே அலுவலகத்தில் ஒருகுமாஸ்தா! தங்கவேலு எப்போதும் இரண்டாம் வகுப்பில் போகும் பணக்கார வியாபாரி. இவை பற்றி எண்ணும் போது "அடாடா நாமும் படிக்காமல் இருந்திருந்தால்....?" என்றே எண்ணம் ஓடும்.

எதற்காகச் சொல்ல வந்தேன் என்றால், வழிகாட்டும் பாதைகள் நமது வயசுக்கு தகுந்தமாதிரி மாறிக்கொண்டே இருக்கும். பள்ளிக் கூடத்தில் வழிகாட்டியாக விளங்குபவர்கள், புத்திசாலிப் பையன்கள்; பள்ளிக் கூடத்தை விட்டு வெளியே வந்த காலத்து நமக்கு வழிகாட்டியாக விளங்குபவர்கள் வாழ்க்கையில் வெற்றியடைந்தவர்கள். சிறு பிராயத்தில் நமக்கு வழிகாட்டியாக சிகெரெட்டு பிடிக்கவைத்தவர்களிடம் எத்தனை அன்பு; அதே அன்பு இன்று எவ்வளவு வெறுப்பாக இருக்கிறது. வயதையும் வருவாயையும் உத்

தேசித்து வழிகாட்டிகள் பலரும், நம்மைக் காக்க உலகில் ஒவ்வொரு விநாடியும் தவங்கிடக்கிறார்கள்.

என்னிடம் கேட்டால் நல்லதோ கெட்டதோ, பிறருக்கு வழிகாட்டியாக இருப்பவனுக்கு என்றைக்கும் மதிப்பும் கௌரவமும் உண்டு. கண்ணுக்கு எட்டின தூரம் தண்ணீர் என்ற கடலிலே, வானத்து மீன் வழிகாட்டியாக இருப்பதைப் போன்று வாழ்க்கைக் கடலுக்கு வழிகாட்டிகள் பலரும் தேவை. சிறிது தனிமையில் சிந்தித்துப் பார்த்தால் இந்த உலகத்தில் உள்ள வழிகாட்டிகள் எண்ணிக்கை கோடி கோடி யென்பதும் தெரியும். முதலாளித்துவமே, தொழிலாளித்துவத்திற்கு வழிகாட்டியாக இருக்கிறது என்று சொல்லக் கூடுமென்றால் வேறு என்ன சொல்ல இருக்கிறது? இதைவிடப் பெரிய காரியம், அரசாங்கமே வழிகாட்டியாக இருக்க ஆசைப்படுகிறது. வெளி நாட்டார் வரப்போக இருந்தால் தான் நம் நாட்டில் செல்வம் அதிகமாகும்; அவர்கள் வருவதற்கு மனங்கவரும் ரயில்பிரயாணம், இனிய காட்சிகள், நல்ல வரவேற்புகள் செய்துதர அரசாங்கம் ஆசைப்படுகிறது என்றால், நாம் அதன் பிரஜைகள் - என்னதான் செய்யக் கூடாது. நாட்டோடு நாடு வியாபாரம் செய்து வருமானம் தேடுவதில் கச்சாப் பொருள்கள் பற்றிய மனக் கசப்புகள் ஏற்படலாம். ஆனால் ஒவ்வொரு நாடும், பிற நாட்டார் தங்கள் நாட்டிற்கு வரும்படி ஆசை காட்டினால் அதிலே கிடைக்கும் வருமானம் அதிகம். பிற நாட்டார் பிரயாணிகளாக வந்து, அவர்களை ராஜோபசாரம் செய்தால் நம்மைப் பற்றி அவர்கள் அங்கேயுள்ள பணம் படைத்தவர்களிடம் போய்ச் சொல்லுவார்கள்; அவர்கள் இன்னும் இன்னுமாக வந்து குவிவார்கள். நமது நாட்டுக்குப் பணம் கிடைக்கும் என்பது அரசாங்கங்கள் நிதி சேர்க்கும் வழிகளில் ஒன்றாகும்.

ஒருநாடு அரசியல் முன்னேற்றத்தால் பிற நாட்டுக்கு வழிகாட்டியாக இருப்பதைவிட, பணத்தைப்பெற வழிகாட்டியாக மாறும்போதுதான், நாம் அரசாங்கத்தைப் பின்பற்ற வேண்டும் என்று தோன்றுகிறது. பெரிய பெரிய நகரங்களில் வழிகாட்டியாக ஒரு சிலருக்கு மட்டும் பிழைப்புத்தரவில்லை, ஒவ்வொரு வகையில் ஒவ்வொருவருக்கும் வழிகாட்டியாகயிருக்கிறது. அதாவது பிழைப்புக்குத்தான்! மதுரை மீனாட்சி கோயிலுக்கு வழிகாட்ட வருகிறவனும், வைத்தியத் துறையில் புகுந்து நமது தேக நலத்திற்கு வழிகாட்டும் நிபுணரும், தங்கள் சாப்பாட்டுக்கு வழிகாட்டியாகத்தானே விளங்குகிறார்கள்.

பிறருக்கு வழிகாட்டுவதின் மூலம், நமக்கே வழிகாட்டுவது தான் காட்டிக் கொள்வதுதான் உயர்ந்தபொருள்—என்று உபநிஷதங்கள் கூறுகின்றன; அதாவது உபநிஷதங்கள் நமக்கு வழிகாட்டுகின்றன. வீதியில் நிற்கும் வழிகாட்டிமரம் கைநீட்டி, "அதுதான் மீளவிட்டான்பட்டிக்கு வழி" என்றால் என்ன? உபநிஷதம் "இதுதான் உன் அகந்தை தொலையும் வழியென்றால்" என்ன? உபநிஷதமும், மீளவிட்டான் கைகாட்டி மரமும் வழிகாட்டும் தத்துவப்படி என் கண்ணில் ஒன்றே. பிச்சைக்காரன் நமது பாசத்துக்கு வழி காட்டுகிறான்; பிரம்மா நமது பழி பாவத்திற்கு வழி காட்டுகிறான். இருவரும் வழிகாட்டிகள் என்பதைத் தவிர வேறு என்ன?

எந்த வழியையும் காட்டாது, நடுத்தெருவில் விட்டுப் போகிறவர்கள் உண்டென்பதற்கு இந்தக் கட்டுரையை எழுதிய நானே சாட்சி! காரணம் இதுவும் வழிகள் பல, என்ற தத்துவப்படி ஒரு வழியாகும்!

சிகப்புக் கரை வேஷ்டி

பி.வி. பாரதீயன்

சாம்பசிவம் சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு வெளியே புறப்படத் தயாரானார். கையிலே தலையை வாரிக் கொள்வதற்காக சீப்பை எடுத்தவர் மேஜையின் மீது வைத்திருந்த சிகப்புக் கரை வேஷ்டியை பெருமிதத்துடன் ஒரு தடவை பார்த்துக் கொண்டார். வாசலிலே தெருவில் கூட்டமாக நாற்பது ஐம்பது பேர்கள் ஆரவார மில்லாமல் போவதைச் சாளரத்தின் வழியாகப் பார்த்தார். பாவம்! எவனோ ஒரு மனிதனின் ஆத்மா விடுதலை பெற்றுவிட்டது போலிருக்கிறது. அதனை உள்ளே அடக்கிக் கொண்டு அவன் சடலம் போட்ட ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் ஓய்வு பெற்று விட்டன. அந்த ஆத்மா உள்ளிருக்கும் வரை உடம்பு பண்ணின அட்டகாசத்திற்கு பிரதியாக அதை நெருப்பிலிட்டுப் பொசுக்கப் போகிறார்கள். ஆமாம், கூண்டிலிருந்து கிளி தப்பிய பிறகு கூண்டை வைத்துக்கொண்டு என்ன செய்வது?

சாம்பசிவம் படியிறங்கும் போது திண்ணையிலே உட்கார்ந்திருந்த வீட்டுக்கார கிழவர் 'இரண்டு நிமிஷம் முன்னால் புறப்பட்டிருக்கக் கூடாதோ, நல்ல சகுனமாயிற்றே! இப்போதுதான் ஒரு பிணம், அதோ பாருங்கள்' என்று அங்கலாய்த்துக் கொண்டார், சாம்பசிவத்திற்கு போகின்ற இடத்திலே காரியத்தில் வெற்றி கிடைக்க வேண்டும் என்று விரும்புபவர் போல. 'போய் விட்டுப் போகிறது, பாவம் எந்த மனிதன் இறந்தானோ! பிணம் அதன் வழி போனால் நான் என் வழி போகிறேன்' என்று அவருக்கு பதில் சொல்லிவிட்டு மேலே நிற்காமல் பேச்சு வளர்வதற்கு முன் இறங்கி நடந்துவிட்டார் சாம்பசிவம்.

சாம்பசிவம் பஸ்ஸுக்கு காத்திருந்து இராமநாதபுரம் ரோட்டிலே சௌராஷ்டிரா உயர்நிலைப் பள்ளியை அடுத்த திருப்பத்தில் போய் இறங்கினார். வெகு வேகமாக அடுத்திருந்த சந்துக்குள் அவர் பிரவேசிக்கும் போது அவர் மனதிலே அன்றைக்கு முன் தினம் கொண்டா ராமமூர்த்தி தறி போட்டு அனுப்பியிருந்த சிகப்புக் கரை வேஷ்டியை எந்த வார்த்தைகளால் புகழ்ந்து ராமமூர்த்திக்கு உற்சாகம் அளிக்க வேண்டும் என்ற எண்ணம்தான் சுழலிட்டுக் கொண்டிருந்தது. அவர் நடந்து கொண்டே இருந்தார்.

மனதிலே எண்ணம் அலை மேல் அலைபோல ஒன்றின் மீது ஒன்றாக மோதியடிக்க சாம்பசிவம் தான் செல்ல வேண்டிய வீட்டையும் கடந்து நடந்துவிட்டார். சட்டென்று தான் ஒரு புதிய அகலமான ரஸ்

தாவில் பிரவேசிக்கும் போது சுயநினைவு பெற்று ராமமூர்த்தியின் வீட்டைக் கடந்து வந்து விட்டோம் என்பதையும் உணர்ந்தார்.

மறுபடியும் திரும்பி அவர் கொண்டா ராமமூர்த்தியின் வீட்டை அடைந்தபோது அங்கு ஒருவருமே இல்லை. வீடு வெறிச் சென்றிருந்தது. அக்கம் பக்கத்திலே விசாரித்து தனக்குத் தோன்றிய சந்தேகத்தை தீர்மானித்துக் கொள்ள அவர் முயன்றபோது பக்கத்து வீட்டிலே கட்டில் ஒன்றிலே உட்கார்ந்திருந்த 'தொண்டு கிழம்' ஒருவர் அவருக்குத் தெரிந்த அரை குறைத் தமிழில் 'ஆமாஹ, ராமமூர்த்தி சத்துப் போனாஹ' என்றார். கிழவருக்கு வயது நிச்சயமாக எழுபதுக்கு குறைவில்லை என்று எண்ணிக் கொண்டே 'இப்படிக் கிழமெல்லாம் இருக்கும்போது தொழில் நிபுணன் ராமமூர்த்தி இறக்க வேண்டுமா' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டு அங்கிருந்து நடந்தார் சாம்பசிவம்.

அந்த சந்தின் திருப்பத்திலே இருந்த வெற்றிலை பாக்குக் கடைக்காரனுக்கு ஞாபக சக்தி அதிகம் போலிருக்கிறது. முன்பு ஒரு தடவை கொண்டா ராமமூர்த்தி வீட்டுக்கு சாம்பசிவம் வந்ததை நினைவிலே வைத்திருந்து, சாம்பசிவத்தை கண்டதும் 'என்னங்க, சாமி! ராமமூர்த்தியோட பொணம் போயிருச்சே, ஒரு மணிக் கூறுக்கு முன்னாடியே! தாமசமாவல்ல, வந்திருக்கீங்க' என்றான்.

'பஸ் தவறிடுச்சு, கணக்கா அந்த நேரத்துக்கு இங்கே இருக்கணும்னு தான் பார்த்தேன்' என்று யமப் பொய்யாக ஒரு பொய்யை சமயோசிதமாகச் சொல்லி வைத்தார் சாம்பசிவம்.

'யாரோ, நல்ல மனுசன், நேத்து ஐம்பது ரூபா கொடுத்தனுப்பிச்சிருக்கான், ராமமூர்த்திகிட்டே கொடுன்னு அவன் தம்பிகிட்டே! அந்தப் பணம் வந்து கையிலே வாங்கினதும் உசிரை விட்டுட்டான் அவன். அதை வைச்சிக்கிட்டுத் தான் இன்னிக்கு ஏக தடபுடலா பிணத்தை தூக்கினாங்க...'

கடைக்காரன் பேசிக் கொண்டே போனான். மேலே அவன் பேச்சைக் கேட்டுக் கொண்டு நிற்க சாம்பசிவம் பிரியப்படவில்லை. விடு விடுவென்று நடந்துவிட்டார் அங்கிருந்து. கடைக்காரன் தன் பேச்சை நிறுத்திக் கொண்டான்.

கொஞ்ச தூரம் நடந்த பிறகு சாம்பசிவத்தின் நடை தளர்ந்தது. மெதுவாக நடக்க ஆரம்பித்தார்.

கொண்டா ராமமூர்த்திக்கும் சாம்பசிவத்துக்கும் ஏற்பட்ட

தொடர்பு புதியதல்ல, பன்னிரண்டு வருடங்களாகப் பழகிப் போய் ஒருவருக்கு ஒருவர் மனம் ஒத்து வளர்ந்துவிட்ட நட்புரிமை என்றே சொல்ல வேண்டும். அந்தப் பன்னிரண்டு வருட காலத்திலே அவர் இடையிலே உடுத்திய வேஷ்டி அத்தனையும் கொண்டாராமமூர்த்தியின் தறியினின்றும் அவன் கைத் திறனல் மென்மையாக வளர்த்து மனம் நிறையக் கொடுத்தவைதான்.

சாம்பசிவத்திற்கும் ராமமூர்த்திக்கும் ஒருவரை ஒருவர் மிகவும் பிடித்துவிட்டதற்குக் காரணம் மிகவும் சாதாரணமானதுதான். ராமமூர்த்தியின் நேர்த்தியான வேலைப்பாட்டிற்குத் தகுந்த கூலியும் விலையும் புகழும் சாம்பசிவத்திடமிருந்து வந்தன. சாம்பசிவமும் நேர்த்தியாக வேலைசெய்த ராமமூர்த்தியின் நேர்மையிலே மிகுந்த மன மகிழ்ச்சி அடைந்தார்.

முதன் முதலாக ராமமூர்த்தியை அவனுடைய வீட்டிலேயே தறியடியில் உட்கார்ந்து வேலை செய்கையிலே சாம்பசிவம் கண்டார். அவரோடு காரியாலயத்திலே வேலை பார்த்த நண்பர் ஒருவருடன் மாலையில் வெளியே உலாவச் சென்றார் அன்று. இருவரும் திரும்பும்போது நண்பர் ராமமூர்த்தியின் பெயரைப் பிரஸ்தாபித்து தான் அவனை அன்று பார்த்து தனக்கு வேண்டிய ஆடைக்கு 'ஆர்டர்' கொடுக்கப் போவதாகச் சொன்னர். நண்பரின் மிதமிஞ்சிய புகழ்ச்சிக்கு இலக்கான அந்த கொண்டா ராமமூர்த்தி யாரென்று தான் பார்த்துவிடுவோமே என்று அவரோடு ராமமூர்த்தியின் வீட்டிற்குச் சென்றார்.

ராமமூர்த்தி பார்வைக்கு புத்திசாலியான தோற்றமுள்ளவனக இருக்கவில்லை. முதலில் சாம்பசிவம் நண்பரின் பேச்சு உயர்வு நவிற்சிதான் என்று எண்ணிவிட்டார். அது மாத்திரமல்ல, நண்பரிடம் அதைச் சொல்லியும்விட்டார். அவர் சொன்னதன் பலன்தான் பின்பு ராமமூர்த்தியிடம் சாம்பசிவத்திற்கு தொடர்பு ஏற்படுத்த சாதகமாக இருந்தது.

ராமமூர்த்தியின் திறமையில் சாம்பசிவம் குறைவு கூறிப் பேசியதிலே அவர் நண்பர் ஓரளவுக்கு கோபம் கொண்டார். தறியிலிருந்து ராமமூர்த்தி அனுப்பிய வேஷ்டி வந்ததும் சாம்பசிவத்திடம் கொண்டுவந்து காண்பித்தார். மில்களில் இயந்திரங்களால் மின்விசை கொண்டு தறி நெய்து மென்மையாக்கப்பட்டு வருகின்ற துணிகளையும்விட மெல்லியதாகவும் உறுதியாகவும் அணிவதற்கு இன்பம் தருவனவாகவும் கொண்டா ராமமூர்த்தியின் கைத்தறி வேஷ்டிகள் இருக்கின்றன என்பதை சாம்பசிவமே ஒப்புக் கொள்ளும் நிலையும் வந்தது.

அந்த சம்பவத்திற்கு பிறகு சற்று விலை அதிகமாக இருந்தாலும் ராமமூர்த்தியின் வேஷ்டிகள் வாங்கிக் கட்டுவது என்று தொடங்கிய சாம்பசிவம் கொஞ்சங் கொஞ்சமாக ராமமூர்த்தியின் மீது மிகுந்த அன்பும் மரியாதையும் காட்டத் தொடங்கினர். தனக்குத் தெரிந்தவர்களிடம் எல்லாம் தான் உடுத்தியிருக்கும் வேஷ்டியின் மேன்மையைப் பற்றியும் அதனை நெய்த கொண்டா ராமமூர்த்தியின் கைத்திறனைப் பற்றியும் அநேக தடவைகள் சொல்லியிருப்பார்.

ஒரு வருடமாகவே கொண்டா ராமமூர்த்தி சற்று உடல் நலம் கெட்டவன் போல் காணப்பட்டு வந்தான். இரண்டு தடவைகள் அவனை சந்தித்தபோது சாம்பசிவம் மிகுந்த கவலையுடன் கேட்டார். ராமமூர்த்திக்கு

சாம்பசிவத்தைப் போல ஐந்தாறு பேர்கள் தான் வாடிக்கைக்காரர்கள். சாம்பசிவத்திடமும், மற்றவர்களிடம் சொன்னது போலவே 'ஒடம்பு ஒண்ணும் இல்லீங்க' எல்லாம் சரியாயிடும், கொஞ்சம் சாஸ்தியா வேலை செய்ததிலே, உஷ்ணம் அதிகமாயிருச்சுங்க, மருந்து சாப்பிடறேன்' என்று தனது சௌராஷ்டர உச்சரிப்பைக் கலந்து பதில் கூறிவிட்டான்.

கொண்டா ராமமூர்த்தி வீட்டிலே இரண்டு தறிகள் போட்டு வேலை செய்தார்கள் அவரும் அவன் தம்பியும். ராமமூர்த்தியின் மனைவி ராட்டையிலே நூல் சுற்றுவது, பாவு போடுவதில் உதவுவது முதலிய சுற்று வேலைகளெல்லாம் செய்வாள். கலர் நூல் வைத்து புடவைகள் நெய்வதும் உண்டு. சிறிசுகளாக நான்கைந்து குழந்தைகளுடைய அவர்கள் குடும்பத்திற்கு வரவு எப்போதுமே குறைவாகத் தான் பட்டது. கவனிப்பு போதாத காரணத்தால் குழந்தைகள் ஒன்று மாறி ஒன்று சிக்காகப் படுத்துவிடும். வைத்தியத்திற்கு வேறுசெலவு. நூல் விலைக்கு வாங்கித் தறி போட்டு வேஷ்டியாகவோ புடவையாகவோ விற்பதிலே அப்படி ஒன்றும் ராமமூர்த்திக்கு லாபம் ஏற்படாத காரணம் அவன் நேர்மைதான். திறமை இருந்தது வேலை செய்ய, ஆனால் வியாபாரத்திற்கு வேண்டிய 'பொய்-பித்தலாட்டங்கள்' அவனிடம் இல்லை. உள்ளதை உள்ளபடி சொல்லி விற்க முயற்சிப்பான். வேலையிலே மிகுந்த சிரத்தை காட்டி கால விரயம் செய்வான். அவன் எப்படியோ சமாளித்து வந்த குடும்பம் திண்டாடவேண்டிய கஷ்ட தசை வந்தது, திடீரென்று அவன் உடல் நலம் குன்றத் தொடங்கியதும்.

நான்கு மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் சாம்பசிவம் ராமமூர்த்தியைப் பார்க்க அவன் வீட்டிற்குப் போனார். உயரமாக இருந்த மரத்தால் செய்த தறியின் அடியிலே படுக்கை விரித்துப் படுத்திருந்தான் ராமமூர்த்தி. ஆளே அடையாளம் தெரியாத அளவுக்கு உருவம் மாறி மெலிந்து போயிருந்தான். தறியிலே அரை குறையாக வேஷ்டி ஒன்று நின்றிருந்தது. சாம்பசிவம் கண்களிலே நீர் தளும்பிவிட்டது.

ராமமூர்த்தி மிகவும் ஈனமான குரலில் அவருடன் பேசினான். தொடர்ந்து பேச முடியாமல் தவித்தான். மூச்சு பலமாக வாங்கியது அவன் பேசிய போது. இரண்டு நிமிஷங்களுக்குள் இரண்டு மூன்று தடவை இருமினான். ராமமூர்த்தியைப் பேச வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார் சாம்பசிவம். அவன் தம்பியிடமிருந்து வியாதியின் முழு விவரமும் தெரிந்து கொண்டார். க்ஷய ரோகம் ஏற்பட்டுள்ளதென்றும் வியாதி அதிகமான அளவுக்கு வளர்ந்துவிட்டதால் ஆஸ்பத்திரியிலே வைத்துக் கொள்ள முடியாது என்று கூறிவிட்டார்கள் என்றும் தெரியவந்தது. வருமானக் குறைவிலே காற்றோட்டமான பெரிய இடத்திற்கு எங்கே போவான் அவன்? ராமமூர்த்தி குடியிருந்த வீட்டிலே சற்று விசாலமாகப் படுப்பதற்கு தகுந்த இடம் அந்தத் தறியை நிறுத்தியிருந்த இடந்தான். அவன் வேலை பார்த்த தறியடியிலேயே வியாதியின் பிடிப்பால் விழுந்து கிடந்த ராமமூர்த்தியைப் பார்க்கும் போது, ராமமூர்த்திக்கு பிழைப்பை அளித்துவந்த அந்தத் தறியே பேயுருக் கொண்டுபிழிந்துவிட்டது அவன் சக்தியை, அதன் பிடிப்பிலே தான் அதனடியில் விழுந்து கிடக்கிறான் என்று தோன்றியது.

சாம்பசிவம் பையிலிருந்த பணம் பத்து ரூபாயை எடுத்து

ராமமூர்த்தியின் கையில் கொடுத்தார். உடம்பை நன்ருக கவனித்துக் கொள்ளச்சொல்லி விட்டு புறப்பட்டார். அவர் வீட்டின் வெளியே வந்தவுடன் அவர் பின்ஞல் ஓடிவந்த ராமமூர்த்தியின் தம்பி, அவருக்கு வேஷ்டி தேவையா, தேவையாயின் என்ன நிறத்தில் கறை வேண்டும், என்று அண்ணன் கேட்பதாகக் கேட்டான். சாம்பசிவத்திற்கு உண்மையிலே வேஷ்டி தேவையாக இருக்கவில்லை. இருப்பினும் கேட்டதற்காக சிகப்புக் கரை போட்ட வேஷ்டி ஒன்று வேண்டும், அதனை ராமமூர்த்தியின் தம்பி தறியடித்து தயார் செய்தால் போதும் என்று சொல்லிவிட்டு நடந்துவிட்டார். அன்று ஏன் சிகப்புக் கரை வேஷ்டி வேண்டும் என்று சொன்ஞர் என்பது அவருக்கே தெரியாது. ஏதோ நிறம் சொல்ல வேண்டும், சிகப்பு என்று சொல்லிவிட்டார் யோசனையே இல்லாமல். இந்த சம்பவம் அவர் நினைவுக்கு வரும் போது சாம்பசிவம் ஏறக்குறைய முக்கால்வாசி தூரம் விட்டை நோக்கி நடந்துவிட்டார் என்பதை உணர்ந்து கொண்டார். ஆனல் அது ஒரு விநாடிதான்! மறு விநாடி அவர் கண்ணெதிரே சிகப்புக்கரை வேஷ்டி தோன்றிவிட்டது. ஆமாம், மனக் கண் எதிரில் தான்!

அந்த வேஷ்டிக்கு 'ஆர்டர்' கொடுத்த சம்பவம் நிகழ்ந்த பிறகு ராமமூர்த்தியின் வீட்டிற்கு அவர் போகவே இல்லை. அடிக்கடி ராமமூர்த்தியின் தம்பியைத் தன் வீட்டிலே வந்து ராமமூர்த்தியின் உடம்பு நிலை பற்றிச் சொல்லிப் போகுமாறு கேட்டுக் கொண்டார். அவன் அப்படி அடிக்கடி வரவில்லை. பிழைப்புக்கு வழி தேடவே நேரம் போதவில்லை. அவன் என்ன செய்வான் பாவம்! அடிக்கடி சாம்பசிவம் தனக்குள் நினைத்துக் கொண்டார் ராமமூர்த்தி உடம்பு எப்படி இருக்கிறதோ, என்னவோ, இனி அவன் பிழைப்பதே கடினம், கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்று. சாம்பசிவத்திற்கு ராமமூர்த்தியை அவன் வீட்டிலே போய் பார்ப்பதற்கு பயமாக இருந்தது. தனக்கும் அந்தத் தொத்து நோய் வந்துவிடுமோ என்ற பயந்தான். ஏனெனில் ராமமூர்த்தியின் வீட்டிலே சுத்தம் மிகவும் குறைவு, நோயும் மிகக் கொடிய தொத்து நோய் என்பதுதான்.

சிகப்புக் கரை வேஷ்டியைத் தம்பியைத் தறியிடும்படி சாம்பசிவம் கேட்டுக் கொண்டாலும், வறுமையின் காரணமாக நோயுடன் போராடிய ராமமூர்த்தி சாம்பசிவத்திற்கு தானே வேஷ்டி நெய்து தரவேண்டும் என்று கூறியதை அவன் தம்பி

ஒப்புக் கொண்டுவிட்டான். ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் இரண்டு மணி நேரத்திற்கு மேல் ராமமூர்த்தியால் வேலை செய்ய முடியவில்லை.

அன்றைக்கு முன் தினம் மாலையிலே சிகப்புக்கரை வேஷ்டியுடன் வந்து நின்றான் ராமமூர்த்தியின் தம்பி. சாம்பசிவம் வேஷ்டியைக் கையிலே வாங்கிப் பிரித்துப் பார்த்தபோது புளகாங்கித மடைந்தார். வந்திருந்தவன் ராமமூர்த்தி தன் கைப்பட நெய்த வேஷ்டி என்று கூறியதும், அவன் உடல் எப்படி இருக்கிறது என்று விசாரித்தார். மோசமாகத்தான் இருக்கிறது. அன்று தான் வேஷ்டியைத் தறியிலிருந்து முடித்து எடுத்தார்கள், என்றதைக்கேட்டதும் அவருக்கு சற்று வருத்தமாகத்தான் இருந்தது.

உடம்பு மிகவும் கெட்டுப் போன நிலையிலும் தனக்காக தறியில் உட்கார்ந்து வேலை செய்தான் என்றதை நினைத்துப் பார்த்தபோது சாம்பசிவத்திற்கு, ராமமூர்த்தி அவர் மீது அளவிலா அன்பு கொண்டுள்ளான் என்று தெளிவாகப் பட்டது. அந்த எண்ணம் அவர் மனத்திலே மகிழ் வூட்டியது. பெட்டியைத் திறந்து ஐம்பது ரூபாயை எடுத்தார். 'கொண்டு போய் கொடு கொண்டா ராமமூர்த்தியிடம். உடம்பை நன்றாக பார்த்துக் கொள்ளச் சொல்லு. உடம்பு குணமான பிறகு எனக்கு அடுத்த வேஷ்டி அவனே தறியடித்துக் கொடுக்கலாம்' என்று சொல்லிக் கொடுத்தார்.

சிகப்புக்கரை வேஷ்டியைக் கையிலெடுத்துப் பார்த்தார். 'நூறும் நெம்பர் நூலிலே மிகவும் இருக்கமாக நேர்த்தியாக நெய்திருந்தது. இடையிலே இழை ஓடாதபடி கவனித்து சிகரம் வைத்தாற் போல் அந்த மெல்லிய சிகப்புக்கரை! ஆகா அவனை நேரிலே சென்று வாயாறப் புகழ்ந்து விட்டுத்தான் வர வேண்டும். அப்படியே உடம்பையும் நன்றாக கவனித்துக் கொள்ளுமாறு சொல்ல வேண்டும் என்று தீர்மானித்தார் சாம்பசிவம்.

சாம்பசிவம் தன் வீட்டு வாசலுக்கே வந்து விட்டார். தன் வீடு வந்து விட்ட நினைவும் வந்தது அவருக்கு. உள்ளே நுழைந்தவர் யாரோ கூப்பிடுவதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தார். ராமமூர்த்தியின் தம்பி நின்று கொண்டிருந்தான். அவர் கொடுத்த ஐம்பது ரூபாயின் உபயோகத்தை கண்களில் நீர் தளும்பச் சொன்னான். சாம்பசிவம் அவனுக்கு ஆறுதலாகப் பேசினார்.

ஈரத்துடன் நின்று பேசி விட்டுப்போன ராமமூர்த்தியின் தம்பியைக் கவனித்த வீட்டுக்காரக் கிழவர் அவன் சென்ற பிறகு சாம்பசிவத்திடம் 'நீ புறப்படும் போது போன பிணத்தின் முன்பு இவன்தான் போனனப்பா, நான் கூட இங்கே திரும்பித் திரும்பிப் பார்க்கிறானே என்று நினைத்துக் கொண்டேன். பிணம் அதன் வழி போகட்டும் நான் என் வழி போகிறேன் என்றாயே?' என்றார்.

'சரி, சரி. சமயம் தெரியாமல் எதையேனும் பேசாதீர்கள்' என்று அவர் வாயை அடைத்து விட்டு சாம்பசிவம் உள்ளே நுழைந்தார். தன் அறையிலே மேஜையின் மீது அவர் வைத்திருந்த சிகப்புக் கரை வேஷ்டியை அப்போது பார்த்தபோது கொண்டா ராமமூர்த்தி தன் உடலிலிருந்த கடைசிச் சொட்டு ரத்தத்தையும் அந்த வேஷ்டியின் கரையாக இழுத்து விட்டுத்தான் இறந்து விட்டான் என்று அவருக்குத் தோன்றியது.

தமிழகத்தில் தமிழரசு அமைய வேண்டும், என்ற உரிமைக் குரலெழுப்பி, கட்சி வேறுபாடுகட்கு அப்பால் நின்று சென்ற ஆறு வருட காலமாக தன்னந்தனியாகப் போராடுபவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள். தமிழகத்தில் கொஞ்ச நஞ்சம், தமிழுணர்ச்சி மிஞ்சியிருக்கிறதென்றால் திரு. ம. பொ. சி. அவர்களின் அரிய சேவையே அதற்குக் காரணமாகும் என்பது மிகையல்ல. இந்த தனது லட்சியத்துக்காக காங்கிரஸ் கட்சிக்கு அப்பாலிருந்தெல்லாம் ஆதரவு தேட அவர் எடுத்துக் கொண்ட முயற்சி சொல்லுந்தரமன்று. அதற்குக் கிடைத்த பலன் நண்பர்களினால் சந்தேகிக்கப்பட்டதும், மற்ற கட்சிகளினால் ஏசப்பட்டதும் தான். இந்த சமயத்தில் தமிழறிஞர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் எழுப்பும் இந்த உரிமைக் குரல், எதிர் காலத்தைப் பற்றி நல்ல நம்பிக்கை அளிக்கிறது. தமிழகத்தில் தமிழரசை ஏற்படுத்த கட்சி, மத, இன வேறுபாடின்றி எல்லா தமிழறிஞர்களும் இணைந்த இயக்கம் ஒன்று உருவாக வேண்டும் என்று திரு. விசுவநாதம் கூறும் ஆலோசனையை மனப்பூர்வமாக வரவேற்கிறோம். ம. பொ. சியின் கைகள் பொறுப்பேற்கத் தயாராக இருக்கின்றன என்பது நமக்குப் புரியும். மற்றவர்களைப் பொறுத்திருந்து கவனிப்போம்.

எதிர்காலத் தமிழகம்

திருச்சி. கி. ஆ. பெ. விசுவநாதம்

தமிழ் நிலம் மிகப் பழமையானது. தமிழ்நாடு மிகவும்வளமுடையது. தமிழ் நாட்டு மலைகளும் ஆறுகளும் செல்வம் கொழிப்பன. தமிழ்நாட்டு கடல்கள் பரந்து விரிந்திருப்பன. தமிழர் கைத்தொழிலும் வாணிகமும் கிறிஸ்து பிறப்பதற்கு 1000 ஆண்டுகளுக்கு முன்பேயே சிறந்து விளங்கியவை. தமிழ் மக்கள் தனிப் பண்பு உடையவர்கள். ஒழுக்கத்திற்கு உயர்வு தருபவர்கள். தமிழ்ப் பெண்கள் அன்பில் நிறைந்து, கற்பில் சிறந்து, வீரத்தில் உயர்ந்து விளங்கியவர்கள். தமிழ் மொழி பழமை உடையது, என்றும் இளமை உடையது, தனித்து இயங்குவது. தமிழ் இலக்கணம் தனி உயர்வு பெற்றது. தமிழர் கலை நுட்பமுடையது. தமிழர் நாகரீகம் தரணியில் சிறந்தது. தமிழ் இலக்கியமாகிய திருக்குறள் உலகில் அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப் பெற்று முதன்மை வகிப்பது. தமிழ் மன்னர்கள் இமயம் வரை சென்று அங்கு தங்கள் புலிக் கொடி, விற் கொடி, மீனக் கொடிகளை பொறித்து வந்தவர். இப்பரந்த உலகில் 8000 ஆண்டுகள் தொடர்ந்து அரசு புரிந்து வந்தவர் தமிழ் மன்னர்களே. இமயமும், கங்கையும், வங்கமும், கலிங்கமும் மட்டுமல்ல; பர்மாவும், கடாவும் மலாயாவும், இலங்கையும்கூட தங்களை ஆண்ட தமிழ் மன்னர்களின் வரலாறுகளை இன்றும் கூறிக்கொண்டிருக்கின்றன. இவையனைத்தும் பழமைச் சிறப்புக்கள்.

இன்றைய தமிழகம் 2 லட்சத்து 50 ஆயிரம் நாற்புற மைல்கள் பரப்பளவையுடை

யது. தமிழ் மக்களின் எண்ணிக்கை 3 கோடி. இவ்வித மிருந்தும் தமிழகத்திற்கென்று ஒரு அமைப்பில்லை. தமிழ் மொழிக்கென்று ஒரு கழகமில்லை. தமிழ் மக்களுக்கென்று ஒரு தலைவனில்லை. இல்லாமற் போனாலும் பரவாயில்லை. எவனெவனே தன்னைத் தலைவனென்று சொல்லிக்கொண்டு தமிழ் நாட்டிற்கும், மொழிக்கும், மக்களுக்கும் செய்யும் கேடுகளுக்கு அளவேயில்லை. இதை ஏனென்று கேட்பாருமில்லை. கேட்க முன் வருபவரை ஆதரிப்பதுமில்லை. நேர்மை உடையவரைப் போற்றுவதுமில்லை. போராடி உழைக்க நேர்மை உடையவர்களுக்கு வாய்ப்பும் ஓய்வும் கிடைப்பதில்லை. பொது மக்களுக்கு உழைக்க முன் வருபவர்களின் உள்ளத்தில் நேர்மையிருப்பதில்லை. பணம், பட்டம், பதவி முதலியவைகளில் வெறிகொண்டு தன்னலம் கருதும் மக்கள் பொதுவாழ்வில் புகுந்து கொண்டனர். பொதுத் தொண்டு ஒரு வியாபாரமாய் விட்டது. அரசியலில் அயோக்கியத்தனம் மலிந்துவிட்டது. நாடு பாழாயிற்று. மொழி அழியத் தொடங்கியது. மக்கள் இழிவெய்தினர்.

தமிழ் நாட்டின் வட எல்லை ஆந்திரத்திற்கு அடிமையாயிற்று. தென் எல்லையை மலையாளம் கொள்ளை கொண்டது. மேற்கெல்லை கன்னடத்தில் மறைந்துவிட்டது. கிழக்கெல்லை பிரஞ்சிற்கு சொந்த சொத்தாயிற்று. நடுவில் தமிழகம் கூனிக் குறுகிப் போயிற்று. இதற்கும் ''தமிழ்நாடு'' என்று பெயரில்லை. பெயரிட்டழைக்க எவரும் விரும்பவுமில்லை. எஞ்சிய சென்னை மாகாணமென்று முன்பும், வெறுஞ் சென்னை மாகாணமென்று பின்பும் கூறுகின்றனர். இவ்வாறு கூறுகின்றவர்களை ஏன்? என்று கேட்க நாதியுமில்லை. இது இன்றுள்ள தமிழ் நாட்டின் நிலை.

தமிழ்மொழி பாதுகாப்பின்றி அழியத் தொடங்கி விட்டது. மொழிக்கு உரிமையுடைய தமிழறிஞர்கள் எல்லாம் ஒதுங்கி இருக்கின்றார்கள். எவரெவரோ மொழியில் கையை வைத்தார்கள். தமிழ் மொழியில் பல மொழிகளைக் கலந்து வந்தார்கள். இப்போது எழுத்துச் சீர்த்திருத்தமென்று தமிழ் எழுத்துக்களை ஒழிக்க வந்திருக்கிறார்கள். தமிழ் மொழியில், தமிழ் எழுத்தில், பிறமொழிகளை, எழுத்துக்களை, கலந்தால்தான் தமிழ் வளரும் என்று கூறுகிறார்கள். இப்படிச் சொல்லுகிறவர்கள் தங்களை தமிழ் வளர்ச்சி கழகத்தினர் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். தமிழில் வடமொழியும், ஆங்கிலமும், இந்தியும் கலந்து எழுதிப் பேசவேண்டுமென்று சொல்லிக் கொள்ளுகிற இவர்கள் தங்களை தமிழ் வளர்ச்சிக் கழகத்தினர் என்று கூறிக் கொள்வதைவிட தமிழ் அபிவிருத்தி அசோசியேஷன் வாலாக்கள் என்று கூறிக்கொள்வது மிகப் பொருத்தமாக இருக்கும். இத்தகை கூட்டத்தாருள் தமிழ் நலம் கருதும் தமிழறிஞர்கள் எவருமிருப்பதில்லை. தமிழ் நலம் கருதுவோர் ஒன்று கூடி ஒரு குழு அமைத்து செயலாற்றுவதுமில்லை. செயலாற்றினாலும், அதைப் போற்றுவதுமில்லை, தமிழ்ப் பகைவர்கள் தமிழ் விழா கொண்டாட தொடங்கிவிட்டனர். தமிழை வளர்ப்பதாகச் சொல்லிக் கொண்டே அதற்கு பிணப்பறை அடிக்கின்றனர். சென்ற விடங்களிளெல்லாம் தமிழைக் கொலை செய்கின்றனர். தமிழ்க் கொலை செய்வோரை பாராட்டிப் பெருமைப் படுத்துகின்றனர். தமிழ் நூல்கள் ஒன்றின் பின் ஒன்றாய் அழிந்து வருகின்றன. தமிழ் அறிஞர்கள் ஒருவர் பின் ஒருவராய் மறைந்து வருகின்றனர். தமிழ்ப் புலவர்கள் வறுமையால் வாடி வதங்குகின்றனர். தமிழ் ஆசிரியர்

களுக்கு சம்பளமும் குறைவு. தமிழ் நாட்டுப் பள்ளிகளில் தமிழுக்கு முதன்மையில்லை. தமிழைப் படிக்க வேண்டுமென்பது கூட இல்லை. படிக்கின்ற பாட புத்தகங்களில், தமிழ், தமிழர், தமிழகத்தின் வரலாறுகளோ, சிறப்புகளோ எதுவும் இருப்பதில்லை. இருந்தாலும் அது பாட புத்தகக் குழுவால் அங்கீகரிக்கப்படுவதுமில்லை. பாட புத்தகக் குழுவில் உணர்ச்சியுள்ள தமிழறிஞர்கள் இருப்பதில்லை. இருக்கும் தமிழறிஞர்களை அரசாங்கம் அக்குழுவுக்கு தேர்ந்தெடுப்பதுமில்லை. இந்த அளவோடு அரசாங்கம் சும்மாயிருந்தாலும் பரவாயில்லை. தமிழ் மொழியை வட மொழி எழுத்துக்களைக் கொண்டு எழுத வேண்டுமென்று முடிவு செய்து அதை நிறைவேற்றத் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறது. அது அமுலுக்கு வருகிற நாள் எப்போது? என்பது தெரியவுமில்லை. வந்தால் என்ன ஆகும்? என்பது புரியவுமில்லை. இது இன்றுள்ள தமிழ் மொழியின் நிலை.

தமிழ் நாட்டின் மேற்கெல்லையில் கன்னடம் படிக்கும்படியும், தெற்கெல்லையில் மலையாளம் படிக்கும்படியும், வடக்கெல்லையில் தெலுங்கு படிக்கும்படியும், கிழக்கெல்லையில் பிரஞ்சு படிக்கும் படியும், தமிழ் பிள்ளைகள் கட்டாயப்படுத்தப் படுகிறார்கள். கேட்க நாதியில்லை, என்று வருந்துவதற்குக் கூட நேரமில்லை. ஏனெனில் நடுவில் உள்ள தமிழ்ப் பிள்ளைகளும் இந்தி படிக்கும்படி கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். இது தமிழ் நாட்டில் தமிழ்ப் பிள்ளைகள் தமிழுணர்ச்சி பெறுகின்ற வழி.

தமிழ் நாட்டினரைத் தவிர பிற நாட்டினரெல்லாம் தங்களை, ஆந்திரர், வங்காளி பஞ்சாபி, மலையாளி என்றே கூறுகின்றனர். தமிழன் மட்டும் இன்னும் தன் ஜாதிப் பெயரையும், வாழும் ஊரையுமே கூறிக்கொண்டிருக்கிறான். "தமிழ் நாடு" என்றோ. "தமிழன்" என்றோ கூறுகின்ற உணர்ச்சி சிறிதுமில்லை. இதுவே இன்றைய தமிழ் நாட்டின் நிலை.

தமிழ் மக்களை 'கருப்பன்' என்று வெள்ளையரும் 'இந்தியன்' என்று பிறரும் 'சூத்திரன்' என்று பார்ப்பனரும், 'பார்ப்பனரல்லாதார்' என்று ஜஸ்டிஸ் கட்சியும், 'முஸ்லிம் அல்லாதார் என்று அரசாங்கமும், 'கிள்ளங்கி' என்று மலாய்காரரும், 'திராவிடர்' என்று ஆரியரும் 'அஞ்ஞானி' என்று பாதிரிமார்களும் பெயரிட்டு அழைத்தனர். தமிழனைத் தமிழனென்று எவரும் கூறவில்லை. பிறர் கூறாவிட்டாலும் தமிழனாவது தன்னைத் தமிழன் என்று கூறிக்கொள்ளுகிறானா? அதுவுமில்லை. இது இன்றுள்ள இன உணர்ச்சியின் நிலை.

தமிழ் மன்னர்கள் நாட்டை ஆண்ட காலத்தில் தமிழ் மக்கள் ஒருவரை ஒருவர் காணும் போது "வணக்கம்" என்றே கூறினர். பிறகு பல்லவராட்சியில் அது மாறி "நமஸ்கார" மாயிற்று. நாயக்கர் ஆட்சியில் "தாசானு தாசன்" போட்டனர். பாதுஷா ஆட்சியில் "சலாமாலேகும்" போட்டனர். வெள்ளையர் ஆட்சியில் "குட் மார்னிங்" போட்டான். வடவராட்சி வந்ததும் தமிழன் "ஜெய் ஹிந்த்" போடத் தொடங்கி யிருக்கிறான். இன்னும் எவனெவன் வருவானோ? தமிழன் இன்னும் என்னென்ன போட இருக்கிறானோ? யாரால் அறிய முடியும்? எவன் நாட்டை ஆண்டாலும் அவன் மொழியில் அவனுக்கு ஒரு கும்பிடு போடுவதுத் தனது கடமை என்று தமிழன் நினைத்துக் கொண்டிருக்கிறானே தவிர; தன் னாட்டைத் தன் மொழியில் தான் ஆள வேண்டும் என்ற ஆசை

உண்டாவதில்லை. இது இன்று தமிழனுக்குள்ள அரசியல் உணர்ச்சி.

தமிழ் நாட்டின் கடற்கரை அளவிற்கு, அதன் ஏற்றுமதி இறக்குமதி வணிகம் இல்லை. தமிழ் மக்கள் எண்ணிக்கை அளவிற்கு அதன் கைத்தொழில்கள் இல்லை. நாட்டில் இருக்கும் கனிப் பொருள்கள் அளவிற்கு அதன் சுரங்கத்தொழில் இல்லை. நாட்டின் நிலப்பரப்பு இருக்கும் அளவுக்கு உழவுத் தொழில் இல்லை. ஆலைத் தொழிலில் மட்டும் கணக்கிட்டால் பம்பாய்க்கு தமிழ் நாடு 60 ஆண்டுகள் பிற்போக்குடையதாகக் காணப்படுகிறது. எங்கும் வேலையில்லாத் திண்டாட்டம், அரசியலில் பித்தலாட்டம், பொதுத்தொண்டில் மோசம், நிர்வாகத்தில் லஞ்சம், சட்டத்தில் ஊழல், உணவுப்பொருள்களில் கலப்படம், தொத்து நோய், வறுமை, பசி, பட்டினிச் சாவு முதலியவைகளே இன்று தமிழ் நாடாகக் காட்சியளிக்கின்றன. இது இந்தியா சுதந்திரம் பெற்றும், தமிழ் நாடு பெறவில்லை என்பதையே காட்டுகிறது.

நாட்டுக்கும் மக்களுக்கும் தொண்டு செய்வதில் தினசரிப் பத்திரிகைகளே தலைமை வகிப்பவை. அவற்றின் நிலை பெரிதும் வருந்தத்தக்கது. ஆங்கிலேயர்கள், ஆரியர்கள், சேட்டுகள், மலையாளிகள், தெலுங்கர்கள், கன்னடியர்களும் கூட தமிழ் நாட்டிற்குள் வந்து தினசரிகளை நடத்துகின்றனர். இவர்களுக்கு தமிழ் நாட்டைப் பற்றி தமிழ் மக்களைப் பற்றிய கவலையும் தமிழ் மொழியைப் பற்றிய உணர்ச்சியும் இருக்குமா? என்பது எண்ணிப் பார்க்க வேண்டியது ஒன்றாகும். தமிழ் நாட்டிற்கு என்று தமிழ் மொழிக்கு என்று தமிழ் மக்களுக்கு என்று தமிழ் மகனால் நடத்தப்படுகிற தமிழ்த் தினசரி ஒன்று கூட தமிழ் நாட்டின் தலை நகரில் இல்லை. அனைத்தும் வட நாட்டிற்காகவே நடைபெறுகின்றன. சில கட்சிக்காக, சில ஜாதிக்காக, சில சமயத்திற்காக, சில தமக்காக நடைபெறுகின்றன. பாழ்பட்டுள்ள தமிழகம் இப்பத்திரிகைகளால் எவ்விதம் முன்னேற முடியும்? இது இன்றைய பத்திரிகைகளின் போக்கு.

தமிழ் மக்கள் உள் நாட்டில் மட்டும் தொல்லைப்படவில்லை. பர்மா, மலாயா, இலங்கை, தென் ஆப்பிரிக்கா முதலிய நாடுகளில் உள்ள தமிழர்களும் தொழில் இழந்து சொத்திழந்து, உரிமை இழுந்து, உயிரிழந்து, துன்பப்பட்டு வருகின்றனர். தமிழ் மக்கள், உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் இவ்வளவு துன்பங்களையும் தொல்லைகளையும் அடைவதற்குக் காரணம் பல்லாயிரம் ஆண்டுகளாக தமிழ் நாட்டை ஆண்டு வந்த தமிழ் மக்கள் இன்று தங்கள் அரசையிழந்து அடிமையாகி நாதியற்றுப் போனதின் பொருட்டேயாகும்.

இந்தியாவின் மீது படையெடுத்த அலக்சாண்டரால் கூட தமிழ் நாட்டின் மீது படையெடுக்க முடியவில்லை. அசோகன் உயிரோடு இருந்த காலத்தில் கூட தமிழ் நாட்டில் தமிழ் மன்னர்களின் கொடிகள் பறந்து கொண்டிருந்தன. இன்று தமிழ் நாட்டில் தமிழரசு ஒன்று இருக்குமானால் வெளி நாட்டில் தமிழர்களுக்கு தொல்லைகள் விளையுமா? விளைவிக்க அந்தந்த அரசாங்கங்கள் தான் எண்ணுமா? எண்ணினால் அந்தந்த நாடுகள் மீது தமிழ் நாடு படையெடுக்காமல் விடுமா? என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

பிறரிடத்துக் காணப்படும் நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும், தமிழ் மக்களிடத்தும் காணப்பட வேண்

டும். இன்றேல் தமிழருக்கு வாழ்வில்லை. மொழிக்குச் சிறப்பில்லை. நாட்டிற்குச் செழிப்பில்லை. நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் அற்ற மக்கள் தன்னரசு பெற்று ஆண்டதாக வரலாறுகளில் இல்லை. தமிழகத்தில் நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் வளர்ந்தாக வேண்டும், அதற்குரிய உணர்ச்சி இன்றே தோன்றியாக வேண்டும். அப்போது தான் தமிழ் நாட்டில் தமிழரசு தமிழ் மொழியில் தமிழர்களால் தமிழ் மக்களுக்காக நடைபெறும். அத்தகைய எதிர்காலத் தமிழரசை நீங்கள் எதிர்பார்க்க வேண்டுமென்பது எனது ஆசை,

தமிழ் நாட்டிற்கு என்று **தமிழர் பேரவை** ஒன்று உடனே தோன்ற வேண்டும். பனிரெண்டு மாவட்டங்களும் அதில் பங்கு பெற வேண்டும். தன்னலங்கருதாத் தமிழர்கள் 120 பேர் அதன் செயற் குழுவாக அமைய வேண்டும். அப்பேரவையுள் கல்வி, ஒழுக்கம், விஞ்ஞானம், கணிதம், ஆராய்ச்சி, வெளியீடு, காடு, மலை, சிற்றூர்கள், கால் நடைகள், சுரங்கம் ஆலை, உழவுத் தொழில், கைத் தொழில், வணிகம், வெளி நாடு. ஏற்றுமதி, இறக்குமதி, போக்குவரவு, பொருளாதாரம், இயல், இசை, நாடகம், நிழற் படம், ஓவியம் சிற்பம், அரசியல் இயக்கம், சமூக சீர்த்திருத்தம், பெண்கள் முன்னேற்றம், தமிழ் மருத்துவம், உடற் பயிற்சி, தொண்டர் படை, என்று 32 துறைகளாகப் பிரித்து, ஒவ்வொரு துறைக்கும், ஒவ்வொரு அமைச்சரை நியமித்து ஆக்க வேலைகளை உடனே தொடங்கியாக வேண்டும்.

தொண்டு செய்வதற்கு நாட்டுப் பற்றும், மொழிப் பற்றுமுள்ள தமிழன்பர்கள், தமிழறிஞர்கள், உணர்ச்சி மிகுந்த தமிழ் நாட்டு இளைஞர்களாகிய கட்டிளங் காளைகள், அரசியல் தலைவர்கள், சமூகத் தலைவர்கள், சமயத் தலைவர்கள் அனைவரும் தங்கள் தங்கள் வேற்றுமைகளை மறந்து தமிழராக ஒன்று பட்டு தமிழகத்திற்கென்று இப்பெரும் பணியை தொடங்கியாக வேண்டும்.

"பெற்ற நாட்டிற்கும், வளர்த்த மொழிக்கும் முதலில் தொண்டு செய்வோம். தாய் நாட்டையும், தாய் மொழியையும். வலுப்படுத்திக் கொண்டு, பிறகு திராவிடத்திற்கும், இந்தியாவிற்கும், ஆசியாவிற்கும், உலகத்திற்கும் தொண்டு செய்வோம்" என்ற நல்ல எண்ணம் இம்மலரைப் படிக்கின்ற மக்களின் உள்ளத்தே மலர வேண்டுமென ஆசைப்படுகிறேன்.

SWAMY COFFEE POWDER
REGD SCM Co No 59

புத்தம் புதிய
நறுமணம் கமழும்
சுவாமி காப்பியை
உபயோகியுங்கள்
சுவாமி காப்பி
மானுபாக்சரிங் கம்பெனி
89, பாண்டி பஜார்
தி. நகர் — சென்னை-17.
தலைமை ஆபிஸ். த. பெ. நெ: 35.
திருவனந்தபுரம்.
எமது டிரேடு மார்க் நெ. 59.
கவனியுங்கள்



கண்ணுள்ளார் காதலவராகக் கண்ணும்
எழுதேங் கரப்பாக் கறிந்து.

—குறள்


வருகிறது
ராஜி
என் கண்மணி...
ஜெமினி
சித்திரம்



Retail Branches
285, China Bazar Road, MADRAS
71, Pondy Bazar, T. NAGAR

பட உலகம்

[எம்பிஎஸ்]

லக்ஷ்மி

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி கம்பெனியார் ஜெமினி ஸ்டுடியோவில் தயாரித்துள்ள 'லக்ஷ்மி' சென்ற மாதம் 10-ம் தேதியன்று திரையிடப்பட்டது. இப்படத்தில் புதிய அம்சங்கள் எதுவும் இல்லாவிட்டாலும் நடிகர்களின் நடிப்பு பாராட்டத்தக்கதாக இருக்கிறது. கதை வக்கீல் நாராயணசாமியின் குடும்பம் படும் பல அல்லல்களையும் திடீர் பணக்காரர்களுக்கு ஏற்படும் திடீர் மாறுதல்களையும் சித்தரிக்கிறது. கண்ணாம்பா படத்தில் நடிக்கிறார் என்றாலே நிச்சயமாக பல துயரமான கட்டங்கள் இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். இந்தச் சோகக் கதையின் பிரதான பாத்திரமான லக்ஷ்மியாக தோன்றி கண்ணாம்பா பிரமாதமாக நடித்திருக்கிறார். லக்ஷ்மியின் பெண்ணாகத் தோன்றும் எம். சரோஜாவும், தாராவாகத் தோன்றும் குமாரி வனஜாவும் தங்கள் பாத்திரங்களுக்கு ஏற்ப அடக்கமாகவும் அவசியமான அளவுக்கு உணர்ச்சியை பிரதிபலிக்கும் வகையிலும் நடித்திருக்கின்றனர். படத்திற்கு உயிர் கொடுப்பவர் எல். நாராயண ராவ்தான். மற்றும் ஸி. கே. ஸரஸ்வதி காந்தம்மாவாகவும், பிரண்ட் ராமசாமி காந்தம்மாவின் மேனேஜராகவும், மனோஹர் சந்திரனாகவும், ஸி. வி. வி. பந்துலு வக்கீல் நாராயணஸ்வாமியாகவும் தோன்றி திறம்பட நடித்திருக்கின்றனர்.

Estd: 1939

(Regd No.122117)

எப்பொழுதும் உபயோகியுங்கள்
"ராதாஸ்"
உயர்தர குளுகோஸ் ஸ்பெஷல் பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்தது, அசல்-
வெண்ணெயினால் செய்யப்பட்டவை, இத்-
துடன் ரொட்டி - பன் - பேன்சி
கேக்ஸ் அப்போதுக்கப்போது -
புதியதாகவே கிடைக்கும்.

ராதா பிஸ்கட் பாக்டரி
நெ: 161. தங்கசாலைத் தெரு.
மதராஸ்-1. Prop: T.P.G. SWAMY

OUR MOTTO IS SMALL PROFITS AND
ORDERS WILL BE EXECUTED WITH GREAT CARE

RADHA BISCUIT FACTORY

161. MINT ST., MADRAS-1.

மை தயாரிப்புத் துறையில் ஒரு புதிய உற்பத்தி
ஸால்வென்-டி சேர்ந்த கிருஷ்ணவேணி மை

பூர்ண விநியோகஸ்தர்கள் : நேஷனல் ப்ராடக்ட்ஸ் ஸிண்டிகேட்

Grams: PERMANANCY P. B. No. 5006 மதராஸ்-1. Phone: 3189



ஆர். என். ஆர் பிக்சர்ஸாரின் 'ஜாதக'த்தில் கே. சாரங்கபாணியும் செல்லமும்.

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி கம்பெனியார் இப்படத்தின் மூலம் ஒரு குடும்ப ஸ்திரீக்கு வேண்டிய பொறுமையையும், தாராள மனப்பான்மையையும் வெளிப்படுத்த முயற்சி செய்திருந்த போதிலும் படம் அவ்வளவு ப்லனை அவர்களுக்கு அளிக்கவில்லை, என்றே சொல்லலாம்.

ராஜி என் கண்மணி

ஜெமினி புரொடக்ஷன்ஸ் நெ. 19-க்கு ராஜி என் கண்மணி என்ற பெயருடன் பிப்ரவரி மாத முதலில் வெளியிடப்படும் என்று தெரிகிறது. ஜெமினி ஒரு படத்தை வெளியிடுகிறது என்றாலே அப்படத்தில் பல புதிய அம்சங்களும், விறு விறுப்பான கட்டங்களும், ஹாஸ்ய சம்பவங்களும் இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். இபபடத்தில் ஜூனியர் ஸ்ரீரஞ்சினி, டி. ஆர். ராமசந்திரன் ஸ்ரீராம், எஸ். வி. ரங்கராவ் முதலியோர் தோன்றுகின்றனர். படத்தை விரைவில் வெளியிடுவதற்கு எல்லாவித துரித ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருக்கினர் ஜெமினி சம்பந்தப்பட்டவர்கள்.

ஜாதகம்

ஆர். என். ஆர். புரொடக்ஷன்ஸார் ஜாதகத்தை ஏவி. எம். ஸ்டுடியோவில் தயாரித்து தமிழ் நாடெங்கும் வெளியிட்டு இருக்கின்றனர். ஜனவரி 14-ம் தேதி முதல் சென்னையில் வெளி வருகிறது. ஜெமினி அபூர்வ சகோதரர்களின் மூலம் ஒரு உன்னத நடிகர், டைரக்டர் என்று பெயர் பெற்றுள்ள நாகேந்திர ராவ் தான் இப் படத்தை தயாரித்து பிரதான பாகத்திலும் நடிக்கிறார் என்றால் படத்தின் தரத்தைப் பற்றி சொல்ல வேண்டுமா? மற்றும் கே. சாரங்கபாணி, பி. டி. சம்பந்தம், கே. ஆர். செல்லம்,

தாம்பூலச் சிலவு காலணா தான்

30 ஆண்டுகளாகப் பொது மக்களின் ஆதரவு பெற்று
தினசரி வாழ்க்கையிலும், கலியாண காலங்களிலும்,
மற்ற விசேஷ காலங்களிலும், சிறந்து விளங்குவது.

REGD. No. 1515

ஸ்டூடென்ஸ்

STUDENTS

பாக்குதூள்

NUT

எங்கும் கிடைக்கும்

தயாரிப்பவர் :

P. R. வடிவேலு முதலியார்

28, முல்லா சாயபு தெரு, சென்னை-1.

விஜயாவின் 'சந்திரஹார'த்தில் என். டி. ராமராவும், ஸாவித்ரியும்

கே. என். கமலம் முதலியவர்களும் தங்கள் திறமையை இப்படத்தில் காட்டி இருக்கின்றனர். சூர்யகலா என்ற புது முகமும், முன்னணிக்கு வந்து கொண்டிருக்கும் இளம் நடிகர் பாலசந்திரனும் காதல் ஜோடிகளாக வருகின்றனர். டி. எம். யூ. பதி கதை வசனம் எழுதியிருக்கும் இப்படம் முழுக்க முழுக்க ஒரு ஹாஸ்யச் சித்திரமாக இருக்கும் என்று கருதப்படுகிறது. ஏவி. எம். ஸ்டுடியோவில் தயாரிக்கப்பட்டிருக்கும் இப்படத்தின் ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு முதலியவைகள் ஏ. 1 ஆகத்தான் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கலாமல்லவா?

ஒரு நாள்

பண்டரிபாய், சூர்யகலா, எஸ். மேனகா, சிவாஜி கணேசன், பாலச்சந்திரன், பி. டி. சம்பந்தம் முதலியவர்கள் நடிக்கும் இப்படம் ஏவி. எம். ஸ்டுடியோவில் எஸ். பாலச்சந்தர் டைரக்ஷனில் முடிவடையும் தருவாயில் இருக்கிறது. பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் திரையிடப்படலாம்.

பெண்

இப்படத்தின் ஹிந்தி பதிப்பு 'லட்கி' நவம்பர் 30-ந் தேதி வட இந்தியாவில் திரையிடப்பட்டுவிட்டது. வைஜயந்திமாலா, அஞ்சலி தேவி, நாகய்யா, ஜெமினி கணேசன் எஸ். பாலசந்தர் முதலியோர் இப்படத்தின் நடிகர் ஜாபிதாவில் இருக்கின்றனர். எம். வி. ராமன் டைரக்ஷனில் உரு

GOURI
50 50
கௌரி
சுருட்டுகள்
గౌరీ చుట్టలు.
19.பிடாரியார் கோயில் சந்து, மதராஸ்.1.
CHEROOTS

JAIN'S
For GUARANTEED GOLD,
GEMSET JEWELLERY,
& SILVERWARES.
THE JAIN JEWELLERY CO.,
1. NAGESWARA RAO ROAD,
T. NAGAR, MADRAS-17.

ஏவி. எம். '**ஒரு நாளி**'ல் சிவாஜி கணேசன், சூர்யகலா, பி. டி. சம்பந்தம்

வாகும் இப்படம் விரைவிலேயே வெளிவரலாம்.

பொன் வயல்

"கதை என்றால் கல்கி எழுத வேண்டும். அதுதான் கதை" என்று வாரா வாரம் கல்கியின் வருகைக்கு எதிர்பார்க்கும் பல ஆயிரக் கணக்கான மக்களின் மனதைக் கவர்ந்துள்ள, கல்கியின் 'பொய்மான் கரடு' கதைதான் "பொன் வயலாக" வருகிறது. பிரதான பாகத்தில் தோன்றும் டி. ஆர். ராமசந்திரனும், அஞ்சலியும் சக்கைபோடு போட்டிருக்கிறார்களாம். மைனாவதியும், கே. சாரங்கபாணியும் வெகு பிரமாதமாக நடித்திருக்கிறார்களாம். வாஹினியில் உருவாகும் இப்படத்தை ஜெயந்தி புரொடக்ஷன்ஸார் ஏ. டி. கிருஷ்ணசாமி அவர்களின் டைரக்ஷனில் உருவாக்குகின்றனர்.

Grams : "HAMSA"

Phones { 2489 Office
86131 Residence

For A. C.

TRAFFORD & PLAIN SHEETS
ALSO
A. C. RAIN WATER PIPES & A.C.C. CEMENT

M. KUPPUSWAMY NAICKER

STOCKIST : ASBESTOS CEMENT LTD.,

15, SEMBUDOSS STREET - MADRAS-1.

For Cement Concrete products for Building requirements, such as Window & Door frames, Beams Sunshades, Fencing Posts, Compound Walls, Water Closets, etc., also for Kitchen requirements like Ovens, Water tanks, etc.

PLEASE CONTACT :

THE CEMENT CONCRETE WORKS

Proprietor : M. KUPPUSWAMY NAICKER

WESTCOTT ROAD - ROYAPETTAH - MADRAS

Phone : 85802



ஸ்ரீ ராஜராஜேஸ்வரியின் 'லக்ஷ்மி'யில் நாராயணராவ், ஸி. கே. சரஸ்வதி, குமாரி வனஜா

விடுதலை

நாகய்யா தன் வழக்கத்திற்கு விரோதமாக இப்படத்தில் ஒரு புதுமை செய்கிருராம். சிந்தனையில் விஷமும் பேச்சில் தேனும் சொட்டும் ஒரு வக்கீலாக தோன்றி வெளுத்துக் கட்டுகிருராம். மனோஹர், மோஹன், நந்தாராம், பீர் மஹமது, கிருஷ்ணகுமாரி, குமுதினியும் தோன்றுகின்ருர்களாம். நியூ ஏரா புரொடக்ஷன்ஸாரின் இப்படத்தை ராம்நாத் உருவாக்கி இருக்கிருராம். பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் வெளியிடப்படலாம்.

கூண்டுக் கிளி

ஆர். ஆர். பிக்சர்ஸார் இந்தக் 'கூண்டுக் கிளி'யை வளர்க்கிருர்கள்ளாம். பிரபல எழுத்தாளரான 'விந்தன்' வசனம் எழுதி, ராமண்ணா டைரக்ட் செய்யும் இப்படத்தில் சிவாஜி கணேசன், எம். ஜி. ராமச்சந்திரன், பி. எஸ். சரோஜா, கே. சாரங்கபாணி ஆகியோர் நடிக்கின்றனராம்.

கணேசனும், பண்டரியும் 'ஒரு நாளி'ல்



"ஸ்நானத்திற்கு ரெமி சோப்
ஸ்நானத்திற்குப் பின் ரெமி ஸ்னோ, பவுடர்.
முகக் கவர்ச்சிக்குக் கேட்பானேன்!"
என்று பிரபல தென்னிந்திய நடிகை
மிஸ் மீனாக்ஷி கூறுகிறார்.

A. V. R. A. & CO. MADRAS-1 & BOMBAY-2



ஜயந்தியின் 'பொன் வயலி'ல் டி. ஆர். ராமச்சந்திரனும், மைனுவதியும்

ஜெமினியின் 'ராஜி என் கண்மணி'யில் ஸ்ரீரஞ்சனி, டி. ஆர். ராமச்சந்திரன்



Buddha Gaya Temple, Bihar.
பிரசித்திபெற்ற
நீபா
ஹேர் ஆயில்
டாய்லட் சோப்
பிரில்லியண்டைன்
ஸ்னோ
ஊதுபத்திகள்
கங்கா ஒர்க்ஸ், அடையார், மதராஸ்-20.
நறுமணத்திற்கு மறுபெயர்

பொன்னுடை போர்த்தும் விழா.

சென்னை தருமபுர ஆதீனத் தலைவர் வித்வான் சோம சுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையில் நாடகப் பேராசிரியர்: திரு ப. சம்பந்த முதலியார் அவர்கள் சென்னை ஸ்ரீ அருணாசலேஸ்வர் வரதராஜப் பெருமாள் தேவாலயத்தில் 10-1-54 காலை **சைவமணி கண்ணன் அடிகளார்க்கு** அவர் செய்யும் சமயத் தொண்டிற்கு பொன்னுடை போர்த்திப் பாராட்டினார்கள். விழாவை சிறப்புற நடத்தும் முழுப் பொறுப்பையும் உமா ஆசிரியர் ஜி. உமாபதி ஏற்று நடத்தினார்.



C. E. RAJAN

All Kinds of Jewel Case Makers

MADRAS-1.

வைரம், பொன், வெள்ளி நகைகளையும், வெள்ளி சாமான்களையும், வைத்து பாதுகாக்க எங்களால் நவீன முறையில் உயர்தரமாக தயாரிக்கப் பட்ட உயர்ந்த வெல்வெட்டினால் செய்த நகைப் பெட்டிகளுக்கும், நூக்கமர நகை பெட்டிகளுக்கும் உத்திரவாதத்துடன் கூடிய அட்டைப் பெட்டிகளுக்கும் இதர எல்லாவிதமான நகை பெட்டிகளுக்கும் தாங்கள் கீழ் கண்ட விலாசத்திற்கு இப்பொங்கல் நன்னாளில் ஆர்டர் செய்து இன்புறுங்கள்.

C. E. ராஜன்

உயர்தர நகைப்பெட்டி உற்பத்தியாளர்.

84, ஏழுகிணறு தெரு, சென்னை-1

உமா டாக்கீஸ்



சென்னை கெல்லீஸில் நிர்மானிக்கப் பட்டிருக்கும் இப்புதிய தியேட்டர் சகல நவீன வசதிகளும் நிரம்பி மிக எழில் ததும்ப நிற்கிறது. வெஸ்ட் ரக்ஸ் ஸவுண்ட் சிஸ்டம் அமைக்கப் பட்டு ஒலியும், ஒளியும் தெளிவாக கேட்கவும், பார்க்கவும் கூடிய வகையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. கிருஷ்ணா, மஹாராணி ஆகிய இரு தியேட்டர்களின் நிர்வாகியான திரு. டி. முனிரத்ன நாயுடு பி. ஏ. பி. எல். அவர்களே உமா டாக்கீஸின் நிர்வாகி என்றால் நிர்வாகத்தின் தரத்தைப் பற்றிக் கூற வேண்டுமா?

இப்பொழுது 'உமா'வில் ஜூபிடரின் 'அழகி' ஓடிக்கொண்டிருக்கிறது.

நீரிழிவு

ஏழு நாட்களில்

குணமாகும்

சிறு நீரில் அதிக சர்க்கரை இருப்பின் **நீரிழிவு (DIABETES)** என்று சொல்லப்படும் இப் பயங்கர வியாதியுள்ள நோயாளி நாளுக்கு நாள் தன் முடிவு நெருங்குவதைக் காண்கிறான். இதை நிவர்த்திக்க டாக்டர்கள் இன்ஸுலின் இன்ஜக்ஷன் ஒன்றைத்தான் கண்டு பிடித்தார்கள். இதைக் குத்திக் கொள்வதால் பூரண குணம் ஏற்படுவதில்லை; இன்ஜக்ஷன் மருந்து உள்ளவரை சர்க்கரை தற்காலிகமாக மறைந்து விடுகிறது.

அபரிமிதமான தாகம், பசி, அடிக்கடி சிறு நீர் சர்க்கரையுடன் போதல், எரிச்சல் ஆகியவைகள் இந்த வியாதியின் முக்கிய அறிகுறிகள். வியாதி முற்ற ராஜப் பிளவை கட்டிகள் சாலேஸ்வரம் இதர கொடிய வியாதிகள் ஏற்படும். வீனஸ் சார்ம் நவீன விஞ்ஞான அதிசயமாகும். அதை உபயோகித்ததால் பலர் மரணத்தினின்று தப்பியுள்ளனர்.

வீனஸ் சார்ம் உபயோகித்த 2-வது அல்லது 3-வது நாளில் சிறு நீரில் சர்க்கரை குறைந்து அடிக்கடி போகும் சிறு நீரும் குறைகிறது. 3-வது அல்லது 4-வது நாளில் வியாதி பாதிக்குமேல் குணமடையும். இந்த மருந்துக்கு பத்தியம் கிடையாது; இன்ஜக்ஷன் கிடையாது. நன்கு விளக்கும் **இலவச ஆங்கில புத்தகத்திற்கு எழுதிக் கேளுங்கள்.**

50 வில்லைகள் கொண்ட
புட்டி 1-க்கு ரூ. 6-12-0

[பாக்கிங் தபாற் செலவும் இனம்]

வீனஸ் ரிஸர்ச் லாபரட்டரி (U. M.)
தபால் பெட்டி நெ. 587, கல்கத்தா.

லட்சியக் காதல்?

கு. ப. சேது அம்மாள்

பங்குனி மாதத்துப் பூர்ணிமையின் இரவு. சந்திரனுடைய படுக்கையறையில் ஜன்னல் வழியாகப் பாய்ந்து வந்த நிலவு அவனுடைய படுக்கையின் மீது வியாபித்திருந்தது.

சந்திரனும், அவன் பின்னல் சாமளாவுமாக உள்ளே நுழைந்தார்கள். கையிலுள்ள வெற்றிலைத் தட்டை மேஜைமீது வைத்துவிட்டு "நிலாவைப் பார்த்தேளா, பட்டப்பகலாட்டமா!" என்று உவகையுடன் கூறிவிட்டு ஸ்விட்சைப் போட்டாள் சாமளா.

அறையில் விளக்கு வெளிச்சம் பரவியது. படுக்கையில் சாய்ந்திருந்த சந்திரன் பலகணி வழியாகத் தெரியும் வெண்ணிலாவைப்பார்த்தபடி "விளக்கை அவித்து விடு சாமளா, நிலவு வெளிச்சமே போதும்", என்ருன்.

"வெற்றிலை போட்டுக்கொள்ளுங்கள். அப்புறம் அவிக்கிறேன்," என்று கூறி சந்திரனுக்கு தாம்பூலம் மடித்துக் கொடுத்தாள்.

சந்திரனுடைய பார்வை ஒளி வீசும் சந்திர மண்டலத்தின் மீது தோய்ந்திருந்தது. கவனமின்றியே அவள் கொடுத்த பாக்குப் பொடியையும் வெற்றிலைச் சுருள்களையும் வாங்கி வாயில் போட்டுக் கொண்டான். "பைத்தியம் தான் பிடிச்சுப் போயிடப் போறது உங்களுக்கு!" என்ருள் சாமளா.

சாமளாவின் வார்த்தைகளுக்குப் பொருள் என்ன என்பது சந்திரனுக்கு அர்த்தமாகாமலில்லை. சற்றுப்பொறுத்து சாமளாவின் முகத்தைப் பார்த்து "வால்மீகிக்கும், காளிதாஸனுக்கும், ரவீந்திருக்கும் பிடித்த பைத்தியம் எனக்கும் பிடிக்காதா என்று இரவு பகலாக ஏங்குகிறேன்! பிடிக்கவே காணுமே, சாமளா!" என்ருன் இனிமையாக.

"போங்கள்! கோணல் கட்சி பேசுவதே உங்கள் வழக்கமாகப் போய் விட்டது! எங்க தாத்தா சொல்லிக் கேட்டிருக்கிறேன். நிலாவிலேயே திருஷ்டி செலுத்தி, நிலாவிலேயே தூங்கினுல் நிச்சயமாக பைத்தியம் பிடிக்குமாம்!" என்று மறுபடி புத்தி சொன்னுள் சாமளா.

"சரி, விளக்கை அவி முதலில்" என்ருன் சந்திரன்.

"எப்படியாவது போங்கள்—எனக்கென்ன?" என்று சலித்துக் கொண்டு படக் கென்று விளக்குப் பொத்தானை அமுத்தி விட்டு, கீழே இறங்கிச் சென்ருள் சாமளா.

சந்திரன் மறுபடி வான் வெளியில் பார்வையைச் செலுத்தினுன். அவன் மனதில் எண்ணங்கள் விரிந்தன. மாலையில் ரவீந்திருடைய "ஊர்வசி" என்ற காவியத்தைப் படித்தது அவன் நினைவின் கண் நின்றது!

ஊர்வசி!

இரண்டு காதல் உள்ளங்களின் இடையில் பெற்ருேரின் வெறுப்பு, குடும்ப கௌரவம், சாஸ்திர சம்மதம் ஆகிய இவை புகுந்து தகருறு செய்கின்றன. ஆனுல் தாயுள்ளத்தின் உறுதிக்குமுன் அந்த விரோத சக்திகள் எப்படித் தலையெடுக்க முடியும்?....

அப்ஸரஸ்த்ரீ! அழகின் அவதாரம் அவள்! அவளுடைய ரூபத்தையும், தன்மையையும், ஸஞ்சார ரஸனைகளையும் வர்ணித்த ரவீந்திரனின் காவிய ஊர்வசியை உருவகப்படுத்திப் பார்க்க முயன்றான் சந்திரன்!

தன்னையும் சூழ்நிலையையும் மறந்து சிந்தனையில் ஒன்றி இருந்தான்!

எங்கோ வான் வெளியில் தொலைவில் ஊர்வசி ஆகாய வெளியில் நீந்திச் செல்வது போன்ற காட்சியைக் காண்பித்தது அவன் கற்பனை!

ஆஹா!

நிலாவையும் வானத்து மீனையும்
காற்றையும் நோப்படவைத்தாங்கே
குலாவு மமுதக் குழம்பைக்
குடித்தொரு
கோகுல வெறி பிடித்தோம்.
உலாவு மனச்சிறு புள்ளினை
எங்கணும் ஓட்டி மகிழ்ந்திடுவோம்.
பலாவின் கனிச்சுளை வண்டியிலோர்
வண்டு பாடுவதும் வியப்போ!

சந்திரனுக்கு நல்ல ராக ஞானம் உண்டு. இனிமையான குரலில் பாடி முடித்தது அவன் வாய், "ஊம், இந்தாங்கோ" என்று பால் டம்ளரை நீட்டினாள் சாமளா.

நினைவுலகிலிருந்து மீண்ட சந்திரன் அவள் கொடுத்த பாலை வாங்கி அருந்தி விட்டு டம்ளரைக் கொடுத்தான்.

"சாமளாம்பிகைக்கு ரொம்ப கோபம் போலிருக்கிறதே!" என்றான் விளையாட்டாக.

"இல்லையே" என்றாள் அவள் பதிலுக்கு.

"கோபம் தான்! வா உட்காரு" என்று அவளை அருகி விழுத்து உட்கார வைத்துக் கொண்டு "சகல ஜீவராசிகளையும் ரஞ்சகப்படுத்தும் நிலவுத் தேவன் மீது உனக்கு ஏனிவ்வளவு அசூயை சாமளீ!" என்று அன்பொழுகக் கேட்டான் சந்திரன்.

சாமளா பதில் சொல்லவில்லை மறுபக்கம் திரும்பிக் கொண்டாள்.

அவள் முகத்தைத் தன்புறமாகத் திருப்பினான் சந்திரன். அவள் கண்களில் நீர் நிறைந்திருந்தது! ஏன் என்பது போல சந்திரன் தன்னைப் பார்த்ததும் "என் அன்பைவிட உங்களுக்கு நிலவுத் தேவன் தான் ஒசத்தி..." என்று மேலே பேச முடியாமல் நிறுத்தினாள் சாமளா. ஒரு நிமிஷ நேரத்திற்குப் பிறகு "சாமளா, கவலைப் படாதே. நீ தான் எனக்கு ஒசத்தி; நிலவுத்தேவனல்ல!" என்றான் புன்சிரிப்புடன்.

"ஆமாமா; ரொம்ப நிஜம்!"

"நிரூபித்துக் காட்டினால் சரிதானே?"

சாமளாவின் அகத்தில் பிறந்த ஆனந்தம் முகத்தில் நிலவியது. இருந்தாலும் "பேசவாவது கற்றுக்கொண்டிருக்கிறீர்களே.,.. என்னை ஏமாற்ற—என்று!" என்று கோணலாகச் சிரித்தாள் சாமளா.

"குடலைக் கிழித்துக் காண்பித்தாலும், 'இது வாழைநார்' என்கிறவர்களை வைத்துக் கொண்டு எப்படி காலட்சேபம் செய்வது?"

"நான் அவ்வளவு பொல்லாதவள்; அப்படித்தானே?"

"இல்லை! நல்ல ஹ்ருதயம் உன்னிடமிருப்பதால் தான் இது வரையில் எனக்கு பைத்தியம் பிடிக்காமலிருக்கிறது!" என்று சிரித்தான் சந்திரன்.

"பார்த்தீர்களா, பார்த்தீர்களா?" என்று பார்வையை வெட்டிக் கேட்டாள் சாமளா.



"இது கிடக்கிறது சாமளா, உனக்கு ஒரு நல்ல கதை சொல்லட்டுமா?" என்று அவளை அருகிலிழுத்தபடியே கேட்டான் சந்திரன்.

"கதையா, என்ன கதை?" என்று கேட்டுக் கொண்டே வெற்றிலைத் தட்டை யெட்டி எடுத்து "வெற்றிலை போட்டுக் கொள்ளுகிறீர்களா?" என்று கேட்டாள் சியாமளா.

"வேண்டாம் என்றால் அதற்கொரு கோபம் வரும் உனக்கு!"

"பைத்தியம் என்கிறீர்கள் மொத்தத்தில்!"

"இல்லவே இல்லை. தெளிந்த மனமுள்ள விவேகி நீ என்பதை எத்தனையோ தடவை உனக்குச் சொல்லியாகி விட்டது!" என்று சிரித்தான்.

"சரி சரி" என்று கூறி சந்திரனுக்கும் வெற்றிலை கொடுத்துத் தானும் போட்டுக் கொண்டாள். தட்டை யெடுத்து வைத்து விட்டு "கதை என்றீர்களே என்னவோ, சொல்லுங்கள்" என்றாள் சியாமளா,

"அதுவா, சொல்லுகிறேன். நிஜக்கதை வேணுமா, பொய்க் கதை வேணுமா?"

"நிஜக்கதையே சொல்லுங்கள். பொய்க்கதை ஒன்றும் வேண்டாம்" என்றாள் கொஞ்சலாக.

"பொய்யே உனக்குப் பிடிக்காது: இல்லையா?" என்று சியாமளாவைக் கேட்கும் போது சந்திரனுக்குக் குரல் கம்மியது. கலங்கும் தன் கண்களை சியாமளா கவனித்து விடக் கூடாதே என்று மறுபுறம் திரும்பிக் கொண்டான். அவன் மனதில் பெரும் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது.

சந்திரன் வாய் திறவாமலிருந்ததைக் கண்ட சியாமளா "சொன்னால் மட்டும் கோபம் வருகிறது...." என்றதும் சட்டென்று மனைவியின் புறம் திரும்பிப் பார்த்து,

"சியாமளா" என்றான்.

"ஊம்"

"என் சிநேகிதன் கணேசன் என்று ஒருவன்...."

"உம், கதையோ அஃது?"

"அவன் கதை தான் உனக்கு இப்பொழுது சொல்லப் போகிறேன்."

"ஐயோ, பாவம்! கதையாகப் போய் விட்டதா உங்கள் சிநேகிதர் வாழ்க்கை" என்று கண்களை அகலமாக்கி விழித்தாள் சியாமளா.

"ஆமாம், சமுதாயம் தன் சட்டப்படி அவன் நடக்கவில்லை என்று அவனை தண்டித்து விட்டது!"

"அப்படியென்றால்?"

"கேட்டுக் கொண்டே வா; புரியும். கணேசனுடைய பாட்டனார் ஒரு புரோகிதர்..."

"உங்கள் பாட்டனார் மாதிரி',

"சாஸ்திரி பிள்ளை டாக்டருக்குப் படித்து டாக்டரானார்.... என்ன",

"உம்"

"டாக்டர் தன் பிள்ளையை அமெரிக்காவுக்கு அனுப்பினார்"

"இது கதையா?"

"ஏன்? சுவாரசியப்படவில்லையோ?"

சியாமளா பதில் சொல்லாமல் அவன் முகத்தைப் பார்த்தாள்.

சந்திரன் அதைக் கவனிக்காமலில்லை. ஆனால் அதைப் பொருட்படுத்தாமல் மேலே சொல்லிக்கொண்டே போனான் சந்திரன்.

"அமெரிக்காவிலிருந்து வந்து சென்னையில் இறங்கினான். அவன் வரவுக்காக ஆவலோடு காத்திருந்த அவனுடைய காலேஜ் காதலியை மணந்து கொண்டான்...."

சியாமளாவின் மனதில் சுரீர் என்றது. அவள் முகம் கருத்தது. சந்திரன் மேலே சொல்லிக் கொண்டே போனான்.

"அவள் சிறு பிராயத்திலேயே கலியாணமாகி விதந்து

வாகிவிட்ட சிறுமி என்பது கணேசனுக்குத் தெரியும். காதலைவிட சீர்திருத்த முறையை அனுசரிக்க வேண்டும் என்ற தீவிர நோக்கத்துடன் தான் அந்தப் பெண்ணை மணந்து கொண்டான். கலியாணமான பிறகு கிரமமாகச் செய்தி எட்டிவிட்டது அவன் வீட்டாருக்கு.''

''அந்தப் பெண் பெயரென்ன ?''

''ஞாபக மில்லை....ஏன் ?''

சியாமளா பெரிதாகச் சிரித்தாள்! ''ஞாபக மில்லையா ! எனக்கு நன்ருக ஞாபகமிருக்கிறது ! ஆனல் அந்தப் பெண்ணுக்குத் தன் வரலாறு ஒரு வருஷத்திற்கு முன்புதான் தெரியும். அன்றிலிருந்து அவள் எப்படிப்பட்ட எதிரியுடன் போராடிக் கொண்டிருக்கிருள் தெரியுமா?'' சந்திரன் சியாமளாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். சியாமளா நிறுத்திய பேச்சை மறுபடி தொடங்கி ''இன்று அந்தப் பெண் வெற்றி பெற்றுவிட்டாள்!'' என்ருள் கணீரென்று. சந்திரன் சட்டென்று? ''எப்படி?'' என்ருன்.

''பெண்மையின் தன்மையின் படி!'' சந்திரன் எழுந்து உட்கார்ந்து கொண்டு ''கொஞ்சம் விவரமாகச் சொல்லக் கூடாதா?'' என்ருன்.

''நாம் ஒருவர் உள்ளத்தை மற்றவர் சுலபமாகப் படிக்கக் கற்றுக் கொண்டிருக்கிரேமே—வாயினல் அதைச் சொல்ல வேண்டுமா ?''

சந்திரன் வலிக்கும் தன் நெஞ்சைக் கையால் அழுத்திப் பிடித்துக் கொண்டான்.

''சியாமளா—நான் உன்னை இழக்கமாட்டேன்''

''அதற்கென்ன செய்கிறது? விதியின் ஆட்சியில் அதன் கட்டளைப்படி தானே....''

''அதைப் பற்றி எனக்கு லட்சியமேயில்லை.''

''அதை நீங்கள் லட்சியம் செய்தே ஆக வேண்டுமே!''

''மாட்டேன்! என் வீட்டாருக்கு என்னைத் தவிர மகன் மகள்கள் எல்லோருமிருக்கிருர்கள். எனக்கு உன்னைத் தவிர வேறு யாருமேயில்லை....''

சந்திரன் இதைச் சொல்லும்போது சியாமளாவின் கரங்களை இறுக்கிப் பற்றிக் கொண்டான். சந்திரனுடைய கைகள் நடுங்குவதைக் கண்ட ''சியாமளா நெஞ்சுருக அன்பே, தாங்கள் இனி பெற்ருேர் கட்டளைப்படி நடப்பதே....''

சந்திரன் அவள் வாயைப் பொத்தினன்.

சியாமளா அதை மெல்ல அகற்றிவிட்டு ''என் மேல் உங்களுக்கு உண்மையாக ஆத்மார்த்தமான அன்பு இருப்பது நிஜமானல்........உங்கள் வாழ்வைச் சீர்குலைத்துக் கொள்ளக் கூடாது.''

''சீராக வாழ்வது என்பது எப்படி?'' இடை மறித்துக் கேட்டான் சந்திரன்.

திணறினள் சியாமளா.

''சொல்லேன், உன்னைத் துறந்து விட்டால் என் வாழ்வு சீர் பெற்று விடுமா?'' என்று உடைந்த குரலில் கேட்டான் சந்திரன்.

மறுபடியும் மௌனம் சாதித்தாள் சாமளா. சந்திரன் மீண்டும் பேசத். தொடங்கி ''சியாமளா, உன் வரலாறை உனக்குச் சொல்லும்படி.— நீயாக என்னை விலகிவிட வேண்டும் என்ற உத்தேசத்தில்—

செய்தது யார் என்பது தெரியுமா உனக்கு?'' என்று கர்ஜித்தான் சந்திரன்.

சந்திரன் குரலிலிருந்த உள்ளுணர்ச்சி கண்டு நடுங்கிப் போனாள் சியாமளா.

'' அது யார் தெரியுமா?''

'' யாராயிருந்தா லென்ன?'' என்று மிக மிகத் தாழ்ந்த குரலில் சொன்னாள் சியாமளா.

'' அதில்தான் இருக்கிறது விசை! யார் என்பது தெரியுமா, தெரியாதா?'' சந்திரனுடைய குரல் வர வர ஓங்குவதைக் கண்டாள் சியாமளா.

'' தெரியாது!''

'' அதுதான் நானும் நினைத்தேன்—அந்த கிராதகன் யார் என்றால் உன் தம்பி....''

'' என்ன?'' என்று தீச்சுட்டவள் போல வீரிட்டாள் சியாமளா.

'' ஆமாம், உன் தம்பி—என் தகப்பனார் இந்த இரண்டு பேர்களும் நம் உறவைத் துண்டிக்க ஒரு வருஷமாகப் பாடுபடுகிறார்கள். அவர்கள் முயற்சி சாத்தியமாகப் போவதில்லை. நேற்று மாலை என் தகப்பனாருக்கு இதைப்பற்றி தெரிவித்து விட்டேன். 'வீட்டு சொத்தில் உனக்கு பாத்தியம் கிடையாது' என்று பயமுறுத்தினார். 'வேண்டாம்' என்று விட்டேன். நாளைக்கு நாம் இதைவிட்டு வெளியேறிவிட வேண்டும்.''

''என் தொடர்பின் காரணமாக அல்லவா?''

'' ஆம்!''

'' அவ்வளவுதானே?'' என்று ஒரு நெடுமூச்சு விட்டாள் சியாமளா.

'' அவ்வளவே தான்! இங்கிருந்து நமக்கு ஒன்றுமே தேவையில்லை.''

'' இருங்கள், என்ன சத்தம் கிழே?''

2

'' உங்கள் நியாயம் உங்களோடு இருக்கட்டும். அவன் வீட்டை விட்டு போகக்கூடாது.''

'' அவனை நான் போகச் சொல்ல வில்லையே.''

'' அர்த்தமாகிறது. அவன் வேண்டுமானால் அவள் வேண்டும். என் குழந்தையை நான் இழக்க மாட்டேன்.''

'' யார் இழக்கச் சொன்னது? போயேன் நீயும் அவனோடு!''

'' ஏன் போகணும்? சொத்துக்கு அவன்தான் முதல்வாரிசு. பிதுரார்ஜிதம்— ஞாபகமிருக்கட்டும்.''

'' அப்போ — நான் வெளியே போக வேண்டியதுதான்!''

'' அது உங்கள் இஷ்டம். என் குழந்தை அருமை எனக்கல்லவா தெரியும். அவனைப் போகச் சொல்லிவிட்டு இங்கு நாம் இரண்டுபேரும் 'ஹாய்'னு இருக்க வேண்டுமா?''

'' பரம்பரையா கியாதியோட இருந்த குடும்பத்திற்கு அனர்த்தம்....''

'' குடும்பத்து கியாதி, உங்கள் பிடிவாதம், சாஸ்திர சம்மதம் இதெல்லாம் எனக்குப் பெரிதல்ல. என் வயிற்றில் பிறந்த குழந்தைதான் எனக்குப் பெரிது'' என்று தன் தாய் அடிவயிற்றிலிருந்து கிளம்பிய ஆத்திரத்துடன் கத்தியது சந்திரன் காதில் விழுந்தது!

'' அம்மா'' என்று நெடுமூச்செறிந்தான் சந்திரன்.

இந்தக் கட்டுரையாளர் டரக்டர் தொ ப் ார்த்துச் சிரிக்கிறார். ஆனால் நையாண்டி செய்யவில்லை! நீங்களும் ர துச் சிரியுங்களேன்.......

டாக்டர்

கஸ்தூரிபாய்

★

'நான் எல்லா ஆஸ்பத்திரிகளிலும் இருந்து இருக்கிறேன்' என்று மார்தட்டிச் சொன்னான் ஒருவன்.

அதற்கு மற்றவன் 'பிரசவ ஆஸ்பத்திரியில் கூடவா?' என்றான் கிண்டலாக.

'அடே, நான் பிறந்ததே அங்கேதானே!' என்றான் முதலாமவன்.

*

ஒரு நோயாளியை டாக்டர் வந்து பார்த்தார். அவர் நர்சிடம் 'நர்ஸ், பாவம் நோயாளி இறந்துவிட்டான்' என்றார். அதற்கு நோயாளி 'ஐயோ, நான் இறக்கவில்லை உயிரோடு இருக்கிறேன்' என்றான்.

'வாயை மூடு. டாக்டரைவிட உனக்கு அதிகம் தெரிந்து விட்டதோ?' என்று பக்கத்திலிருந்த நர்ஸ் அவன் வாயை அடக்கினாள்.

*

நடுநிசி, ஒருவர் டாக்டர் வீட்டுக்கு ஓடோடி வந்தார். 'உடனே வரவேண்டும் டாக்டர். என் வீட்டில் என் மனைவி மயக்கம் போட்டுக் கிடக்கிறாள். என்ன சிகிச்சை செய்தும் சுய நினைவு வரவில்லை' என்றார் வந்தவர்.

"எனக்குப் 'பீஸ்' ஐம்பது ரூபாய்த் தருவீர்களா?'—கேட்டார் டாக்டர்.

'நிரம்பவும் நன்றி. அதைச் சொல்லியே ஆளை எழுப்பிவிடுகிறேன்' என்று கூறிவிட்டு வந்தவர் திரும்பியோடினார்.

*

எமதூதன் ஒரு ஆளை எமலோகத்திற்கு கொண்டு வந்தான். 'என்ன, இவன் பத்து வருடங்களுக்கு முன்னாலேயே இங்கு வந்து விட்டானே. இன்னும் இவன் ஆயுள் முடிய பத்து ஆண்டுகள் இருக்கின்றனவே. அது சரி இவன் டாக்டர் ஜான்சனிடம் சிகிச்சைப் பெற்றவன் தானே?' என்று எமதர்மராஜன் கேட்டான்.

'ஆமாம். அது உங்களுக்கு எப்படித் தெரியும்?' என்றான் எமதூதன்.

டாக்டர் ஜான்சனின் கைப்பாக்கியமே பாக்கியம்!

*

டாக்டர், தம் காரில் சென்று கொண்டிருந்தார். ஒருவர் அவசரமாகக் காரை நிறுத்தி, தம் வீடு வரையிலும் வரச் சொன்னார். டாக்டரின் கார் அந்த ஆசாமியின் வீட்டில் வந்து நின்றது. உடனே காரில் வந்தவர் மூன்று ரூபாயை எடுத்து டாக்டரிடம் கொடுத்தார்.

டாக்டரோ 'நோயாளி எங்கே?' என்று கேட்டார். அதற்கு அந்த ஆள் 'என் வீடு வரையிலும் வர 'டாக்ஸி' டிரைவர் ஐந்து ரூபாய்க் கேட்டான். உங்களுக்கு 'விசிட்டிங் பீஸ்' மூன்று ரூபாய்த்தானே. அதனுல் உங்கள் காரிலேயே வந்துவிட்டேன். எப்படியும் எனக்கு இரண்டு ரூபாய் மிச்சந்தான். 'தாங்ஸ்' போய் வாருங்கள்-டாக்டர்' என்ருர்.

*

வயிற்று வலியுள்ள நோயாளி ஒருவனுக்கு டாக்டர் குடல் ஆப்ரேஷன் செய்தார். கஞ்சியைத் தவிர வேறென்றும் சாப்பிடக் கூடாதென்று உத்திரவிட்டார். நோயாளியோ ஒரு நாள் ஆட்டுக் குடலை வேகவைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அதைப் பார்த்த டாக்டர் கோபப்பட்டு அவனைக் கடிந்து கொண்டார். 'இல்லை. சாமி ஆப்ரேஷனுக்குக் குடல் தானுங்களே நல்லது' என்று சொல்லி விட்டு நோயாளி மீதியிருந்த குடலையும் காலி செய்தான்.

*

அகத்திய முனிவர் வைத்தியத்தில் கை தேர்ந்தவர். அவருடைய மாணுக்கன் தேரையன் எந்த நோய்க்கும் மருந்து கொடுத்து நோயை நீக்கி விடுவாராம். மருந்தை நோயாளிக்குக் கொடுத்து. 'இந்த மருந்து பலிக்காவிட்டால் நான் தேரையன் அல்லன்' என்று அறுதியிட்டு உறுதி கூறுவாராம். 'தேரையன் ஆயிரத்தொன்று' பிரசித்தி பெற்ற நூல்.

அறுப்பு வைத்தியத்தில் (operation) இந்தியா ஒரு காலத்தில் புகழ் பெற்று விளங்கியது. மயிரை இரு கூராகப் பிளக்கக் கூடிய நுண்ணிய கருவிகளையெல்லாம் கையாண்டனர் இந்தியர். இவ்வளவு நுட்பமான கருவிகளை வைத்திருந்த இந்தியர் தம் கவனக் குறைவால் இன்று அவதியுறுகின்றனர்.

*

கடவுள் இரண்டு முறை சிரிப்பாராம். முதலாவது அண்ணன் தம்பி சண்டையிட்டுக் கொண்டு 'இது என் நிலம், இது உன் நிலம்' என்று சொல்லும் போது கடவுள் சிரிப்பாராம். நோயாளியின் தாயாரிடம் டாக்டர் வந்து 'அம்மா, கவலைப் படாதீர்கள். உங்கள் மகனை நான் பிழைக்க வைத்து விடுவேன்' என்று சொல்லும் போது கடவுள் இரண்டாவது தடவைச் சிரிப்பாராம் இன்னும் இரண்டு மணி நேரத்தில் இறந்து போகப் போகும் நோயாளிப் பிழைத்து விடுவான் என்று சொல்லும் டாக்டரைப் பார்த்து.

*

சில டாக்டர்களின் கையிலுள்ள 'ஸ்டெத்தஸ்கோப்' எமனின் பாசக்கயிறு போல் காட்சியளிக்கும். மருத்துவக் கல்லூரி மாணவ மாணவிகளைப் பார்த்தால் அவர்கள் கையிலே, கழுத்திலே, தோளிலே இந்த 'ஸ்டெத்தஸ்கோப்' புரண்டு விளையாடும் அழகே அழகு. இது ஒரு ஆபரணமோ என்று கூட நமக்கு எண்ணத் தோன்றும்.

*

டாக்டரின் மனைவியொருத்தி. தன் கணவரிடம் 'யார் வந்தாலும் நீங்கள் சிகிச்சையை ஆரம்பிக்குமுன் என்ன சாப்பிடுகிறீர்கள் என்று ஏன் கேட்கிறீர்கள்?'' எனக் கேட்டாள்.

அதற்கு டாக்டர் 'அடி போடி பைத்தியக்காரி. அவர்கள் சாப்பிடும் உணவிலிருந்து நோயாளி

பணக்காரனு, ஏழையா என்று தெரிந்து கொள்வேன். பின்னல் நான் அவருக்குப் 'பில்' அனுப்ப அது பெரிதும் துணை புரியும்' என்ருர்.

*

நோயாளி ஒருவன் 'மிகவும் பலவீனமாக இருக்கிறது. ஏதேனும் 'டானிக்' எழுதித் தாருங்கள்' என்று டாக்டரைக் கேட்டான்.

'அதற்கென்ன, தருகிறேன். 'டார்வின்ஸ் டானிக்' இருக்கிறது. அதைச் சாப்பிட்ட எல்லோரும் நல்ல டானிக் என்று புகழ்கிருர்கள். இந்தாருங்கள் உங்களுக்கும் எழுதித் தருகிறேன்' என்ருர் டாக்டர்.

'அது வேண்டர்வே வேண்டாம் சார். அதைத் தவிர வேறு ஏதாவது ஒரு டானிக் எழுதித் தாருங்கள்' என்ருன் நோயாளி.

'டார்வின்ஸ் டானிக் மிகவும் நல்ல தாயிற்றே. ஏன் அதை வேண்டாம் என்கிறீர்கள்?' என்ருர் டாக்டர்.

'நான் தான் அந்த டார்வின் டானிக் தயாரிப்பாளன்' என்று சொல்லி நழுவி விட்டான் நோயாளி.

*

டாக்டரிடம் நோயாளி ஒருவன் வந்து 'சார், தலையை வலிக்கிறது' என்ருன்.

'ஓ! எடேக்' (Head Aehe) என்று தனக்குள் ஆங்கிலத்தில் சொல்லிக்கொண்டார் டாக்டர்.

'எடக்கு இல்லிங்க உண்மையாகவே தலையை வலிக்குதுங்க' என்ருன் ஆங்கிலம் தெரியாத நோயாளி.

*

பிரெஞ்சு நாட்டின் பெயர் பெற்ற டாக்டர் ஒருவர் மரணப் படுக்கையில் இருக்கும் போது மற்ற டாக்டர்களெல்லாம் கவலைப்பட்டு அவர் கட்டிலின் அருகில் கண்ணீர் உகுத்து நின்றனராம். அப்பொழுது டாக்டர் கூறினுர்.

'நீங்கள் வீணுகக் கவலைப்பட வேண்டாம். என்னை விடப் பெரிய மூன்று டாக்டர்களை நான் எனக்குப்பின் உங்களுக்கு விட்டுச் செல்கிறேன். அவைகள் தாம் தண்ணீர், உடற்பயிற்சி, உணவு ஆகியவை.

முதலாவதைத் தாராளமாக
உபயோகியுங்கள்.

இரண்டாவதை ஒழுங்காக
உபயோகியுங்கள்.

மூன்ருவதை நிதானமாக
உபயோகியுங்கள்''.

என்ருர்.

*

ஒரு கிளாஸ் தண்ணீர், ஒரு கிளாஸ் தக்காளிப்பழ ரசம், ஒரு கிளாஸ் ஆரஞ்சுப்பழ ரசம் இவைகளே சிறந்த டானிக். 'வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணியனுக்குக் கொடு' என்பது பழமொழி, எண்ணெயின் மகத்துவத்தை யெடுத்துக் காட்ட எழுந்த மொழி இது. 'சிரிப்பு' நோயாளிக்கு நல்ல மருந்து. ஒரு நாளைக்கு ஒரு முறையேனும் சிரித்தால் டாக்டர் நம் வீட்டிற்கே நுழையாதபடி செய்துவிடலாம்' என்பது ஒரு பழமொழி. டாக்டர் தொழில் புனிதமானது, ஜீவ—மரணப் போராட்டம் நடத்தும் நோயாளிக்கு ஆறுதல் அளிப்பவர் அல்லவா டாக்டர். ஆதலால் டாக்டர் வாழ்க! நோய் வீழ்க!

ஆண்மையுள்ள ஆண்களையே பெண்கள் விரும்புவார்கள்

மனோவலிமையை இழக்காதீர்கள்.

டிரிடோன் டிலாய் (ஆண்களுக்கு)

இது உயர்ந்த மூலிகைகளினால் தாயாரிக்கப்பட்ட ஓர் அரிய டானிக். ஆண்களுக்குண்டான சகலவிதமான நோய்களையும் முக்கியமாக ஆண் குறி வளராதிருத்தல். சம்போக இச்சையின்மை முதலியவைகளை நீக்கி உடனே குணமாகிறது ரூ. 5.

எண்டிமோ பில்ஸ்

(நரம்புச் சக்திக்கும், நரம்புத்தளர்ச்சிக்கும் உலகப் புகழ் பெற்ற மருந்து)

ஆண் குறி இளைத்து செயலற்றுப்போதல், நரம்புத் தளர்ச்சி, தாது நஷ்டம், சுக்கிலத்தில் ஜீவக்கிருமிகள் இல்லாமை, சம்போகத்தில் அயர்வு, பெண்கள்மேல் இச்சையில்லாதிருத்தல் இவைகளுக்குக் கைகண்ட மருந்து.

32 மாத்திரைகள் கொண்ட பாட்டில் 1-க்கு ரூ. 5—0—0

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

V. P. STORES

(U. T. M.) P. B. 51, MEERUT

வீட்டிலேயே அச்சிடக்கூடிய பாக்கெட் பிரஸ் :—

பெயர்கள், விலாசம், கடிதங்கள் லேபில்கள், நிகழ்ச்சிகள் முதலியவைகளை வீட்டிலேயே வெகு அழகாக அச்சிடலாம். ஒவ்வொரு வீட்டிற்கும் அவசியமானது. நெ. 1 ரூ. 1-4-0 நெ. 2 ரூ. 2-4-0. ஸ்பெஷல் ரூ. 3-0-0. உயர்ந்த ரகம்ரூ. 3-8-0.

Big Size High Class Rs. 4-4 0.

தபால் செலவு அணா 1-8-0

உயர்தர கடிகாரங்கள்

ஸ்விஸ் மேக் 10 வருஷ உத்திரவாதம் 5 ஜுவல் க்ரோமியம் கேஸ் ரவுண்டு ஷேப் ரூ. 16. சிறந்தது ரூ. 16/8. நீண்ட சதுரம் க்ரோமியம் கேஸ், 7 ஜுவல் ரூ. 24. ரோல்டுகோல்டு 15 வருஷ உத்திரவாதம் 9 ஜுவல் ரூ. 28. சிறந்தது ரூ. 30. ஸ்பெஷல் 15 ஜுவல் ரூ. 27. அலாரம் டைம்பீஸ் ரூ. 10. சிறந்தது ரூ. 17.

தபால் செலவு அணா 1-8-0.

French Commercial Stores. (B-S-B.)

P. B. No 12216, CALCUTTA, (5)

தமிழ் இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புஸ்தகத்தின் மூலம் பிறர் ஒத்தாசையில்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும், பேசவும், கடிதங்கள் எழுதவும் கற்றுக் கொள்ளலாம், ஒரு பெரிய பைண்டு புஸ்தகம்.

விலை ரூபாய் 5—0—0

தையல் கட்டிங் & மானுவல்!

இப்புத்தகத்தின் மூலம் யார் வேண்டுமானாலும். எவர் உதவியைக்கொண்டும் தையல் வேலையை சுலபமாகக் கற்றுக் கொள்ளலாம்.

விலை ரூபாய் 2—8—0

பீதாம்பர ஜாலத்திரட்டு

(MAGIC BOOK)

பலவிதமான பலகாரங்கள் அழைப்பிக்கும் ஜாலம். ஒரு அறைக்குள் அழகிய ஸ்திரீகளைக் காண்பிக்கும் ஜாலம், வசிய அஞ்சனம், முதலிய 1500 ஜாலங்கள் அடங்கியிருக்கின்றன.

விலை ரூபாய் 2—4—0

VANI BOOK DEPOT (U)

Post Box No 239. MADRAS-1

நல்ல குடும்பம் பூலோகத்தின் சுவர்க்கம் என்பார்கள். இதோ ஒரு நல்ல குடும்பத்தின் உயிரோட்டமான சித்திரம்....! வாழ்வின் அன்றாட சாதாரண நிகழ்ச்சிகள் அந்தத் தம்பதிகளை எப்படிப் பிணைக்கின்றன.......!

உயிரோட்டம்

ரா. பாலாஜி

"அத்தான்! இன்று இரண்டு முறை பல்வலி வந்து விட்டது. வலி பொறுக்க முடியாமல் அழுதுவிட்டேன்...."

"நான்தான் வலி ஏற்படும் பொழுது எல்லாம், 'சொத்தைப் பல்' தொல்லைக் கொடுத்துக் கொண்டே இருக்கும் எடுத்துக் கொள் என்று சொல்லுகிறேன்.... நீதான் இப்பொழுது வேண்டாம், பிரசவம் முடியட்டும் என்று மறுத்து விட்டாய். வலி அதிகமாயிருக்கிறது. சுரம் வந்தாலும் வரும். பிரயாணத்தை தள்ளிப் போட்டுக் கொள்ளுகிருயா?" என்று கூறிய வண்ணம் கனகத்தின் முகத்தை கவனித்தேன்.

சலனமுற்றது கனகத்தின் முகம். "இதற்குதான் பிராணன் போனாலும், எதையும் சொல்லக் கூடாது என்று நினைப்பது. வண்டியில் நான் ஒருவள்தானா பிரயாணம் செய்யப்போகிறேன்? நாள் குறித்து அத்தையும் மாமாவும் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அப்படி பிரயாணத்தைத் தள்ளிப்போட்டுக் கொள்ளும்படி என்ன நேர்ந்துவிட்டது?" படபடப்புடன் கூறி, கனகம் தன்னை நொந்துக் கொண்டாள்.

சில விநாடிகள். இருவரிடையே மௌனம் நிலவியது. பூச்செண்டை எடுத்து கூந்தலில் சொருகிக் கொண்டாள் கனகம். எதிர் வீட்டு வயதான சுமங்கலியை வணங்கிவிட்டு, அடுத்த வீட்டுத் தோழியிடம் கடைசி முறையாக விடை பெற்றுக் கொண்டு வந்துவிட்டால் கனகம், ரயிலுக்கு புறப்பட்டாற்போலத்தான்.

நான் எதிர் பார்த்ததைப் போலவே, எதிர் வீட்டுச் சுமங்கலியை வணங்கிவிட்டு அடுத்த வீட்டுத் தோழியிடம் விடை பெற்றுக் கொண்டு வந்துவிட்டாள். நான் புத்தகம் படிப்பதில், முழுக் கவனம் செலுத்துவதைப் போல் நடித்தேன். தான் புறப்படத் தயாராகிவிட்டதை தொண்டையின் கனைப்பால் விளம்பரப்படுத்தினாள். குறுநகை புரிந்தவண்ணம், கனகத்தை சாய்வாக கவனித்தேன். நான் புறப்படும் பொழுது வம்புச் சண்டைக்கு இழுத்து சகுனத் தடை ஏற்படுத்தப்போவதாக கனகம் கலங்கினாள். புறப்படும் பொழுது, எவ்விதத் தடையும் ஏற்படக் கூடாது. தடை ஏற்பட்டால் வாழ்வில் ஏற்படப் போகும் பயங்கர திருப்பு முனையின் முன்னறிவிப்பு, என்று நினைப்பவள். அவள் கலக்கத்தை உணர்ந்த நான் "கனகம் ஒரு நிபந்தனை" என்றேன்.... கலங்கிய கனகத்தின் முகம் நான் எதிர்பார்த்ததைப் போலவே திடுக்கிட்டது. திடுக்கிட்டையும், சலனத்தையும் சமாளித்துக் கொண்டு "எப்பொழுதும் விளையாட்டுதானா அத்தான்?" என்று சலித்துக் கொண்டே பின்னல் வந்து நாற்

காலியைப் பிடித்துக் குலுக்கினாள்.

நிபந்தனை அவளுக்குச் சகுணத் தடையாக மாறிவிடும்—இல்லை, எண்ணிக் கொள்வாள். தொடர்ந்து, நிபந்தனை, நிபந்தனை என்று வற்புறுத்திக் கொண்டிருந்தால் குழந்தை மனம் படைத்த கனகம் அழத் துவங்கிவிடுவாள். நிபந்தனை என்ன தெரியுமா? வண்டி புறப்படும் பொழுது, அழவே கூடாது என்று உறுதியாய் கூறினேன். பெருமூச்சு விட்டுக் கொண்டே, நாற்காலியைவிட்டு விட்டு முன்னால் வந்து நின்ற கனகம் ''நான் அழுதால் உங்களுக்கு என்ன?'' என்று துணிவாகக் கேட்டுவிட்டு கொஞ்சும் பாவனையில் நாற்காலியின் இடப்புறக் கைகளை பிடித்துக் கொண்டாள். ''நிபந்தனையை, ஒப்புக் கொண்டால் தான் ஆயிற்று, இல்லை என்றால் உன்னுடன், ஸ்டேஷனுக்கு வரமாட்டேன் என்று பொருள்படும் முறையில் தலையை ஆட்டினேன். புரிந்துக்கொண்ட கனகத்திற்கு மீண்டும் திகைப்பும் கலக்கமும், வளர்ந்தது.

''அத்தான் காலேசுக்குப் போகும் பக்கத்துவீட்டுப் பெண் கூட புறப்பட்டுவிட்டாளே....கடிகாரத்தை பார்த்தீர்களா........ வண்டி தவறிவிடுமே, புறப்படும் பொழுது விளையாடுகிறீர்களே'' என்று நேரடியாக வாயால் கூறத் துணியாத கனகம் காரணத் திரைகளில் சுட்டிக் காட்டினாள்.

வாயிலில் நின்றிருந்த வண்டிக்காரர் குரல் கொடுக்க, வேண்டா வெறுப்பாக எழுந்தேன். தோல்வி எனக்குத்தான் என்ற பூரிப்பில் கனகம் புன்சிரித்தாள். கதவை இழுத்துப் பூட்டி சாவியை என்னிடம் கொடுத்தாள். ஏறி உட்கார்ந்தோம், வண்டி புறப்பட்டது.

வண்டி புறப்படுவதற்கான ''முதல் அறிவிப்பு'' அறிவிக்கப்பட்டது. மறுவிநாடி பெண்கள் வண்டியில் உட்கார்ந்திருந்த கனகம் குழந்தையாகிவிட்டாள். கடந்த நிமிடத்தில் கூட, ''உடம்பை கவனித்துக் கொள்ளுங்கள். சாப்பிடாமல், தூங்காமல் கண்ட புத்தகங்களைப் படித்து வீணாக உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். விடுமுறை கிடைத்தால் ஒரு முறை வந்துச் செல்லுங்கள்'' என்று நிபந்தனை—அபிப்பிராயம்—யோசனையுமாக எண்ணத்தை கூட்டி, குழப்பி எதிர் காலப் பாதை வகுத்துக் கொடுத்தவள் குழந்தையைப் போல் அழுதுக் கொண்டிருந்தாள். பிரிவு, கனகத்தை அழும் பேதையாக்கி விட்டது. இம்மாதிரி, நடைபெறுவது முதல் முறையல்ல. அனுபவப்பட்டிருப்பதால்தான் வீட்டிலேயே நிபந்தனையை விதித்தேன்.

கனகத்திற்கு நேர் எதிராக உட்கார்ந்திருந்த பெண், என்னையும் அழும் கனகத்தையும் கண்டு புன்சிரிப்புடன் முகத்தை திருப்பிக் கொண்டது உடலில் புல்லரிப்பை உண்டாக்கியது. நேர் எதிராக உட்கார்ந்திருந்த பெண், கனகத்தைவிட பல ஆண்டுகள் சிறியவள். வைத்தியக் கல்லூரி, மாணவியாக இருக்கவேண்டும். அவள் கையிலும், மடியிலுமாக நெளிந்துக் கொண்டிருந்த ''நாடிக் குழாய்'' அதை தெளிவாக்கி உறுதி படுத்தியது.

நேர் எதிராக உட்கார்ந்திருந்த வைத்தியக் கல்லூரி மாணவி—திருமணத்தை முடித்துக் கொண்டு, மணமகளுடன் வந்திருக்கும் பெண்கள் பகுதி-சந்தைக் கடைகளைப் போல் காக்ஷி அளிக்கும் புகை வண்டி நிலையம்! இதற்கும் இடையில், அழும் மனைவி கனகம்! ஒன்றின் பின், ஒன்றாக எண்ணங்கள்

தோன்றி புல்லரிப்பை அதி கரிக்கச் செய்தது.

மீண்டும், எங்கள் பக்கம் வைத்திய கல்லூரி மாணவி முகத்தை திருப்பினுள். கனகம் வைத்திய கல்லூரி மாணவியை கவனித்தும், கவனிக்காமலும் அழுதுக் கொண்டிருந்தாள். நெருங்கிய நண்பர்கள் வந்து விட்டால் என்ன செய்வது என்று நெஞ்சு திகைத்தது. பாழும், வண்டி புறப்பட்டுத் தொலையக் கூடாதா என்று என்னை நொந்துக் கொண்டேன்.

பின் அறிவிப்பு, அறிவிக்கப் பட்டது. வண்டி அடுத்த விநடியில், புறப்பட்டுவிடப் போகிறேன் என்று துணைக் குரல் கொடுத்தது. கண்களை துடைத்துக் கொண்ட கனகம் ''உடம்பை ஜாக்கிரதையாக கவனித்துக் கொள்ளுங்கள்'' என்று உணர்ச்சித் துடிப்புடன் இதயத்தை தொடும்வண்ணம் கூறினுள். ''முகத்தை உள்ளுக்கு இழுத்துக்கொள். கண்களில் புகை, சிதறல்கள் விழுந்து விடப் போகின்றன'' என்று கூறிய வண்ணம் அவள் கையில் ஐந்து ரூபாய் நோட்டை கொடுத்தவாறு சிரித்தேன். இயந்திரத்தைப் போல் பெற்றுக் கொண்ட கனகத்தின் முகத்தில் மலர்ச்சியே இல்லை. முகத்தை, இயந்திரத்தைப் போல் இழுத்துக் கொண்டாள்.

ஸ்டேஷனை விட்டு வெளிவந்துக் கொண்டிருந்தேன். ''அத்தான் உடம்பை ஜாக்கிரதையாக கவனித்துக் கொள்ளுங்கள்'' என்று உணர்ச்சி துடிப்புடன் இதயத்தை தொடும்படி கூறியதை நினைத்துக் கொண்டேன். மீண்டும், எங்கு நோயாளியாகி விடப் போகிறேனே என்ற அச்சம் தான் கனகத்தை வற்புறுத்திக் கூறச் செய்திருக்க வேண்டும்.

கடந்த வருடம், இதே நாட்களில் என் உடலில் ஏற்பட்ட நோய் கனகத்தின் வாழ்க்கையில் பயங்கர திருப்பு முனையை உருவாக்கி விட்டது. சற்று அஜாக்கிரதையாகவும், ஓய்வில்லாமலும் கழித்தால் மீண்டும் அந்த பாழும் நோய் பிடித்துக்கொள்ளும் என்ற அச்ச நினைப்புதான் உடம்பை ஜாக்கிரதையாக கவனித்துக் கொள்ளுங்கள் என்று கனகத்தை வற்புறுத்தியிருக்க வேண்டும். புகை வண்டி நிலையத்தை விட்டு வெளிவந்து விட்டேன். கனகத்திடமிருந்தும், அத்தையின் கணவரிடமிருந்தும் நாளை, மறுதினம் அவசியம் இரண்டு கடிதங்கள் வரும்.

கதவைத் திறந்துக்கொண்டு, விட்டினுள் நுழைந்தேன். சற்று முன்பு தான், புகை வண்டி நிலையத்தில் மணி பார்த்தேன். எப்படியும், ஐந்து நிமிடங்களுக்கு மேல் கழிந்திருக்க வழியில்லை. பத்து நிமிடங்கள் கழிந்ததாக எண்ணிக் கொண்டாலும், மேசையின் மீதிருந்த கடிகாரம் பதினைந்து நிமிடங்கள் முன்னே செல்லுவதை ஆச்சரியத்துடன் கவனித்தேன்! கனகத்தின், வேலையாகத்தான் இருக்கும் என்று புன்சிரித்தேன். புறப்படும் பொழுது. ஏதாகிலும் காரணத்தை சிருஷ்டித்து காலத்தை வீணுக்குவேன். வண்டி தவருமல் இருப்பதற்காகத்தான், இருபது நிமிடங்களுக்கு மேல் திருப்பிவைத்திருக்கிருள். கடிகாரத்தை இருபது நிமிடங்களுக்கு பின்னுல் நகர்த்தினேன். ஒரு முறை கடிகாரத்தை, கவனித்து மேடையின் மீது வைத்துவிட்டு; காரியாலயத்திற்குச் சென்றேன். ஒரு மணி வரையில், ''இரட்டை முதலாளி''களுக்கு பயந்து, பயந்து தேயும் இயந்திரமாய் இயங்கினேன். வீட்டினுள் நுழைந்தேன். வாயிலில் நின்று வரவேற்க மனைவியில்லாத குறை, என் உள்ளத்தில் சலனத்தை ஏற்படச் செய்தது. பெருமூச்சுவிட்டுக் கொண்டே,

சமாதானமடைந்து விட்டேன். எல்லா நேரங்களிலும், புத்தகங்கள் ''உயிர் சிலையாய்'' இருக்க முடியாது என்பதை மனைவி பிரிந்த சில மணி நேரத்தில்; நான்காவது முறையாக உணருகிறேன்.

''நாளைக்கும், இருபத்து நாலு மணி நேரம் இருக்கிறது. புத்தகத்தை மூடித் தொலைத்து விட்டு சாப்பிட வாருங்களேன்'' சலிப்பும் கடுமையுமாய் சிரித்துக் கொண்டே கனகம் புத்தகத்தை பிடுங்க வருவாள். அந்தக் கவலை, இனி இரண்டு மூன்று மாதங்கள் கிடையாது என்று எண்ணிக் கொண்டே புத்தக அலமாரியைத் திறந்தேன். அருகில், கட்டியிருந்த பொட்டலத்தின் மீது பார்வை பதிந்தது. எதை மறந்து வைத்துவிட்டுப் போய்விட்டாள் கனகம்....வழி எல்லாம், வருத்தப்பட்டுக் கொண்டுச் செல்வாளே என்று பரபரப்புடன் பிரித்தேன். நான் எண்ணியதைப்போலவே பிறக்கப் போகும் குழந்தைக்காக ஓய்வு நேரங்களில் தைத்த சட்டையைத்தான் மறந்து விட்டுப் போயிருக்கிருள்.

பிறக்கப்போகும், குழந்தைக்காக கடந்த சில மாதங்களாகவே தன் கையாலேயே சட்டைகளை உருவாக்கிக் கொண்டிருந்தாள். நான் வருவதை அறிந்தால், எங்காவது தைத்தது தைத்தபடியே மறைத்துவிடுவாள். வம்புக்கிழுப்பேன்என்ற நினைப்புதான் அவளை அப்படி நடந்துக்கொள்ள தூண்டியிருக்க வேண்டும். சில நாட்களில், நானும் பார்த்தும் பார்க்காதவனைப் போல் நடித்து விடுவேன்.

ஒரு நாள், குழந்தைச் சட்டைகளைத் தைத்துக் கொண்டிருக்கும் பொழுது பின்னல் ஓசைப்படாமல் வந்து அவள் கைகளைப் பிடித்துக் கொண்டேன். ஊசி கையில், ஏறிவிட்டதாக அலறினுள். ''பிறக்கப் போவது ஆணு? பெண்ணு எந்த குழந்தைக்கு சட்டை?'' என்றேன் ''இரண்டுக்கும் தான்'' என்று குறுநகை புரிந்த வண்ணம் கைகளை விலக்கிக் கொண்டாள். ''இரண்டும் ஆணுய் இருந்துவிட்டால் என்ன செய்வாய்'' என்றேன். கனகம் கேட்டும், கேட்காதவளைப் போல் சமையல் அறையினுள் நுழைந்துவிட்டாள். சில வாரங்கள், அரைகுறையாய் முடித்து அங்கும் இங்குமாய் கிடக்கும் குழந்தைச் சட்டைகளை காண முடியவில்லை. ஆச்சரியமடைந்தேன்.

மழையை முன்னிட்டு, அரை மணி நேரம் காரியாலயத்தை முன்னே மூடிவிட்டனர். நேராக வீட்டுக்கு வந்த நான், மனைவி குழந்தை சட்டைகள் தைப்பதில் ஈடுபட்டிருந்ததை கவனித்தேன். ஓசைப்படாமல்நெருங்கி

விட்டேன். கழுத்தோரத்தை, தைத்து முடித்ததும் எதையோ நினைத்து கனகம் தனக்குத்தானே சிரித்துக் கொண்டாள். வெடுக்கென்று, சட்டையை பிடுங்கி ''எதற்கு சிரித்தாய்?'' என்று அடிக்க நெருங்குபவனைப்போல் கையை ஓங்கினேன். பல முறை கேட்டு, அலுத்தேன். தொடர்ந்து, இரண்டு நாட்கள் கேட்டுப் பார்த்தேன். ''எதற்காக சிரித்தேன் என்று எனக்கே புரியவில்லை அத்தான்'' என்று கூறி திகைக்கவைத்தாள். மனிதர்களுக்கு இருமனம் உள்ளதாக சொல்லுகிறார்களே. அதில், எந்த மனம் கனவை நினைவாக்கி பூரண கர்ப்பிணியான மனைவியை தனக்குத்தானே சிரிக்க வைத்ததோ?

இப்படி, இதை மறந்து வைத்துவிட்டாள். பெட்டியில், இடமில்லாமலா போயிருக்கும்? கிழிந்த பழைய புடவைகளுக்கெல்லாம், இடம் இருந்த பொழுது இதற்குத்தானா இடமில்லாமல் போய்விடும்? மறந்துத்தான், வைத்து விட்டுப் போயிருப்பாள். பெட்டியை திறந்து பார்க்கும்பொழுது கைத்தவறி வைத்து விட்டதை எண்ணி நொந்துக் கொள்வாள். நாளைக்கே, பிறக்கப் போகும் குழந்தைக்குப பரிசு என்று அனுப்பி வைத்து அவளை திகைக்க வைக்க வேண்டும்!

புத்தகத்தை திறந்தேன். கனகத்தின் பெயர் கொண்டவளாகவே அந்த கதாநாயகி இருந்தாள். கனகத்தை குறித்து நினைவுச் சிதறல்கள் சிதறிப் பரவின.

திருமணமான புதிது. சில மாதங்கள் கூட ஆகியிருக்காது என் வாழ்வையே குடித்துவிடும் கடும் இருமல் என்னை தொத்திக் கொண்டது. விளக்கை ஏற்றிவிட்டு கனகம் வாயிலுக்கு வந்து நின்று விடுவாள் போலிருக்கிறது. சில நாட்களில், நான் வர நேரமாகிவிட்டால் எதிர்பார்த்து அலுத்து சலித்தபடியே தூங்கிவிடுவாள் போலிருக்கிறது. உலுக்கி, எழுப்ப வேண்டி நேரும். இப்படித்தான் ஒரு நாள் அன்றும் தாமதமாய் வந்தேன். ஆனால் கனகம் அன்று தூங்கிவிடவில்லை. வாயிலை நெருங்கியவுடன், ''அத்தான் ஏன் ஒரு மாதிரியாய் இருக்கிறீர்கள்....கலகலப்பாகவே இல்லையே....'' என்றாள். 'எப்படி இருக்கிறேன்? சோர்வு' என்று என்னையும் தேற்றி, அவளையும் தேற்றினேன். என், தேறுதல் அவளுக்கு பிடிபடவில்லை. ''உடம்பு சரியில்லையா அடிக்கடி இருமுகிறீர்களே''

என்று என்னை அரை நோயாளியாக்கிவிட்டாள்.

சோர்வு—லேசான இருமல்-தொடர்ந்த நாட்கள்—சலனமுற்ற மனைவியின் உள்ளம் இத்தனையையும் கூட்டி குழைத்துக்கொண்டு ஓடிய காலத்திற்கிடையில், நான் ஒய்வு பெற்று வைத்தியம் பெறும் அளவுக்கு நோயாளியாகிவிட்டேன். சதா அழும் மனைவி மீது, ஆத்திரம் தான் அதிகரித்தது. அடிக்கடி எரிந்து விழுந்தேன்.

நோயாளிக் கணவன்—புதுக் குடித்தனம்—எழுபது ரூபாய் சம்பளம், இளம் பெண் கனகத்தால் எவ்வளவு நாட்களுக்கு சமாளிக்க முடியும்? தாய் வீட்டிற்கு அழைத்துச் சென்றுவிட்டாள். எனக்கு நெருங்கிய உறவினர்கள் இல்லாததால், மனைவி வீட்டார் கடமை, அவர்கள் பங்கு என்ற அளவில் எதையோ உதவினர். பொறுப்பு—உரிமை இரண்டும் ஒரு மஞ்சள் கயிற்ருேடு கனகத்தை என் மனைவியாக உலவச் செய்தது. தனது நகைகளை, இழந்ததற்காக கனகம் ஒரு நாளும் வருந்தியதில்லை. என் உடல் தேருத நிலைதான் நினைத்து, எந்த நேரம் வருந்திஞள். அவள் கண்களில் நீர்! கலங்கிஞள்! எப்படிக் கோபம் வருகிறது என்று எனக்கே புரியவில்லை!

திடீர் என ஒருநாள், "இந்த வண்டிக்கே புறப்பட்டாகவேண்டும். ஒரு விஞடிகூட இந்த வீட்டில் இருக்கமாட்டேன்" என்று பிடிவாதத்துடன் விசித்து, அழுதாள் கனகம். "என்ன கனகம்? நடந்தது என்ன? ஏன் அழுகிருய்?" பல முறை பல விதத்தில் கேட்டுப் பார்த்தேன், அழுகைதான் அதிகரித்தது. பதில், கிடைக்கவில்லை. புறப்பட்டுத்தான் ஆக வேண்டும் என்று நிமிடத்திற்கொரு முறை வற்புறுத்துகிருளே தவிர நடந்த நிகழ்ச்சியை உணர்த்தவில்லை.

இளம் கர்ப்பிணியான ஒரு பெண்—அதிலும், தனது நோயாளிக் கணவனுடன் முதல் முறையாக தாய் வீட்டுக்கு வந்திருப்பவளை.... தாய்வீட்டை விட்டு குமுறி அழுது வலிய வெளியேறு மளவுக்கு அவள் உள்ளத்தை யார் சிதைத்திருப்பார்கள்? பலவாறு எண்ணங்கள் ஒழுங்கு, நியதியில்லாமல் தொடர்ந்தன. பெட்டி, படுக்கைகளை எடுத்து வைப்பதில் உற்சாகமாய் இருந்தாள். மனம் சற்று ஆறுதல் அடைந்தால். தானே கூறுகிருள் என்று நானே என்னை சமாதானப் படுத்திக் கொண்டேன். புறப்படுங்கள், என்று கூறிய பொழுது தயங்காமல் புறப்பட்டு விட்டேன். புதிர் விடிவு பெற்றது. என் நோய் மிக பயங்கரமானது. பிறருக்கும் எளிதில் பிடித்துவிடும். மற்றும், ஏதாகிலும் கூறி மனச் சரிவை ஏற்படுத்தி இருக்க வேண்டும் என்று நான் எண்ணியதைப் போலவே கனகத்தின் குமுறல் விளக்கியது.

ஊருக்கு வந்துவிட்டோம். எத்தனையோ கடிதங்கள், அடுத்து, அடுத்து தாய் வீட்டிலிருந்து வந்தன. கனகம் திருப்பி அனுப்பிக் கொண்டே இருந்தாள். ஒவ்வொரு முறை கடிதம் வந்த பொழுதும். "வயிற்றில் குழந்தையை வைத்துக்கொண்டு வீட்டுப் பெண் குமுறி அழுது வெளி ஏறி இருக்கிறேன். என் வயிற்று எரிச்சல் வீண் போகவே போகாது" என்று தனது நொந்த உள்ளத்திற்கு வார்த்தைகளால் மேல்மூச்சு பூசுவாள்.

"என்ன கனகம்.... அவர்கள் யார்.... நீ யார்.... ஆற்ருது அழுது திட்டும் பழக்கத்தையே கைவிட்டு விட வேண்டும்" என்று பொதுப்படையாக சமாதானப்படுத்த முயலுவேன். நான் தாய்வீட்டுப் பக்கம் இருப்

தமிழ் மக்களுக்கு
விஜயாவின் விஜய வருஷத்திய
பொங்கற் பரிசு
சந்திரஹாரம்
25 லக்ஷ ரூபாய் செலவில்
மூன்று வருடங்களாகத்
தயாரித்த மகத்தான
திரைப் படம்..
தயாரிப்பு
நாகிரெட்டி & சக்ரபாணி

சிரமமின்றி அழுக்கை அகற்றும் வெண்மை தரும்

655 பார் சோப்

விலை மலிவு உயர்ந்த சலவை எல்லா கடைகளிலும் கிடைக்கும்

தமிழர் இல்லங்களை அலங்கரிக்க உண்மையான தத்ரூப போட்டோக்கள் வர்ணங்களுடன்.

★

ராஜாஜி, ம பொ சி, நாமக்கல் கவிஞர், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பாரதி, வ வு சி.

★

12×10 சைஸ் மௌண்ட்டுடன் ரூ. 6—0—0

தபால் சிலவு இனாம்.

ரெயின்போ கன்சர்ன்ஸ்

2, ஜானகிராம் பிள்ளை தெரு, ப. மாம்பலம், சென்னை-17.

For name boards and Car number plates in all languages.

CONSULT :

BEAUTY PLASTICS

13, JAGADEESWARA IYER ST., MADRAS-17.

பதாக, அன்று பூராவும் முகம் கொடுத்தே பேச மாட்டாள்.

தாய் வீட்டு உறவு இழந்த பெண்கள், ''இலட்சிய வாதிகளாகத்தான்'' இருப்பார்கள். தாய் வீட்டுத் துண்டிப்பால், ஏற்பட்ட பிடிவாதம் அவர்களை யறியாமல் இலட்சியவாதிகளாக்கி விடுகிறது. இந்த நிலையில் கனகமும் இயங்கினாள். எதற்கெடுத்தாலும் கண்ணீர் வடிப்பவள், இப்பொழுது வடிப்பதே யில்லை. அவள் இலட்சிய உள்ளத்தை ஒரே நிகழ்ச்சியின் மூலம் புரிந்துக்கொண்டேன்.

பத்து ஆண்டுகளாய், தொடர்ந்து கட்டி வந்த இன்சூரன்ஸ் பாலிசி மேல் அதே காரியாலயத்தினிடமிருந்து முந்நூறு ரூபாய் கடன் வாங்கும்படி கூறினாள். கடன் வாங்கும் சவுகரியம் இருக்கிறது, என்பது எனக்கும் தெரியும். அதை நல்ல சமயத்தில், நினைவு படுத்தி ''இலட்சிய மனைவியாய்'' காட்சி அளிக்கும் கனகத்தை எவ்விதத்தில் பாராட்டுவது என்றே எனக்கு விளங்கவில்லை. அவள் யோசனை மறுவாரமே, வெற்றி பெற்றது. அந்த பணத்தைக் கொண்டு மீண்டும் வைத்தியம் பெற்றேன். துரிதமாக தேர்வடைந்தேன்.

புதுக் குடித்தனம் — எனக்கு நோய் என்ற புயலுக்குப் பின் மறு திருப்பு முனையை அடைந்தது. இதற்கிடையில் மனைவியின் தங்கைகள் இருவருக்கும் திருமணம் நடந்தது. வீட்டுப் பெண் என்ற முறையில், வந்த புடவைகள் - பணம் இவைகளையும் திருப்பி விட்டாள். பிடிவாதம் பிடிப்பது ஓரளவுக்குத்தான் நல்லது என்பதை தெளிவாக உணருவேன். தாய் வீட்டு விஷயத்தில், நீங்கள் தலையிட கூடாது. என்று அவள் விதித்திருந்த நிபந்தனையை எண்ணி பேசாமல் இருந்து விடுவேன்.

என்றாவது ஒருநாள், பெற்றோர்களே புறப்பட்டு வந்தால் அவள் பிடிவாதம் தளரத்தான் போகிறது என்று சமாதானமடைந்தேன்.

பிரசவ நாட்கள் நெருங்கிவிட்டன. இன்று இரண்டாவது பிரசவத்திற்கு அழைத்துச் சென்றிருக்கும், அத்தை வீட்டார் கடந்த பிரசவத்தின் போது வசதி குறைந்தவர்களாக இருந்தார்கள். படித்துக் கொண்டிருந்த இரண்டு பையன்களும் இன்று வேலையில் சேர்ந்திருக்கின்றனர். சற்று அமைதி ஏற்பட்டதால், பிரசவத்தை கவனித்துக் கொள்ளுகிறோம், மனைவியை அனுப்பி வை என்று பல முறை கடிதம் எழுதினர். அவர்கள் விருப்பத்தை, ஏமாற்றமடையச் செய்ய உள்ளம் விரும்பவில்லை. மனைவியிடம் கூறினேன். உங்கள் உறவினர்கள்தான், எனக்கு தாய் தந்தையர்கள் என்று கூறி என்னை பூரிப்படையச் செய்தாள். பெண் இருந்து, செய்துக் கொள்ள வேண்டிய உதவிகளை எனது மனைவி பெண்ணுகச் சென்று ஏற்றுக் கொண்டு அவர்கள் மனக்குறையையும் நிறைவேற்றுகிறாள்.

கடந்த பிரசவத்தின் போது, கனகம் பிரசவித்து நடமாடும் வரையில் என்னால் மனிதனாகவே இயங்க முடியவில்லை. தாய்வீட்டிற்கு, பிரசவ நாட்கள் நெருங்கி விட்டதை தெரிவிக்கவே கூடாது என்று அவள் பிடித்த பிடிவாதம்; நேராதது நேர்ந்துவிட்டால் என்ன செய்வது என்ற எண்ணம் என்னை குழப்பமடையச் செய்தது. குழந்தை இறந்தே பிறந்தது. இறந்த, குழந்தைய நினைத்து இரண்டு நாட்கள் ஓயாமல் அழுதாள். என்னைக் கண்டால், அவள் அழுகை குறைந்துவிடும்! ஆஸ்பத்திரி என்று பாராமல், வம்புக்கிழுப்பேனே.... அல்லது மனதை புண்படுத்திக் கொள்

''பொங்கல் இனும்தானேப்பா இரு....வாங்கிண்டு போவே''

''இனுமுமில்லே ஒன்னுமில்லிங்க, பொங்கல் பார்சல் ஒன்னுதான் கேட்டேனுங்க''

வேன் என்ற எண்ணமோ தெரியவில்லை.

மாலை ஏழு மணிக்குத்தான், தொழில் நிலையம் மூடப்படும். பின்னர்தான் ஓய்வு. நினைத்த பொழுது விடுமுறை கேட்டால், வேலையை இழக்க வேண்டியதுதான்! தொழிலாளிகளிடை போட்டி மனப்பான்மை அதிகம். நோயாளியாய் இருந்த பொழுது பல மாதங்கள் தொடர்ந்து விடுமுறை எடுத்த என்னை வேலையில் வைத்துக் கொண்டிருப்பது வியப்பாக இருக்கிறது. பழகிய அனுபவம் வாய்ந்த ''உழைப்பாளி'' என்ற ஒரே காரணமாகத்தான் இருக்க முடியும்.

தொழில் நிலையம் மூடிய பின்னர், ஏழு மணிக்கு மேல் ஆண்களை பிரசவ வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்படுவதில்லை. இதை அறிந்து காரியாலயத்தில் அனுமதி பெற்று சில நாட்கள் குறித்த நேரத்தில் பார்த்துவிட்டு வந்தேன்: பெரிய முதலாளி, ஊரிலிருந்து வந்துவிட்டபடியால், அந்த வாய்ப்பையும் இழந்துவிட்டேன். பிரசவித்து, குழந்தையை பறி கொடுத்துக் கிடக்கும் மனைவியைத் தொடர்ந்து ஐந்து நாள், காண முடியவில்லை. உள்ளூரில் இருந்தபடியே எனது நிலையை விளக்கி கண்ணீர் வடித்து கடிதம் எழுதினேன். கனகமும், நாம் வடிக்கும் கண்ணீர் கண்ணீராய் இருக்க முடியாது. ''இரத்தக் கண்ணீராய்தான்'' இருக்கும் என்று குமுறலை எழுத்தாக்கி பதில் எழுதியிருந்தாள். அன்றைய நிகழ்ச்சிகள் இன்று நினைத்தாலும் இதயத்தை விம்ம வைக்கிறது.

என்வே, இந்த முறையும் கடந்த பிரசவத்தின் போது நேர்ந்த நிலை ஏற்பட்டே தீருமா என்று கலங்கிக் கொண்டிருக்கும் பொழுது, அத்தை வீட்டார் கனகத்தை பிரசவத்துக்கு அனுப்பி வைக்கும்படி எழுதிய கடிதம் வந்தது. ஆறுதலடைந்தேன். கனகம் சேலத்திற்கு போய்ச் சேர்ந்து இரண்டு மணியாகியிருக்கும் என்று நினைத்தேன். மறுபடியும், கடிகாரத்தைக் கவனித்தேன். 8-50 ஆகியிருந்தது. இன்னும் ஒரு மணி நேரத்திற்குப் பிறகு சாப்பாடு கிடைக்கும் என்ற முடிவுக்கு வந்தேன். கனகம் புறப்படும் முன்பு, முன் நாள் நடந்த நிகழ்ச்சிகள் நினைவு அலையாக மாறிவிட்டது.

''அத்தான்! அத்தான்!!'' என்று கூவி அழைத்தவள் இடக்கையை புடவையில் மறைத்துக் கொண்டே பரபரப்புடன் ஓடி

வந்தாள். கனகத்தின் அழைப்பால், தூக்கம் கலைந்தது. பரபரப்புடன், கையை புடவையில் மறைத்து வருவதை அறிந்து திடுக்கிட்டு எழுந்தேன் ''என்ன? என்ன?'' என்று நானும் பரபரப்படைந்தேன். கடந்த பிரசவத்திற்கு சில நாட்களுக்கு முன்பு கூட இப்படித்தான் ஏதோ சமையல் வேலை செய்யும் பொழுது கை விரலை நறுக்கிக் கொண்டாள். அப்பொழுது இம்மாதிரிதான் புடவையில் கையை மறைத்து வைத்துக் கொண்டு திகைக்க வைத்தாள். சில நிமிடங்களுக்கு மேல், என்னல் பொறுமையாய் இருக்க முடியவில்லை. வேகமாய் நடந்து எட்டிப் பிடித்தேன். கனகம் எதிர்பாராத நேரத்தில், புடவையில் மறைத்திருந்த நறுக்கிக் கொண்ட விரலை வெடுக்கென்று பிடுங்கி சப்பிய வண்ணம்; குழந்தையைப் போல் ஓடி என்னை ஏமாற்றமடையச் செய்தாள்! அவள் குறும்புச் செய்கை என்னையும் அறியாமல் சிரிப்பை உண்டாக்கிவிட்டது. ஓடிய வேகத்தில் சுவற்றில், இடித்துக் கொள்ளவிருந்தாள். ''பார்த்து நட'' என்று சிரிப்பையும் ஏமாற்றத்தையும் மறைக்க கர்ஜித்தேன்.

அன்று போல் இன்றும் கை விரலை நறுக்கிக் கொண்டு வந்திருப்பாள் என்று எண்ணி ''நீ குழந்தைத்தனமாய் நடந்துக் கொள்ளுவதால் நான் டாக்டராக மாறமாட்டேன்'' என்று உறுதியாய் கூறினேன். கூறியதைப் பொருட்படுத்தாது ''என் கையில் இருக்கிறதை சொல்லிவிடுங்களேன் பார்க்கலாம் ..'' என்ருள் மிடுக்காக பின்னல் நகர்ந்துக் கொண்டே. மறு வினடி கை விரல்களில், காயம் பட்டிருப்பவளைப் போல் முகத்தை வைத்துக் கொண்டு என் உணர்ச்சிகளைத் துடிக்கச் செய்தாள். நான் எங்கு எட்டிப் பிடித்து விடுவேனே என்று மேலும், மேலும் பின்னுக்கு நகர்ந்து கொண்டிருந்தாள்.

நானும் விட்டுக் கொடுக்காமல், இந்த முறை ''இரண்டு விரல்களை வெட்டிக் கொண்டு வந்திருப்பாய்'' என்றேன். ''இல்லவே இல்லை....பந்தயம் என்ன கட்டுகிறீர்கள்'' என்ருள் முகத்தை பெருமையாய் வைத்துக்கொண்டே. இதற்குள் தோல்வியை, ஒத்துக் கொள்ள விருப்பமில்லாமல் ''எதை வேண்டுமானலும் நிர்ணயித்துக் கொள்'' என்றேன் தைரியமாக. பிறகுதான், அப்படி ஏன் கூறினேம் என்று வருந்தினேன். பந்தயத்தை நினைவு படுத்தும் பொழுதே அவளுக்குத்தானே வெற்றியாய் இருக்க முடியும்? ஒரு வாரம் பூராவும், புத்தகங்களைத் தொடாமல் நாள் பூராவும் அரட்டை அடிக்கும்படி கூறி விட்டால் என்ன செய்வது என்று எழுந்த எண்ணப் போராட்டம் என்னைத் திகைக்க வைத்தது. என்னை சமாளித்துக் கொண்டு, ''உன் வயிற்றில் இருக்கும் குழந்தை எதுவானலும் சரி பெயர் வைக்கும் உரிமை (Copy Right) எல்லாம் உனக்குத்தான்'' என்றேன் சிரித்துக் கொண்டே. கனகத்தின் முகம் நாணத்தால் சிவந்து விட்டது. அவள் மறைத்துக் கொண்டிருந்த வலக்கை, புடவைத் தலைப்பிலிருந்து நழுவியது. வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்த, நான் எட்டி பிடித்துக் கொண்டேன். ஐந்து விரல்களின், நகக் கண்களும் இரத்தத்தைப்போல் சிவந்து காட்சி அளித்தன. இரவு, மருதாணி இலையை அரைத்து கை விரல்களுக்கு வைத்திருக்க வேண்டும் என்பதை சில வினடி மகிழ்ச்சி கலந்த திகைப்புக்குப் பின்பு தான் உணர்ந்தேன். அதற்குள், பால்காரன் வந்து விடவே வெற்றிப் பார்வை பார்த்துக் கொண்டே மிடுக்காக நகர்ந்தாள் கனகம். இவ்வளவு சிறிய நிகழ்ச்சியில், ஏற்பட்ட

''ஏமாற்றம்-தோல்வி'' என்னை பெருமூச்சுவிடச் செய்தது.

மாலையில், அலுத்து களைத்து வரும் என்னை பால் டம்ளரும் கையுமாகத்தான் கனகம் வர வேற்பாள். நான் வாயிலில் நுழைந்ததும், நுழையாதது மாய் டம்ளரை வாங்கி வேக மாகப் பாலை குடித்துக்கொண் டே பேசுவேன். பால் டம்ளரும் கையுமாக கனகம் என்னை எதிர் நோக்கி நின்றுக் கொண்டிருந் தாள். வேகமாக நுழைந்த நான், பால் டம்ளரை உதட்டரு கில் கொண்டு சென்றேன், ''அத் தான்'' என்று கனகம் அழைத் ததை உணர்ந்தும் ஏன் என்று கேட்காமல் விழுங்கினேன். என் முக மாறுதலைக் கண்டு, முதலில் கனகம் பயந்து விட் டாள். நான் குடித்தது பாலல்ல.... குளிர்ந்தநீர்! எனது ஏமாற்றத்தை. சிரிப்பால் வெளிப்படுத்தினேன். சிரிப் பைக் கண்டு, பெருமூச்சுவிட்ட கனகம் சிரித்துக் கொண்டே பேசினுள். ''அத்தான்....என் னைத் தேடி ஒரு அரசாங்க உத் தியோகஸ்தர் வந்துவிட்டார்....'' என்ருள்....

''யார் வீட்டில் எவ்வளவு திருடினுய்? என் பங்கு எவ் வளவு?'' என்றேன் சட்டையை கழற்றிக் கொண்டே....

''அத்தான்! இன்று என்னைத் தேடிக் கொண்டு மிட் ஒய்வ் (Mid-wife) வந்திருந்தார்கள்.'' என்ருள். பாலுக்கு, பதிலாக குளிர்ந்த நீரைக் கொடுத்து ஏமாற்றியதை மறைக்க ஏதோ சமாதானம் கூறப் போகிருள் என்று உற்சாகமில்லாமல் கேட்டுக் கொண்டே சட்டையை கழட்டினேன். பாவம் எனக் காக இரண்டு மாதங்களாய் தேடுகிருர்களாம். இன்று வந்த வர் புதிய மிட் ஒய்வ் அத்தான். மாற்றலாகி இரண்டு மாதங் கள் தான் ஆகிறதாம். இரண்டு மணி நேரம் உட்கார்ந்து யோசனை கூறிவிட்டு போன வர்களை எப்படி அத்தான் சும்மா அனுப்புவது? அவர் களும், உங்களைப்போல் காப்பி சாப்பிடுவதில்லையாம். உங்க ளுக்கு வைத்திருந்த பாலை அவர்களுக்கு கொடுத்து விட் டேன். பால்காரன் அதற்குள் வந்து விடுவான் என்று எதிர் பார்த்தேன். வந்து தொலைய வில்லை'' என்று வருத்தப்பட்டு என்னை சமாதானப்படுத்தினுள்.

''முதலிலேயே சொல்வதற் கென்ன?'' என்று கனகத்தின் தலையில் மொட்டினேன். ''நான் கூப்பிட்டும் கூட, திரும்பிப் பார்க்காமல் சாப்பிட ஆரம் பித்து விட்டீர்களே....'' என்று தலையை தேய்த்துக் கொண்டு முகத்தை மிடுக்காக வைத்துக் கொண்டு புன்சிரித்த வண்ணம் கனகம் சமையல் அறைப்பகு திப்புறம் சென்று விட்டாள். புறப்படும் முன்தினம் காலையி லும் மாலையிலும் நடந்த நிகழ்ச்சிகள் அலைமோதி ஓய்ந்த பின்னர் கடிகாரத்தை கவனித் தேன். 9-40 ஆகியிருந்தது.

கனகத்திற்கு, பிரசவ நாட் கள் நெருங்கிவிட்டன. பிரசவ நாள் இன்று தான் இருக்க வேண்டும். இதை எண்ணும் பொழுது, போராட்டம் அதி கரித்தது. இந்த முறையும் குழந்தை, இறந்துப் பிறந்தால் கனகம் மிகவும் இடிந்துப் போய்விடுவாள். அத்தையின் கணவர் தான், முதலில் கடிதம் எழுதுவார்.

நான் இரண்டு கடிதங்கள் வரும் என்று, எதிர்பார்க்கவே இல்லை. முதலில் பிரித்த கடி தம், கனகத்துடையதாக இருந்துவிட்டது. முகத்தில், மலர்ச்சி ஏற்பட்டது.

''பேரன்புமிக்க அசோகனின் தந்தைக்கு....''

என்று கடிதத்தை துவக்கி, அதன் மீது குறும்புத்தனமாக மெல்லிய கோடு இழுத்திருந்

தாள். சிரித்துக் கொண்டே, தொடர்ந்துப் படித்தேன்.

அன்புள்ள அத்தான்....

நமது குடும்ப அரசியலில், உங்கள் கட்சி வலுத்துவிட்டது. இனி நான் மைனரிடிதான். மைனரிடியாகவே என்றும் இருக்கமாட்டேன். எவ்வளவு எளிதில் முதல் பரிசை அடைந்து விட்டீர்கள்! அப்பாவைப் போல் கண்கள்—அவன் பார்ப்பதற்கும் இவன் பார்ப்பதற்கும் வித்தியாசமே இல்லை என்று என்னைப் பற்றி ஒரு வார்த்தைக்கூட கூறாமல் உங்களையே பெருமையாக கூறுகிறார்கள் அத்தை. அத்தை கூறும் பொழுது, பொறாமைதான் ஏற்படுகிறது. மறு வினாடி அசோகனைக் கண்டதும் உங்கள் மீது ஏற்பட்ட பொறாமை, எப்படி மறைந்து விடுகிறது என்று எனக்கே புரியவில்லை! பெயர் வைக்கும் உரிமை எனக்கு காப்பிரைட்டாக கொடுத்ததை மறந்திருக்க மாட்டீர்கள். இதயம் நிறைந்த அன்பு வணக்கங்கள்.

அசோகனின் தாய்,
கனகம்.

கடிதத்தைப் படித்து முடித்தேன். குழந்தையைப் பார்க்க ஆவல் வளர்ந்தது. பொருளாதாரத் தொல்லையை, எப்படியும் சமாளித்து விடுவேன். விடுமுறை கிடைப்பதுதான் வெற்றி பெற முடியாத முயற்சியாய் இருக்கிறதே.

இரண்டு மாதங்களை கழித்து விட்டேன். இரண்டு மாதங்கள் எப்பொழுது முடியும் என்று, எதிர்பார்த்தேன். அத்தையின் கணவருக்கு கடிதம் எழுதும் முன்னர், கனகத்துக்கு கடிதம் எழுதினேன். அவர்கள் குடும்ப நிலையில், அளவுக்கு மீறி உதவி விட்டார்கள். மேலும் தொல்லைக் கொடுப்பது நாகரீகமல்ல புறப்பட்டு வந்துவிடு அத்தையின் கணவருக்கும் அனுப்பி வைக்கும்படி கடிதம் எழுதுகிறேன். நீயும், புறப்படத்தயாராயிரு'' என்று கனகத்திற்கு கடிதம் எழுதினேன். எதிர் பார்த்ததைப் போலவே மறு தினம் பதில் கிடைத்தது.

அன்புள்ள அத்தான்,

இரண்டு மாதம் எப்பொழுது முடியும் என்று, வினாடிக் கணக்குடன் எதிர்பார்த்துக்கொண்டு இருந்திருப்பீர்கள் போலிருக்கிறது. இரண்டு வாரங்களாகவே, எனக்கும் புறப்படும் உத்தேசமுண்டு. உங்கள் கடிதம், வந்தபின்புதான் புறப்படும் உத்தேசத்தை அத்தையிடம் தெரிவித்தேன். அத்தைக்கும், அத்தையின் கணவருக்கும் கோபம் வந்துவிட்டது. சண்டைக்கே நின்றுவிட்டார்கள். இவ்வளவு தூரம் சிரமப்பட்டு, குழந்தையின் சிரித்த முகத்தை பார்க்காமல் அனுப்புவதா? நாங்கள் தான், முதன் முதலில் குழந்தையின் சிரித்த முகத்தைப் பார்க்கப் போகிறோம். பின்னர் தான், ஊருக்குப் போக முடியும் என்று உறுதியாய் கூறிவிட்டனர்.

அவர்கள் குழந்தை சிரித்த பின்புதான், என்னை அனுப்புவார்கள். குழந்தைகள் பெரும்பாலும் இரண்டாம் மாத முடிவதிலும், மூன்றும் மாத முற்பகுதியிலும் தான் சிரிக்கத் துவங்குவது நியதி. அதற்குள் முடிந்தால் வாருங்கள். என் குழந்தையை சிரித்த முகத்துடன்தான் உங்களிடம் அறிமுகப்படுத்தி வைக்கப் போகிறேன்.

தொடர்ந்து அன்பு வணக்கங்கள் எழுதி கடிதத்தை முடித்திருந்தாள். பல விதத்தில் மேல் பூச்சு இழந்திருக்கும், எங்கள் வாழ்க்கையை உயிரோயிட்டமுள்ளதாக ஆக்கப் போவது அசோகனின் சிரித்த முகம் என்ற எண்ணம் உள்ளத்தையும், உதட்டையும் மலர்ச்சியடையச் செய்தது.

தங்கமான மாப்பிள்ளை....தங்கள் நிலையறிந்து நடக்கிறார், என்று நளினியின் பெற்றோர் பெருமைப்பட்டனர்!

'உங்கள் சிரிக்கும் முகத்தை ஒரு தடவை பார்க்கவேண்டும் போல் இருக்கிறது....' என்று தன் பெண்மை இதயத்தைக் கடிதத்தில் பெயர்த்து வைத்தாள் நளினி.

ஆனால்....கண்ணன் எரிமலையாகக் குமுறினான்....ஏங்கினான்....தவித்தான்....!

ஏன் ?

போலிக்கௌரவம்

கௌசிகன்

கண்ணன் கையிலே ஆபீஸ் பைல்களின் சுமையுடன் வீட்டை நோக்கி நடந்துகொண்டிருந்தான். உள்ளத்திலே ஏறி இருந்த எண்ணத்தின் சுமையும் சோர்வும் அவன் நடையைத் தெம்பிழக்கச் செய்திருந்தன. கதவைத் திறந்த கண்ணனின் விழிகள் ஆதங்கத்தோடு ஒரு நிமிஷம் நிலைத்து நின்றது. உற்சாகம் குன்றிய அவன் உள்ளத்தைப் போலவே வீடும் ஒளி இழந்து கிடந்தது. உல்லாசப் போதை ஏற்றும் அந்த மல்லிகை மணம் இல்லை; சிந்தையைக் கிறுக்க வைக்கும் அந்தச் சிங்காரச் சிரிப்பில்லை; கைவளை குலுங்க அவன் முன் வந்து நிற்க அவள்—அவன் மனைவி அங்கு இல்லை. வெறுமை அப்பிக்கிடந்த அந்த அறையில் விசையை அழுத்தி விளக்கை ஏற்றினான். அந்த மின்சார விளக்குகூட அழுது வடிந்தது. நின்ற இடத்திலிருந்த படியே பைல்களை மேஜை மீது வீசி எறிந்து விட்டு ஈசிசேரில் விழுந்த அவன் பார்வை மனைவி நளினியின் போட்டோவின் மீது படிந்தது. நெஞ்சிலே தேக்கி இருந்த நினைவை எல்லாம் இழுத்துப் பெருமூச்சாக்கி 'இன்னும் இதுமாதிரி எத்தனை நாளோ' என்ற நினைப்பிலே அவனுக்கு ஆத்திரம் தான் வந்தது. பெண்ணின் கவனிப்பு இல்லாமல் அந்த அறையில் எல்லாமே தாறு மாறாகக் கிடந்தன. அறையைச் சுற்றித் தன் பார்வையை ஓட்டிய கண்ணன் வாசல்படி மூலையிலே பளிச்சிட்டுக் கிடக்கும் கடிதத்தைக் கண்டதும் அவன் உடலிலே ஒரு துடிப்பு ஏற்பட்டது. அது அவள் கடிதந்தான் என்பதை நினைத்தபோது அவன் நெஞ்சு வேகமாக அடித்துக் கொண்டது. பரபரப்புடன் அதை எடுத்து உறையைக் கிழித்துப் படித்தான். சோர்வும் தனிமையின் வேதனையும் கோலமிட்டிருந்த முகத்திலே குதூகலம் குறுகுறுக்க ஆரம்பித்தது. அது அவன் அருமை மனைவி நளினி எழுதிய கடிதந்தான். கடிதத்தைப் படித்து விட்டு ஈஸிசேரில் சாய்ந்தபடி கண்ணை மூடிக் கொண்டு சிறிது நேரம் உட்கார்ந்திருந்தான். அவன் உதட்டில் சிரிப்பு கண்ணுமூச்சியாடிக் கொண்டிருந்தது. சற்று நேரத்துக்கு முன் சகலத்திலும்

வெறுப்பும் ஆத்திரமும் கொண்டு வேதனைப்பட்ட அந்தக் கண்ணனிடம் இத்தகைய மாறுதலை உண்டாக்கியது அந்தக் கடிதந்தான். மறுபடி கடிதத்தின் கடைசி பாகத்தைப் படித்தான்.

''இப்படி என்னை நீங்கள் மறந்து விடுவீர்கள் என்று நான் நினைக்கவே இல்லை. உங்களை—உங்கள் சிரிக்கும் முகத்தை ஒரு தடவை பார்க்க வேண்டும் போலிருக்கிறது. என் ஆசையை பூர்த்தி செய்ய என்னைப் பார்க்க ஒரு தடவை வந்து விட்டுப் போங்கள். வருவீர்களா? வரத்தான் வேண்டும். உங்களை வரவேற்க நான் வாசல் படியிலேயே காத்துக் கிடப்பேன்.''

ஒரு தடவையல்ல பல தடவையும் அந்தக் கடிதத்தைப் படித்தான். அவன் பூரித்த முகம் வரவரப் போலிவிழந்து கொண்டு வந்தது. கடிதத்தைப் பிரித்த படியே மேஜை மீது போட்டு விட்டு நெற்றியைத் தடவி சிந்தனைக்கு உயிர் கொடுக்க ஆரம்பித்தான்.

* * *

கண்ணன் நளினியை மணந்து கொண்டது அவள் அழகுக்காகத்தான். ஆஸ்திக்காக அல்ல. தனக்கு மனைவியாக வருபவள் இப்படி இப்படி இருக்க வேண்டும். தன் மாமனார் வீடு இந்த மாதிரியெல்லாம் இருக்க வேண்டும் என்றெல்லாம் கனவு கண்டவன் தான் அவனும். ஆனால் நளினியை முதலில் பார்த்ததுமே அவன் தன் திட்டங்களுக்கெல்லாம் 'குட்பை' கொடுத்து விட்டு அவளையே மணக்கத் தீர்மானித்து விட்டான். அப்படி அவன் உள்ளத்திலே பதிந்து விட்டது அவள் உருவம்.

ஆனால் கண்ணனின் அந்த ஆசைத் தவிப்பு அடங்கி நளினியுடன் அவன் வாழ ஆரம்பித்து போதுதான் தன் தவறை அவன் உணர்ந்தான். இல்லை, அவனால் விரட்டியடிக்கப்பட்ட கற்பனைகள் அவனை வந்து சூழ்ந்து கொண்டு, ஆட்சி புரிய ஆரம்பித்தன. நளினியை மணக்கும் போது தனக்கு அழகிய மனைவிதான் வேண்டும்; பணம் காசுக்காகவும் சீர் சிறப்புக்காகவும் தான் கல்யாணம் செய்து கொள்ளவில்லை என்று லட்சியவாதி போலப் பேசிய கண்ணன் நாளடைவில் மாமனார் வீட்டுக் கௌரவம், மதிப்பு, ஆசார உபசாரம், சீர் வகைகளை நினைத்து ஏங்க ஆரம்பித்தான். அவன் கற்பனை செய்தவைகள் அவனுக்குக் கிடைக்காதபோது தனக்குச் சமதையான இடத்தில் தான் சம்பந்தம் செய்து கொள்ளவில்லையே என்ற மனப்பான்மை அவனுள் மலை போல வளர ஆரம்பித்தது. பல பண்டிகைப் பருவங்களுக்கு அவன் நண்பர்கள் தங்கள் மாமனார் வீட்டுக்குப் போய் வந்த பெருமையை நெஞ்சு தித்திக்க ஆவலோடு அவனிடம் பேசும் போது கண்ணனின் உள்ளம் ஆத்திரத்தாலும் பொறுமையாலும் தவிக்கும். தன்னைத் தன் மனைவியின் வீட்டார் தகுந்தபடி அழைத்து மரியாதை செய்யவில்லை என்றும், அவர்கள் விட்டுக்குப் போன இரண்டொரு தடவைகளிலும் அவர்கள் தனக்குத் தகுந்த மரியாதை காட்டவில்லை என்றும் நினைத்துக்கொண்டு அதையே உள்ளத்திலே பாரமாக்கிக் கொண்டுவிட்டான். அதையே எண்ணி எண்ணிப் பொங்கிக் கொண்டிருந்தான்.

கண்ணனின் உள்ளத்திலே வளர்ந்து வரும் இந்த விபரீத போக்கைப் பற்றி நளினியின் பெற்றோர்களுக்கு ஒன்றும் தெரியாது. தங்கள் பெண்ணின் அதிர்ஷ்டந்தான் தங்களுக்கு இப்படித் தங்கமான மாப்

பிள்ளை, தங்கள் நிலை அறிந்து குற்றங்குறை சொல்லாமல் அனுசரித்துப் போகும் மாப்பிள்ளை கிடைத்திருக்கிறார் என்று பெருமையடைந்திருந்தனர்.

ஆனால் நல்ல பெண்ணான நளினி தன் கணவனின் மனக்குறையை ஊகித்துக் கொண்டாள். அவர் செய்திருந்த கற்பனையைத் தங்கள் வீட்டாரின் மரியாதைகள் திருப்திப்படுத்தவில்லை என்பதை நினைத்தபோது அவளுக்கே வேதனையாக இருந்தது. முதலில் தங்கள் ஏழ்மையை நினைத்துத் தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்டாள் நளினா.

ஆனால் அந்த ஒரு சம்பவத்துக்குப் பிறகு அவளுக்கே அவள் வீட்டாரிடம் கோபம் வரத்தான் செய்தது. நளினியின் தங்கை வசந்தாவுக்கு நாலைந்து நாளாக ஜுரம், என்று எழுதி இருந்தார் அவள் தகப்பனார். அன்று மாலை முடிந்தால் வசந்தாவைப் போய் பார்த்துவிட்டு வரும்படி தன் கணவனிடம் கேட்டுக் கொண்டாள் நளினா. அவள் பிறந்தகம் பத்து மைலில்தான் இருந்தது.

இரவு திரும்பி வந்த கணவனிடம் வழக்கமான குதூகலத்தைக் காணாத நளினாவுக்குத் 'திக்' என்றது. தங்கைக்கு ஏதாவதோ? என்றுதான் அவள் முதலில் நினைத்தாள். எப்படிக் கேட்பது? அவள் நினைத்தபடியானாலும் கூட அந்தச் செய்தியைக் கேட்க அவளுக்குத் துணிவில்லை. தவிக்கும் உள்ளத்தைத் தாங்கிப் பிடித்துக் கொண்டே மெதுவாக 'அங்கே போயிருந்தீர்களா?' என்றாள். நல்ல செய்தியாகச் சொல்ல வேண்டுமே என்று அவள் நெஞ்சு பட்ட பாடு, அப்பப்பா!

கண்ணன் எரிமலையாகக் குமுறினான், "மதிக்காத உங்க வீட்டுக்குப் போயிருந்தேன். போனதுக்கு நல்ல மரியாதை செய்துவிட்டார்கள்" அவன் விழிகளிலே நெருப்புப் பொறி பறந்தது.

நளினா வெலவெலத்துப் போனாள். தங்கைக்கு ஆபத்தில்லை என்பதைப் புரிந்து கொண்டாள். வயிற்றைச் சுருட்டும் திகில் போய் புதிய பயம் வந்து மூடிக் கொண்டது.

"என்ன நடந்தது சொல்லுங்களேன்" என்றாள் நடுங்கியபடியே.

"இனிமேல் உங்கவீட்டு வாசப்படி மிதிக்க மாட்டேன். ஆமா, தெரியாதவங்க வீட்டுக்குப் போனால்கூட காப்பி சாப்பிட நீங்களான்னு கேப்பாங்க.... அந்த மதிப்புக்கூட எனக்கு



வைக்கவில்லை உங்க வீட்டுலே.'' ஆத்திரத்தால் அவளிடமிருந்து வார்த்தைகள் கோர்வையாக வெளி வரவில்லை.

கணவனைத் தன் வீட்டார் சரியானபடி உபசரிக்கவில்லை என்பதை நினைத்தபோது அவளால் அழுகையை அடக்க முடியவில்லை. ''அவர்களுக்கு ஒன்றும் தெரியாது....'' என்று கண்ணனின் கோபத்தைத் தாங்கிக்கொள்ள முயன்றாள். துக்கம் தொண்டையை வந்து அடைத்துக் கொண்டது.

''என்ன தெரியாது?'' கத்தினான் கண்ணன்.

''அவர்கள்மேல் தப்புத்தான். தயவு செய்து எனக்காக மன்னித்துக் கொள்ளுங்கள்.'' அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு விம்மினாள் நளினி. விழிகள் வழிய விட்ட நீர் முத்துக்கள் அவன் கைகளைச் சுரீர் என்று சுட்டபோது அவன் உள்ளத்தில் எரிந்துகொண்டிருந்த ஆத்திரம் அணைந்து விட்டது. கண்ணன் கண்ணீருக்குக் கலங்கி விடுவான். அதாவது அவ்வளவு இளகிய மனது. நளினியிடம் அவனுக்கு உயிர். அவள் கண் கலங்கினால் அவன் கருத்தே கலங்கிவிடும். விம்மிக் குமுறும் அவளை அணைத்துக்கொண்டு கண்ணீரைத் துடைத்துச் சமாதானப் படுத்தினான். ஆனால் அவன் தன் தீர்மானத்தை மட்டும் மாற்றிக் கொள்ளவில்லை.

அன்று நடந்ததும் அப்படியொன்றும் பிரமாதமான விஷயமில்லை. மாலை இளவெயில் வளரும் இருட்டில் கரைந்து கொண்டிருந்த நேரத்தில்தான் இவன் போனான். இவன் போன சமயத்தில் டாக்டர் வந்திருந்தார். மாப்பிள்ளையை உபசரிக்கும் நிலையில் அவர்கள் இல்லை. கண்ணனைக் கவனித்து க்ஷேமம் விசாரிக்கும்போது சாப்பிட்டு விட்டுப் போகலாமே என்று சாதாரணமாகச் சொன்னார்கள். இவன், 'இல்லை நான் போக வேண்டும். நளினா எனக்காகக் காத்திருப்பாள்' என்று மதிப்பாக

மறுத்துவிட்டான். அவர்கள் காப்பியாவது சாப்பிட்டு விட்டுப் போகும்படி உபசரித்திருக்கலாம். இருட்டிவிட்ட நேரமானதாலோ, அல்லது மாப்பிள்ளை விகல்பமாக எண்ணமாட்டார் என்ற சகஜ மனப்பான்மையினுலோ அவர்கள் கண்ணனுக்குக் காப்பி கொடுக்கவும் இல்லை; சாப்பிட்டு விட்டுத்தான் போக வேண்டுமென்று அதிகமாக உபசரிக்கவும் இல்லை. இவன் வெறும் வயிற்ருேடிருக்கிருன் என்று அவர்களுக்கு ஜோஸியம் தெரியுமா?

தனக்கு ஏற்ற மாமனுர் வீடு கிடைக்கவில்லை என்று குறைப்பட்டுக் கொண்டு குமைந்து கொண்டிருந்த எண்ணத்தை இந்தச் சம்பவம் ஊதிக் கொழுந்து விட்டெரியச் செய்து விட்டது. அதன் ஜ்வாலையிலே, சிந்தித்து முடிவு செய்யும் தன் திறனைச் சுட்டெரித்துப் பொசுக்கிவிட்டான்.

இதன் பிறகு அவன் நளினியின் விட்டாரைப் பற்றிய பேச்சை எடுப்பதில்லை. அன்பை எல்லாம் கொட்டித் தன்னை ஆட் கொண்டிருக்கும் அவள் சிரிப்பு மறையக் கூடாதே என்று தன் மனக் குறையை அவள் முன் வெளியிடுவதில்லை.

அவன் வைராக்கியத்தைப் பரீட்சிப்பது போல நளினு தாயாகும் நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தாள். பிறந்த வீட்டுக்கு அவள் கிளம்பும் போது, அவன் முன்னுல் அவள் வந்து நின்ருள். நண்களில் பொங்கி வழியத் தவிக்கும் கண்ணீரை உதட்டைக் கடித்து நிறுத்த முயன்று தோல்வியடைந்த போது தான் கண்ணன் குனிந்த தலையை நிமிர்த்தி அவளைப் பார்த்தான். அவளைப் பேச விடாமல் தொண்டையில் ஏதோ ஒன்று வந்து அடைத்துக் கொண்டது. தேங்கித் தவிக்க இடமில்லாமல் கண்ணீர் கன்னக் கதுப்பிலே வழி வகுத்துக் கொண்டு விட்டது.

''என்னைப் பார்ப்பதற்காகவாவது நீங்கள் ஊருக்கு வாருங்கள்'' என்று சொல்வதற்குள் அழுகை அவளை முந்திக் கொண்டு விட்டது. கண்ணன் அவள் கண்ணீரைத் துடைத்து அனுப்பி வைத்தான்.

அவள் பிரிவு அவனுக்குத் தாங்க முடியாத தாபத்தைக் கொடுத்தது. அவனை எதிலும் வெறுப்பும் கோபமும் கொள்ளச் செய்திருந்தது. சதா அவள் மலர்ந்த முகமும் சிங்காரச் சிரிப்பும் அவன் சிந்தையிலே புழுப் போலக் குடைந்து கொண்டிருந்தது. வாசனையுள்ள பூவைக் கண்டால் அவள் நினைவு தான் வரும். வீதியிலே அழகான பெண் ஒருவள் போனுல் உடனே நளினியின் உருவம் தோன்றும். 'என் நளினி இன்னும் நல்ல எடுப்பான தோற்றமல்லவா. அலை அலையாக அவள் கூந்தலெங்கே இவள் குட்டைப் பின்னலெங்கே' என்று இருவரையும் எடை போடுவதில் இறங்கி விடும் அவன் எண்ணமெல்லாம்.

சில நாளைக்கு 'ஏன் நாம் தான் ஒரு தடவைப் போய்ப் பார்த்துவிட்டு வந்தால் என்ன? என்ற நினைவு நெளிய ஆரம்பிக்கும். அந்த நினைவே இன்பமாக இருக்கும். அந்த இன்பத்திலேயே மயங்கிக் கிடப்பானே தவிர செயல்பட மாட்டான். காரணமற்ற பிடிவாதமும் போலிக் கௌரவமும் அவன் வைராக்யத்தை வளர்த்து வந்தது. நளினு கேட்டுக்கொண்டபடி அவன் அவளைப் பார்க்கப் போகவே இல்லை. அவன் கடிதங்கள்தான் அவளை — அவள் நினைவைத் தொடப் போய்க் கொண்டிருந்தன. ஆனுல்.... அவள் தன் ஒவ்வொரு கடிதத்தி

லும் தன் ஆசையைக் கொட்டி—அவன் உள்ளத்தை—அந்த உள்ளத்திலே மூடிக் கிடந்த பிடிவாதத்தைக் கரைக்க முயன்று கொண்டிருந்தாள். 'ஒரு முறை வாருங்கள்' என்று அவள் கெஞ்சிக் கொஞ்சி எழுதி இருந்தாள். அதைப் படிக்கும்போது கண்களில் நீர் முத்துக்கள் ஜ்வலிக்க தலையைச் சாய்த்துக் கொண்டு பரிதாபமாகத் தன் முன்னால் நளினி நிற்பதுபோல இருக்கும் கண்ணனுக்கு. அவசியம் நாளைக்கு போய்ப் பார்த்து விட்டுத்தான் வர வேண்டும் என்ற முடிவுக்கு வருவான். ஆனால் கொஞ்ச நேரத்தில் அவனால் செல்லங் கொடுத்து வளர்க்கப்பட்ட போலி வீராப்பு அவன் தீர்மானத்தை விரட்டியடித்துவிடும்.

ஆனால் இந்தத் தடவை நளினியின் கடிதம் கண்ணனிடம் அதிசய மாறுதலையே உண்டாக்கி இருந்தது. "போகத்தான் வேண்டும்.... போனால் என்ன? என் கோபத்தை அவள் அவர்களிடம் சொல்லி இருப்பாள். ஆகவே உபசாரம்கூடப் பலமாகத்தான் இருக்கும்" என்று நினைத்தான். ஆனால் உடனே, "ம்.... என்னத்தான் இருந்தாலும் நீயாக அதைக் கேட்டு வாங்கிக் கொள்ளுவது போலத்தானே? என்று விவகாரம் பேசிற்று போலிக் கௌரவம். கண்ணன் நெற்றியிலே புருவத்தை ஏற்றி அதை விரட்டப் பார்த்தான். அவன் பொட்டுத் தெரித்தது. "உங்களை வரவேற்க நான் வாசல்படியிலேயே காத்திருப்பேன்" என்று நளினா அவன் காதில் சொல்வது போலிருந்தது.

"நாளைக்கு அவசியம் போய்த்தான் ஆகவேண்டும்" என்று செய்த முடிவு உடையாமலிருப்பதற்காக எழுந்திருந்து வேறு விஷயத்தில் சிந்தனையை விரட்டினான்.

"தாயாக விருக்கும் அவள் ஆவலை நிறைவேற்றுவிடில் பாவம், பிறக்கும் குழந்தையின் காதில் சீ வடியுமாம்" என்ற பாட்டி வேதாந்தத்தை நினைவுக்குக் கொண்டு வந்து அவன் செய்த முடிவுக்குப் பலம் சேர்த்தது அவள் பிரிவால் ஒடிந்து வாடும் உள்ளம்.

நாளைக்கு வருகிறேன் என்று கடிதம் எழுதிப் போட்டால் என்ன என்று நினைத்தபோது "வேண்டாம்.... அவள் எதிர் பார்க்காதபடி அவள் முன்னால் போய் நின்று அவளைத் திகைக்க வை" என்று குறும்பாக விளையாடிற்று உற்சாகத்திலே திளைத்த உள்ளம். இடையிடையே "போவதா? சே.... சே.... கூடாது" என்று ஓலமிட்டுக் கொண்டிருந்தது போலிக் கௌரவம். ஆனால் அதன் குரல் எடுபடாதபடி கும்மாளமிட்டுக் கொக்கரித்துக் கொண்டிருந்தது—அவள் நினைவால் துடிக்கும் ஆவல் மனம். அதற்கல்லவா தெரியும் அந்தப் பிரிவின் பரிவு!

கண்ணன் திடீர் விஜயம் செய்வதாகப் போட்டிருந்த திட்டத்தை உடைத்தெரியும்படியான காரியம் செய்து விட்டாள் நளினா. முதல் நாள் கடிதம் போட்டதுடன் அவள் சும்மா இருந்து விடவில்லை. தன் முந்திய கடிதங்களுக்குக் கிடைத்த மதிப்புதான் அதற்கும் கிடைக்குமென்று நினைத்து தன் தம்பியையே தூதாக அனுப்பி விட்டாள்.

காலையில் கண்ணாடி முன் நின்றுகொண்டு முகத்திலே சோப்பை அப்பிக்கொண்டிருந்த போது நளினியின் தம்பி மணி வந்தான். "அக்கா உங்களை இன்னிக்குக் கட்டாயமா வரச் சொன்னா. உங்களைப் பாக்கணும் போல இருக்காம்" என்று சொல்லிவிட்டு நின்ற மைத்துனனைப் பார்த்தான்

நண்பர்: என்ன பாகவதர் வாள்! இந்த வருட சாயி சமாஜ உற்சவத்திலே காணோம்!

பாகவதர்: உடம்பு சரியில்லை, அதனால் தான்....

நண்பர்: அது தானே கேட்டேன். இந்த தடவை உற்சவம் கலாட்டா ஒன்று மில்லாமல் நடந்தது என்று கேள்விப் பட்டேன். விஷயம் இப்போதுதான் புரிகிறது.

கண்ணன். 'கட்டாயம், ஆசையாக இருக்காம்' என்ற வார்த்தைகளை அவள் சொல்லுவது போல சொல்லிப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தது மனம்.

"வர்றீங்களா — கட்டாயமா வரச் சொன்னு அக்கா" என்று அழுத்திச் சொன்ன மணியிடம் 'வரேன்னு போய்ச் சொல்லுடா.... அது சரி இதைச் சொல்லவா நீ ஊரிலேருந்து வந்தே?' என்று குசலம் விசாரித்தான்.

"இதுக்காக இல்லே, நான் சந்தைக்கு வரவேண்டி இருந்தது. அப்படியே உங்களையும் பாத்துச் சொல்லிவிட்டு வரச் சொன்னு. நான் வரேன்" என்று கிளம்பி விட்டான் மணி.

கண்ணன் அன்று ஆபீசுக்கு லீவு போட்டுவிட்டு ஒவ்வொரு நிமிஷத்தையும் அவள் நினைவிலேயே கழித்துக் கொண்டிருந்தான். புதுப்புடவை கட்டிக் கொண்டு தலை நிறைய அவனுக்குப் பிடித்தமான மல்லிகையை சந்திரஹாரமாக வளைத்துச் சூடிக்கொண்டு ஆனந்தம் பொங்கக் கன்னம் சிவக்கக் கண்களில் ஆசையை மின்ன விட்டபடி தன்னை வரவேற்கப் போகும் நளினியை நினைத்துப் பார்த்தபோது அவனை அறியாமல் அவன் வாய் சீட்டியடிக்க ஆரம்பித்தது. தன்னை, ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் அவள் தம்பி தங்கைகளுக்காகக் கடைவீதிக்குப் போய் பிஸ்கோத்து மிட்டாய்கள் வாங்கிக் கொண்டான். நளினி உயர்ந்த சாக்லட் என்றால் குழந்தை போல சண்டை பிடித்துப் பிடிங்கித் தின்பாள். அதற்காக அவளுக்குத் தனியாக சாக்லட் வாங்கிக் கொண்டான். ஒரு பந்து மல்லிகைப் பூ வாங்கிக் கொள்ளவும் அவன் மறக்கவில்லை. பல நாட்களுக்குப் பிறகு தன் வரவை அங்குள்ள ஒவ்வொரு ஜீவனும் எவ்வளவு ஆவலோடு பயபக்தியோடு எதிர்பார்த்துக் காத்திருக்கும் என்பதை நினைக்க அவனுக்குப் பெருமையாக, இன்பமாகக் கர்வமாகக்கூட இருந்தது. நெஞ்சைக் கிளுகிளுக்க வைக்கும் அந்த இன்பப் புல்லரிப்பிலும் போதையிலும் அவனுக்குப் பொழுது போனதே தெரியவில்லை. பகல் ஒரு மணிக்கு மாப்பிள்ளை கிளம்பி விட்டார். வெயில்கூட அவனுக்காக சூடாக அடிக்கவில்லை. அவன் உள்ளத்திலே போட்டிருந்த இன்ப மூட்டத்தைப் போலவே வானத்திலும் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. மாப்பிள்ளையின் முகத்திலே வியர்வை கூட அரும்பவில்லை. அவ்வளவு சுகமான நிலை.

நளினி எழுதியது போலவே வாசல் படியிலேயே காத்திருந்தாள். நளினியைத் தூரத்திலேயே கண்ட கண்ணனின் உடலிலே இன்ப நீரோட்டம் ஓடி

அவன் நடையிலே கம்பீரத்தை ஏற்றிவிட்டது. ஆவலும் பரிவும் பொங்கி வழியக் கணவனை வர வேற்றாள் நளினி. 'வாருங்கள்' என்று கட்டியங் கூறிய குரல் கள் ஒன்றும் அவன் சிந்தை யிலே ஏறவில்லை. அவன் கருத் தைக் கவர்ந்தவளின் முன் நெற்றியிலே ஜ்வலிக்கும் வியர் வையில் ஒட்டிக் கொண்டு துடிக் கும் சுருள் கேசத்தைப் போலவே அவன் உள்ளமும் தவித்துக் கொண்டிருந்தது.

பெருமையால் பேச்சிழந்து போன நளினி தன் தவிப்பை ஒரு நிலைப் படுத்திக் கொண்டு முதலில் பேசியது "இப்பவா வது உங்க மனசு இளகிற்றே! ஒரு மாசத்துக்குள்ளே இப் படித் துரும்பா இளைத்துப் போய் விட்டீர்களே" என்று முகம் சிவக்கக் கோபித்துக் கொண்டாள் செல்லமாக.

"நீ மட்டும் பெருத்து விட் டாயோ" என்றான், அவள் கன்னத்திலே உதிர்ந்திருந்த குங்குமத்தைத் துடைத்த படியே.

"ஆமாமா....எனக் கென்ன வாம்...."

பூவை நீட்டினான் கண்ணன். அந்த முல்லையைப் போல அவள் தன் முத்துப்பல் தெரிய முறுவலித்தாள் "எனக்குத் தெரியும் நீங்க மல்லிப்பூ வாங்கி வருவீங்கன்னு. அதனால் தான் நான் வந்த பூக்காரனைக் கூட வேண்டாம்னு அனுப்பிச் சுட்டேன்" என்று சொல்லிக் கொண்டே அவன் முன்னாலேயே பூவைத் தலையில் சூடிக் கொண் டாள்.

"நளினி உனக்குப் பிடித்த மான இன்னொரு சாமான் கொண்டு வந்திருக்கேன் என்ன சொல்லு பார்க்கலாம்" என் றான் அவள் பின்னலைப் பிடித்து இழுத்தபடி கண்ணன்.

"உங்க அன்பு தானே வேறென்ன....?

"தப்பு.......இதோ பாரு" அவள் முன் சாக்லட்டை நீட்டி னான். அந்த முகத்தில் நெற்றிக் குங்குமத்தின் வர்ணம் நிழலாடி யது. "ஆமா; உங்களுக்குக் கேலிதான். இங்கே கூடவா?" செல்லமாகச் சிணுங்கிய அவள் முகத்தை நிமிர்த்தியது போலத் துவண்டாள். அவளை அணைக்க நினைத்த போது அவள் 'இருங்கோ இதோ வந்துவிட் டேன்' என்று சொல்லிவிட்டு உள்ளே ஓடினாள்.

மறுபடி வந்தாள். ஆனால் அவ னோடு கொஞ்ச நேரம் கூடத் தங்கவில்லை. அவன் தவிப்பை அதிகமாக்கிவிட்டு, அடிக்கடி உள்ளே ஓடி மறைந்தாள். கண்ணனுக்கு இந்தத் தடவை எல்லாமே புதுமையாக இருந் தது. அவனுடன் முன் போல யாரும் கல கலப்பாகப் பேச வில்லை. குழந்தைகளான நளினி யின் தம்பி தங்கைகள் கூட அவனிடம் கொஞ்சவில்லை. பயத்துடன் அவனைப் பார்த்து விட்டு ஓடி ஒளிந்து கொண்டன.

கண்ணனுக்கு இந்த மாறுதல் எல்லாம் தன் மனைவியின் ஏற் பாடு என்று தெரிந்து கொள்ள அதிக நேரமாகவில்லை. தன் கணவனைத் தகுந்தபடி உபசரிக் கத் தெரியவில்லை என்று வந் ததும் தன் வீட்டாரிடம் கோபித் துக் கொண்டிருக்கிறாள். தன் மனக் குறையை, கோபத்தை அவள் சொல்லி இருப்பதால் தான் இந்த மாறுதல்களும் உபசாரமும் என்பதை நினைத்த போது கண்ணனுக்கு என் னவோ போலிருந்தது. கட்டா யப் படுத்திப் பெற்றுக் கொள் ளும் மரியாதைகளாகவே அவ னுக்குப் பட்டது. நளினி அடிக் கடி கன்னங் குழியச் சிரித்துக் கொண்டு அவனிடம் வந்து விட்டு ஓடினாலும் அவன் உள் ளத்திலே வந்தபோதிருந்த நிம்

மதி இல்லை. தெம்பிழந்து கிடந்த போலி வீராப்பும் கௌரவமும் மெள்ள மெள்ள பலம் பெற்று அவனை ஆட்சி புரிய ஆரம்பித்தன. தன்னை உபசரிக்க உள்ளே ஏதோ உபகரணம் தயாராகிறது என்பதை நினைத்ததும் அவன் புத்தி குதர்க்க வாதம் புரிய ஆரம்பித்தது.

''முன்பு செய்த அவமரியாதைகளுக்கும் தவறுக்கும் இப்போது உன்னை வரவழைத்து ஈடு செய்து விடுவதற்காக உன் மனைவி வகுத்த திட்டம் இது'' என்ற முடிவை அவன் உள்ளத்திலே அது அழுத்தமாக பதிய வைத்த பிறகு கண்ணனால் அங்கு உட்கார முடியவில்லை. ஆசையோடு ஆவலோடு உள்ளத்திலே காதலோடு கனிவோடு வந்த கண்ணன் கடுகடுத்த முகத்துடன் அந்த அறையிலே தவித்துக் கொண்டிருந்தான், அவள் வரவை எதிர்பார்த்து.

நளினி வந்தாள்—தாய்மைக்கு உயர்ந்து கொண்டிருக்கும் நளினி வந்தாள். உடலிலே புதிய அழகும் மினுமினுப்பும் வழிந்துகொண்டிருந்தது. வெள்ளித்தட்டிலே சுடச்சுட சொஜ்ஜியையும் பஜ்ஜியையும் ஏந்திக்கொண்டு நளின ஒய்யாரமாக உள்ளே வந்தாள். அவனைக் கண்ட கண்ணனுக்கு ஆத்திரமாக வந்தது. ''இந்த உபசாரத்துக்குத்தானே நீங்கள் தவித்தீர்கள்? இப்போது திருப்திதானே'' என்று கேட்பதுபோலிருந்தது கண்ணனுக்கு அவள் சிரிப்பு.

''இதெல்லாம் என்ன?.... நான் தொடக்கூட மாட்டேன்'' வெறுப்புடன் வார்த்தைகளை விட்டெறிந்துவிட்டு வேறு பக்கம் திரும்பிக்கொண்ட கணவனைப் பார்த்த நளினியின் முகத்திலே முறுவல் கருகி விட்டது. பூரித்திருந்த முகம் சிறுத்து விட்டது. அவளுக்குத் தன் கணவனின் கோபத்தின் காரணம் புரியவில்லை.

''ஐயோ, இதென்ன? ஏன் என் மேலே கோபமா?'' என்று குழறினாள் நளினி.

''உன்னைப் பார்க்கவந்தேனே தவிர உன் வீட்டிலே சாப்பிட வரவில்லை, தெரிந்ததா?'' இடத்தை மறந்து பலமாகவே கத்திப் பேசினான் அவன். ஆத்திரம் அவன் அறிவை மழுக்கி இருந்தது.

அவமானம் சுண்ட வைத்த முகத்திலே ஏமாற்றம் படிந்து விழிகளிலே வேதனையை வெந்நீராக்கி வழியவிட்டது. ''ஐயோ, அதெல்லாம் ஒண்ணுமில்லே. என் கையாலே உங்களுக்கு டிபன் பண்ணித் தரணும்னு ஆசைப்பட்டுச் செய்தேன். நீங்க இப்படி எல்லாம் வித்தியாசம் நினைக்காதீர்கள்'' எழுந்து நின்ற அவன் அருகில் போனாள் நளினி.

கலவரத்துடன் அவன் மைத்துனி உள்ளே எட்டிப் பார்த்து விட்டு ஓடினாள்.

''எல்லாம் எனக்குத் தெரியும். நான் வரேன்'' என்று தன் முரட்டுப் பிடிவாதத்துடன் அங்கவஸ்திரத்தை தோளில் வீசி எறிந்து கொண்டு நடந்தான். நளினி துடிதுடித்தாள். ''போகாதீர்கள். உங்களுக்குப் புண்யமுண்டு'' அவன் கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள். மன்றாடினாள். கண்ணன் அவளைப் பார்க்காமலேயே அவள் பிடியை உதறி விட்டு வெளியேறி விட்டான். அவள் விம்மல் அவன் காதிலே பாய்ந்து உள்ளத்தைக் குத்தி எடுத்தது. ஆனால் அவன் மனது இளகவில்லை. நளினி அப்படியே தரையில் விழுந்து நெஞ்சு வெடிக்கக் கதறினாள். துடைத்தாலும் நிற்காது என்றுதானோ என்னவோ வழிந்தோடும் கண்

ணீரை அவள் கட்டுப்படுத்த முயற்சிக்கவே இல்லை.

படபடப்புடன் .வெளியேறி வீதியிலே நடந்த கண்ணனின் உடலிலே குளிர்ந்த காற்றுப் பட்டதும் நெஞ்சிலே ஏறி இருந்த கொதிப்பும் குளிர ஆரம்பித்தது. நடக்க நடக்க அவனுக்கே தான் நடந்து கொண்ட விதம் திருப்தியளிக்க வில்லை. 'நீ முரடன், கருணை இல்லாதவன், மூர்க்கன், உன் போலிக் கௌரவத்துக்கு ஒரு பெண்ணின் உள்ளத்தை— இல்லை ஒரு குடும்பத்தின் உள்ளத்தையே உடைத்து ஆசையை நசுக்கி அவர்களைக் கண்கலங்க வைத்துவிட்டாயே' என்று மனச் சாட்சி அவனைக் குத்திக் குடைய ஆரம்பித்தது. அவன் செய்கை அவனுக்கே விகாரமாகப்பட ஆரம்பித்த போது காரணமற்ற கோபம் தான் வந்தது. பசி வேறு குடலைப் புரட்ட ஆரம்பித்தது. காலையில் ஒன்பது மணிக்குச் சாப்பிட்டுவிட்டு நளினியின் நினைவிலேயே நாழிகையை எண்ணிக் கொண்டிருந்தான். அவனுக்கு அப்போது பசியே தோன்றவில்லை. மாமனார் வீட்டில் ஏதாவது பண்ணி இருப்பார்கள் என்ற எண்ணம் கூட அவன் டிபன் சாப்பிடாதிருந்ததற்குக் காரணம். அப்போதிருந்த கண்ணனே வேறு!

மனதில் வலியை வயிற்றுக்குப் போட்டாவது ஆற்றலாம் என்று ஹோட்டலில் புகுந்தான். சம்பிரமமாகச் சாப்பிட்டு வெளி வந்த பிறகும் அவனிடம் நிம்மதி தோன்றவில்லை. பெரிய குற்றம் செய்தது போல வேதனை கெல்லிக் கொண்டிருந்தது. ஏன் இவ்வளவு மூர்க்கமாக நடந்து கொண்டுவிட்டோம் என்று அவனுக்கே அவன் செய்கையில் வெறுப்புத் தோன்ற ஆரம்பித்தது. பிளாட் பாரத்தில் உலாவிய கண்ணனுக்குத் தலை வெடித்து விடும் போலத் தெரிக்க ஆரம்பித்தது. குற்றவாளி மனப்பான்மையின் குத்தலைத் தாங்க முடியாமல் அப்படியே ஒரு பெஞ்சியில் சாய்ந்து படுத்துக் கொண்டான். கண்ணை மூடிக் கொண்டால் கண் முன் கண்ணீர் சிந்த விம்மிக் குமுறும் அவள் முகம் தான் வந்து நின்றது. கண்ணைத் திறந்தால் அவள் தேம்பல் காதுகளில் ஒலித்தது.

யோசியாமல் உணர்ச்சி வசப்பட்டுவிட்ட கண்ணன் இப்போது மனச் சாட்சியின் வதைக்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறினான். ஐந்து வயதுக் குழந்தையான அவள் மைத்துனி கண்களில் நீர் சுரக்க 'எங்க வீட்டிலே நீங்க சாப்பிட மாட்டீங்களா? நாங்க ஏழைன்னு தானே எங்க வீட்டிலே சாப்பிட மாட்டேங்கிறீங்க....' என்று கேட்டபோது அந்த முகத்தில் தோன்றிய பரிதாபத்தைப் பார்க்கவே கண்ணனுக்குத் தெம்பில்லை. நெஞ்சைப் பிசைந்தெடுத்தது வேதனை.

நளினி விம்மினாள். திடுக்கிட்டுத் திரும்பினான் கண்ணன். தீட்டி இருந்தமை எல்லாம் கரைந்து அவள் கன்னத்திலே கறையாக்கி இருந்தது. குமுறும் அழுகையைக் கொப்பளிக்க விட்டபடி அவள் கேட்டாள். ''உங்களை உபசரிக்க நாங்கள் தகுதியற்றவர்கள் தான். நாங்கள் ஏழை என்று தெரிந்து தானே என்னை ஏற்றுக் கொண்டீர்கள். திடீரென்று நாங்கள் எப்படி உயர்ந்துவிட முடியும்? என் பெற்றோர்கள் பழைய காலத்தவர்கள். அவர்களுக்கு உங்களை உபசரிக்கும் விதம் தெரியவில்லை. அதை அவர்களிடம் சொன்ன போது அவர்கள் எவ்வளவு வருத்தப்பட்டுக் கொண்டார்கள், தவித்துப் போனார்கள் தெரியுமா? அக்கம் பக்கத்திலுள்ள அத்தனை பேரும்

நீங்கள் வருவதை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் முன்னல் எங்களைத் தலைகுனிய வைத்துவிட்டீர்களே. நீங்கள் அப்படிப் போனதற்கு எங்களைப் பற்றி அவர்கள் என்ன நினைப்பார்கள்? எங்களுக்கு எத்தனை அவமானம்! அவமானமிருக்கட்டும் என் விட்டார் உங்களிடம் எத்தனை மதிப்பும் கௌரவமும் வைத்திருக்கிருர்கள் தெரியுமா? என் அம்மாவுக்கு மாப்பிள்ளை வரப்போகிருர்' என்று எத்தனை பெருமை தெரியுமா? எங்கள் எல்லோரையும் உதாசினப் படுத்தி விட்டீர்களே. எங்கள் ஏழைமையை நூறு பங்கு அதிகமாக்கிவிட்டது உங்கள் செயல்?...." நெஞ்சு வெடிக்க குமுறினள் நளினி. கண்ணனல் பொறுக்க முடியவில்லை. "ஐயோ நளினி........அழாதே கண்ணே! நான் செய்தது மகா பாதகம்" என்று குமுறிக் குலுங்கும் அவளை அணைக்கப் போனன். அவன் கைப்பிடியிலிருந்து குடைதான் நழுவிக் கீழே விழுந்து உருண்டது! கண்ணன் கண்ணை விழித்துப் பார்த்த போது அவன் மயங்கிய நிலையிலே, நினைவிலே நிழலாட்டம் போட்ட காட்சியில் அவன் மனைவி நளினி சொரிந்த கண்ணீரைப் போல வெளியே மழை கொட்டிக் கொண்டிருந்தது.

அவ்வளவும் பிரமை. மனப் போராட்டத்திலே எழுந்த மயக்கம். ஆனல் என்ன தத்ரூபம். கண்ணன் உள்ளம் தெளிந்து விட்டது. கழிவிரக்கம் அவனைக் கவ்விக் கொண்டது. ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன் போல விருட்டென்று எழுந்திருந்தான். சரிந்து கிடந்த குடையை எடுத்துக்கொண்டு ஸ்டேஷன் மாஸ்டரின் அறைக்கு நடந்தான். பழக்கமானவர் அவர். அவரிடம் குடையைக் கொடுத்துவிட்டுக் கொட்டுகிற மழையில் வீதியில் இறங்கி நடந்தான் கண்ணன். குடையைக் கொடுத்துவிட்டு மழையில் நனைந்து செல்லும் அந்தப் பிரகிருதியைப் புரிந்துகொள்ள முடியாமல் திகைத்துப் போய் உட்கார்ந்திருந்தார் ஸ்டேஷன் மாஸ்டர்.

நனைந்துகொண்டு உள்ளே நுழைந்த கணவனை நனைந்த விழிகள் மலர, உபசரிக்கத் தெரியாமல் திகைத்துப்போய் நின்ருள் நளினி—அவன் மனைவி. அந்த முகத்தில் தான் எத்தனை பரிவு, பாந்தவ்யம், அன்பு, ஆனந்தம்!

"ஐயையோ.... இப்படி மழையில் நனைந்துகொண்டு வந்திருக்கிறீர்களே" என்று துடிதுடித்துவிட்டாள். நான் உங்கள் உள்ளத்தைப் புண்படுத்தியதற்கு எனக்கு நானகை விதித்துக் கொண்ட தண்டனை இது" என்று சொல்லவில்லை கண்ணன், நினைத்துக் கொண்டான்.

அன்று இரவு சாப்பாடு அங்கேதான் என்று அவன் அறிவித்த போது அந்தக் குடும்பத்தினரின் முகத்திலே ஓடி வந்து ஒட்டிக்கொண்ட திருப்தியைக் கண்ட கண்ணனின் உள்ளம் பெருமையால் விம்மிற்று.

ஓடியாடிப் பரபரப்புடன் சமையல் செய்ய ஆயத்தம் செய்த மனைவியையும் மாமியாரையும் பார்த்தான். ஹோட்டலில் சாப்பிட்ட பூரி மசாலின் ஏப்பம் நெஞ்சைக் கரித்தது. இருந்தாலும் கண்ணனுக்குப் பசித்தது!

இடை இடையே புன்முறுவல் பூக்கக் கைக் காரியத்தை விட்டு விட்டு அவனிடம் வந்து நின்ருள் அவன் மனைவி நளினி — அவன் உள்ளத்திலே மண்டிக் கிடந்த களங்கம் கரைந்து பொலிவு நிலவியது.

போட்டி உலகிலே ஓர் புரட்சி!

லோட்டஸ்

கிராஸ் வேர்ட்ஸ்

மாதந்தோறும் ☆ சராசரி

70,000

ரூபாய்க்கு மேல் பரிசுகள் தருகிறது!

நீங்களும் முயற்சி செய்யுங்கள்!!



LOTUS CROSS WORDS. MADRAS 1.

ஓர் உயர்ந்த நாடகம்!

8—1—54 முதல் 17—1—54 முடிய

பத்து தினங்களுக்கு மட்டும்

நவாப் ராஜமாணிக்கம் கோஷ்டியாரின்

சக்தி லீலா

தினசரி மாலை 6-30க்கு

சென்னை ஒற்றைவாடையில்

தரத்தில் உயர்ந்தது

செல்வம்

போட்டோ மிஸ்கி

பெருங்காயம்

செல்வம் இண்டஸ்டிரியல்ஸ், ராயபுரம், சென்னை-13.

1. அதிசயம்! ஆனால் உண்மை!

ஜம்புநாதன் நீலாவை திருமணம் செய்துக் கொள்வதென தீர்மானித்ததும், அந்த தீர்மானத்தை அவனுடைய மாமா சரவணபவானந்தர் கொஞ்சமும் ஆட்சேபிக்காமல் மனப்பூர்வமாக ஒப்புக் கொண்டதோடு திருமணத்தை சிறப்பாக நடத்த ஏற்பாடுகள் செய்வதும் வேப்பங்குளத்தை ஒரு கலக்கு கலக்கி விட்டது. இந்த அதிசயத் திருமணத்தின் அந்தரங்கத்தைப் பற்றி ஆராய்வதற்கு முன் இதில் சம்பந்தப்பட்ட மூன்று நபர்களைப் பற்றிய விவரங்களை முதலில் கவனித்துவிடுவோம்.

சரவணபவானந்தர் வேப்பங்குளத்தில் முடிசூடா மன்னராக விளங்குபவர். அவர் விரலை அசைத்தால் ஊரே ஆடும் என்று சொல்வார்கள். ஊரிலே, அவர் பணக்காரர், பெரிய மனிதர், யோக்கிய புருஷன், தாராள சிந்தையுள்ளவர், பிறர் கண்ணீரைக் கண்டு சகிக்காத இளகிய மனம் படைத்தவர், ஐம்பது வயதுக்கு மேலாகியும் கடுமையான ஆசார அனுஷ்டானங்களை நியதி தவறாமல் கடைப்பிடிப்பவர், என்றெல்லாம் மக்களின் புகழுக்குப் பாத்திரமாக விளங்கி வந்தார். ஏதாவது வம்பு-வழக்கு என்றால் அது சரவணபவானந்தரின் பெரிய பங்களாவுக்குத்தான் விசாரணைக்கு வரும். அவர் கூறும் தீர்ப்பை தேவ வாக்காக மதித்து மக்கள் கீழ்ப்படிந்தனர்.

இவ்வளவு பெரும் சிறப்பு கொண்டவர், கேவலம் ஊரார் வெறுப்புக்கு இலக்காகி ஒதுக்கப்பட்ட ஒரு சாதாரண குடும்பத்துப் பெண்ணை மருமகனுக்கு மணமுடிக்க ஒப்புக்கொண்டார் என்ருல் அது சாதாரண செய்தியாக இருக்க முடியுமா?

ஜம்புநாதன் சரவணபவானந்தரின் தங்கை மகன். பெற்ருேரை இழந்து சிறிய வயதிலேயே தன்னிடம் ஒட்டிக் கொண்டுவிட்டதாலும், இவ்வளவு வயதாகியும் தனக்கு ஒரு புத்திரப் பேற்றை அளிக்காமலேயே பத்து வருடங்களுக்கு முன்னுல் அவருடைய மனைவி காலம் சென்றுவிட்டதும், தன்னுடைய திரண்ட செல்வத்தையும், செல்வாக்கையும் வைத்துக் காப்பாற்ற ஒரு ஆள் இல்லையே என்ற கவலையும் ஒன்று சேர்ந்ததனுல் ஜம்புநாதன் மீது அவர் உயிரையே வைத்திருந்தார்.

ஜம்புநாதன் பணக்கார வீட்டுச் செல்லப் பிள்ளைகள் எப்படி வளருமோ, அதற்குத் துளியும் மாறுதல் இல்லாமல் வளர்ந்து வந்திருந்தான். சென்னைப் பட்டினத்துக் கல்லூரிகள் பக்கம் தலைகாட்டிப்பார்த்து, அங்கெல்லாம் ஒன்றும் பெரிய விஷயங்களைத் தெரிந்துகொள்ள முடியாதுஎன்று முடிவு கட்டி ஒரு நல்லமோட்டார்சைக்கிளை வாங்கிக்கொண்டு ஜம்புநாதன் உலகானுபவம் பெற ஆரம்பித்தான். வேளை கெட்ட நேரங்களிலெல்லாம் ஜம்புநாதனின் மோட்டார் சைக்கிள் சப்தம் வேப்பங்குள வீதிகளில் கேட்கத் தொடங்கிற்று. வேப்பங்குள வாசிகளால் அவனுடைய உலகானுபவ முயற்சியைப் புரிந்துகொள்ள முடியுமா? ''இதென்னடா இது சனியன். நல்ல மரத்தில் புல்லுருவி முளைத்த மாதிரி அந்த மகானுபாவர் பெயரைக் கெடுக்க வந்து தொலைந்திருக்கு'' என்று மனதிற்குள் முணகிக் கொண்டனர்.

தான் ஒரு கலையுள்ளம் படைத்தவன் என்றும், அழகு எங்கே இருந்தாலும் அதை ரஸிப்பதற்கு தான் தவறுவதில்லை என்றும் ஜம்புநாதன் கூறிக்கொள்வான். இந்த கலை உள்ளம் ஊரிலிருக்கும் கொஞ்சம் அழகான பெண்களுக்கு பேராபத்தாய் முடியும்போது யாரால் தான் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? இந்தப்புகார் சரவணபவானந்தர் காதுகளுக்குஎட்டி அவர் கொஞ்சம் பலமாக கண்டித்த பிறகு ஜம்புநாதன் தன் கலை உணர்ச்சியை உள்ளூரில் காட்டுவதை விட்டு விட்டான். ஆனுல் சரவணபவானந்தர் இரவில் தூங்கிவிட்ட பிறகு, அவர் வீட்டு மாடியில்—ஜம்புநாதனின் அறையில் சினிமா நட்சத்திரங்கள் மின்னத் தொடங்கின. பொழுது விடிந்து சரவணபவானந்தர் விழித்தெழுவதற்குள் அந்த நட்சத்திரங்கள் மாயமாக மறைந்து விடும். இது அவருக்குப் புரியாமலில்லை. ''காதும் காதும் வைத்தார் போல ரகசியமாக ஏதாவது செய்து தொலையட்டும்'' என்று பாராமுகமாக இருந்து விட்டார்.

இப்படி, நினைத்த போதெல்லாம் அழகை பூசித்துக் கொண்டிருந்த ஜம்புநாதன் பிரமாதமான அழகோ, அந்தஸ்தோ கொஞ்சங்கூட இல்லாத தாழ்ந்த குல பெண் ஒருத்தியிடம் மனதைப்பறி கொடுத்து அவளையே மணந்துக் கொள்ளத் தீர்மானித்தான் என்ருல் அது பெரிய அதிசயந்தானே.

நீலாவின் பிறப்பு வளர்ப்பு பற்றி வேப்பங்குளத்தில் ஒரு மாதிரியான கதை உலாவி வந்தது.

வேப்பங்குளத்து எல்லையில் அம்மன் கோயிலொன்று இருந்தது. ஊர் ஜனங்களுக்கு அம்மன்தான் கண்கண்ட தெய்வம்,

வேலாயுதம் என்ற பெரியவர் ஒருவர் பூசை முதலியவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

வேலாயுதம், வைத்தியர் என்ற முறையில் வேப்பங்குளத்தில் பிரசித்தி பெற்றவர். வைத்தியத்தை பொருள் வருவாய்க்குப் பயன் படுத்தாமல் பொதுஜன சேவையாக அவர் செய்து வந்ததால் மக்கள் அவரிடம் மதிப்பும் நன்றியும் வைத்திருந்தனர். யாராவது ஏதாவது கொடுத்தால் வாங்கிக் கொள்வார். இல்லாவிட்டால் அதைப் பற்றிக் கவலைப்படாமலும், முகம் சுளிக்காமலும் எந்த நேரத்திலும் தன்னால் செய்யக் கூடிய உதவிகளை அவர் மக்களுக்குச் செய்து வந்தார். கோயில் பூசை, தெய்வ பக்தி காரணமாக அவராக ஏற்றுக் கொண்ட கௌரவ வேலை. அதனால் அவர் மக்களிடையே ஒரு கண்ணியமும் கௌரவமும் வாய்ந்தவராக உலாவியதில் வியப்பில்லை அல்லவா!

சரவணபவானந்தர் அவரைத் தன் குடும்ப வைத்தியராகவும், அந்தரங்க ஆலோசனையாளராகவும் மதிப்பார். கோயிலை ஒட்டியிருந்த தனக்குச் சொந்தமான ஒரு பெரிய மாந்தோப்பை அவருக்கு சொற்ப தொகைக்கு குத்தகைக்கு விட்டு அதனால் கிடைக்கும் பெரும் பயனை அவர் அனுபவிப்பதற்கான ஏற்பாடுகளை சரவணபவானந்தர் செய்திருந்தார். மாந்தோப்பு வருமானம்தான் வேலாயுதத்தின் வயிற்றுப் பிரச்னைக்கு ஆதாரம்.

வேலாயுதத்திற்கு பார்வதி என்று வயது வந்த பெண் ஒருத்தி இருந்தாள். பதினெட்டே வயது ஆகியிருந்த அவளிடம் பொங்கி வழியும் பேரழகு ஊரையே பிரமிக்க வைத்தது. இளம் வயதிலேயே தாயை இழந்துவிட்ட பார்வதியை கவலையற்றவளாக அவள் விருப்பப்படியே உலாவ விட்டிருந்தார் வேலாயுதம்.

அவர் காலை பத்து மணிக்கெல்லாம் சாப்பிட்டுவிட்டு வெளியே புறப்பட்டு விடுவார். அப்புறம் இரவுதான் வீடு திரும்புவார். அதுவரை பார்வதியை மாந்தோப்பில்தான் பார்க்கலாம். அங்கே வந்து சேரும் மற்ற தோழிகளும் கூடிக் கொண்டு ஆட்டமும் பாட்டும் குதூகலமுமாகப் பொழுது போக்குவாள்.

பயமற்ற இளங்கன்று மாதிரி துள்ளித் திரியும் அவளைப்பற்றி வேலாயுதம் எந்தவிதக் கவலையும் படுவதில்லை. ஏனெனில் பார்வதி ஊராரின் செல்லப் பிள்ளையாக விளங்கினாள். அவளுக்கு ஏதாவது ஆபத்து என்றால் அதற்காக உயிரைக் கொடுக்கவும் ஊர் மக்கள் தயாராக இருந்தனர் என்றால் அவர் ஏன் கவலைப்பட வேண்டும்.

இருந்தாற் போலிருந்து பார்வதியின் நடவடிக்கைகளில் ஒரு புதுமை கலந்த மாறுதல் தென்பட்டதைக் கண்டு வேலாயுதம் ஆச்சரியப்பட்டார். சிரிப்பும் விளையாட்டுமாக வீட்டிலேயே தங்காமல் சதா மாந்தோப்பைச் சுற்றிக்கொண்டிருப்பவள் திடீரென ஓய்ந்துபோய் வீட்டிலேயே உட்கார்ந்து விட்டாள். அவளிடம் குடிகொண்டிருந்த கலகலப்பு இருந்த இடம் தெரியாமல் மறைந்து, பரிபூரண அமைதியின் சாயல் படியத் தொடங்கிற்று. முகத்தில் ஒரு வித பீதியும் கவலையும் படர்ந்து கிடந்தது. எதைக் கண்டோ பயந்தவள் போல நிம்மதியற்று வீட்டுக்குள் உலாவத் தொடங்கினாள்.

வேலாயுதம் பீதியடைந்து விட்டார். எவ்வளவோ கேட்டும் அவள் தன் மாறுதலுக்கான காரணத்தைக் கூறவேயில்லை. ஒன்றும் புரியாமல் வேலாயுதம் திண்டாடினார்.

வெளியில் கேட்டவர்களுக்கு பார்வதி உடல்நலக் குறைவாக இருக்கிருள் என்று மட்டும் கூறி வந்தார்.

ஆனல் கொஞ்ச நாட்களில் பார்வதியின் மாற்றத்துக்கான காரணம் வேலாயுதத்திற்கு பிடிபட்டு விட்டது.

மணமாகாத கன்னியான பார்வதி சில மாதங்களில் தாயாகும் தகுதியை அடைந்திருந்தாள்....!

வேலாயுதம் இடிந்து போய் உட்கார்ந்து விட்டார். பார்வதி தேம்பித் தேம்பி அழுதாள்.

"இப்படி உன்னைப் பாழ்படுத்திய பாதகன் யார்?" என்று பதறிக்கொண்டே கேட்டார் வேலாயுதம். பதில் கிடைக்கவில்லை. அவளுடைய செறுமல் தான் விட்டு விட்டுக் கேட்டது.

தன் வாழ்வில் சினத்தையே சந்தித்தறியாத கருணமூர்த்தியான வேலாயுதத்துக்கு கடுங் கோபம் பீறிட்டெழுந்தது. தன்னை மீறி யெழுந்த ஆவேசத்துடன் பார்வதியை நெருங்கி அவள் தலைமயிரைப் பற்றி ஒரு உலுக்கு உலுக்கி "சொல்லப் போகிருயா? இல்லையா?" என்று கத்திஞர் வேலாயுதம்.

பார்வதி தந்தையின் முகத்தைப் பரிதாபத்தோடு நோக்கிஞள். பிறகு ஏதோ சொல்ல வாயைத் திறந்தாள்.

இந்த சமயத்தில் வெளியே சரவணபவானந்தர் தன்னை அழைக்கும் குரல் கேட்கவே அவளை விட்டுவிட்டு வெளியே வந்தார் வேலாயுதம்.

வாசலில் வண்டி நின்றிருந்தது. சரவணபவானந்தர் வீட்டு முன்புற கூடத்தில் நின்றிருந்தார்.

தன்னை மீறி எழுந்த வேதனையுடன் ஓடிச் சென்று தடாலென்று அவர் காலில் விழுந்து ஓவென கதறிஞர் வேலாயுதம்.

ஒரு விஞடி சரவணபவானந்தர் திகைத்துவிட்டார். பிறகு அவர் வாய் மூலமாகவே விஷயத்தை உணர்ந்து திடுக்கிட்டு போய் அண்ணந்து பார்த்தார்.





பாதி மூடப்பட்டிருந்த கதவிடுக்கின் வழியே தெரிந்த கண்ணீர் தேங்கிய அந்தக் கண்களை ஒரு தடவை நோக்கினார். பிறகு ஏதோ தீர்மானத்துக்கு வந்தவர் போல ''வேலாயுதம் கவலைப்பட வேண்டாம். உமது மதிப்புக்கு பங்கம் ஏற்படாவண்ணம் ஒரு ஏற்பாடு செய்து விடுவோம்....'' என்று கூறிவிட்டு அவரையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு வண்டியில் புறப்பட்டார்.

கர்ப்பத்தை மருந்துகொண்டு சிதைத்துவிட்டு வேலாயுதத்தின் கௌரவத்தைக் காப்பாற்றலாம் என்ற சரவணபவானந்தரின் யோசனையை பார்வதி ஏற்றுக்கொள்ளவில்லை. அத்துடன் தன்னைக் கெடுத்தது யார் என்ற விஷயத்தையும் அவள் பிடிவாதமாகக் கூற மறுத்துவிட்டாள்.

நாளடைவில் விஷயம் ஊரறிந்த செய்தியாகிவிடவே, ஊரின் நல்லொழுக்கத்தைக் காப்பதற்காக வேலாயுதத்தின் மீதும் பார்வதியின் மீதும் நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்று ஜனங்கள் ஊர்த் தலைவ

ரான சரவணபவானந்தரிடம் பிராது செய்தனர்.

வேலாயுதத்தின் மீது தனிப்பட்ட மதிப்பு இருந்தாலும் சரவணபவானந்தர் ஊர்த்தலைவன் என்ற முறையில் நேர்மையாக தீர்ப்பளிக்கவேண்டி நேரிட்டது.

அதன் காரணமாக வேலாயுதமும் பார்வதியும் ஊர் எல்லைக்கு வெளியே ஒதுக்கப்பட்டனர். அந்தக் குடும்பத்தை ஒரு தாழ்ந்தகுல குடும்பமாகப் பாவித்து எல்லோரும் தீண்டாமை அனுஷ்டிக்க வேண்டுமென்று ஏற்பாடாயிற்று.

இந்தத் தீர்ப்பைக் கேட்ட நான்கு தினங்களுக்குள் அதே ஏக்கமாக இருந்து வேலாயுதம் உயிரை விட்டார். பார்வதி தன்னந்தனியாக ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

ஆத்திர மிகுதியால் அந்தப் குழந்தையைக் கழுத்தைப் பிடித்து நெறித்து கொலை செய்ய அவள் தீர்மானித்த போது அந்தப் பக்கமாக ஊருக்குள் பிரவேசித்துக் கொண்டிருந்த ஒரு பரதேசிக் கிழவன் குறுக்கிட்டு அந்தக் கொலை பாதகச் செயலைத் தடுத்ததோடு அவர்களைப் பராமரிக்கும் பொறுப்பையும் தானே ஏற்றுக் கொண்டார். அவர் பெயர் சிவனாண்டி.

பார்வதியின் பெண் நீலாவுக்கு வயது கிட்டத்தட்ட நான்கு ஆகும்வரை பார்வதி குடிசைக்குள்ளேயே நாள் முழுதும் அடைந்து கிடந்தாள். அந்த நான்கு வருடங்களில் அவளிடம் ஏற்பட்ட மாறுதல் மிகப் பயங்கரமாக இருந்தது. கட்டழகியான பார்வதி காண்பதற்கே பயங்கரமானதொரு பேயைப்போல் தோற்றமளித்தாள். அத்துடன் இரவு வெகு நேரத்திற்குப் பிறகு ஊரில் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் அலைய ஆரம்பித்தாள். ஊர் மக்கள் அவளைக் கண்டு நடுங்கினர். ஒருநாள் ஊருக்கு வெளியே ஒரு திடலில் அவள் இறந்து கிடந்தாள்.

சிவனாண்டியும் நீலாவுந்தான் மிஞ்சினர். பின்னர் நாளடைவில் கட்டுப்பாடுகள் கொஞ்சம் தளர்ந்து விட்டாலும், நீலாவின் பிறப்பு பற்றிய செய்தி மறைந்து விடவில்லை. நீலா தாயின் அழகையும் பெற்றிருக்கவில்லை. ஆனால் முகத்தில் ஒருவித கவர்ச்சி மிகுந்த லட்சணம் காந்த சக்தி போல் பிரகாசிக்கத்தான் செய்தது. கெட்ட பெயரின் காரணமாக அவளைக் கல்யாணம் செய்துக் கொள்ள யாரும் முன்வரவில்லை. பிரசாதிகளில் ஏழை - பாழைகளாக இருப்போரிடம் இரண்டாம் தாரம். மூன்றாம் தாரமாக எங்காவது தள்ளிவிடலாம் என சிவனாண்டி முயற்சித்துக்கூட ஒன்றும் நடக்க வில்லை. ஆகவே சுமார் இருபத்திரண்டு வயதுக்கு மேலாகியும் நீலா கன்னி கழியாதவளாகவே காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தாள்.

சிவனாண்டிக்கு நீலாவின் மீது அலாதியான பற்றுதல் இருந்தது. நீலாவுக்காக தன்னுடைய சன்யாசிப் பண்பைக்கூட மறந்துவிட்டு வேப்பங்குளத்தைத் தாண்டி சென்று எப்படியெப்படியோ பாடுபட்டு சம்பாதித்து அவளைக் காப்பாற்றியதுடன் அடுத்த ஊரிலிருந்த கிருஸ்தவப் பள்ளிக்கூடத்தில் ஆறாவது வகுப்பு வரை படிக்க வைத்திருந்தான்.

இப்படிப்பட்ட அவதூறுச் சேற்றின் நடுவே சிக்கித் திணறிக் கொண்டிருந்த சாதாரண அழகியான நீலா. ஐம்புநாதனை எப்படி வசீகரித்தாள்?

இந்த சந்தேகங்களுக்கு விளக்கம் வேண்டுமானால் இரண்டொரு மாதங்களுக்கு முன்னால் நடந்த சில சம்பவங்களைப் புரிந்து கொண்டால் போதுமானது.

2. விபத்து......!

ஒருநாள் இரவு சுமார் பன்னிரண்டு மணிக்குப் பிறகு எங்கோ சென்றுவிட்டு மோட்டார் சைக்கிளில் வழக்கமான தடபுடல்களோடு ஜம்புநாதன் வாயு வேகமாக மனோவேகத்தில் வந்துக் கொண்டிருந்தான். அம்மன் கோயிலைத் தாண்டி நீலாவின் வீட்டு வாசற்படி வழியாகத்தான் வேப்பங் குளத்துக்குள் நுழைய வேண்டும். அந்த இடத்தில் பாதை சற்றுக் குறுகலாக இருக்கும். அந்த இடத்துக்கு வந்ததும் மோட்டார் சைக்கிளைப் பிடித்திருந்த ஜம்புநாதனின் கைப்பிடி எதிர் பாராமல் நழுவவே உடனே மோட்டார் சைக்கிள் அவனுடைய கட்டுப்பாட்டை மீறி தடம்புரண்டு நீலாவின் வீட்டுப் பக்கம் திரும்பியது.

வழியிலிருந்த நாலைந்து பானை சட்டிகளைத் தவிடு பொடியாக்கி விட்டு, வீட்டு வாசலில் கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்த சிவனாண்டியைத் தூக்கி அப்பால் எறிந்து விட்டு, அந்தச் சிறிய கூறை வீட்டில் போய் பலமான மோது மோதி ஒரு அசைப்பு அசைத்துப் பார்த்து விட்டு மோட்டார் சைக்கிள் உருண்டது. ஜம்புநாதனும் கீழே உருண்டு விழுந்தான்.

வீட்டுக்குள் படுத்திருந்த நீலா இந்த அதிர்ச்சியைக் கண்டு திடுக்கிட்டு விழித்தெழுந்தாள். மூலையில் மினுக்கு, மினுக் கென்று மின்னிக் கொண்டிருந்த சிறிய பெட் ரூம் லைட்டை கொஞ்சம் பெரிதாக்கி ''தாத்தா'' என்று கூப்பிட்டுக் கொண்டே வெளியே வந்தாள். வந்தவள் வெளியே கிடந்த அலங்கோலத்தை அந்த மங்கிய ஒளியில் கண்டு ஒன்றும் புரியாமல் திகைத்தாள். அவள் கண்களில் முதலில் பட்டது சிவனாண்டிதான்.

''ஐயோ....தாத்தா......என்ன இது'' என்று அலறியடித்துக் கொண்டு ஓடிச்சென்று சிவனாண்டியைத் தூக்கினாள்.

சிவனாண்டிக்கு அப்படியொன்றும் அபாயம் ஏற்படவில்லை. தலைக்கு வந்த அபாயம் கயிற்றுக் கட்டிலோடு போய்விட்டது. திடீரென ஏற்பட்ட அதிர்ச்சியின் பயனாக சற்றுப் பிரமையடைந்திருந்தான். நீலா போய் அவனைத் தூக்கியபோது தானாக எழுந்துவிட்டான்.

''என்ன தாத்தா இது?'' என்று வியப்புடன் கேட்டாள் நீலா.

''அதுதானே புரியவில்லை'' என்று சுற்று முற்றும் பார்த்தான். நீலா விளக்கை உயரத் தூக்கிப்பிடித்துக் கவனித்தாள்.

ஒரு பக்கம் ஜம்புநாதன் உணர்வற்றுக் கிடப்பதையும், இன்னொரு பக்கம் அவனுடைய மோட்டார் சைக்கிள் உருண்டு கிடப்பதையும் கண்டு இருவரும் ஏககாலத்தில் திடுக்கிட்டனர்.

''பெரிய வீட்டு சின்னய்யா போலிருக்கே'' என்றான் சிவனாண்டி.

''ஐயய்யோ.... இப்போ என்ன செய்யறது தாத்தா'' என்று பதைத்த நீலா சட்டென்று ஜம்புநாதனிடம் ஓடி விளக்கை அவனருகே வைத்து விட்டுக் குனிந்து, அவன் முகத்தைப் பார்த்தாள். மூச்சு விடுவது தெளிவாகத் தெரியவே மெல்ல அவன் தலையைத் தூக்கி தன் மடியில் வைத்துக் கொண்டு ''தாத்தா... உள்ளே போய் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா'' என்றாள்.

சிவனாண்டி ஒரு தகர டப்பாவில் தண்ணீர் கொண்டு வந்தான்.

ஜம்புநாதனின் நெற்றியில் அடிபட்டு ரத்தம் வழிவது பிறகு

தான் நீலாவுக்குப் புரிந்தது. "நல்லா அடிபட்டுவிட்டது போலிருக்கே தாத்தா. ரத்தம் கொட்டுகிறதே" என்று கூவிய நீலா உடனே புடவைத் தலைப்பைக் கிழித்து தண்ணீரில் நனைத்து மெல்ல காயத்தைத் துடைத்தாள். பிறகு துணியை பிழிந்துவிட்டு தலையைச் சுற்றி கட்டினாள். வேறு எங்காவது அடிபட்டிருக்கிறதா என்று ஒரு தடவை உடல் முழுவதும் பரிசோதனை செய்து பார்த்தாள். ஒன்றும் இல்லை என்று தெரிந்ததும், தாத்தாவை வேறு தண்ணீர் கொண்டுவரச் செய்து முகத்தில் கொஞ்சம் தெளித்து சேலை முன்றானையால் துடைத்து விட்டாள்.

ஜம்புநாதனுக்குக் கொஞ்சம் உணர்வு ஏற்பட்டது. கண்களை அகல விழித்து சூழ்நிலையை ஒரு தடவைக் கவனித்து விட்டு எழுந்திருக்க முயற்சிசெய்தான்.

நீலா அவனைத் தாங்கி நன்றாக உட்காருவதற்கு உதவி செய்தாள். சிவனாண்டியிடம் வீட்டிற்குள் தான் படுத்திருந்த கயிற்றுக் கட்டிலை வெளியே தூக்கிவரச் செய்து ஜம்புநாதனை கைலாகு கொடுத்துத் தூக்கி அதில் உட்கார வைத்தாள். பிறகு அவளும் அருகிலேயே உட்கார்ந்து அவனைத் தன் மார்பின் மீது சாய்த்துக் கொண்டு "இப்போ.... எப்படியிருக்கிறது. ரொம்ப ஆயாசமாக இருக்கிறதா" என்று கனிவுடன் கேட்டாள்.

அப்பொழுதுதான் ஜம்புநாதன் பூரண உணர்வு பெற்று தான் இருக்கும் இடம் எது என்பதை உணரலானான்.

நீலாவை அவன் எத்தனையோ தடவை பார்த்திருக்கிறான். அவளைப் பற்றிய கதைகள் எல்லாம் அவனுக்குத் தெரியும். ஆனால் அவளைப் பற்றி ஒரு வினாடிகூட சிந்திக்க வேண்டிய அவசியம் அவனுக்கு ஏற்பட்டதே யில்லை. எத்தனையோ உயர்ந்தரக கட்டழகிகள் அவன் காலடியில் வந்து தானாக விழும் போது நீலாவைப் பற்றி அவன் ஏன் சிந்திக்கிறான்.

இன்று அவனுடைய ஆதரவில் அவள் மார்பில் சாய்ந்து கிடக்கும் அப்போதைய நிலையை நினைக்கும் போது அவனுக்கு வினோதமாகத் தான் இருந்தது. வேறு சமயமாக இருந்திருந்தால் அந்தப் பக்கம் திரும்பிப் பார்க்கவும் அவன் மனம் ஒப்பியிருக்குமா ?

"உடம்பு தேவலைங்களா ?" மீண்டும் கேட்ட நீலாவின் குரலுக்கு "பரவாயில்லை" என்று பதில் கொடுத்துவிட்டு "இங்கே வேறு யாருக்கும் ஒன்றும் அபாயமில்லையே....கொஞ்சம் எதிர் பாராமல்....என்னென்னவோ நடந்து விட்டது........" என்று தயங்கிய குரலில் கேட்டு விட்டுத் திரும்பி உட்கார்ந்தான்.

நீலா எழுந்து அவன் முன்னால் நின்றுக் கொண்டு "அப்

இந்திய மக்களுக்கு எங்கள் குதூகல

பொங்கல் வாழ்த்து உரித்தாகுக

★ ★ ★

தமிழர் தலைவர்

திரு. ம. பொ. சிவஞானம்

எழுதிய

தமிழகத்தில் தமிழ் ஆட்சி

இன்றைய தமிழகத்தின் அரசியல் நிலையை அலசி ஆராய்ந்து, எதிர் காலத் தமிழகத்திற்கு வழி வகுத்துக் காட்டும் அதி உன்னத அரசியல் நூல்.

80 பக்கங்கள் விலை 8 அணா.

மார்ச் முதல் வாரத்தில் வெளியாகிறது

விபரங்களுக்கு :

'உமா' தபால் பெட்டி நெ. 1377. சென்னை-1.

நறுமண உலகின் மூவேந்தர்கள்..

K.T.R

சேரன்
சோழன்
பாண்டியன்
ஜவ்வாது
பத்திகள்

K.T.R. வாசனைத் திரவியசாலை

விஜயபுரம்....... தஞ்சைமாவட்டம்.

படியெல்லாம் ஒன்றுமில்லை. ஆனால் அப்படி ஏதாவது நடந்து விட்டால்தான் என்ன'' என்றாள் சிரித்துக் கொண்டே.

ஜம்புநாதனுக்கு அவள் பேச்சு பிடிபடவில்லை. மௌனமாக அவள் முகத்தை உற்றுக் கவனித்தான். நீலா மீண்டும் பேசத் தொடங்கினாள்.

''ஏனென்றால் நாங்கள் ஏழைகள்—ஊராரின் வெறுப்புக்கு இலக்கான அபலைகள். இப்படிப் பட்ட விபத்துக்களினால் எங்கள் உயிருக்கு ஏதாவது அபாயம் ஏற்பட்டால் உங்களுக்கு என்ன நஷ்டம்? அது எங்களுக்குத் தான் பெரும் பாக்கியம். இந்த உலகத்திலிருந்து நாங்கள் விடுதலை யடைந்து விடுவோமல்லவா....''

நீலாவின் தெளிவான—விஷமத்தனமும் அர்த்த புஷ்டியும் நிறைந்த பேச்சைக் கேட்டு ஜம்புநாதன் பிரமித்துப் போய் விட்டான். இவ்வளவு புத்தி சாலித்தனமாக நீலா பேசுவாள் என்று அவனால் கனவு கூட கண்டிருக்க முடியுமா?

அவன் வியப்புடன் தலை நிமிர்ந்து நீலாவைப் பார்த்த போது சிவனாண்டிக் கிழவன் அவளிடம், அவள் பேசிய பேச்சை கைச் சைகையால் கண்டித்துக் கொண்டிருப்பதைக் கண்டான்.

நீலா கலகல வென நகைத்துக் கொண்டு ''பார்த்தீர்களா...நான் உங்களிடம் தாறுமாறாகப் பேசுவதாக தாத்தா கண்டிக்கிறார். பாவம் அவர் எதற்குத் தான் பயப்படுகிறாரோ தெரியவில்லை. நீங்கள் என்ன அவ்வளவு பயங்கரமான மனிதரா? அப்படித்தான் வைத்துக் கொள்வோமே. இப்போது நாங்கள் அனுபவிப்பதைவிட அதிகமாக வேறு என்ன எங்களுக்கு கஷ்டம் வந்துவிடப் போகிறது....ஐயே....தாத்தா'' என்றாள் வெகு சரளமாக.

நீண்ட நாட்களாக நெருங்கிப் பழகியவள் மாதிரி அவள் பேசும் தன்மையும், பேச்சில் மலிந்திருக்கும் குற்றச் சாட்டுகளும் ஜம்புநாதனை வாயைத் திறக்கவிட வில்லை. அவர்களிடம் என்ன சொல்லி விடை பெற்றுத் திரும்புவதென்றே புரியாமல் திகைத்து சற்று நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தான். பிறகு நீலாவின் முகத்தைத் தயக்கத்துடன் பார்த்து ''நீ செய்த உபகாரத்துக்கு நான் மிகவும் கடமைப் பட்டவன்....'' என்று சொல்லிக் கொண்டே போனவனின் பேச்சில் நீலா குறுக்கிட்டு ''அடடா.... மறந்துபோய் ஏதாவது வாக்குறுதி கொடுத்து விடாதீர்கள். அப்புறம் இந்த நாதியற்றவர்களுக்கு அனுதாபம் காட்டிய குற்றத்துக்கு பெரிய எஜமான் உங்களை தண்டித்து விடப் போகிறார்'' என்று சிரித்துக் கொண்டே கூறினாள்.

ஜம்புநாதன் கயிற்றுக் கட்டிலை விட்டு எழுந்திருக்க முயன்றான். நீலா பரபரப்புடன் அவன் கைகளைப் பிடித்து உட்கார வைத்து ''இந்த அலங்கோல நிலையில் நீங்கள் எப்படி செல்ல முடியும். கொஞ்ச நேரமாவது படுத்து ஓய்வு எடுத்துக் கொண்டால் தான் தெம்பாக இருக்கும். பேசாமல் படுத்துத் தூங்குங்கள். பொழுது விடிவதற்குள் எழுப்பி விடுகிறேன். அப்புறம் போய்விடலாம்'' என்று கூறி விட்டு அவன் பதிலை எதிர் பார்க்காமலே அவன் உட்கார்ந்திருந்த கட்டிலிலேயே படுக்கைக்கு ஏற்பாடு செய்தாள். ''இந்தப் படுக்கையும், தலையணையும் மிகச் சாதாரணமானது தான். ஆனால் ஏழைகளின் மனசு மாதிரி இது சுத்தமாக இருக்கும். அசூயை படாமல் படுத்துக் கொள்ளுங்கள்'' என்றாள்.

உண்மையாகவே தலையில் பட்ட பலமான அடி அவன் உட

வில் பெரிய அதிர்ச்சியை உண்டு பண்ணியிருந்ததால் மிகவும் அயர்வாகவே அவனுக்கு இருந்தது. தூக்கமும் கண்ணைச் சுழற்றவே பதிலொன்றும் பேசாமல் படுத்து சிறிது நேரத்திற்குள் நல்ல துயிலில் ஆழ்ந்து விட்டான்.

அவன் தூங்கி விட்டான் என்பதை உணர்ந்த சிவனாண்டி நீலாவைத் தனியாக அழைத்து "அந்த மனிதனை பேசாமல் வீட்டுக்குப் போக விடுவதை விட்டு........ இந்த நேரத்தில் யாராவது பார்த்து இதை பெரிய ஐயாகிட்டே சொல்லித் தொலைச்சா என்ன ஆகிறது?" என்றான் சற்று திகில் கலந்த குரலில். ஊராரின் ஒத்துழையாமையினால் அவன் பட்ட கஷ்டம் அவனுக்கல்லவா தெரியும்.

"எல்லாம் எனக்குத் தெரியும் தாத்தா. நீ பேசாமல் போய் படுத்துக்கோ. போகப் போக நீதான் பாரேன் வேடிக்கையை" என்று சிவனாண்டியைக் கையைப் பிடித்து அழைத்துச் சென்று வீட்டுக்குள் படுக்க வைத்தாள் நீலா.

3. ஒட்டும் உள்ளங்கள்!

அன்றிரவு நிகழ்ந்த அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு ஜம்புநாதன் நீலாவைச் சந்திக்கவில்லை. சில தடவை மாலை நேரங்களில் அவள் வீட்டுப் பக்கம் சென்று அவளுக்கு நன்றி கூறிவிட்டு வரலாம் என்றுப் புறப்படுவான். கொஞ்ச தூரம் வந்ததும் அவனுடைய தீர்மானம் மாறிவிடும். அன்று நீலா அவனுக்குப் பேருதவி செய்தாள் என்பதை அவன் மறந்துவிடாவிட்டாலும் தான் சென்று நன்றி செலுத்தக்கூடிய அவ்வளவு தகுதி அவளுக்கு உண்டா என்ற எண்ணம் அவன் மனதில் தலைகாட்டும். அதே நேரத்தில் அவள் அன்று நடந்துகொண்ட விதத்தில்-பேசிய தோரணையில் ஏதோ ஒரு இனிமை பொதிந்திருப்பது போலத் தோன்றும். அந்த இனிமை வெளிப்படையாக கண்ணால் பார்க்கக்கூடிய தன்மையுடையது அல்ல என்பதும் அவனுக்குப் புலப்பட்டது. ஆகவே இது ஒரு சாதாரண விஷயம் என்று ஒதுக்கிவிட்டு வழக்கம்போல் தன் அலுவல்களில் ஈடுபட்டான். எத்தனையோ முறை நீலாவின் வீட்டைத் தாண்டி மோட்டார் சைக்கிளில் செல்லும்போது அவளின் நினைவு அவன் மனதில் பளிச்சிடும். புரிந்து கொள்ள இயலாத ஆவலுடன் அந்த வீட்டுப்பக்கம் கண்களை ஓட்டுவான். சிற்சில சமயங்களில் நீலாவின் பேச்சுக் குரல் மட்டும் கேட்கும். அவளை நேரில் பார்க்க முடியவில்லை. அந்த இடத்தை விட்டுத் தாண்டியதும் அவளைப் பற்றி மறந்தே விடுவான்.

வேப்பங்குளத்தைத் தாண்டி அடுத்த டவுனுக்குச் செல்லும் கப்பி ரோட்டில் ஒருநாள் மாலை வழக்கம்போல வேகத்துடன் மோட்டார் சைக்கிளில் ஜம்புநாதன் திரும்பிக் கொண்டிருந்தான்.

திடீரென யாரோ கைத்தட்டிக் கூப்பிடுவது போன்ற ஓசை எழவே, ஜம்புநாதன் மோட்டார் சைக்கிளின் வேகத்தைக் குறைத்துக் கொண்டே திரும்பிப் பார்த்தான். சற்று தொலைவில் இருந்த பனை மரத் தோப்பின் பக்கமிருந்து தலையில் பெரிய சுள்ளி கட்டுடன் நீலா அவனை நோக்கி வந்துக் கொண்டிருந்தாள்.

ஜம்புநாதன் மோட்டார் சைக்கிளை நிறுத்திக்கொண்டு, அதன் மீது உட்கார்ந்தபடியே அவள் வரவுக்காக காத்திருந்தான். அவள் அருகேவந்ததும் "என்ன விசேஷம்" என்று கம்பீரமாகக் கேட்டான்.

"ஒரு சிறிய ஆலோசனை சொல்லிப் போகலாம் என்று

வந்தேன்'' என்ருள் நீலா புன்னகையுடன்.

''என்ன ?''

''இப்படி உங்கள் வாகனத்தை விரட்டாதீர்கள். அது எங்காவது ஒரு வீட்டில் மோதி உங்களைக் கீழே தள்ளிக் காயப்படுத்தி விட்டால் அப்புறம், அந்த வீட்டில் உள்ளவர்களுக்குத் தானே கஷ்டம். உங்களுக்கு சிகிச்சைகள் எல்லாம் செய்து அனுப்ப அவர்களுக்கு வசதியிருக்க வேண்டுமே....''

இதை சிரிக்காமல் உண்மையாகவே சொல்பவள் மாதிரி அவள் அபிநயித்ததைக் கண்டதும் ஜம்புநாதனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

''இதைச் சொல்வதற்குத்தான் கூப்பிட்டேன். நீங்கள் போகலாம்'' என்று தலையிலிருந்த சுள்ளிக் கட்டைப் பிடித்திருந்த கைகளை எடுத்து குறும்புத்தனம் மிளிர ஒரு கும்பிடு போட்டு விட்டு நீலா திரும்பி நடக்கத்தொடங்கி விட்டாள்.

அவள் நடந்து செல்வதை இமை கொட்டாமல் கவனித்த ஜம்புநாதன் மோட்டார் சைக்கிளை விட்டு கீழேஇறங்கி அதை ஒரு பக்கமாக நிறுத்தி விட்டு நீலா சென்ற திசையை நோக்கி நடந்தான்.

அந்த பனந்தோப்புக்கு அருகே பெரிய வாய்க்கால் ஒன்று இருந்தது. நீர் வற்றிக் கிடந்த அந்த வாய்க்காலின் மனற்பாங்கான இடத்தில் நீலா உட்கார்ந்து சுள்ளிக் கட்டைப் பிரித்து ஒழுங்காக அடுக்கிக் கொண்டிருப்பதை கரைமீதிருந்து கவனித்த ஜம்புநாதன் கீழேஇறங்கி அவளுக்கு அருகே சென்று நின்ருன்.

அவனைக் கண்டு பரப்பரப்படைந்தவள்போல நடித்த நீலா எழுந்து, ''அடடா.... தங்கள் பாதம் நோக இவ்வளவு தூரம் வந்து விட்டீர்களே........ அபசாரம்.... அபசாரம்....'' என்ருள்.

ஜம்புநாதன் சிரித்தவாறு மணலில் உட்கார்ந்துக் கொண்டே, ''ரொம்ப வெல்லாம் வேடிக்கை செய்கிருயே....'' என்ருன்.

''ஆமாம்........ நாங்களெல்லாம் விளையாட்டுப் பொம்மைகள்தானே... எங்களையெல்லாம் பார்த்தால் வேடிக்கையாகத்தான் இருக்கும்'' என்ருள் நீலா போலிக் கோபத்துடன்.

''நீலா.... இப்படி பேச்சுக்குப் பேச்சு வாயடியடித்தால் கேட்பவர்களுக்கு கோபம் வரும் என்பதை மறந்து விடுகிருயே....'' என்று விளையாட்டாகப் பேச ஆரம்பித்தான் ஜம்புநாதன்.

''கோபம் வரவேண்டும் என்பதற்குத் தானே பேசுகிறேன். உங்களுக்குக் கோபம் வந்தால் இன்னெரு தடவை மோட்டார் சைக்கிளை எங்கள் வீட்டிலே கொண்டுவந்து இடிக்கப் போகிறீர்கள். போன தடவை தாத்தாவுக்குப் பிரயாணச் சீட்டு வாங்கிக் கொடுக்கப் பார்த்தீர்கள். இந்தத் தடவை என்னையும் அனுப்பிவிட்டால்........''

அவள் பேச்சு முடிவதற்குள் ஜம்புநாதன் "நீலா....." என்ருன்.

"என்ன ?"

"இப்படி உட்கார்"

"ஏன்........ ?"

"உட்கார் சொல்கிறேன்." அவன் பேச்சில் ஒருவித கனிவு தொனித்தது. எத்தனையோ அழகிகளிடம் பழகி அலுத்துப் போன தன் மனம் எதிரிலிருக்கும் அந்த சாதாரண பெண்ணிடம் சரணடைவதை உணர்ந்த ஜம்புநாதனுக்கே ஆச்சரியமாகத்தான் இருந்தது.

நீலா அவனுக்கு மிகவும் சமீபத்தில் உட்கார்ந்து கண்களை அகல விரித்து அவன் சொல்வதைக் கேட்கத் தயாராளுள்.

"அன்று அந்த விபத்து நேரும்வரை நான் உன்னைப் பற்றி சிந்தித்ததேகிடையாது... இப்பொழுது உன்னைப் பற்றி அடிக்கடி நினைக்கிறேன்".

இதை ஜம்புநாதன் சொன்ன போது நீலா வெட்கத்துடன் தலையைக் குனிந்துக் கொண்டு கடைக் கண்களால் அவனை நோக்கினுள். அவன் தொடர்ந்து பேசினுன்.....

"உன் குடும்ப விஷயமாக உன்னைக் கேட்டு ஏதாவது தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அதாவது...."என்று சொல்லியவாறு நீலாவின் முகத்தைக் கவனித்த ஜம்புநாதன் திடுக்கிட்டுவிட்டான். திடீரென ஏற்பட்ட கோபத்தால் அவள் முகம் வெளுத்திருந்தது. உதடுகள் துடித்துக் கொண்டிருந்தன.

"புதிதாக தெரிவதற்கு என்ன இருக்கிறது. என் அம்மா ஒழுக்கக்கேடாக நடந்து கெட்டுப்போனவள்; நான் தப்பு வழியில் அவள் வயிற்றில் பிறந்தவள். போதுமா?" என்ருள் படபடப்புடன்.

ஜம்புநாதன் அமைதியுடன் அவளை நோக்கி "இந்த வதந்தியை நான் நம்பவில்லை நீலா" என்ருன்.

"உங்கள் யூகந்தான் தவறு. ஊர் ஜனங்களின் தீர்மானம் சரிதான்." என்ருள் நீலா.

அவள் கோபத்துடனேயே பேசுவதாக எண்ணிய ஜம்புநாதன் "நீலா........நான் தான் நம்ப வில்லை என்று கூறுகிறேனே. நீயாக ஏன் உன் மனதைப் புண் படுத்திக் கொள்கிருய்" என்று அனுதாபத்துடன் கேட்டான்.

இப்பொழுது நீலா பழைய நிலையை அடைந்து விட்டாள். வழக்கமான புன்னகையுடன், "நீங்கள் நம்பாவிட்டால் நான் என்ன செய்ய முடியும்? உண்மைஎன்னவோ அதுதான்" என்று. கூறிவிட்டு ஜம்புநாதனின் முகத்தை உற்றுக் கவனித்தாள். அவன் தலையைக் குனிந்து கொண்டு மணலில் விரலால் கோடுகள் இழுத்துக் கொண்டிருந்தான். அவன் மனம் பலமான சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறது என்று நீலா உணர்ந்தாள்.

கொஞ்ச நேரம் இப்படியே ஓடிற்று; நீலா இந்த அமைதியைக் கலைப்பதற்காக "இனிமேல் என்னைப் பார்க்க உங்களுக்குப் பிடிக்காது." என்று வேடிக்கையாகப் பேச ஆரம்பித்தாள்,

"ஏன் அப்படி ?"

"என்னைப் பற்றி உங்கள் மனதில் இருந்த நல்ல அபிப்பிராயத்தை இப்போது நானே போக்கடித்து விட்டேன்."

இப்படிக் கூறிய நீலா வானத்தை அண்ணாந்து பார்த்து விட்டு "இருட்டும் நேரமாகி விட்டதே. நான் போகிறேன். வீட்டில் தாத்தாவுக்கு உடம்பு சுகமில்லை" என்று பரபரப்புடன்எழுந்தாள்.

"எப்பொழுதாவது உன்னைப் பார்க்க உன் வீட்டுக்கு வரலாமா?" என்று நடந்துக் கொண்டிருந்த நீலாவை கேட்டான் ஜம்புநாதன்.

"உங்களை பயமுறுத்தக் கூடியது அங்கே ஒன்றுமே இல்லை. தாராளமாக எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம்," என்று திரும்பி ஒரு புன்னகை உதிர்த்து விட்டு தலையில் தாங்கிய சுள்ளிக் கட்டுடன் வாய்க்கால் கரை மீது ஏறினாள் நீலா. ஜம்புநாதனும் எழுந்தான்.

4. அதிதி உபசாரம்!

குடும்ப சம்பந்தமான ஒரு முக்கிய அலுவல் காரணமாக சரவணபவானந்தர் ஜம்புநாதனை சென்னைக்கு அனுப்பியிருந்தார். சென்றவன் வேலை முடிந்த பிறகும் சுமார் பத்து நாட்களுக்கு மேல் சென்னையில் உல்லாசமாகப் பொழுது போக்கி விட்டு ஊர் திரும்பினான்.

அவனை அழைத்துப் போக ஸ்டேஷனுக்கு வந்திருந்த வண்டியில் ஏறி உட்கார்ந்த உடனேயே அவனுக்கு நீலாவின் நினைவு வந்தது. உடனடியாக அவளை சந்தித்துப் பேச வேண்டும் போன்ற ஒரு ஆவல் அவன் மனதில் எழுந்து நின்றது. தன் மன நிலையை உணர்ந்த போது ஜம்புநாதன் தனக்குத் தானே வியந்து கொண்டான். நூற்றுக் கணக்கான உயர்தர அழகிகளுடனெல்லாம் ஜம்புநாதன் இது வரை தொடர்பு வைத்திருக்கிறான். ஆனால் அவர்களில் ஒருத்தியின் நினைவு கூட அவன் மனதில் நிலைத்ததில்லை. அவர்களை விளையாட்டுப் பொம்மைகள் போலத் தான் ஜம்புநாதன் கருதினான். ஆனால் இந்த நீலாவின் மீது ஏன் இப்படிச் சுழலுகிறது? இந்த உணர்ச்சிக்கு என்ன பெயர் கொடுப்பது?

"கேட்டிங்களா ஐயா" என்று ஏதோ கூறத் தொடங்கினான் வண்டிக்காரன். அவன் சரவணபவானந்தரின் வீட்டு ஆள்தான். ஜம்புநாதனின் நடவடிக்கைகளுக்கு கொஞ்சம் அனுசரணையாக இருப்பவன்.

"என்ன?"

"பாவம்......அந்தப் பெண் நீலா அனாதையாகி விட்டாள்"

"ஏன்?"

"அவள் பாட்டன் நாலு நாளைக்கு முன்னால் செத்துப் போய் விட்டான்."

"ஆ........அப்படியா?" என்று அதிர்ச்சியடைந்தவன் போல சத்தம் போட்டான் ஜம்புநாதன். வண்டிக்காரனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"இப்போ....அதே இடத்தில் தனியாகத்தான் இருக்கிறாளா?" என்று படபடப்புடன் கேட்டான் ஜம்புநாதன்.

"ஆமாங்க" என்று கூறிவிட்டு வண்டிக்காரன் அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தான்.

அன்றிரவு சுமார் எட்டு மணிக்கு ஜம்புநாதன் நீலாவின் வீட்டு வாசலில் வந்து நின்றான். பெரும்பாலும் அந்த நேரத்தில் அந்தப் பக்கம் ஜனசந்தடி அற்று விடும்.

வாசல் தட்டி பாதி மூடியிருந்தது. உள்ளே மங்கலாக விளக்கு ஒன்று ஒளி விட்டுக் கொண்டிருந்தது. மெல்ல உள்ளே எட்டிப் பார்த்தான். நீலா சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

"விருந்தாளி வந்திருக்கிறேன். உள்ளே வரலாமா?" என்று மெதுவாக குரல்கொடுத்தான் ஜம்புநாதன்.

நீலா சட்டென நிமிர்ந்து பார்த்தாள். வந்திருப்பது ஜம்புநாதன் என்று புரிந்துக் கொண்

டதும் "ஏழைகள் வீட்டுக் கதவுகளுக்கு தாட்பாள் கூட இருக்காது. தாராளமாக வரலாம்" என்று பரபரப்புடன் எழுந்து ஒரு மூலையில் சாய்த்து வைக்கப்பட்டிருந்த கயிற்றுக் கட்டிலை இழுத்துப் போட்டாள்.

ஜம்புநாதன் உள்ளே போய் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்தான்.

நீலா பக்கத்து அறைக்குள் நுழைந்தாள். சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு இலையில் கொஞ்சம் உப்புமா எடுத்து வந்து கட்டிலின் மேலேயே வைத்து, "கையலம்புங்கள்" என்று சிறிய செம்பொன்றை அவன் முன் நீட்டினாள்.

"என்ன இது........" என்று திகைப்புடன் கேட்டான் ஜம்புநாதன். பிறகு சாப்பிடத் தொடங்கினான்.

சாப்பிட்ட பிறகு ஜம்புநாதன் "உன் தாத்தா விஷயம் கேள்விப் பட்டேன். பாவம், உனக்கு துயரத்துக்கு மேல் துயரமாக வருகிறது. இனி எப்படி வாழ்க்கை நடத்தப் போகிறாய்" என்று அனுதாபத்தோடு கேட்டான்.

"எங்களுக்கெல்லாம் துணையாக கடவுள் இருக்கிறார். கடவுளே கை விட்டாலும் ஒன்றும் நஷ்டமில்லை. பரலோகம் போவதற்கு வழிதானா இல்லை" இதைச் சொல்லும் போது நீலாவின் மன வேதனை குரலில் கலந்து ஒலிப்பதை ஜம்புநாதன் நன்றாக உணர்ந்தான்.

"பரலோகம் போவதற்கா?"

"அதாவது சாவதற்கு........"

"நீ ஏன் சாக வேண்டும்?"

"என்ன கேள்வி இது. வாழ முடியாததால் தான்......" இதை நீலா சலிப்போடு கூறிக்கொண்டாள்.

திடீரென ஜம்புநாதன் எழுந்து நீலாவின் கரங்களை இருகப் பற்றிக்கொண்டு "உன்னை சாக விடுவேன் என்று நினைத்துக் கொண்டாயா? அதுதான் நடக்காது" என்று கூவினான்.

எதிர்பாராத இந்த நிகழ்ச்சி நீலாவை சிறிது நேரம் திகைக்க வைத்து விட்டது, பிறகு மெதுவாக, தன் கைகளை விடுவித்துக் கொண்டு, "என்ன இது........" என்று வெட்கத்துடன் தலைகுனிந்துக் கொண்டு நீலா கேட்டாள்.

"உண்மையாகத்தான் சொல்கிறேன். நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். இந்த முடிவு ஒன்றும் அவசரக் கோலம் அல்ல. நன்றாகத் தீர்மானித்து செய்த முடிவு,' என்று உணர்ச்சி பொங்கக் கூறினான் ஜம்புநாதன்.

"உங்கள் தீர்மானத்துக்கு அனந்த கோடி நமஸ்காரங்கள்....என் கஷ்டம் என்னோடு நின்று விடட்டும், என் சந்ததியையும் பற்றவேண்டியதில்லை" என்று கைகளை தலைக்கு மேல் கூப்பி வணக்கினாள் நீலா,

"என்ன சொல்கிறாய்?"

"ஆமாம், எனக்கு ஒரு மகள் பிறந்து, தகப்பன் பெயர் தெரியாமல் வளர்ந்து, ஊராரால் தள்ளி வைக்கப்பட்டு, அனாதையாக வாழ்ந்து........"

"நீலா........" என்று அடித்தொண்டையால் கத்தினான் ஜம்புநாதன். பிறகு ஆத்திரத்துடன் "நான் பெண்கள் விஷயத்தில் இதுவரை நேர்மையற்று நடந்து வந்தது உண்மைதான். ஆனால் மாறி விட்டேன். தெரியுமா?" என்றான்.

"என் தகப்பனார் கூட அப்படித்தான் அம்மாவிடம் கூறினாராம்."

"யார் அந்த படுபாவி.... இப்போது அவன் உயிருடன் இருக்

கிருனு?'' என்று படபடப்புடன் கேட்டான் ஜம்புநாதன்.

நீலா அலட்சியம் ததும்ப சிரித்து விட்டு "அதை விசாரித்து என்ன செய்யப் போகிறீர்கள். புத்திசாலிகளான இந்த ஊர் ஜனங்கள் கெட்டுப்போன அம்மாவுக்குத் தண்டனை கொடுத்தார்களே தவிர, கெடுத்தது யார் என்று இதுவரை சிந்தித்தது கூட இல்லையே" என்ருள்.

"இல்லை, நீலா...... மறைக்காமல் என்னிடம் சொல்...."

"சொன்னுல்........"

"ஏதாவது ஒரு வகையில் பழி வாங்குகிறேன், அதற்குப் பின் என் நிலை எதுவானுலும் சரி உன்னை மணக்கிறேன்."

"என்னை மணப்பது இருக்கட்டும், உங்கள் பழி வாங்கும் படலம் எந்த மட்டில் இருக்கிறது என்று பார்க்கிறேன்" என்று கூறிவிட்டு நீலா ஜம்புநாதனின் காது பக்கம் நெருங்கி 'குசு' குசு வென்ற குரலில் ஏதோ சொன்னுள். உடனே அவன் முகம் திடீரென மாறுதலடைந்தது.

5. அதிர்ச்சியடைந்தார்...!

மாடியில் தன்னுடைய படுக்கை யறையில் தீவிர சிந்தனையோடு உலாவிக் கொண்டிருந்தான் ஜம்புநாதன். அறை நடுவே மின்சார விளக்கு பிரகாசமாக ஒளிவிட்டுக் கொண்டிருந்தது.

திடீரென சரவணபவானந்தர் கோபாவேசத்துடன் உள்ளே நுழைந்தார்.

அவர் வரவை எதிர்பார்க்காதவன் போல "என்ன மாமா" என்று சாவதானமாகக் கேட்டான் ஜம்புநாதன்.

"எனக்கு உள்ள மதிப்பைக் கெடுத்து அவமானத்தை உண்டாக்குவது என்று திட்டமிட்டு விட்டாயா? எப்பொழுது பார்த்தாலும் அந்தப் பரதேசிப் பெண் வீட்டுப் பக்கம் சுற்றுகிருயாமே"

"ஆமாம், அவளைக் கலியாணம் செய்துக் கொள்வதாக நிச்சயித்து விட்டேன்."

"அப்படி ஏதாவது நடந்தால் நீயும் பரதேசிப்பயலா கிளம்பி விட வேண்டியதுதான், தெரியுமா? பெரிய ஜமீன்தார் மாதிரி வாழவேண்டிய நீ அந்த விபசாரி பெற்ற பெண்ணைத்தானுடா கல்யாணம் செய்துக் கொள்ள வேண்டும் உலகத்திலே உனக்குப் பெண்ணு கிடைக்கவில்லை."

"இல்லை, நீங்கள் செய்த பாவத்துக்கு பிராயச் சித்தம் இது"

"பாவமா?" சரவணபவானந்தர் நிலைகலங்கி நின்று ஜம்புநாதனை நோக்கினுர்.

"ஆமாம்! மாமா, உங்கள் நெஞ்சைத் தொட்டுப் பார்த்து பேசுங்கள்"

சரவணபவானந்தர் தலையில் கையை வைத்துக் கொண்டு அதிர்ந்து போய் அருகிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்து விட்டார்.

சுமார் இருபது வருடங்களுக்கு முன்னுல் ஒரு நாள் இரவு அம்மன் கோயில் மாந்தோப்பில் ஒரு தனியிடத்தில் நிகழ்ந்த சம்பவம் சரவணபவானந்தரின் மனதில் சுழன்றது....

"....இதில் குற்றவாளி நான் தான் என்பதை ஒப்புக்கொள்கிறேன்....என்னை மன்னித்து விடு பார்வதி...."

பார்வதி நீண்ட ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டாள்.

"மன்னிப்பதால் உங்கள் மனம் அமைதியடைந்து விட

லாம். ஆனால் என் வாழ்க்கை? என் தந்தையின் மானம்....?...."

"அதற்குத் தான் ஏதாவது மருந்து போட்டு........கர்ப்பத்தை...."

"நிறுத்துங்கள்...." என்று பார்வதி அலறினாள். இதைவிட என்னைக் கொலை செய்துவிடலாம்...."

"பார்வதி....உனக்குப் புரியாதது ஒன்றுமில்லை. ஊரில் எனக்கு இருக்கும் நல்ல பெயர், மதிப்பு இவை வீணாக கெட்டுப் போவதால் உனக்கும் நன்மையில்லை. எனக்கும் சரியல்ல. விஷயம் ஊருக்குத் தெரிந்தால் நாளையே என் கௌரவம் என்ன ஆகும் ....?"

"அதற்காக....?"

".....கர்ப்பத்தை ரகஸியமாக சிதைத்து விடலாம். உன் வாழ்வுக்குத் தேவையான வசதிகள் எல்லாம் செய்து வைக்கிறேன். நீ விரும்பினால் பிறகும் ரகஸியமாக நமது நட்பு...."

"உம்...." என்று பார்வதி உறுமினாள். "உங்கள் கௌரவம் தானே காப்பாற்றப்பட வேண்டும்....அதை நான் செய்கிறேன். என் மானத்தை அடகு வைத்தாவது செய்கிறேன்.... ஆனால் என் வயிற்றுக் குழந்தைக்கு ஆபத்து வர நான் சகியேன். நான் தாய்.... எப்படித் தாய்மை அடைந்திருப்பினும் பரவாயில்லை. நான் ஆக்கப் பிறந்தவள். அழிப்பதற்காக வாழ்பவளல்ல. அது உங்கள் ஆண் வர்க்கத்துடனேயே நின்று விடட்டும். என் தாய்மையைக் காப்பதற்காக நான் அழிகிறேன்....என்னை அழித்துக் கொள்கிறேன்....நீங்கள் அஞ்சாமல் செல்லுங்கள்....உங்கள் கௌரவம் நிச்சயம் காப்பாற்றப்படும்...."

சரவண பவானந்தர் தலையை ஒரு தடவைப் பலமாக உலுக்கிக் கொண்டு மூளையில் சுழலும் அந்த நிகழ்ச்சிக்கு முற்றுப் புள்ளி வைக்க முயன்றார். பிறகு கண்களை அகல விரித்து எதிரே கம்பீரமாக நின்றிருந்த ஜம்புவை நோக்கி "ஜம்பு" என்றார் தழதழத்த குரலில்.

ஜம்பு நிமிர்ந்து பார்த்தான்.

"நீலா என்னுடைய மகள் என்று வெளிப்படையாக சொல்லிக் கொள்ள இப்பொழுதும் எனக்கு வெட்கமாக இருக்கிறது. ஆனால் பார்வதிக்கு இழைத்த கொடுமைக்கு பிராயச்சித்தமாக நீலா இந்த வீட்டில் ராணியாக உலாவுவதை நான் அனுமதிக்கிறேன். இதனால் என்ன நேர்ந்தாலும் சரி.... ஆனால் தயவுசெய்து நீலாவைப் பற்றிய ரகஸியத்தை ஊரார் கண்களில் படாமல் நீதான் காப்பாற்ற வேண்டும்...."

ஜம்பு புன்னகையுடன் தலையை அசைத்தான்.

6. மாறுதல்...!

ஊர் மக்களின் ஆராய்ச்சிக்கு இலக்கான அந்தத் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. நல்ல சுப முகூர்த்தத்தில் பல பெரியோர்கள், அரசியல் தலைவர்கள் முன்னிலையில் ஜம்புநாதன் நீலாவுக்கு மாலையிட்டான்.

திருமணம் முடிந்த உடனே ஜம்புநாதன் செய்த முதல் வேலை சரவணபவானந்தரை பிரமிக்க வைத்தது. தனக்கு வரவிருந்த அவரது திரண்ட சொத்துக்களை உதறித் தள்ளிவிட்டு நீலாவுடன் அவன் வெளியே புறப்பட்டுச் சென்று ஒரு சிறு வீட்டில் குடியிருந்தான். தனக்காக வேலை யொன்றும் தேடிக் கொண்டான். ஆடம்பரத்தின் நடுவே செல்வாக்காக வாழ்ந்த அவனால் அந்த எளிய வாழ்வை எப்படி மேற்கொள்ள முடிந்ததென்றே சரவணபவானந்தரால் யூகிக்க முடியவில்லை.

மிகச் சிறந்த
மிட்டாய்கள்
Babu's
HIGH CLASS
SWEETS
பாபு கன்பெக்ஷனரி - மதராஸ் ௨௧.


Phone: 2200
UMA
TRADE MARK
UP
PRINTERS
PRINTERS &
CARDBOARD BOX MAKERS
Specialists in
CARTONS & CARDBOARD BOXES
4/32, THATHAMUTHIAPPAN ST, MADRAS-1.
எல்லாரக அட்டைப்பெட்டிகள் தயாரிப்பதில் சிறந்தது
உமா பிரிண்டர்ஸ்
போன்: 2200
4/32, தாதாமுத்தியப்பன் தெரு, மதராஸ்-1.

தேனும் தமிழ்நாடும்!

மே. சக்கரவர்த்தி

நமது பாரத நாடு, சகல வளங்களும் பொருந்திய பரந்த செழிப்புள்ள நாடு. உலகத்தில் எந்த நாட்டில் விளையும் விளை பொருள்களையும் நம் நாட்டில் விளைவிக்க முடியும். நம் நாட்டின் தட்ப வெப்ப நிலை இடத்துக்கு இடம் அத்துணைப் பொருத்த முடையதாயிருக்கிறது. குளிர் மிகுந்த ஐரோப்பாக் கண்டத்தில் விளையும் விளை பொருள்களைப் பெங்களூர், நீலகிரி, கொடைக்கானல், டேராடூன், சிம்லா, காஷ்மீர் முதலிய பிரதேசங்களில் விளைவிப்பதை நீங்கள் காணலாம். காடும், மலையும், ஆறும் நம் நாட்டை வளப்படுத்துகின்றன.

புராணங்களில் கூறப்படும் காமதேனுவை நாம் பார்க்கவில்லை. ஆனால், நம் இந்திய மாதாவாகிய பூமியையே காமதேனுவாகப் பார்க்கின்றோம். காமதேனு கருதியவற்றைக் கொடுப்பது போல, நம் பாரத பூமியும் கருத்தூன்றி விதைத்த விதைகள் முளைத்து, ஒன்றுக்குப் பத்தாகப் பலன் கொடுக்கிறது. "இனிய பொழில்கள், நெடிய வயல்கள் எண்ணரும் பெரு நாடு; கனியுங் கிழங்கும் தானியங்களும் கணக்கின்றித் தருநாடு" என்று பாரதியார் புகழும் வளமுள்ள நாட்டைப் பெற்ற நாம், வேலையில்லாத் திண்டாட்டத்துக்குள்ளாவது அதிசயமாயிருக்கிறது. படித்த ஆயிரக்கணக்கான வாலிபர்கள் பட்டணங்களின் தெருக்களிலே பரதேசிகளைப் போலச் சாலைக்குச் சாலை, கடைக்குக் கடை, வீட்டுக்கு வீடு வேலை தேடி அலைகின்றனர்.

ஐரோப்பியரும், பிற நாட்டாரும் நமது தேசத்தை முதன் முதலில் கண்டதும், இது பொன் விளையும் நாடு என்று புகழ்ந்தார்கள். ஒரு சிலர், இந்தியாவில் பொன் காய்க்கும் மரங்கள் இருக்கின்றன; அவற்றிலிருந்து பொன்னை உலுக்கிக் கொண்டு வரலாம் என்றனர். அவர்களெல்லாரும் எவற்றைப் பார்த்து இங்ஙனம் சொன்னார்கள்? நமது நாட்டில் பொன் போன்று விளையும் பல மூலப் பொருள்களைப் பார்த்தன்றோ? கரியும் இரும்பும் கிடைக்கும் நாட்டார் பொன்னைக் கொழித்து நல்லுணவும் நற்போகமுங் கொள்ளுகின்றனர். பொன் விளையும் நாட்டிற் பிறந்த நாமோ, உண்ண உணவுக்கும், உடுக்க உடைக்கும் வகையின்றி விழிக்கின்றோம், காரணம் யாது? அருகிலிருக்கும் தண்ணீரை விட்டு, அதி தூரத்திலிருக்கும் கானலை நன்னீரென்று நாடுவது போல, நம் வீட்டைச் சுற்றியிருக்கும் நன்செயும், புன்செயும், தோட்டமும், வாவியும் விட்டுச் சில வெள்ளிக் காசுகளுக்காக நம்மவர்கள் உத்தியோகப் பித்துப் பிடித்தலைவதனாலன்றோ!

இங்ஙனம் உத்தியோகப் பித்தர்கள் பெருகினாலும், நம் நாட்டு மக்களின் பெரும்பாலோர். இன்னும் விவசாயிகளாகவேயிருந்து வருகின்றனர். அப்படியிருப்பவர்கள், நூற்றுக்கு எண்பதின்மர்

என்று சொல்லலாம். அவர்களில் பெரும்பாலோர் கல்வியறிவில்லாதவர்களா யிருப்பதனுலே, நவீன முறைகளைக் கையாண்டு எங்ஙனம் குறைந்த பரப்புள்ள நிலத்தில் நிறையத் தானியங்களை விளைவிக்கலாம் என்பதையும், விவசாயத் தொழிலுடன் எந்தெந்த உப தொழில்களைச் செய்து, தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளலாம் என்பதையும் அறியாதவர்களா யிருக்கின்றனர். மேனாட்டாரோ, குறைந்த பரப்புள்ள நிலத்தில், நவீன முறைகளைக் கையாண்டு விவசாயஞ் செய்து விசேஷ தானியங்களை விளைவிக்கின்றனர். அன்றியும், அவர்கள், விவசாயப் பண்ணையிலேயே பல உப தொழில்களையுஞ் செய்து, அதிக வருமானத்தை யடைந்து குபேர சம்பத்தாய் வாழ்கின்ருர்கள்.

ஐரோப்பிய விவசாயி, பத்து ஏகர் நிலமுடையவனுயிருந்தால், அதில் ஐம்பது பேருக்கு மேல் வேலையுங் கொடுத்துத் தானும் துரை போல வாழ்வதாக மேனுடு சென்று வந்த என் நண்பர் ஒருவர் சொன்னுர். அந்தப் பத்து ஏகரில் ஒரு பக்கம் நன்செயும், மற்ருெரு பக்கம் புன்செயும், இன்னொரு பக்கம் காய்கறிகளையும், பழங்களையும் வேருெரு பக்கம் கால் நடைகளுக்கு உபயோகமான தீவனங்களையும் பயிரிடுவானும் அறிவுள்ள அந்த மேனுட்டு விவசாயி. அத்துடன் அவனுடைய இல்லமும், அந்தப் பத்து ஏகர் மத்தியில் தானிருக்குமாம். அவன் மேலும் அந்தப் பண்ணையில் பத்துப் பசுக்கள், நூறு கோழிகள், இருபது பன்றிகள், ஐம்பது தேன் கூடுகள் முதலியவைகளையும் வைத்திருப்பானும். அவைகளுக்குத் தன் பண்ணை

தமிழ் நாட்டில் ஒரு தேனிப் பண்ணை.

யில் விளையும் விளை பொருள்களையே ஆகாரமாகக் கொடுத்து, அவற்றின் மூலம் விவசாயப் பொருள்களில் கிடைக்கும் வருமானத்தை விடப் பத்து மடங்கு வருமானப் பொருள்களைப் பெறுவானும். அவன் வளர்க்கும் பசுக்களுக்குத் தன் பண்ணையில் பயிராகும், தீவனங்களைக் கொடுத்துப் பசு ஒன்றிலிருந்து பத்துப் படி பால் வீதம், பத்துடின் பால் சேகரித்து, ஆட்கள் மூலம் நகர்ப் புறங்களுக்குக் கொண்டு போய் விற்றுப் பணமாக்குவான். பால் விலையில்லாக் காலத்தில், அதைப் பவுடராகச் செய்து, சிறு சிறு டின்களில் அடைத்து வியாபார சாலைக்கு அனுப்பி விடுவான். இத்தொழிலில் பத்துப்பேருக்கு மேல் அவனிடம் வேலையிருக்கும்.

இ∴தன்றி, அவன் வளர்க்கும் நூறு கோழிகளை, நம்நாட்டில் ஓரிரு கோழி பிடிக்கும் காற்ரேட்டமில்லாக் கூடையில் பத்துக் கோழிகளைப் போட்டு அடைத்து, ஆகாரத்துக்குக் குப்பைக் கிளறி வயிறு வளர்க்க விடுத்துச் செய்வது போலில்லாமல், தன் பண்ணையில் பயிராகும் தானியங்களையும், கிரைகளையும் ஆகாரமாகக் கொடுத்து, சுகாதார முறையில் அமைக்கப்பட்ட வீடு போன்ற கோழி வீட்டில் வைத்து வளர்த்து வருவான். அந்தக் கோழிகள் ஓராண்டில் முன்னூறுக்கு மேற்பட்ட நாட்கள் வரையில் முட்டை யிட்டுக் கொண்டு வரும். நம் நாட்டுக் கோழிகள் ஓராண்டில் சில நாட்களே முட்டையிடும். அந்த முட்டையும் சிறிதாகவே யிருக்கும். ஆனல், சிமைக் கோழியின் முட்டைகளோ, நம் நாட்டுக் கோழி முட்டைகள் மூன்றுக்கு அந்த ஒரு முட்டை எடை சரியாயிருக்கும். இந்தக் கோழிப் பண்ணையின் மூலம் அவன் விசேஷ வருமானத்தை யடைகிருன். கோழி வளர்ப்புப் பற்றியும் அந்த நாட்டில் பல நூற்றுக் கணக்கான புத்தகங்கள் வெளியாகி யுள்ளன. அவற்றை யெல்லாம் அந்த விவசாயி வாங்கிப் படித்துக் கோழிப் பண்ணையை மேலும் பெருக்கி அதி இலாபத்தை யடைகிருன். மற்றும் அவன் பண்ணையில் வளரும் பன்றிகளுக்கும், தானியங்களையே ஆகாரமாகக் கொடுத்து, அவைகளை யானைக் குட்டிகளைப் போலப் பருக்க வைத்து, மாமிசத்துக்காக மார்க்கெட்டில் விற்றுப் பணமாக்குவான்.

இன்னும் தோட்டத்திலிருந்து காய்கறிகளையும் பழங்களையும் பறித்து அன்றன்ருடம் மார்க்கெட்டுக்கு அனுப்பி, அன்ருடச் சில்லறைச் செலவுகளைச் சரிக்கட்டுவான். இவையன்றி, அவன் வளர்க்கும் தேனீக் கூடுகளிலிருந்தும் வாரந்தோறும் தேன் சேகரித்துப் பவுண்டு கணக்கில் எடை போட்டு விற்று, நூற்றுக் கணக்கான ரூபாய் சம்பாதிப்பான்.

விவசாயி, தேனை எங்ஙனம் சேகரிக்க முடியுமென்று உங்களில் பலருக்கு விந்தையாயிருக்கலாம். இது ஒரு அதிசயமான வித்தையல்ல. இத் தொழிலைக் கற்ருல் எவரும் எளிதில் செய்யலாம். ஆனல், நம் நாட்டு இருளர்களும், வனவேடர்களும், தேன் கூட்டைத் தேடியடைந்து, அதை ஈ, முட்டை, புழு, தேனடை முதலியவற்றுடன் கசக்கிப் பிழிந்து, தேன் சேகரிப்பது போலல்ல இது. தேனீக்களின் வாழ்க்கை முறைகளை நன்ருயறிந்து, அவற்றை நாம், பசு, எருமை, வெள்ளாடு முதலிய கறவை மிருகங்களைப் போல வளர்த்துப் பால் பெறுவதே போலத் தேனீக்களையும் பெட்டிகளில் வளர்த்து, ஈ, முட்டை, புழு, தேனடை முதலியவற்றிற்கு யாதொரு இடையூறுமின்றிப் பரிசுத்தமான கைபடாத தேன் அமிர்தத்தைப் பெறுவதேயாகும்.

தேனீ வளர்த்தலுக்கு முதலும் இல்லை; செலவும் இல்லை. அவரவர் பணிதான் முதலும் செலவும். மேனாட்டு விவசாயிகள் தங்கள் பண்ணைகளில் தேனீக் கூடுகளை வைத்துத் தேன் சேகரித்து மிக்க ஊதியத்தையடைகின்றார்கள். வயல்களிலுள்ள பயிர்களிலும், தோட்டங்களிலும் காடுகளிலு முள்ள மரஞ் செடி கொடிகளிலும் மலர்கள் மலர ஆரம்பித்தால், மேனாட்டு விவசாயியின் பணப் பெட்டியில் பணம் வந்து விழுந்து கொண்டேயிருக்கு மென்பார்கள். இத் தொழிலை விவசாயிகளேயன்றி, பங்களா வாசிகளும் பிறரும் தேனீ வளர்த்துத் தேன் சேகரித்து விசேஷ வருமானம் பெறுகின்றனர்.

தேனீ வளர்த்துத் தேன் சேகரிக்கும் தொழில், மேனாட்டை விட, நம் நாட்டில் நன்றாய் நடைபெற வசதிகள் பல இயற்கையாயமைந்திருக்கின்றன. நம் நாட்டு நெருங்கிய காடுகளும், நெடிய பசிய மலைகளும், பரந்த வயல்களும் நமது வற்றாத செல்வங்களன்றோ? அவற்றால் நமது நாட்டில் பாலாறும், தேனாறும் ஓடுகின்றனவல்லவா! பாலாறும் தேனாறும் பெற்ற நாம், கூழுக்கும் கஞ்சிக்கும் அழுவானேன்? அமிர்தம் பெருக்கெடுத்தோடுவதை அள்ளிப் புசிக்கலாகாதா?

வகையின்றி விழிக்கும் விவசாயிகளும், வேலையின்றித் திண்டாடும் வாலிபர்களும், பிறரும் தேனீ வளர்த்தல் என்னும் தொழிலை மேற்கொண்டால், நல்வாழ்வு பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை. இந்தற்றொழிலில் இறங்குவதற்கு முன், தேனீயின் வாழ்க்கை முறைகளை நன்றாயறிந்து கொள்ள வேண்டும். இதையறிந்தால், பசு, எருமை, வெள்ளாடு முதலியவைகளை அடக்கிச் சாந்தமாக இருக்கச் செய்து, நாம் பால் கறந்து கொள்ளுவதே போலத் தேனீக்களையும், நாம் கையாடும் பழக்கத்தினால் சாதுவாகச் செய்து, அவை சேகரிக்கும் தேனமிர்தத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.

இப்பொழுது தேனீ வளர்த்துத் தேன் சேகரிக்கும் தொழில், நம் நாட்டிலும் மெதுவாகப் பரவி வருகிறது. அரசாங்கத்தாரும் தங்கள் விவசாயப் பண்ணைகளில் இத் தொழிலை ஆரம்பித்துச் செய்து விவசாயிகளுக்கும் பிறருக்கும் இத்தொழிலில் கவனஞ் செலுத்தும்படி தூண்டி வருகின்றார்கள். முதலும் செலவும் இல்லாத இந்த இலாபகரமான தொழிலை விவசாயிகளும், பிறரும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம் அல்லவா? விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய உபதொழில்களில் இது ஒரு இலாபகரமான முக்கியத் தொழிலாயிருப்பதால், சர்க்கார் ஆரம்பப் பாடசாலைத் தோட்டங்களிலும், பிற நந்தவனங்களிலும் தேனீப் பெட்டிகளை வைத்து, தேனீப் பண்ணையை ஆரம்பிக்க வேண்டும்.

தேனீ வளர்ப்பைக் குறித்து ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும், நூற்றுக் கணக்கான புத்தகங்கள் வெளியாகியுள்ளன. தமிழ் மொழியில் அத்துணை நூல்கள் இல்லாவிட்டாலும், என்னால் எழுதப்பட்ட "தேனீ வளர்த்தலும்—தேன் சேகரித்தலும்" என்ற தமிழ் நூல், மிக்க உதவியாயிருக்கும். இந் நூலைத் திருவாங்கூர் அரசாங்கத்தார் பாராட்டி எழுதியுள்ளார்கள். சென்னை அரசாங்கத்தாரும் இதில் பிரசுரிக்கத் தேனீப் படங்களை உதவியிருக்கின்றார்கள்.

தேன் எங்ஙனம் சிறந்த மருந்தும், ஆகாரமாகும் என்பதைப் பற்றி பின்னர் எழுதுகின்றேன்.

காசி யாத்திரை

ஆர். எஸ். குஞ்சிதபாதம்

'தஞ்சாவூர்-மாயவரம் வழியாகச் சென்னை செல்லும் திருவனந்தபுரம் பாசஞ்சர் ஒரு மணி தாமதித்து வரும் என்று ஒலி பெருக்கி அறிவித்துக் கொண்டிருந்தது. திருச்சிராப்பள்ளி சந்திப்பு பிளாட்பாரத்தில் பிரயாணிகள் வந்து கூடியிருந்தனர். பழம், தேநீர் விற்பவர்கள், பத்திரிகை விற்கும் பையன்கள் தங்கள் சாமான்களை உரத்த குரலில் விளம்பரம் செய்து கொண்டு அலைவதும், சோர்ந்து போய் உட்காருவதுமாக ரெயில் வண்டியை எதிர் பார்த்துக் காத்திருந்தனர். கூலிகள் தங்கள் தலைச் சுமையை இறக்கி வைத்துவிட்டு வம்பளந்து கொண்டிருந்தனர். பழத்தோல்களைத் தின்று கொண்டிருந்த ஆடுகளையும், பிச்சைக்காரச் சிறுவர்களையும்விரட்டிக்கொண்டிருந்தான் ஒரு ரெயில்வே சிப்பந்தி.

வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. உரிய நேரத்துக்கு முன்பே இருட்டு பகலை ஆக்ரமிக்கத் தொடங்கிவிட்டதால் விளக்குகள் ஏற்றப்பட்டன. லேசாகத் தூற்றல் வேறு போடத்தொடங்கியது; ஊளைக் காற்று சில்லென்று வீசியது.

''நேரம் ஆகிறது. நீ வீட்டுக்குப் போ! நான் எப்படியாவது பார்த்துக் கொள்கிறேன்'' என்றாள் அக்கிழவி டிரங்குப் பெட்டியின் மேல் சாய்ந்த வண்ணம் ஸ்படிக மாலையின் ஒவ்வொரு மணியையும் கட்டைவிரலால் உருட்டித் தள்ளிக் கொண்டே. கீழ் உதட்டைக் கடித்துக்கொண்டு சிந்தனையில் மூழ்கியிருந்த குமாரஸ்வாமி, 'உம்' என்று முனகினான்.

''எனக்கென்னடா குழந்தை, எங்கேயாவது பூலோகத்துக்குப் பாரமாக, பகவான் கூப்பிடுகிறவரை இருந்து காலந் தள்ள வேண்டியது. பார்வதியை ஒரு வார்த்தை சொல்லிவிடாதே. சின்னஞ் சிறிசு. காசிக்குப் போய் கங்கையிலே ஸ்னானம் செய்ய வேண்டும் என்று எனக்கும் தான் ரொம்ப நாட்களாக ஆசை. தனியாகப் போக முடியாது. துணையும் இருக்கிறது. போய்விட்டு வருகிறேன். குழந்தைகளை கவனித்துக் கொள். கடிதம் போடு'' என்றாள் மறுபடியும் அவள்.

''அது சரி, அவர்கள் கும்பகோணம் ஸ்டேஷனில் உன்னைக் கண்டு பிடித்தாக வேண்டுமே இல்லாவிட்டால் உன்பாடு திண்டாட்டமாகிவிடும். நானும் வரு

கிறேனே கும்பகோணம் வரையிலுமாவது; அடுத்த ரயிலில் திரும்பினால் போகிறது'' என்றான் குமாரஸ்வாமி.

''வேண்டாமப்பா! நிச்சயம் என்னைப் பார்ப்பார்கள்; மாயவரத்திலாவது தேடிப்பார்ப்பார்கள். பார்வதி தனியாக இருக்கிறாள், நீ வீட்டுக்குப் போ!'' என்றாள் கிழவி.

குமாரஸ்வாமி பேசவில்லை. கிழவியின் கைவிரல்கள் இயந்திரம் போல இயங்கி ஜபமாலையில் ஊடாடிக் கொண்டிருந்தனவே தவிர அவளுடைய மனம் வருடங்கள் பலவற்றைத் தாவிப் பின்னோக்கி ஓடிக் கொண்டிருந்தது.

அன்னபூரணிக்குக் கல்யாண வயது வருமுன்பே, அவளுடைய தகப்பனார் அவளுக்கு முன் பிறந்த சகோதரிகளின் கல்யாணத்தில் சொத்தையெல்லாம் விற்றுத் தீர்த்திருந்தார். ஹரேஜீ கிருஷ்ணாய நமா என்று சொல்லிக் கொண்டு உபாதானம் வாங்கப் போவதற்கு ஒரு பித்தளைச் செம்பு கூட மீதம் வைக்கவில்லை. பெண்களைப் பெற்ற ஒரு பாவத்தைத் தவிர வேறொன்றுமறியாத அப்பாவி மனிதர் அவர். வரதட்சணை கொடுப்பதற்காக எழுதிக் கையெழுத்திட்ட அடமானப் பத்திரங்களும், அவைகளின் விஷம் போல ஏறிய வட்டியும் அவரை தரித்திர நாராயணனுடைய அடிமையாகச் செய்தன. அன்னபூரணியை யாருடைய காலிலே கட்டுவது என்ற விசாரத்திலேயே காலமானார் அவர். அப்போது குமாரஸ்வாமியின் தகப்பனாரும் அன்னபூரணியின் சகோதரனுமான சின்னப் பையனின் தலையில் பெரிய பொறுப்பு விழுந்து விட்டது. அவ்வளவு சின்னப் பையனின் பெரிய பொறுப்பை இரக்கத்துடன் ஏற்றுக் கொண்டார் ஒரு பணக்கார மிராசுதார். அன்னபூரணியின் நிர்க்கதியான நிலையும், ரூபலாவண்யமும் அந்த இரக்கத்துக்கு அடிப்படைக் காரணங்களாக அமைந்தன. கிழக்கைகள் இளங்கழுத்தில் திருமாங்கல்யதாரணம் செய்தன. அன்னபூரணிக்கு அழகான பட்டுச் சேலைகள் கிடைத்தன. உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையில் ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டாள். கல்லிழைத்த ராக்கடியும், காதணியும், வங்கியும், பாடலியும், பாதசரமும், மெட்டியும் பூண்ட பூங்கோதையைக் கண்டு மயங்கிய கிழவரிடம் கொஞ்சமாவது அனுதாபம் கொண்டானா கருணையில்லாத காலன்? குலைந்தது அன்னபூரணியின் வாழ்வு. இரண்டு வருஷங்கள் கிழவரின் தாலி சுமந்ததன் கூலியாக அன்னபூரணிக்கு நிறைய சொத்து சுதந்திரம் கிடைத்தது. ஆனால் சுலபமாகக் கிடைக்கவில்லை. எத்தனை தடவைகள் கோர்ட்டு வாசல் படிகளில் ஏறியிறங்க வேண்டி வந்தது? கிழவரின் ஜீவதசையில் அவரிடம் நெருங்கவும் அஞ்சிய எவ்வளவோ பேர்கள் திடீர் திடீரென்று முளைத்து வாரிசு பாத்தியம் கொண்டாடி வழக்குப் போட்டார்கள். அன்னபூரணிக்கு இவற்றால் என்ன பிரயோசனம்? வக்கில்கள் காட்டிய இடத்திலெல்லாம் கையெழுத்துப் போட்டு விட்டு விதியை நொந்து கொண்டு கண்ணீர்விட்ட வண்ணம் காலம் தள்ளினாள்.

இரண்டு லட்சம் ரூபாய்கள் பெறுமான ஆஸ்தியுடன் பிறந்த வீட்டுக்கு வந்த சகோதரியிடம் குமாரஸ்வாமியின் தகப்பனார் பக்தி விசுவாசத்துடன் நடந்து கொண்டார். இளமைப் பருவம் தொட்டே பரம ஆசார சீலராக இருந்தார் அவர். கோயில் பூஜை புனஸ்காரம் - இப்படியே உலக வாழ்க்கையில் பற்றில்லாமல் தாமரை இலைத்

தண்ணீர் போலப் பட்டும் படாமலும் விட்டும் விடாமலும் அவருடைய காலமும் ஓடிக்கொண்டிருந்தது. குடும்ப நிர்வாகம் அன்ன பூரணியின் மேற்பார்வையிலேயே நிகழ்ந்தது. அவள் இட்டதே சட்டம். அவள் கிழித்த கோட்டைத் தாண்டுவதில்லை குமாரஸ்வாமியின் தகப்பனர். பெரிய இடத்துப் பெண்ணைப் பார்த்து சகோதரனுக்கு மணம் செய்வித்தாள் அன்ன பூரணி. ஓராண் மகவைப் பெற்று வைத்துவிட்டுக் காலம் சென்ருள் குமாரஸ்வாமியின் தாயார். இரண்டாவது தாரம் கல்யாணம் செய்து கொள்ள வில்லை அவர். அன்ன பூரணியின் வார்த்தைகள் கூட அவருடைய உறுதியை மாற்ற முடிய வில்லை. வைராக்கிய மடைந்திருந்த அவர் சொல்லாமல் கொள்ளாமல் வெளிக் கிளம்பி விட்டார். ரிஷிகேசத்திலேயோ எங்கேயோ சன்னியாசியாக அவர் இருந்ததாகச் செய்தி வந்தது. ஆனலும் அவரைக் கண்டு பிடிக்க அன்ன பூரணி எடுத்துக் கொண்ட முயற்சிகள் பலனளிக்க வில்லை. அவள் அனுப்பிய மனிதர்கள் அலைந்து பணச் செலவு செய்து விட்டு வந்ததுடன் சரி. தாயும், தகப்பனும் இல்லாது அனைதக் குழந்தை போல இருந்த குமாரஸ்வாமியை பரிவுடன் வளர்த்து ஆளாக்கி வைத்தாள் அவள். அவனும் 'அத்தை' 'அத்தை' என்று நன்றியுடன் இருந்தான். இதெல்லாம் இன்று பழங் காலக் கதையாகி விட்டன.

குமாரஸ்வாமி நன்ருகப் படித்து மேலான ஸ்திதிக்கு வர வேண்டுமென்பது அன்ன பூரணியின் அபிலாஷை. அவனைக் கல்விக்காக நகரத்துக்கு அனுப்பி விட்டுத் தன்னந் தனியாக கிராமத்திலேயே இருக்கப்பிடியாமல் திருச்சியிலே ஒரு வீடு வாங்கினள். தினம் தினம் புண்ணிய நதியான காவேரியில் ஸ்நானமும், மலைக்கோயில் தரிசனமும் கிடைப்பதும் பாக்கியவசம்தான் என்று திருப்தியடைந்தாள். கிராமத்திலே உறவினர்கள் விசேஷ சந்தர்ப்பங்களில்தாம் வருவார்கள்; அடிக்கடி வந்து கொண்டிருக்க முடியாது. அன்ன பூரணி திருச்சியில் சொந்த வீட்டில் ஜாகை போட்டதும் அவளுடைய சகோதரிகளும், அவர்களுடைய பரிவாரங்களும் ஒருவர் மாறி ஒருவராக வந்து கொண்டிருந்தார்கள். வைத்தியம் செய்து கொள்வதற்காக ஒரு சகோதரி வருவாள்; பேரக் குழந்தைகளுக்கு பழனியில் முடி இறக்கப் போகிற வழியில் அன்ன பூரணியைப் பார்க்க ஓரம்மாள் வருவாள்; கோர்ட்டில் 'ஹியரிங்' என்று சொல்லிக் கொண்டு ஒரு பெரியவர் மடிசஞ்சி சகிதம் வந்து ஒருவாரம் முகாம் போடுவார். இவர்களை யெல்லாம் முகங்கோணுது உபசரித்தாள் அன்னபூரணி. விருந்தாளிகள் யாராவது வந்து கொண்டிருந்ததனல் ஒரு சமையற்காரியையும் அமர்த்தினள். ஊருக்குத் திரும்புகிறவர்களிடம் மாகாளிக்கிழங்கும், வாழைப்பழங்களும் வாங்கிக் கொடுப்பாள். சகோதரி குழந்தைகளுக்கு சட்டை யென்றும் பாவாடை யென்றும் சிற்ருடை யென்றும் துணிமணிகள் வாங்கிக் கொடுப்பாள். கிராமத்திலே உள்ள பந்துக்களுக்கு ஏதாவது ஒரு சாமான் வேண்டுமென்ருல் அன்ன பூரணிக்குச் செய்தி வரும். 'திருச்சிராப்பள்ளியிலே பேஷான டிரங்குப் பெட்டி கிடைக்கிறதாமே அத்தங்கள் வாங்கியனுப்பச் சொன்னள்' என்று யாராவது ஊருக்குப் போய்விட்டு வரும் ஒரு பள்ளிக்கூடத்துப் பையன் சொன்னல் சரி. அடுத்த சந்தர்ப்பம் பெட்டி கேட்டவரைச் சேரும். அத்தங்காளே கடையிலே பணம் கொடுத்துக் கேட்டால் பெட்டி கிடைக்கும்தான். ஆனல் அன்ன பூரணிக்குப் பிரசித்தி, கெட்டிக்

காரி சாமான்கள் வாங்குகிறதிலே என்று. வாங்கிக்கொடுக்கிற சாமான்களுக்கு பணம் கேட்காததினாலே இந்தப் பிரசித்தி அன்னபூரணிக்கு. அன்னபூரணிக்கும் உலக வியவகாரம் தெரியாமல் இல்லை. 'எங்கே நாமென்ன தலையிலா கட்டிக்கொண்டு போகிறோம், நம்முடைய பந்து ஜனங்கள் வேண்டுவதைக் கொடுத்து உதவி செய்யலாமே' என்று எண்ணினாள். இப்படி சாமான்களை சாதுர்யமாகக் கேட்டு வாங்கிக் கொள்கிறவர்கள் ஒரு ரகம். கடன் கேட்கிறவர்கள் ஒரு ரகம். அன்னபூரணி கைமாற்றாகவோ, முகதலையாகவோ கொடுக்கிறதில்லை. திருப்பித் தர வேண்டாம், நீயே வைத்துக்கொள் என்று நூறு, ஐம்பது பலருக்கும் கொடுத்து உதவியிருக்கிறாள். அவளுடைய அந்தஸ்துக்கு இந்தச் செலவும் பிரமாதமாக இல்லை. பொருளாதார மந்தம் எல்லாம் நீங்கி விலைவாசிகள் ஒன்றுக்குப் பத்தாகப் பெருகி விட்டன. எவ்வளவு செலவிட்டாலும் வருஷ வரும்படியில் பெரும் அளவு மிச்சமாகவே இருந்தது. ஏதோ ஒரு வராத கடனுக்காக திருச்சி நகரத்தில் வாங்கிப் போட்டிருந்த தரிசு பூமியைக் கட்டிடங்கள் கட்டுவதற்காக இப்போது விலை அதிகம் தருவதாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்; சொன்ன விலையையும் பேரமின்றிக் கொடுத்தார்கள்; பதின்மடங்கு லாபம் இதிலே.

சில வருஷங்களில் குமாரஸ்வாமி பி. ஏ. பரிட்சையில் தேறினான். பெண் கொடுக்கப் பெரிய மனிதர்கள் போட்டி போட்டுக்கொண்டு வந்தார்கள். அன்னபூரணிக்குக் கணவர் வழி உறவில் ஒரு பெண் இருந்தாள். ஏழைக் குடித்தனம். அந்தப் பெண் ஒரு முறை திருச்சிக்கு வந்திருக்கிறாள். அழகான பெண்; ரொம்ப சூடிகையாகவே இருந்தாள். எப்படி இருந்து என்ன, கல்யாணம் செய்து வைப்பது பணம். அந்தப் பணம் இல்லாததனால் தானே அன்னபூரணியின் வாழ்க்கையே அலங்கோலமடைந்தது! நல்லது செய்கிறோம் என்று மனமிரங்கி அந்தப் பெண்ணை குமாரஸ்வாமிக்கு மணமுடித்து வைத்தாள் அன்னபூரணி. சிறப்

பாக நடந்தது கல்யாணம். விருந்தும், ஊர்வலமும், கச்சேரியும் நன்றாகத்தான் இருந்தன. எல்லாம் அன்னபூரணியின் செலவு. அவளுடைய உதாரகுணத்தைப் பாராட்டாதவர்கள் இல்லை.

குமாரஸ்வாமி ஒரு பாங்கியில் அக்கௌண்டண்டாக அமர்ந்தான். அவன் மனைவி பார்வதியும் அன்னபூரணி எதிர் பார்த்தபடி குடித்தனப் பாங்குள்ளவளாக இருந்தாள். காலக்கிரமத்தில் நான்கு குழந்தைகள் பிறந்தன. வீடு கலகலப்பாக இருந்தது. அன்ன வஸ்திரத்துக்கே சிரமப்பட்டுக் கொண்டிருந்த வீட்டிலிருந்து வந்த பார்வதிக்கு அன்னபூரணி அத்தையின் செலவுகள் அதிகமாகவும், அனாவசியமாகவும் தோன்றின. குடும்ப நிர்வாகத்தைச் சிக்கனமான முறையில் நடத்த வேண்டும் என்று எண்ணினாள். ஆனால் அத்தையிடம் வாய் திறந்து எதுவும் சொல்வதற்கு அவளுக்கு பயமாகவும் இருந்தது.

இதனடுவில் ஒரு நாள் அன்னபூரணியின் சகோதரி ஒருத்தி தன் பெண்ணை அழைத்து வந்திருந்தாள். ‘‘அக்கா! காலம் இருக்கிற இருப்பிலே எதைத் தொட்டாலும் ஒன்றுக்குப் பத்தாக விலை இருக்கிறது. ஆச்சு, அடுத்த வருஷமாவது அலமுவுக்கு கல்யாணம் செய்தாக வேண்டும். அவரானால் ஒரு நகை நட்டுப் பண்ணிப் போடுகிறதாக இல்லை'' என்று தன்னுடைய சிரம நிலையை அங்கலாய்ப்புடன் சொன்னாள் அவள். இங்கு வந்த நோக்கமே ஏதாவது அன்னபூரணியிடமிருந்து கிடைக்காதா என்று தான். பார்வதி சற்றுக் கடுகடுப்புடன் இருந்தாள். அன்னபூரணி இரண்டு காரட்டில் ஒரு ஜதை வைரத்தோடும் பதினைந்து பவுன்களில் சங்கிலியும், வளைகளும் வாங்கி அந்தப் பெண்ணுக்குப் போட்டாள். இன்னும் துணி மணிகள், சோப்பு, பவுடர் டின்கள் முதற் கொண்டு ஒரு வருஷத்திற்குக் காணும்படியான காப்பிக்கொட்டை, பெருங்காயம் வரை பல பொருள்களையும் தாயும், மகளும் அன்னபூரணியைக் கொஞ்சியும் கெஞ்சியும் வாங்கிக் கொடுக்கச் சொல்லி ஊர் போய்ச் சேர்ந்தனர்.

‘‘மூவாயிரம் ரூபாய், மூவாயிரம் ரூபாய்'' என்று முணுமுணுத்துக் கொண்டாள் பார்வதி. ‘‘எவ்வளவு லகுவாய் அடித்துக் கொண்டு போய் விட்டார்கள் அம்மாவும் பெண்ணும்?'' என்று மனதிலே குமுறினாள். ‘‘நான் தான் ஒன்றும் சொல்லக் கூடாது என்றிருந்தாலும் அவராவது இங்கிதமாகக் கோடி காட்டக் கூடாது?'' என்று பதறிப் போனாள் பார்வதி.

குமாரஸ்வாமி ஒன்றும் தெரியாதவன் அல்ல. ‘என்னுடைய பிதுரார்ஜிதமா? அவள் சொத்து. அவள் இஷ்டம்போல விநியோகிக்க அவளுக்கு உரிமை உண்டு. அண்ணன் மகனானால் என்ன, அக்காள் மகளானால் என்ன, இரண்டு பேரும் அவளுக்கு சமம்' என்று நினைத்து அன்னபூரணியின் விருப்பத்தை இங்கிதமான வார்த்தைகளினால் கூட ஆட்சேபிக்கவில்லை. பணம் அவள் பேரில் பாங்கில் இருந்தது; நிலம் அவள் பேரிலே பட்டா, பார்வதியின் மன நிலையும் ஒருவாறு அன்னபூரணிக்குத் தெரிந்து தான் இருந்தது. விறுவிறுப்பான சம்பவம் எதுவும் நேரவில்லையானாலும் விபரீதமான திசையில் பார்வதியின் மனம் திரும்பியிருப்பது அத்தையின் அனுபவம் நிறைந்த அறிவுக்கு எட்டாத விஷயமில்லை.

ஒரு நாள் அத்தை கோயிலுக்குப் போய்விட்டு வந்தாள். பார்

வதி குழந்தையை மடிமீது வைத்துக்கொண்டு ஊஞ்சலில் உட்கார்ந்திருந்தாள். சமையற்காரி சமையல் செய்து கொண்டிருந்தாள். அத்தையின் காலடிச் சத்தத்தைக் கேட்டுவிட்டு அவள் காதில் விழ வேண்டுமென்றே பார்வதி சமையற்காரியிடம், "நெய் இருக்கிறதோ, ஆகிவிட்டதோ? தினம் தினம் கோயிலுக்குப் போய் கால்சேர் நெய் விளக்கிலே ஊற்றினால் எந்தக் குடும்பம் கட்டுபிடியாகும்? ஏதோ நாள் கிழமை நெய் விளக்கிட்டால் போதாதோ? அதைத்தான் ஏதுக்குக் சொல்ல வேணும்?" என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

ஒன்றும் காதிலே விழாதது போல அன்னபூரணி குழாயடிக்குப் போய் கால் அலம்பிவிட்டு பூசை அலமாரியருகில் போய் உட்கார்ந்து ஸ்தோத்திரம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அடுத்த நாள் ஞாயிற்றுக் கிழமை மத்தியானம் சாப்பிட்டு விட்டுப்போன மூத்த பையன் மணி, விளக்கேற்று மட்டும் வீடு திரும்பவில்லை. பார்வதி அவனுடைய இரண்டு கைகளையும் இடது கையினல் பிடித்துக் கொண்டு முதுகிலே மளேர், மளேர் என்று அறைந்து 'எங்கே தொலைந்து போனாய்?' என்று கேட்டாள். "சினிமாவுக்கு" என்று விக்கி விக்கி அழுது கொண்டே சொன்னான் மணி.

"காசு ஏதடா, காசு ஏது உனக்கு?" என்றாள் பார்வதி.

"அத்தை கொடுத்தாள்" என்று மணி கதறினான்.

"ஒருத்தரையும் காசு கீசு கேட்டு வாங்காதே என்று எத்தனை தட்வை சொல்லியிருக்கிறேன் உனக்கு? துப்புக்கெட்ட மூதேவி! நீயுமா பிச்சைக் காசுக்குக் கிடந்து அலைகிறாய்?" என்று மேலும் மேலும் கன்னத்தில் அடிப்பதும் தலையிலே குட்டுவதுமாக மணியைச் சித்திரவதை செய்யத் தொடங்கினாள் பார்வதி.

"எதற்காகவடி அடிக்கிறாய் குழந்தையை? சினிமாவுக்குப் போனால் என்ன தப்பு? நீ சினிமாவுக்கே போகிறதில்லையே!" என்று கோபத்துடன் சொன்னாள் அன்னபூரணி. அவளுக்குக் கோபம் கூட இப்படி வருமா என்று திடுக்கிட்டுப் போனாள்பார்வதி. இருந்தாலும் விட்டுக் கொடுக்காதபடி "என் குழந்தையை நான் அடிக்கிறதற்கு யார் சொல்லக் கிடக்கிறது? அப்படித்தான் அடிப்பேன்" என்று சொல்லிக் கொண்டே மணியின் காதைப் பிடித்துத் திருகினாள். "பிச்சைக் காசு கேட்காதே! பரதேசிப் பயல்மாதிரித் 'தா' 'தா' என்று பறக்காதே!" என்று சொல்லிப் பிடித்துத் தள்ளினாள். அன்னபூரணி மணியை அணைத்துக் கொண்டு "அழாதேடா கண்ணே! என்னமோ போ, எதற்காக அடிக்கிறோம் என்று தெரியாமலே உன்னை வதைக்கிறாள் அவள்" என்று சொல்லிக் கொண்டே மாடிக்கு அவனை அழைத்துக் கொண்டு போய் ரேடியோவைத் திருகிவைத்து விட்டு ஊஞ்சலில் உட்கார்ந்தாள். மணி கண்களைப் பிசைந்து கொண்டேயிருந்தான்.

அப்பொழுது தான் வெளியிலிருந்து திரும்பிவந்த குமாரஸ்வாமி மாடியிலிருந்து ரேடியோவின் ஒலியை மீறிக் கொண்டுவரும் மணியின் அழுகைச் சத்தத்தைக் கேட்டு மாடிக்கு வந்தான். மணியின் கண்கள் சிவப்பேறியிருந்தன. குமாரஸ்வாமிக்கு இந்த அனுபவமே புதிதாக இருந்தது. அமைதியாக இருந்த குடும்பத்தில் ஏன் இப்படி அல்லோல கல்லோலம் என்பது அவனுக்

குப் புரியவில்லை. 'அத்தை!' என்று கூப்பிட்டான் குமாரஸ்வாமி.

ஈசிசேரில் சாய்ந்தபடியே பக்கத்திலிருந்த மேஜையின் மேலுள்ள விளக்கின் ஒளியில் ராமாயணம் படித்துக் கொண்டிருந்த அன்னபூரணி புஸ்தகத்தின் நடுவில் விரலை வைத்து அதை மூடியபடியே குமாரஸ்வாமியைப் பார்த்தாள். பேசவில்லை. அவள் முகத்தை உற்றுப் பார்த்து அதிலே பிரதிபலிக்கும் உணர்ச்சியை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. தங்க வரம்பிட்ட அத்தையின் மூக்குக் கண்ணாடியின் இரு வட்டங்களிலும் விளக்கின் பச்சை நிற மேல் மூடியின் பிரதிபிம்பங்கள் தெரிந்தன. அவைகளைத் தாண்டிக் கண்ணிமைகள் பாதி மூடியிருக்கத் தென்பட்டன.

''அத்தை! என்ன சமாசாரம்?'' என்று ஆதுரமடைந்து கேட்டான் குமாரஸ்வாமி. அன்னபூரணி பதில் சொல்லவில்லை. குமாரஸ்வாமி ரேடியோவை அணைத்துவிட்டு அழும் மணியைச் சமாதானப் படுத்த முயன்றான்.

''குமாரஸ்வாமி! எனக்கு நாலு ஜனங்கள் வேண்டும் தான். வருவார் போவாரையெல்லாம் நான் அவளுக்காகக் கட்டுப் படுத்த முடியுமா? பாவம், என்னால் இந்தக் குழந்தை அடிபட்டது இப்பொழுது. அவன் சினிமாவுக்குப் போனதற்காக அடி இல்லை, என்னிடம் காசு கேட்டு வாங்கிப் போனான், அதுவும் பிச்சைக் காசு என்று அடித்திருக்கிறாள். இந்த ஜாடைப் பேச்செல்லாம் எதற்கு என்று நினைக்கிறாய்?'' என்றாள் அலுப்புடன் அத்தை.

''நிலைமை அறியாமல் கொம்மாளம் போடுகிறாளோ, இவள்

''ஒரு காலணாவுக்கு வெற்றிலைப் பாக்கு குடுப்பா....''

யார்? எந்தக் கொம்பிலிருந்து வந்தாள். அல்பத்தைத் தூக்கி நீ பவுஷிலே வைத்திருக்கிறாய்!'' என்று பார்வதியிடம் கொண்ட கோபத்தை வார்த்தைகளில் கொட்டினான் குமாரஸ்வாமி.

மாடிப்படிகளிலிருந்து கேட்டுக் கொண்டே வந்த பார்வதியின் கோபமும் தன்னை மீறிவிட்டது. ''உங்கள் அத்தை சொந்த சொத்து மட்டும் அல்ல இது. யாரோ கிழவர் சொத்து. எங்கள் அப்பா சொல்லிக் கொண்டிருப்பார் கிழவர் கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் செத்திருந்தால் சொத்து அனந்தர வாரிசாக எங்களுக்குக் கிடைத்திருக்கும் என்று'' என்று சொன்னாள்.

''சி, சி! இன்றைக்கு நீ இந்த வீட்டிலே வந்திருப்பது அத்தையினால். அதைத் தெரிந்து கொள்'' என்று குமாரஸ்வாமி சொன்னான். பிறந்த வீட்டைப் பற்றிப் புருஷன் இகழ்ந்து சொன்னாலும் கேட்டுக் கொண்டிருக்கக் கூடிய பொறுமை உள்ள பெண்கள் எத்தனை பேர்

தான் இருக்க முடியும்! தான் இன்னது பேசுகிறோமென்றே தெரியாமல் கோபாவேசத்திலே உளறிக் கொட்டினாள் பார்வதி.

“பெரிய இடமில்லாவிட்டால் சின்ன இடமாகக் கிடைத்துவிட்டுப் போகிறது! கல்யாணம் ஆகாமலா நின்றிருக்கும்? கல்யாணம்பண்ணிக்க ஆசையுள்ள பணக்காரக் கிழவர்களுக்குக் கூடவா உலகத்திலே பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது?” என்றாள் அவள். பளிச், பளிச்சென்று அறைந்துவிட்டான் பார்வதியின் கன்னத்திலே குமாரஸ்வாமி; பார்வதி ஓவென்று அழ ஆரம்பித்துவிட்டாள். அன்னபூரணி திடுக்கிட்டு எழுந்தாள். குமாரஸ்வாமியும் இப்படிச் செய்வான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை” எனக்குப் பரிந்துகொண்டு அவனை அடிக்கிறாயா? சே, நன்றாக இல்லை இது. அவள் சொல்வதிலும் தவறு இல்லை. இந்த சொத்து என்னுடையது. நான் கொடுத்துப் பிறர் பெறுகிறார்கள் என்று கொஞ்சம் கர்வம் இருந்ததே எனக்கு அது ஒழிந்துபோகும்படி செய்துவிட்டாள் அவள். நான் இனி இங்கு இல்லை. இங்கு என்னைத் தேடி வருபவர்களுக்கு ‘இல்லை’ என்று சொல்ல என்னால் ஆகாது” என்றாள். குமாரஸ்வாமி என்னவோ பேச முயன்றான். ‘எல்லோரும் என்னைத் தனியே விட்டுவிட்டுப் போங்கள்’ என்றாள் அவள். ஒரு வாரம் அத்தையாரிடமும் பேசவில்லை.

இன்றுதான் சொன்னாள் “காசிக்குப் புறப்படுகிறேன்” என்று. சில பந்துக்களை தன்னை வந்து ரெயிலில் சந்திக்குமாறு எழுதியிருந்தாள்; அவர்களும் பல வருஷங்களாகக் காசிக்குப் போக விரும்பி அத்தையின் உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்கள். தன் சொத்திலே பெரும் பகுதியை குமாரஸ்வாமிக்கு எழுதி வைத்தாள். அத்தை சொன்னால் சொன்னதுதான்; பார்வதியும் பச்சாத்தாபமடைந்து எவ்வளவோ வேண்டியும் தாமதிக்க விரும்பவில்லை அத்தை. ‘நீங்கள் அமைதியாகக் குடும்பம் நடத்துங்கள் அதுவே போதும் எனக்கு’ என்று உபதேசித்தாள். பார்வதியிடம் அவளுக்குக் கோபம் இல்லை; தன் மனதையே தெளிவு செய்துகொண்டாள் அன்னபூரணி.

ரெயில் வந்தது; அத்தையை ஏற்றி அனுப்பிவிட்டுத் திரும்பும்போது நீண்ட பெருமூச்சு விட்டான் குமாரஸ்வாமி.

பாரிஸ் அழகிகள்

அழகிற் சிறந்த பாரிஸ் யுவதிகளின் இயற்கை அழகை அப்படியே தத்ரூபமாகப் பலவகைப் படுக்கையறைக் கோலத்துடன் காண பிரமிக்க தக்கது.

24 வகை (Bromide) போட்டோ படங்கள் ரூ. 7.

36 கொண்ட முழுசெட் ரூ. 10.

தபாற் செலவு இலவசம்.

ஒவ்வொரு ஆர்டருடன் “பெண் இன்பம்” என்னும் புத்தகம் இனாமாக அனுப்பப் படும்.

கர்ப்பத் தடை

ரப்பர் பாதுகாப்புக் கருவிகள்
(நீடித்து உழைப்பவை)

		ரூ.	அ.
ஆண்களுக்கு:—			
	ஒன்று	1	6
”	மூன்று	3	12
பெண்களுக்கு:—	ஒன்று	1	12

(உபயோகிக்கும் முறையுடன்)
தபாற் செலவு 1-2-0 தனி. மூன்று ரூபாய்க்கும் குறைந்த ஆர்டருக்கு முன் பணம் தேவை.

வீனஸ் டிரேடிங் கம்பனி (U) P. B. No 1693, சென்னை-1

'உழைப்புதான் செல்வம்' என்ற தத்துவத்தை உறுதிப்படுத்துகிறது இந்தச் சிறு கட்டுரை. தென்னாப்பிரிக்காவிலுள்ள டர்பன்நகரில் வாழும் தமிழறிஞர் **ச. மு. பிள்ளை** எழுதியுள்ள இக்கட்டுரை மிகப் பெரிய தத்துவமொன்றின் இரத்தினச் சுருக்கமாக அமைந்துள்ளது.

உலகில் எல்லாச் செல்வங்களும் மனித உழைப்பால் தான் உண்டாகின்றன. நிலத்தில் விளையும் தானியமாயினும் சரி, சுரங்கத்தில் தோண்டியெடுக்கப்படும் நவரத்தினங்களாயினும் சரி, யாவும் உழைப்பின் பயனே.

நிலங்கள் இருக்கலாம்; நீர் இருக்கலாம்; மண் இருக்கலாம்; கற்கள் இருக்கலாம், இவையாவும் செல்வங்களல்ல. பூமியில் புதைந்து கிடக்கும் கோடான கோடி விலை மதிப்புள்ள தாதுக்கள் செல்வமாகா. அவைகளைத் தோண்டி எடுத்து வந்து மனிதன் கைபட்ட உடனேதான் செல்வமாகும். காடுகளில் வேண்டிய மரங்கள் இருக்கலாம். அவை செல்வமாகுமா? அன்று; அன்று. அவைகள் மனிதனால் வெட்டப்பட்டு வீடுகளோ, படகுகளோ, பொம்மைகளோ, வண்டிகளோ, ரதங்களோ, ஆயுதங்களோ, கப்பலோ செய்யப்படுமேயானால், அப்பொழுதுதான் செல்வமாகின்றன.

இரும்பு ஒருவித மண். அந்த இரும்பு மண்ணை வெட்டியெடுத்து தண்டவாளம், ரயில் வண்டி ஆகியன ஆக்கப்பட்ட பின்னர்தான் செல்வமாகும். மண்ணெண்ணெய், நிலக்கரி இவை மண்ணில் புதைந்து கிடக்கின்ற வரையில் செல்வமல்ல. இந்த எண்ணெய்ச் சுரங்கங்களிலும் மனிதன் உள் நுழைந்து, அவைகளை வெளியே கொண்டு வந்து சுத்தமாக்கிய பிறகே செல்வமாகின்றன. இவ்வாறு எந்த இயற்கைப் பொருளாயினும், உழைப்பாளி கைபட்ட மாத்திரத்தில் அவைச் செல்வமாக மதிக்கப்படுகின்றன.

நீரும் நிலமும் இருக்கலாம்; கால மழையும் பெய்து வரலாம். ஆனால் உழவன் உழுது, காலத்தில் விதைத்து, களையெடுத்து, தண்ணீர் பாய்ச்சி விளைத்தபின் தான் தானியங்கள் செல்வமாகின்றன. உலகில் எந்த விளை பொருளாயினும், விளைந்த பிறகும், செய்த பிறகும் தான் செல்வம் என மதிக்கப் பெறும். விளைவிப்பதற்கு முன்னும், செய்விப்பதற்கு முன்னும் உலகிலுள்ள எல்லா இயற்கைப் பொருள்களும் யாருக்கும் சொந்தமாகாது. அவை மனித உழைப்பைப் பெற்ற பின்னரே செல்வங்களாக மாறுகின்றன.

டிஸம்பர்
19உ முதல்
சென்னை பாரகன், கிரௌன், ஸரஸ்வதி
மூன்று தியேட்டர்களிலும்
மற்றும்

தமிழ் நாட்டின்
எல்லா முக்கிய
நகரங்களிலும்
நடைபெறுகிறது

★

சிக்கல்கள் நிறைந்த
வாழ்க்கைப் போராட்
டத்தைப் பிரதிபலிக்
கும் சித்திரம்..........

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பிலிம் கம்பெனியின்
லக்ஷ்மி
தமிழ்
கண்ணாம்பா · வனஜா · எம். ஸரோஜா · ஸி. கே. சரஸ்வதி
மனோஹர் · எல். நாராயண ராவ் · பிரண்ட் ராமசாமி · சந்திரபாபு
டி. வி. சேதுராமன் நடித்தது
டைரக்ஷன்: கே. பி. நாகபூஷணம்

Phone : 55096 Grams : PRINTMACHO

IMPORTERS OF GRAPHIC MACHINERY
EQUIPMENT & PHOTOLITHO PROCESS
CAMERAS AND CHEMICALS ETC.,

*

Standard Printing Machinery

12-81, SEMBUDOSS STREET,

MADRAS-1.

USE ALWAYS

KANGARU FEEDER

A TRIAL WILL CONVINCE YOU

DISTRIBUTORS :

HINDUSTHAN TRADING COMPANY

MADRAS.I.

ஆசிரியர், அச்சிட்டு வெளியிடுபவர் : ஜீ. உமாபதி எம். சி., உமா பிரிண்டர்ஸ்,
4/32, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1: நிர்வாக ஆசிரியர் : ர. சண்முகம்.

அழகிற்கு
அழகு

மனதிற்கு
மகிழ்ச்சி

உயர்ந்த
உறுதியான
வேலைப்பாடுள்ள

வைரம்
தங்க
நகைகள்

வெள்ளி
பாத்திரங்களுக்கு

T. கோவிந்தராஜுலு நாயுடு

JEWELLERS & DIAMOND MERCHANTS

28. நேதாஜி
சுபாஷ் சந்திரபோஸ் ரோடு
மதராஸ். 1

Edited, Printed and Published by G. Umapathy, M.C. at Uma Printers,
4|32. Thathamuthiappan Street, Madras-1 Phone: 2200